சர்வேஸ்வராயநமஃ

# அண்டபிண்ட வியாக்கியானம்.

இஃது

மகாகனம்பொருந்திய இராஜரிஷி குரு

## பெரியசஞ்சீவிநாத சுவாமிகளால்

மூலபாஷையினின்று மொழிபெயர்க்கப்பட்டது.

இதனை

இராயபுரத்தி லெழுந்தருளியிருக்கும் மகாகனம்பொருந்திய

சங். தே. மரி.

ஞானப்பிரகாசநாத சுவாமிகளாற்

பரிசோதிக்கப்பட்டு.

ம. சா. இயாகப்பிள்ளையால்

சென்னப்பட்டணம்

இந்தியன் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1874.

*Registered Copy-Right.*

# பொருளட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| பாயிரம்... ... ... ... | I |
| முகவுரை... ... ... | III |
| நட்சேத்திரமண்டலம்... ... ... | 1 |
| கிரகமண்டலம்... ... ... | 7 |
| சூரியனுடைய விவரம்... ... | 16 |
| சந்திரனுடைய விவரம்... ... ... | 25 |
| பூமியங்களுடைய விவரம்... ... | 32 |
| தேயுவின் விவரம்... ... ... | 40 |
| ஆகாச விவரம்... ... ... | 50 |
| அப்புவின் விவரம்... ... ... | 59 |
| சமுத்திரத்தின் விவரம்... ... ... | 65 |
| பிரிதிவின் விவரம்... ... ... | 74 |
| வளர்சிவ வஸ்துக்களின் விவரம். ... | 85 |
| பஞ்சேந்திரிய சேவசெந்துக்களின் விவரம். | 96 |
| பிண்டமானது அண்டத்தின் குறிப்பிடமா யிருக்கிற விவரம்... ... ... | 107 |
| அஸ்தியினுடைய விவரம்... ... | 118 |
| சிரசின் விவரம்... ... ... | 128 |
| நெஞ்சின்விவரம்... ... ... | 141 |
| குக்ஷிவிவரம்... ... ... | 152 |
| சாணகராதி விவரம்... ... ... | 162 |
| நரசீவனுடைய விவரம்... ... | 171 |
| அண்டபிண்ட அறிக்கையினாலே கடவுளைக் கண்டுபிடிக்கிற வகை ... ... | 180 |


## உலகப்பிரமாண சாஸ்திரம்.


| | |
|---|---|
| விவேகம்... ... ... | 1 |
| உலகப்பிரமாண அஸ்திவாரம்... ... | 3 |
| பூமியானது சகலலோகங்களுக்கும் மையமா யிருக்கின்றது... ... ... | 4 |
| பூமியானது வட்டரூபமா யிருக்கின்றது... | 5 |
| பூமியின் பிரமாணம்... ... ... | 6 |
| பூமியினளவை யொப்பித்தல்... ... | 7 |
| பரமகுருக்ஷாரபிப்பிராயம் மற்றதும் முதற்படம். இரண்டாம்படம். இவைகளின் விவரம். | |
| கையொப்பக்காரரின் பெயர். | |

# பாயிரம்.

அண்டபிண்ட வியாக்கியானமென்னும் இந்நூலானது ஏறக்குறைய நூறுவருஷங்களுக்கு முன்னே உரோமை நாட்டினின் றிந்நாட்டிற் கெழுந்தருளிவந்த சத்தியவேதபோதக குருசுவாமிமார்களிலொருவருமாய், வேதசாஸ்திரங்களிற் றேர்ந்த விற்பனருமாய், அண்டபிண்ட சாஸ்திரங்களையெல்லாம் பரிசோதித்தறிந்த பாண்டித்தியருமாய், இலங்கைத்தீவின் விகாரியுமாய் இருந்த மகா மேன்மை பொருந்திய பெரிய சஞ்சேவிநாத சுவாமிகள், (இத்தேசத்தாரி லநேகர் சர்வலோகங்களையும், அவைகளிலுள்ள சமஸ்த பொருட்களையும் உண்டாக்கிக் காப்பாற்றிவருகின்ற மெய்யான தேவனைவிட்டுச் சந்திரசூரியன், கிரகநட்சேத்திரங்களும், அப்பு பிரிதிவென்னும் நான்கு பூதியங்களும், ஆகிய இன்னு மநேக உயிரில்லாத வஸ்துக்களையும், பூலோகத்திற் றிரிகின்ற பன்றி, நாய், பெரிச்சாளி முதலிய மிருகவினங்களும், தாபர சங்கமங்களும் ஆகிய ஜீவப்பொருட்களையும், மனிதர்களிற்றானே வல்லமை சாலிகளுமா யிராசாக்களுமா யிருந்து பரதாரவிச்சையால் அநேகரைக் கொன்று பதிவிரதைகளைக் கற்பழித்த காமாதுரரையும், கையெடுத்துக் கும்பிட்டுத் தொழுது தோத்தரித்துப் பூசை நமஸ்காரம்பண்ணி வருவதைக்கண்டாச்சரியப்பட்டு) இவைகளையெல்லாம் படைத்த கர்த்தா வொருவருண்டென்றும், அவரை யன்றி மற்றவைகளெல்லாம் அவரா லுண்டாக்கப்பட்டன வென்றும், அவைக ளெல்லாமெவ்விதமாய்ச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் யாவருந்தெளிவாயறியும்பொருட்டும், சந்திரசூரிய கிராணங்களைப்பற்றிய கட்டுக்கதைகளாலும் படிக்கும் விசேஷமாய்த் தெய்வமில்லையென்று சாதிக்கிற அறிவில்லாதவர்களுடைய குருட்டாட்டந் தீரும்படிக்கும், சகலத்தையும் படைத்தவோர் கர்த்தாவை யெவரும் புகழ்ந்து இடைவிடாது தியானிக்கவும், இந்த அண்டபிண்ட வியாக்கியானத்தைக் கிறீஸ்துபிறந்த 17-ம். நூற்றாண்டில் இலங்கைத்தீவில் எழுதி முடித்தனர். அக்காலத்திற் றமிழ அச்செழுத் தெங்கு மில்லாமையால் இதனை வெகுநாள்வரையி லச்சிடாம லிருந்ததுந்தவிரப் பிற்பட்டகாலத்திலும் இதனை யச்சிட்டுப் பிரபலியப்படுத்த ஒருவரும் நினையாமற்போய்க் கடைசியாய் 1,800-ம். ஆண்டிற்குப் பிறகு சென்னைக்கல்விச் சங்கத்துத் தமிழ்த்தலைவருமாய் அதில் மானேஜருமாயிருந்த ம-ா-ா-ஸ்ரீ. அ. முத்துசாமிப்பிள்ளை யவர்கள் இவ்வரிய நூலின் பெருமையைக் கண்டு மூலப்பிரதி அகப்படாமையினாலே அங்கங்கேயுள்ள அநேக பிரதிகளை வரவழைத்து ஒன்றற்கொன்று பொருந்தாதிருந்தஅநேக வட்சரப்பிழைகளைச் சீர்திருத்தி அச்சிடுவதற் கேதுவாய் வைத்திருந்த சுத்தப் பிரதியானது அவரது மைத்துனரும் எனது மாமனு

ருமாகியகாலேஜ் முச்சி ம-ா-ா-ஸ்ரீ. அப்பாவுபிள்ளை யவர்களால்
எனக்குக் கிடைத்ததினலே மகா மேன்மையுங் கனமும்பொருந்திய
தே. மரி. ஞானப்பிரகாசநாத சுவாமிகளுடைய உத்தாரம்பெறறு
ம-ா-ா-ஸ்ரீ. கோ. ஜெகநாதமுதலியார வர்களுடைய பேருதவி
யைக்கொண்டு இதை யச்சிறபதிப்பிக்கலானேன்.

இந்நூலை யச்சிட ஆரம்பித்தபோது அநகிய பாஷையிலுள்
ள இவ்வித நாமங்கொண்ட வெவ்வேறு புத்தகங்களைவாசித் தறிந
திருக்கும் அநேகர் தங்கள் தங்களுடைய ஸ்கூல் புத்தகங்களிலுள
ளபடியே இதனையுந் திருத்தி யசசிடவேணுமென்று வெகுவாயத
தர்க்கித்தபோதிலும் அவைகளெல்லாம் வெவ்வேறு காலஙகளிலும
வெவ்வே றிடங்களிலும் பலராலும் அச்சிட்டு ஒன்றற்கொன றொவ
வாததா யிருப்பதாலும், இதனை யெதற்கொப்பாய் மாற்றுவதென
ஒருவருந் துணிந்துசொல்லமாட்டாதவாகளா யிருப்பதினலேயும,
இதிலுள்ள இரண்டொரு அட்சரவழுக்களைத் திருத்திக் கையெழுத
தாய் முன்னுள்ளபடியே இதை அச்சிறபதிபபித திருக்கினறதுந தவி
ர இதனேடுகூட இதற்கொதத பிரகாரமாக நூதனமான இரண்டு
படங்களுஞ் சேர்ததுவைத திருககினறது. ஆகையா லிதனை யச்சிட
வேணுமென்று எனனுக்குள்ளே கொணடிருநத பெருங்கவலையை
முடித்துவிட்டேன். இதனை வாசிக்கும் பெரியோர் யாவரும் இப
புததகத்தை அனபோ டங்கீகரிப்பார்களென்று நம்புகிறேன.

இங்ஙனம்,

ம. சா. இயாகப்பிள்ளை.

## இந்நூலைச் செய்தவரால்

# முகவுரை.

சர்வத்தையும் படைத்திரட்சிக்கிற பராபர வஸ்துவை யறிந்
து அவருக்குப் பொருந்தாத பாவதோஷங்களை யருவருத்து அவரு
டைய சித்தத்துக்குப் பிரியமாயிருக்கிற தரும சரித்திரங்களைப்
படித்துக் கடைசியாய் மட்டில்லாத பூர்த்தியைக் கொடுக்கிற பர
மானந்தத்தை யனுபவிக்கிறதென்கிறது பூமியிலே திரிகிற சகல
மனிதருடைய வுத்தம கதியாயிருக்கிறதென்று ஞானத்திற் றெளி
ந்த சகல சாஸ்திரிகளுஞ் சங்கேதம் பண்ணினதுந்தவிர தப்பில்
லாத வேதப்பிரமாணங்களினாலு மறிந்திருக்கிறோம். ஆனபடியி
னாலே யாதொருவன் மோக்ஷவிராச்சியத்திற்குப்போக மனதுண்
டானால் பரமண்டலத்தையும் பூமண்டலத்தையு மதுகளி லடங்கியி
ருக்கிற வஸ்து வென்னப்பட்ட யாவையுஞ் சிருட்டித்தவருமா யள
வில்லாத கிரமத்துடனே நடத்திக்கொண்டு வருகிறவருமாயிருக்
கிற கடவுளுடைய சுபாவத்தையும் மட்டில்லாத நன்மைகளையுங்
கூடினமாத்திர மறியப் பிரயாசைப்படக் கடவான். ஆனால் அண்
டமென்கிற பெரிய லோகமும், பிண்டமென்கிற சின்ன லோகமும்,
பரஞ்சோதியாகிற பராபர வஸ்துவினுடைய வொப்பில்லாத ஞா
னத்தையுங் கரைகாணாத கிருபாகடாக்ஷத்தையு மனோவாக்குக் கெ
ட்டாத மேலான வல்லமையையு மளவறுக்கப்படாத விமரிசையை
யுங் கணக்கற்ற வுபகார நன்மைகளையுந் திவ்விய கீர்த்திப்பிரதாப
சோபனங்களையுஞ் சாங்கோபாங்கமான பிரகாரமாகப் பிரத்திய
க்ஷமாய்க் காண்பிக்கிறதினாலே யாவரும் பராபர வஸ்துவை யறி
யும்படிக்குச் சம்பூரண தாற்பரியமாயிருக்கிற நாம் கடவுளுக்குத்
தோத்திரமாக அண்டபிண்ட வியாக்கியானம் பண்ணத்தக்கதாக
வபேக்ஷையாயிருக்கிறோம். இப்படிப்பட்ட வுத்தியோகத்தைப்
பராமரிக்கிறதிலே சாஸ்திரங்களை யறியாத யிந்தச் சீர்மையி
லுள்ள சிலபேர்கள் அண்டபிண்ட வியாக்கியானம் பண்ணுகிற
திலே பிரத்தியக்ஷமான தப்பறைகளையும் புத்திக்கொவ்வாத வநேக
விசேஷங்களையுந் தாறுமாறாய் விதித்திருக்கின்றார்கள். நாமோ
வெனில் சோதிமண்டலங்களுடைய வர்த்தமானங்களையும் பிரபஞ்
சத்தி லடங்கியிருக்கிற வெண்ணப்படாத வஸ்துக்களுடைய சுபா
வத்தையுங் குணகுணங்களையும் வெளிப்படுத்துவதில் பொய்யான
விசேஷங்களை நினையாமல் நம்மாற் சொல்லப்போகிறதெல்லா
மொன்றில ஸ்திரமுள்ள நியாயங்களினாலொப்புவிக்கப்படும். ஒன்
றில் பிரத்தியக்ஷமான அநுபவசித்தியினாற் கண்டுபிடிக்கலாம்.
சில சமயங்களிலே அண்டவியாக்கியானத்திலே விசேஷமான
நியாயங்களையுங் காரணங்களையும் நாம் சொல்லுவது விளங்காதி
ருக்குமானா லதுகளை நம்மாலுண்டாக்கப்பட்ட லோகப்பிரமாண

மென்கிற பிரிவிற பார்த்தாற் றெரியப்படும். இப்போதிந்தப் பிரபந்தத்தின் கிரமமேதென்றால், முந்தமுந்த அண்டவியாக்கியானத்தில் உலகத்தில் மிகவும் பிரகாசிக்கிற நட்சத்திரங்களுடைய மண்டலத்தையு மதினுடைய விஸ்தீரணத்தையும், நட்சத்திரத்தின சுபாவத்தையும் நிர்க்கமனத்தையு முயரத்தையும் பருமத்தையும் அயநத்தையும் அட்சயத்தையும் பிரகாசத்தையுங் குணகுணங்களையு மதற்கடுத்த வநேக வாச்சரிய விசேஷங்களையு முத லதிகாரத்திலே வெளிப்படுத்தின பிறபாடு இரண்டா மதிகாரததிலே நட்சத்திர மண்டலத்திலிருந்து கிரகங்களுடைய மண்டலத்திற புத்தியினலிறங்கி முன்சொல்லப்பட்ட பிரகாரமாக நட்சத்திரங்களைப் பரிக்ஷித்தாப்போலே கிரகங்களுடைய வற்புதமான அயநத்தைத் தெரியப்பண்ணுவோம். அதற்கப்பால் மூன்று மதிகாரத்திலேயும் நாலா மதிகாரத்திலேயுஞ் சகல கிரகங்களிலுஞ் சந்திர சூரியன் மிகவும் விளங்கப்படுகிறதினா லதுகளுடைய சுபாவத்தையும், பிரகாசத்தையுங், கிராணங்களையுங், கிராணங்களுக்கடுத்த பனனிரண்டாச்சரிய விசேஷங்களையும், உத்தரதட்சண அயநத்தையும், பன்னிரண்டு ராசிசக்கரங்களுடைய வகையையும், அமாவாசை, பவுர்ணமி, அபரபட்சத்தையும், பூர்வபட்சத்தையும், சந்திரனுடைய பிறைகளையு, மாசுகளையும், எதுக்குதவும் எதுக்குதவாதென்று சொல்லிக்காட்டியிந்த விரண்டு கிரகங்களுடைய வுதாரணத்தையும் வெளிப்படுத்துவோம். இதன்றியே சோதிமண்டலங்களுடைய வாததமானங்களைக் காண்பித்தபிறபாடு இந்தப் பிரபஞ்சத்துக்குள ளிறங்கிச சகல வஸ்துக்களுக்கு மஸ்திவாரமாயிருக்கிற பிரிதிவு, அப்பு, தேயு, ஆகாசம், ஆக நாலு பூதியங்களுடைய விவரத்தையுந் தெரிவித்து அதுகளுக்குச் சம்பந்தமாயிருக்கிற குளி ருஷ்டண மீரம உணர்தல் ஆக நாலு பிரதான குணங்களையு மதுகளுடைய * நிருபணங்களையும் வெளிப்படுத்தி காறறுனது ஆகாய வகைவேதவிர அது வொரு பூதியமா யிருக்கக்கூடாதென்றும், இந்த நானகு பூதியங்களி லெது உத்தமமானதென்கிற வுச்சிதமான தாக்கத்தைச் சொல்லுகிறதிலொவ்வொரு பூதியத்துக்கடுத்த நனமைகளையும் ஐந்தாம அதிகாரத்திலே யறிவிப்போம். இப்படியே பூதியங்களுடைய சாதாரண வர்த்தமானத்தைச் சொல்லிக்காட்டின பிறபாடு தனித்தனியே பூதியங்களைப் பரிக்ஷித்து ஆறும் அதிகாரத்திலே தேயுவென்கிற நெருப்பினுடைய சுவாபத்தையும், அந்த நெருப்பானது எந்த அங்கிஷத்திற கூடப்பட்டதா யிருக்கிறதென்றும், சுவாலையினுடைய ரூபத்தையும் வர்னங்களையு மதுகளுக்குக் காரணங்களையும், அக்கினிக்குண்டான சுபாவ பலத்தையும், அதை யாச்சரியமான வகையோடே பெரியப்பண்ணுகிறதையும், தீக்கண்ணாடிகள திரவியங்களாகிற பருசலோகங்களை யுருகப்பண்ணுகிற விதத்தையும், சூரியகாந்தியின் சுபாவத்தையும், வானத்தின் மினனலுங், குமுறலும், இடியமுழக்கா

* நியமம் ஏற்பாடு.

ற காரணத்தையும், நெருப்பினாற் பூமிக்கு வரு மதிர்ச்சிகளையும் அக்
கினியின் கனத்தைக் கண்டுபிடிக்கு மாச்சரியத்திற்குரிய விசேஷங்
களையு மிதுமுதலாகிய தீயினாச்சரிய விசேஷங்களையுஞ் சொல்லிக்
காட்டுவோம். இந்தப் பிரகாரமாக ஏழா மதிகாரத்திலே ஆகாசத்
தினுடைய விஸ்திரணத்தையு மதினுடைய பற்பல அந்தஸ்துக்களை
யுங் கனத்தையும் பிரயோசனத்தையும், ஆகாசத்தின் கனத்தினா
லே பிறக்கிற வாச்சரியமான விநோதங்களையும், ஆகாசத்தில் வீசு
சுகிற காற்றினுடைய சுபாவத்தையும் அதற்குக் காரணத்தையும்,
காற்றினுடைய பற்பல வகைகளையும் நன்மைகளையும் வெளிப்படுத்
துவோம். இந்தடவாக எட்டா மதிகாரத்திலே அப்புவென்கிற தண்
ணீருடைய வர்த்தமானங் காணப்படும். முந்தமுந்த இந்தப் பூமி
யமொன்றுமாத்திரஞ் சகலமான வஸ்துக்களையும் பிழைப்பிக்கிற
தற்குப் போதுமென் றொப்புவிக்கத் தக்கதாகச் சில சாஸ்திரிகள்
சொல்லுகிற நியாயங்களை யாட்சேபித்திந்தப் பூமியுஞ் சகல வஸ்
துக்களுக் குதவியா யிருந்தாலும் அஃதொன்றுமாத்திரம் பிழைப்
பிக்கப் போராதென்று நியாயத்தினாலே ஸ்தாபித்ததற்குப் பிற்பாடு
தண்ணீரானது எந்த அங்கிஷங்களினாலே கூட்டப்பட்டதா யிருக்
கிறதென்று பரிக்ஷித்து ஊற்றுக்களுக்குச் சொல்லப்பட்ட கார
ணங்களி லெந்தக காரணத்தை யநுசரிக்க வேணுமென்று குறித்
தொருவருஷத்தி லெம்மாத்திரம் வருஷித்ததென்றும், ஆறுகளெல்
லாம் மழைகளினால் வருகிறதென்றும் நிச்சயம்பண்ணி மழையும்
பனியு மெந்தவிதமாக வருகிறதென்று மதுகளுக்கு மெய்யான கா
ரணங்களையு மறியப்பண்ணுவோம். இதற்கப்பா லொன்பதாம் மதி
காரத்திலே சமுத்திரத்தின விவரமும் அக்கடலிலுண்டாகிய வுப்பு
த்தண்ணீருக்குக் காரணமும் இப்படிக்கொத்த சாகரமாகிற சமுத்
திரத்தி னதிசயமுள்ள வடிவுக்கும் பெருக்குக்குங் காரணமும் நி
மித்தமும், அதினுடைய நன்மைகளுக்குஞ் சாகரத்திற் காணலான
முத்து, பவளம், அமபர் முதலாகிய விலையேறப்பெற்ற வதிசய வஸ்
துக்களும், விநோதங்களுஞ் சமுத்திரத்திலே தண்ணீரில்லாமற்போ
னால் சாவலோகத்திலுமுள்ள ஆறுகளிலோடுகிற தண்ணீரெல்லாங்
கடலிலேவிழுகிறபோ ததை நிரப்புகிறதற் கெத்தனைவருஷஞ்செல்
லுமென்று நிதானமாய்ச் சொல்லுகிறது மிது முதலாகிய வதிய வி
சேஷங்களை முன சொல்லப்பட்ட வொன்பதா மதிகாரத்திலொப்
புவிக்கப்படும். கடைசியிலே பூமியளவையும், பிரமாணத்தையுஞ்
சுமுத்திரையாகச் சொல்லிப் பூலோகம் உண்டைபோல வட்டரூ
பமாக விருக்கிறதென்று மொப்புவித்ததற்குப் பிற்பாடு பூமி சாவ
லோகத்துக்கு மையமா யிருக்கிறதென்று நியாயத்தினால் காட்டி
மனுஷர் திரிகிற பற்பல ஸ்தலங்களுடைய வாச்சரியமான வேற்று
மையையுங், குளிரையும், உஷ்ணத்தையும, பிரகாசத்தையு, மிரு
ளையும் அதுகளுடைய விசேஷங்களையுங் கண்டுபிடிக்கிற வகை
யையும் ஸ்தாபித்துப் பூலோகத்தைச் சுற்றிக்கொண்டு வருகிறதி
லே சம்பவிக்கிற அற்புத விசேஷத்தை வெளிப்படுத்திப் பருவதப்

களிலே விளைகிற வொன்பதுவகை இரத்தினங்களுடைய வர்த்தமா
னங்களையும் பஞ்சலோகத்தினுடைய விபரத்தையு மதற்குக் கார
ணங்களையும் பத்தா மதிகாரத்திலே தெரியப் பண்ணுவோம். இ
துவல்லாமற் புத்தியில்லாத வஸ்துக்களுடைய சுபாவத்தையுங், கு
ணங்களையும் பரிக்ஷித்ததற்குப் பிறபாடு ஜீவனுள்ள வஸ்துக்களுடை
ய வர்த்தமானத்தை வெளிப்படுத்தத் தொடங்கி முந்தமுந்த வளர்
ஜீவனுள்ள புல்லுகள், புஷ்பங்கள், செடிகள், விருக்ஷங்கள் முத
லானதுகள் வளருகிற வகையும், அதுகளுடைய வேர், பட்டை, இ
லை, பூ, காய், கனிகளுடைய சுபாவ குணங்களு மதுகளிலுண்டான
வதிசய விசேஷங்களு மதற்குக்காரணங்களும் பதினோரா மதிகா
ரத்திலே சொல்லப்படும். இப்படியே இந்திரியங்களுள்ள மிரு
கங்களுடைய சுபாவ வர்த்தமானங்களைக் காண்பிக்கிறதிலே தே
கத்தினுடைய தத்துவங்களைப் பிண்ட வியாக்கியானத்திலே விஸ்தீ
ரணமாய்ச் சொல்லப்போகிறதினாலே யிந்த அண்ட வியாக்கியா
னத்தின் கடைசியான வதிகாரத்திலே மிருகங்கள் தாங்கள் பி
ழைக்கிறதற்குந் தங்களுக்குப் பொல்லாப்பு வராதபடிக்குங் குஞ்
சுகளை குட்டிகளை வளர்க்கிறதற்குங் காண்பிக்கிற விசேஷ சா
மர்த்தியத்தையு மற்ற கடுத்த வாச்சரியமான விசேஷங்களையும்
பன்னிரண்டாம் அதிகாரத்திலே வெளிப்படுத்துவோம். எல்லா
முகிந்ததற்குப் பிற்பாடு பிண்டவியாக்கியானத்திலே முந்த முந்
த பிண்டமானது அண்டத்தினுடைய சுருக்கமா யிருக்கிறதென
று கெட்டியுள்ள நியாயங்களினாலே ஸ்தாபித்தபிறபாடு மனுஷ
னானவன் றனனிடத்திலே மற்ற வஸ்துக்களுடைய நன்மைகளை
யெல்லாங் கொண்டிருக்கிறது மல்லாமல் லப்பாலே கடந்து மகா
மகிமையுள்ளவனு யிருக்கிறானென்று ரூப்புவித்து மனுஷனுக்கு
மற்றப் பொருட்களுக்கு முண்டான சமாதானத்தையும் வேற்று
மையையுஞ் சொல்லிக்காட்டி, பிண்டத்தினுடைய சுபாவமான
அளவையும் பிரமாணத்தையுஞ் சாஸ்திரமேரையாக நிதானமா
யொப்பிப்போம். இதற்கப்பால் அஸ்திகள் பிண்டத்துக் கஸ்தி
வாரமா யிருக்கிறதினாலே தேகத்தை நன்றாயறிகிறதற்கு எலும்
புகளுடைய விபரத்தை நன்றாய்க் கண்டுபிடிக்கவேணும். ஆனப
டியினாலே அஸ்திகளுடைய நிருபணத்தையும் மாம்ஸங்களையுஞ்,
சந்துகளையுஞ். சோதனைகளையு, முரூபத்தையு, மிருப்பிடத்தையும்,
பிரயோசனத்தையுந், சருமத்தையுந், துவாரங்களையுங் காரணங்
களையும் பதினொரா மதிகாரத்திலே சொல்லிக்காட்டுவோம். அதற்
குப் பிறபாடு சிரசினுடைய விபரத்தைக் காண்பிக்கிறதிலேமுந்த
முந்த மயிர்களுடைய சுபாவத்தையும் அதுகளுக் குண்டானபற
பல வர்ணங்களுடைய காரணத்தையுஞ் சொல்லிக் கபாலத்தினு
டைய ரூபத்தையும், அங்கணங்களையும், மூளையினுடைய விரண்
டு பிரதான அசைவுகளையும் அந்தஸ்துக்களையும், அந்த விடத்தைச்
சுமக்கிற மூன்று தூண்களையுஞ் சில வனுக்கள் வடிகட்டப்பட்
டுப்போகிற பிரகாரத்தையும் நரம்புகளுடைய பிரதான பத்துச்

சோடுகளையு,முகத்தினுடைய மகிமைகளையுங், கண்களுடைய விசேஷமான வர்ணிப்பையுங் கேட்கிறதற்குங், காண்கிறதற்கு, முகர்ந்து பார்க்கிறதற்கும், உருசியைக் கிரகிக்கிறதற்கும், பரிக்ஷிக்கிறதற்குஞ் சம்பந்தமா யிருக்கிற வாச்சரிய விசேஷங்களையுந் தனித்தனியே பதினைந்தா மதிகாரத்திலே வெளிப்படுத்துவோம். பதினாறும் அதிகாரத்திலேயோ வெனறால், நெஞ்சினுடைய தத்துவங்களும் இருதயமு மதுகளி லடங்கியிருக்கிற வதிசயங்களும் விசேஷமான அசைவுகளும் இருதயத்தின் மாம்ஸங்களும் இரத்தமானது சீவாக்கினியோடே சரீரத்தை யெப்போதுஞ் சுற்றிக்கொண்டு வருகிறதும், இந்த வாச்சரியமான சுற்றுக்குச் சம்பந்தமா யிருக்கிற விரத்தத்தாரைக ளிருதயத்தினின்று கிளம்பி மற்ற தாதுக்கள் வழியாகப் புறப்பட்டுத் திரேகமெல்லாம் பாய்ச்சுகிறதையும், நல்லீரல வெள்ளீரலுடைய சுவாப குணங்களும், மூர்ச்சை விடுகிறதும் வாங்கிறதுந் துருத்திப் பிரகாரமாய் வெள்ளீரல் கிளம்புகிறதும், அமிழ்ந்துகிறதும், சுவாசத்தின் பிரயோசனமு முன் சொல்லப்பட்ட பதினாறும் அதிகாரத்திலே தெரியப்படும்.இப்பால் குக்ஷி வியாக்கியானம் பண்ணுகிறதிலே மூந்தமூந்த திரேகத்தை மூடுகிற பினதோலுங், கெட்டியான செர்மமுங். கொழுப்பும் பரிட்சிக்கப்படும். வயிற்றினுடைய சுபாவக்குணங்களும் போசன தாரையும், குட்சியிலுண்டாகிய விரண்டு வாசல்களு மாகாரபானம் பால்போலே கூழாய்ப்போனபிற்பாடு குடல்களுக்குள்ளே பிரவேசித்து மகா பலமுள்ள இரசங்களோடே கலந்துபோ யநேகவிசை சுற்றிககொணடு வருகிறதும், பசிக்குந் தாகத்துக்குங் காரணமும், சீரணமாகிற வகையும், செரிக்கபபட்ட் போசனமுஞ் சாறும் பால்போலே வெள்ளையாகிறதும், அந்த வெள்ளை யிரசம் பாறருனாகருள்ளே புகுந்து பெரிய விரததத் தாரைக்குள்ளே விழுகிறதும், வாலீரலுங், கலலீரலும், மாங்காயு மதுகளுக்கடுத்த தொழில்களும், வேறே யாச்சரியமான தத்துவஙகளுடைய வகைகளும் பதினேழாம் அதிகாரததிலே சொலலப்படும். அப்படியே சாணகராதி விவரத்தை வெளிப்படுத்தும்போது பாதத்துக்குங் கரத்துக்குஞ் சம்பந்தமா யிருக்கிற விசேஷங்களை நன்றாய்த தெரியபபண்ணி அவயவங்களுடைய கிரியைக்குவேண்டிய நரம்புகளுடைய சுபாவத்தையு, மதுகளுக்குள்ளே யோடுகிற சீவவணுக்களி னத்தியந்த பலததையு, மனுஷனடக்கிற வகையையு மிருகங்கள் நடக்கிற பிரகாரத்தையும், பாம்புமுதலான செந்துக்களூருகிற விததையும், பட்சிகள் பறக்கிற அடவையும், மச்சங்கள நீந்துகிற மேனாலையயும் அங்கங்களுடைய குணங்களையும் பதினெட்டாம் அதிகாரத்திலே சொல்லிககாட்டுவோம். இதன்றியே நரசிவனுடைய மகிமையையுஞ் சுபாவ குணங்களும், விர்த்திகளும், அட்சயமுஞ், சுதந்தரமுளள சித்தமு மதற்கடுத்த வதிசய விசேஷங்களையும் பத்தொன்பதா மதிகாரத்திலே வெளிப்படுத்தப்படும். அண்டத்தையு பிண்டத்தையு மறிந்ததறகுப் பிற்பாடதுகளை யுண்டாக்கி யிரட்சித்துக்

கொண்டு வருகிற மெய்யான கடவுளைக் கண்டுபிடிக்கும் வகையும் அவருடைய சித்தத்துக்குப் பொருந்தி யிருக்கிற தருமங்களைச் செய்யும் வகையையு மதுகளால் வரத்தக்க மட்டில்லாத பலனையுஞ், சங்க்ஷேபமாக இருபதா மதிகாரத்திலே தெரியப்பண்ணுவோம். கடைசியாய் உலகப்பிரமாண சாஸ்திரத்தையும் பரமகுருக்ஷாபிப் பிராயத்தையும் வெளிப்படுத்துவோம்.

இந்த அண்டபிண்ட வியாக்கியானத்தைக் கண்டுபிடிக்கிறது சில அதிகாரத்திலே அருமையா யிருந்ததினாலே கடினமான தமிழ் ரீதியை யநுசரியாமல் நாலுபேரு மெளிதாய்க் கண்டு பிடிக்கலான வகையோடே வாக்கியங்களைச் சுருக்கத்திலே நிறுத்தி அண்டத்தி னுடையவும் பிண்டத்தி னுடையவும் வியாக்கியானத்தை யெழுதினோம். இத்தொகைப்பட்ட விசேஷங்களடங்கி யிருக்கிற விந்தப பிரபந்தத்திலுண்டான ஆச்சரிய விசேஷங்களையும் அநாதி யுகா துவக்கி இந்நாள் வரைக்கும் நடந்து வந்த காலக்கிரமங்களையும இனி நடக்கும் வரிசைகளையும் நன்றாய்த் தெரியப்பண்ணுகிறதற்குச் சாஸ்திரங்களும் புத்திக் கூர்மையும் வேண்டி யிருப்பதால எனனுடைய கொஞ்ச புத்தியையுந் தற்பலத்தையும் நம்பாம லிந்தப் பிரபந்தமானது கடவுளுக்குத் தோத்திரமாக வுண்டாக்கப் பட்டதினால் பராபர வஸ்துவினுடைய மட்டில்லாத கிருபாகடாக்ஷத்தை நம்பிக்கொண்டு இநத அண்டபிண்ட வியாக்கியானத்தை தடங்கினேன், சுவாமி யிரக்ஷிக்கக் கடவாராக.

முகவுரை முற்றிற்று.

# அண்டபிண்ட வியாக்கியானம்.

## முதலதிகாரம்.

### நக்ஷத்திரமண்டல விவரம்.

இடைவிடாமல் ஸ்துதிக்கப்படுகிறதற்குப் பாத்திரமாயிருக்கிற சர்வேஸ்வரனானவர் தம்முடைய மட்டில்லாத கிருபாகடாக்ஷத்தையும் அளவில்லாத விமரிசையையும் அளவறுக்கப்படாத பலத்தையும் பிரசித்தமாய்க் காண்பிக்கச் சித்தமா யிருந்ததினாலே பரிபூரண பூர்த்தியைக்கொடுக்கும் பரமானந்தமாகிற மோக்ஷபாக்கியத்தை யநுபவிக்கும் பொருட்டாகவே மனுஷரைச் சிருஷ்டித்தார். ஆனால் சர்வத்துக்கும் வல்லவராயிருக்கிற கர்த்தரானவர் தம்முடைய மோக்ஷராச்சியத்துக்கு மனுஷரைக் கூட்டிக்கொண்டு போகுமுன்னே யவர்கள் மகாராசாக்களாய்ப் பிரஸ்தாபிக்கத் தக்கதாக அநந்த தயையோடே சர்வலோகத்தையும் அவர்களுக்குச் சிருஷ்டித்துக் கொடுத்தார். இதெல்லா மிப்படி யிருக்கும்போது மனுஷரென்னப்பட்ட யாவரும் நன்றியறிந்த மனதோடே யிப்படிப்பட்ட கடவுளைத் தோத்திரம் பண்ணுகிறதுமல்லாம லிந்த ஆண்டவருடைய வொப்பில்லாத மகிமைகளைப் பிரகாசிப்பிக்கிற லோகத்தையு மதிலுள்ள பிரதான வஸ்துக்களையு மனதிலே தியானித்து அதுகளைத் தங்களுக்குத் தந்தருளின கர்த்தாவின்பேரிலே யத்தியந்த பத்தியா யிருக்கவேண்டியவர்களா யிருக்கிறோம்.

முந்த முந்த புத்தியுள்ள மனிதன் கண் திறந்து சோதி மண்டலங்களைத் தெளிவா யாராய்ந்து பார்த்தால் அவைகளி லுள்ள பொருட்கள் சகலத்துக்கு மேலான குணங்களைக் கொண்டிருக்கிறதென் றறியலாம். அதெப்படி யென்றால் பிரபஞ்சத்தி லடங்கி யிருக்கிற பொருளென்னப்பட்ட யாவும் பற்பல விதமா யழிந்து போனாலுஞ் சோதிமண்டலங்கள் விகாரப்படாமல் * அக்ஷ

* கெட்டுப்போகாமல.

யமா யிருக்கின்றது. இதுநிமித்தமாகப் பராபர வஸ்துவா னவ ருலகத்தை நிரப்புகிறபோ தெந்த விதமாக ஆச்ச ரிய குணங்களைக் கொண்டிருக்கிற சோதிமண்டலங்க ளைப் படைத்தாரோ அந்தப்பிரகாரந்தானே யிப்படிப் பட்ட சோதிமண்டலங்கள் * க்ஷயமாகாம லொருகண்ட சீரா யிடைவிடாமற் பிரகாசிக்கிறதென்று அந்தந்தக் கால ங்களிலுள்ள மனுஷர் தலைமுறை தலைமுறையா யநுபவ சி த்தியினாலே கண்டுபிடித்துக்கொண்டு வருகிறார்கள். இந் தப் பிரகாசத்தின் வகையைப் பார்க்கும்போது சகலமான வஸ்துக்களுக்கும் அலங்காரமுமா யிருக்கப் பகல் நே ரத்திற் சூரியனைச் சர்வேஸ்வரன் கட்டளை யிட்டதும ல்லாம லிராக்காலத்திற் சந்திரன் பிரகாசிக்கச் சித்தமா யிருந்தார். ஆகிலுஞ் சில தறுவாய்களிலே நிலவில்லா மற் போனாலு மெண்ணப்படாத நக்ஷத்திரங்கள் பிரகா சிக்கின்றன.

இதற்கப்பா லறிய வேண்டியதாவது: சோதிமண் டலங்கள் அக்ஷயத்தையும் பிரகாசத்தையுங் கொண்டி ருக்கிற படியினாலே ஆச்சரிய லகுவோடே தன் அய நத்திலே நடக்கின்றன. ஆனால் சூரியன சந்திரன் மு தலான கிரகங்களையும் நட்சத்திரங்களையுஞ் சோதிசாஸ திரத்தின்படியே மட்டிட்டா லதுகளுடைய பிரமாண மி கவு மகா பேர்பெற்ற வித்தியாபாரகருக்கு அற்புத விசேஷ மாயிருக்கும். இதெல்லாம் வெளிப்படுத்துகிறதற்கு மு னனே நட்சத்திரத்தின் சிங்காரத்தைச் சுருக்கத்துக்கு ள்ளே விசாரிக்கக்கடவோம்.

அதெப்படி யென்றால் நல்ல இராத்திரி காலத்தி லே மேகசஞ்சாரங்க ளில்லாதிருக்கையிலே பற்பல பி ரகாசத்தைக் கொண்டிருக்கிற நட்சத்திரங்களை யுற்று ப் பார்த்தால் சோதி சக்கரங்களெல்லா மெண்ணப்ப டாத வச்சிரங்களினாலேயு மிரத்தினங்களினாலேயும் பி ரகாசிக்கின்றன வென்றும், நநதவனங்கள் பற்பல வ ர்ண முள்ள புஷ்பங்களினாலே சிங்காரமாகிருப் போ லே நட்சத்திர மண்டலங்க ளத்தியந்த வேடிக்கையோ டேபு மலங்கிர்தங்க ளோடேயும் பூணுகிறதெனறு காண

* அக்ஷயமாயிருக்க.

லாம். பூர்வகாலத்தி லொரு அரசமகன் பூமிக்குள்ளே யுண்டாகிய இருள் பொருந்தின கெபிக்குள்ளே வாசம் பண்ணி யோரிராத்திரியிற் புறப்பட்டு நட்சத்திர மண்டலங்களுடைய சிங்காரத்தைப் பார்க்கும்போது பிரமித்துச் சந்தோஷ மிகுதியினாலே பரவசமாய்ப் போனானும். இப்படிப்பட்ட விராசகுமாரனனவன நட்சத்திரங்களுடைய *அயநத்தையும் பருமத்தையும் †நிர்க்கமனத்தையும் நடையினுடைய சுறுதியையு முயரத்தையும் அட்சயத்தையு மதிலுள்ள வுச்சித குணங்களையு மறியாம லிருந்தவ னித்தனை சந்தோஷப்பட்டா லதுகளெல்லாத்தையுங் கொஞ்சத்துக்குள்ளேயாறாலு மாராய்ந்திருக்கிற சோதிசாஸ்திரிக ளெப்படிப்பட்ட ஆச்சரியத்தோடே நட்சத்திரங்களைப்பார்த் ததுகளை யுண்டுபண்ணின கடவுளைத் தோத்திரஞ்செய்வார்களென்று யோசிக்கக்கடவோம். இந்த வற்புத விசேஷங்களின்னமு மதிகமாய் விளங்கும்படிக்கு அறிய வேண்டியதாவது.

பூமிக்கும் நட்சத்திர மண்டலத்துக்கும் 12,60,00,000 பனிரண்டுகோடியே யறுபதுலட்சகாத தூரமிருக்கின்றது. இப்படிப்பட்ட நட்சத்திரங்களுடைய மண்டலம்சமசக்கரத்திலே 60நாழிகைக்குள்ளே79,25,00,000 எழுபத்தொன்பது கோடியே யிருபத்தைந்திலட்ச காதம் நடக்கவேண்டியிருக்கிறது; ஆனபடியினாலே சமசக்கரத்திலுண்டான நட்சத்திரங்களொருநாழிகைக்குள்ளே 1,72,00,000 கோடியே யெழுபத்திரண்டு லட்சகாதம் நடக்கும். அந்த நட்சத்திரத்தினுடைய விஸ்தீரணத்தையுங் காத்திரத்தையு மறிய மனதுண்டானால் உத்தராதி ராச்சியத்திலுள்ள சோதிசாஸ்திரிகள் நட்சத்திரக் கூட்டங்களுக்குள்ளே 1181 நட்சத்திரங்கள் கண்களுக்குப் பிரசித்தமாய்க் காணப்படுகிறதென்று கிரந்த சாஸ்திரங்களிலெழுதி வைத்தார்கள். ஆனால் கண்ணுக்கு வெட்டவெளியாகக் காணலான நட்சத்திரங்க ளல்லாமல் தூரதிஷ்டிக்கண்ணாடியால் நட்சத்திர மண்டலத்தைப் பார்த்தா லெண்ணிக்கையி லடங்காத நட்சத்திரங்களைக் காணலாம். இந்தப் பிரகாரமாக இராக்ஷ

* பாதையையும்.

† அசையாநிலை.

தனென்கிற நட்சத்திரத்தினுடைய கூட்டத்தில் 59 நட்சத்திரமாத்திரங் கண்ணுக்குக் காணப்பட்டாலு மப்படிப் பட்ட நட்சத்திரக் கூட்டத்திலே தூரதிஷ்டி முகாந்திரமாக நன்ருய்ப் பார்த்தால் 10,000 நட்சத்திரங்களைக் காண்பிக்கும். இஃதன்றியே நட்சத்திர மண்டலத்திலே புநர்பூசத்தின கீழே துவக்கி வடமேற்கே போகிற வெண்மையான நட்சத்திரப் பாதையிலே தூரதிஷ்ட்டியைக்கொண்டு பார்த்தால் கோடாகோடி நட்சத்திரங்களைக் காணலாம். ஆனபடியினுலே நட்சத்திரங்க ளெண்ணிக்கையி லடங்காதென்கிறது சத்தியமாகும். இப்படிப்பட்ட நட்சத்திரங்களின் பிரமாணத்தைக் கண்டுபிடிக்க மனதுள்ளவர்க ளறிய வேண்டியதாவது; மகா விராசாவுமாய் சாஸ்திரியுமா யிருந்த போலோமேவு என்கிறவரு மனேக சாஸ்திரிகளும் ஆறுவிதமாக நட்சத்திரங்களின் காத்திரத்தைப் பகுத்தார்கள். முந்தின அந்தஸ்திலே யுண்டான நட்சத்திரங்க ளொவ்வொன்று பூமியைப்பார்க்க 170 பங்கு பெரியதா யிருக்கும். இரண்டா மந்தஸ்திலே யிருக்கிற 45 நட்சத்திரங்களி லொவ்வொர்ன்று 90 பூமி கொண்டதா யிருக்கும். மூன்று மந்தஸ்திலே யுள்ள 208 நட்சத்திரங்களி லொவ்வொன்று 72 பூமிகொண்டதா யிருக்கும். நாலாமந்தஸ்திலே யுண்டான 264 நட்சத்திரங்களி லொவ்வொன்று 64 பூமிகொண்டதாகும். ஐந்தாமந்தஸ்திலே யுள்ள 217 நட்சத்திரங்களிலொவ்வொன்றில் 35 பூமியடங்கத்தக்கினதா யிருக்கும். கடைசியிலே ஆறுமந்தஸ்திலுள்ள, 241 நட்சத்திரங்களிலொவ்வொன்று 18 பூமிகொண்டதாமென்று அறியக் கடவோம். முன்சொல்லப்பட்ட பூர்வீக சாஸ்திரிக ளுத்தராதி இராச்சியத்திலே வாசமாயிருந்ததினுல் தெட்சணுதியிலுள்ளநட்சத்திரங்களை யறியாமற்போனுர்கள். ஆனுலவர்களுக்குப் பிற்பாடுண்டான மகா பேர்பெற்ற சாஸ்திரிகள் தென்பக்கத்திலுள்ள நட்சத்திரங்களையும் யாத்திரை வழியாகக்கண்டதினுல் முன்னெழுதப்பட்டிருந்த நட்சத்திரங்களோடே கூட்டினுர்கள். ஆனுல் நட்சத்திரங்கள் விஷயத்திலே பராபரவஸ்துவினுடைய மட்டில்லாத பலத்தையுஞ் சாமர்த்தியத்தையும் விளங்கப்பண்ணத் தக்கதாக வறியவேண்டினதாவது. எந்த நட்சத்திரத்தையும் பார்க்கும்போது திருஷ்டிக் கெத்தனைசிறியதாய்க் காணப்

பட்டாலும் ஒவ்வொன்றும் பூமியைப்பார்க்கப் பெரிதாகவே யிருக்கிறதினாலே யாதாமொருவன் நட்சத்திரமண்டலத்திலிருந்து பூமியைப் பார்க்கிறதற்கு எத்தனைப் பிரயாசைப்பட்டாலும் பரிச்சேதமாய்த் தெரியப்போகிறதில்லை.

இதெல்லா மிப்படி யிருக்கப் புத்திமயங்கி அணுப்போலிருக்கிற பூமியிலுண்டான அழிந்துபோகிற வஸ்துக்களை யபேட்சிக்கிற மனிதர்கள் நட்சத்திர மண்டலத்துக்கப்பாலே கடந்திருக்கிற மோட்சத்தை யனுபவிக்கத்தக்கதாக அபேட்சையா யிருக்கவேண்டாமோ? நட்சத்திரங்களுடைய அயநத்தைப் பார்க்கும்போ ததுகளைச் சிருஷ்டித்தவரான பராபர வஸ்துவினுடைய சந்நிதியிற் போயிருக்க ஆசைப்பட வேண்டாமோ?

இதற்கப்பால் நம்மா லெழுதப்போகிற வற்புத விசேஷங்களை யுற்றுக் கேளுங்கள். இயாதொரு பீரங்கிக் குண்டானது சுட்ட தீவரத்தி லெத்தனை சுறுக்கா யோடுகிறதோ அத்தனை சீக்கிரமாக இடைவிடாம லோடினால் நாற்பது நாளைக்குள்ளே பூமியெல்லாஞ் சுற்றிக் கொண்டுவரும். ஆனபடியினாலே யெத்தனை தீவரமாய்க் குண்டு பறந்தாலும் 7,920 காதம் நடக்கிறதற்கு நாற்பது நாள் வேண்டி யிருக்கினறதுபோ லாயிற்று. சம சக்கரத்திலே யுண்டான நட்சத்திரங்களோ வென்றால் ஒரு நாளைக்குள்ளே 79,20,00,000 எழுபத்தொன்பது கோடியே யிருபது லட்சகாதம் நடக்கிறது. இதன்றியே நட்சத்திர மண்டலத்திலிருந்து நாலுமுழ வகலங்களமும் ஒருமுழப் பருமமுமுள்ள ஒரு பாறையானது பூமியிலே விழுகிறதற்கு 71 வருஷத்துச் சில்வானஞ் செல்லுமென்பது நிச்சயமாகும். அதேதென்றால் முன் சொல்லப்பட்ட கற்பாறையானது சாஸ்திரிகள் சொல்லுகிறாப்போலே ஒரு *தாசுக்குள்ளே 200 காததூரம் விழலாம். இந்தப் பிரகாரமாக யாதாமொருத்தன் பூமியிலிருந்து நட்சத்திர மண்டலமட்டும் போகிறதற்கு 34,000 முப்பத்து நாலாயிரத்துச் சில்வான வருஷஞ்செல்லும்.

இதெல்லா மிப்படி யிருக்கையிலே இலௌகீக நன்மைகளிற் பூமியிலேமாத்திர முண்டான செல்வமென்னப்ப

* ஒரு மணி அல்லது இரண்டரை நாழிகை.

ட்ட யாவு மோரணுவுக்குள்ளே யடங்கி யிருக்கும்போ தித்தனை மண்டலங்களு மவைகளுக் கப்பாலே கடந்திருக்கிற மோட்சத்தினுடைய அளவில்லாத பாக்கியத்தையும் விசாரியாம லிருக்கிறதென்ன? மகா சாஸ்திரியான அர்ச். அம்புரோசியுசென்கிறவர் திருவுளம் பற்றினதை யுற்றுக்கேளுங்கள். "சோதிமண்டலங்கள் பராபரவஸ்துவினுடைய புத்தகமா யிருக்கினறது. இதிலே நட்சத்திர வெழுத்தாலே தம்முடைய அளவில்லாத நன்மைகளுடைய அடையாளங்களை யெழுத்துவாசனை யறியாதவர்களுக்கு முதலா யறிவித்திருக்கினறார். இப்படிப்பட்ட சோதிமண்டலத்தில் விலைமதிபாத விரத்தினங்கள்போலே யெண்ணப்படாத நட்சத்திரங்களை யாண்டவர் பதித்தார். அவைகள் இராத்திரி காலங்களிலே திவட்டிபோலே பூலோகத்துக்குப் பிரகாசிக்கின்றது." சில சாஸ்திரிகள் நட்சத்திரங்கள் மோட்சமண்டலத்தினுடைய நிலத்தின் திவ்விடிவாசலென றருளிச் செய்தார்கள்.

இதற்கப்பா லறியவேண்டியதாவது: சோதிசாஸ்திரிகள் நட்சத்திரக் கூட்டங்கள் பற்பல ரூபங்களைக் கொண்டிருக்கினறனவென்று விதித்தாலு மந்த ரூபங்களுக்கு விசேஷ பலமுண்டென்று விசாரிக்க வேண்டாம். அதேதென்றால், அங்கங்கே சிதறி யிருக்கிற நட்சத்திரங்களைப் பொதுவிலே பார்த்தறிகிற தருமையா யிருக்கிறதினாலே அதுகளெல்லா மனதிலெளிதாய்த் தரிக்கத்தக்கதாகப் பற்பல கூட்டங்களாகப் பிரித்தந்தந்த வகுப்புகளுக்குத் தங்கள் மனதினபடியே வெவ்வேறு நாமங்களை ஸ்தாபித்தார்கள். இவ்விதமாய்ச் சூரியனுடைய அயநம் மனதிலே நன்றாய்த் தரிக்கிறதற்கு மேஷம், ரிஷப முதலான பன்னிரண்டு ராசிகளை விதித்தார்கள். அசுபதி, பரணி, கார்த்திகை முதலான 27 நட்சத்திரங்களைப் பகுத்தார்கள். ஆனவிதிலே யிரண்டு தப்பித முண்டென றறிவீர்களாக. பன்னிரண் டிராசிகளினாலேயு மிருபத்தேழு நட்சத்திரங்களினாலேயு மனுஷருக் கபாயம் வருமென றுவிசாரிக்கவேண்டாம். அவ்வண்ணமே யுண்டாக்கப்பட்ட வஸ்து மனுஷருடைய சுதந்தர புத்தியைக் கெடுக்க மாட்டாததினாலேயுங் கண்டிப்புள்ள நட்சத்திரங்களுக்கும்

அரூபியா யிருக்கிற மனதுக்குஞ் சம்பந்த மில்லாததினாலேயு மற்றுமுள்ள வநேக காரணங்களினாலேயுஞ் சுதந்தரமுள்ள மனதினாலே வரப்போகிற கிரியைகளை நட்சத்திர யோகங்களின் பலத்தினாலே யேற்கனவே தப்பாமற் சொல்லலாமென்கிற பட்சமானது புத்திக்கும் நியாயத்துக்குங் கிரமத்தின்படியே யொவ்வாததா யிருக்கிறதென் றங்கிகரிக்கக் கடவோம். இதெல்லாஞ் சகுன நிவாரணமென்கிற புத்தகத்திலே விஸ்தீரணமாய் நாமெழுதி வைத்ததினாலே யிங்கே யிம்மாத்திரஞ் சொல்லிக் காட்டியது போதும் இரண்டாவது. இந்தச் சீமையிலுள்ள சனங்களறிந்திருக்கிற 27 நட்சத்திரங்களல்லாமல் வேறே யநேக நட்சத்திரங்களுண்டாயிருக்கிற படியினாலே உத்தராதிராச்சியத்தி லுண்டான மெய்யான சோதிசாஸ்திரிகள் கண்களுக்கு வெட்டவெளியாகக் காணப்படுகிற வெல்லா நட்சத்திரங்களையும் 62 பிரிவாகப் பிரித்தார்கள். கடைசியிலே நட்சத்திர மண்டலத்தை யிவ்வளவாக வெளிப்படுத்தினமையாற் கிரகங்களுடைய மண்டலத்தை வருகிற பாடத்திலே (சர்வேஸ்வரனுடைய மகிமை மிகவும் விளங்கத்தக்கதாகக் கூடினமாத்திரம் வெளிப்படுத்துவோம்.

## உ-ம். அதிகாரம்.

### கிரகமண்டலங்களின் விவரம்.

நட்சத்திர மண்டலத்தி லுண்டான பிரதான விசேஷங்களைக் கூடினமாத்திரம் வெளிப்படுத்தினதற்குப் பிற்பா டதிலே யிருந்து கிரகங்களுடைய மண்டலங்களிலே யிறங்கி கிரகங்களுடைய வுயரத்தையுங் காத்திரத்தையுஞ் சுபாவத்தையுங் குணங்களையும் ஆராய்கிறது கிரமமுள்ள நியாயமா யிருக்கிறது.

முந்தமுந்த கண்களுக்குப் பிரத்தியட்சயமாய்க் காண்கிற ஏழு கிரகங்கள்மாத்திர முண்டு. அதுகளுக்கு நாமங்களும் ஒழுங்குகளு மேதென்றால் நட்சத்திர மண்டலத்துக்குப் பிற்பாடு முதலாவது சனி, இரண்டாவது வியாழம், மூன்றாவது செவ்வாய், நான்காவது ஞாயிறாகிய சூரியன், ஐந்தாவது வெள்ளி, ஆறாவது புதன், ஏழாவது திங்

களாகிற சந்திரன் இப்படிப்பட்ட கோட்களுடைய மே
ரையையு மொழுங்கையும் ஸ்திரமாய் மனதிலே தரிக்கிற
தற்கு திங்கள் துவக்கி யேழுகிழமைகள் முகியுமட்டு
மொன்றைவிட் டொன்றை எண்ணிக்கொண்டுபோய்ச்
சனியிலே முகிந்தா லதுகள்தானே கிரகங்களுடைய வொ
ழுங்கு நிலைமையுமென்று சொல்லப்படும்.

இந்த ஏழு கிரகங்களுடைய சக்கரங்களும், நட்சத்
திரங்களுடைய மண்டலங்களும், ஆக எட்டு மண்டலங்
களுஞ் சர்வேஸ்வரனாலே யுண்டாக்கப்பட்ட சங்கீத வாத்
தியங்களென்று பூர்வ சாஸ்திரிகளெழுதிவைத்தார்கள். அ
தேதெனென்றா லிந்த எட்டு மண்டலங்களசைகிறபோது த
னது அயநத்தினாலே யாச்சரியமான சங்கீதத்தையு மேலா
ன சாஸ்திரத்துக்குச் சம்பந்தமா யிருக்கிற இராகங்களை
யும் பிறக்கப்பண்ணும். இதெல்லாம் ஒருவமையினாலே
வெளிப்படுத்துவோம். அதெப்படி யென்றால் சரிகம பத
நிச சனிதப மகரிச என்கிற சப்த்த சுரத சாஸ்திரிகள் உச்சி
தமான பாடல்களைப் பாடுகிறாப்போலே) யிந்த எட்டு மண்
டலங்கள் அசரீரியா யிருக்கிற சம்மனசுக்களா லேவப்பட்
டதா யிருக்கிறபடியினாலே செவிகளுக்கு மகா வின்பமா
ன தொனிகளைத் தொனிக்கப் பண்ணும். அவ்வண்ண
மே சாஸ்திரத்தின்படியே பாடுகிறவர்களு மித்தனை யமிர்
தமான இராகங்களைப் பாடினால் அத்தியந்த புத்தியையுஞ்
சாமர்த்தியத்தையுங் கொண்டிருக்கிற பரமதூதர்க ளிந்த
எட்டு மண்டலங்களை யசைக்கும்போ தற்புதமான வாத்தி
யங்களை வாசிக்கிறதற்குச் சமானமா யிருக்கிறதினாலே ய
மிர்தமான சப்தங்கள் பிறக்குமெனபதற்குச் சந்தேகமில்
லை. ஆனபடியினாலே பக்ஷிக ளின்பமாகக் கூவுகிற குரல்
களினாலே மதுரமான கானங்களைத் தொனிக்கப் பண்ணு
கிறதைப்பார்க்கிலுங் காந்தருவ சாஸ்த்திரத்தை யறிந்திரு
க்கிறவர்கள் இராகத்தின்படியே பாடிக்கொண்டும் பாட்டு
களோடேகூடச் சங்கீத வாத்தியங்களை வாசித்துக்கொண்
டும் ஆநந்த சந்தோஷத்தை வருத்திவிக்கிறதைப் பார்க்
கிலும் எட்டு மண்டலங்களுடைய அசைவினாலே புறப்படு
கிற பின்னபேத தொனிகள் செவிக்கு மனதுக்கும் பரி
பூரண பூர்த்தியை வருத்திவிக்கலாமென்று முன்சொல்ல
ப்பட்ட கிரந்த கர்த்தாக்க ளெழுதிவைத்தார்கள். ஆனா

ல் பூலோகத்திலே திரிகிற மனுஷ ரிப்படிப்பட்ட அற்புத மான சங்கீதங்களைக் கேளாம லிருக்கிறதற்குக் காரணமே தென்றால் பூமிக்கு மந்த மண்டலங்களுக்கு மகா தூரமி ருக்கிறதினாலே சோதிமண்டலங்களுடைய சத்தங் கா திலே விழமாட்டாததினாலேயு மனுஷரிந்த அற்புதமான கியானங்களைக் கேட்டால் தங்களை முதலாய் நினையாம லதிலே முழுது மமிழ்ந்திப் பரவசமாய்ப் போவார்களென கிறதற்காகவுஞ் சர்வேஸ்வரன் விலக்கினானென்கிற முகாங் கிரமாகும். இதினாலே லோகத்திலே யுண்டான மனுஷ ருக்கிந்த வின்பமான விராகங் கேளாம லிருக்கிறதென்று முன் சொல்லப்பட்ட சாஸ்திரிகள் திருவுளம் பற்றினார் கள்.

இப்போது பிரிதிவுக்குங் கிரகங்களுடைய மண்ட லங்களுக்கு மெத்தனைதூர முண்டென்றுற் சாவதானமா ய்க் கேள். முந்தமுந்த இந்த விஷயத்தி லறியவேண் டியதாவது. பூமியானது சர்வலோகத்துக்கு மையமா யிருந்தாலு மேழு கிரகங்களுடைய சக்கரங்களுக்கு மை யமாயிருக்கவில்லை யென்கிறது பிரசித்தமாகும் அதே னென்றுற் பற்பல சமயங்களிலே கிரகங்களைத் தூர திஷ்டியினாலே பார்த்தாற் கோட்களுடைய காத்திரம் பற் பல விதமாய்க் காண்பிக்கும். ஆனபடியினாலே கிரகங்க ளானது தங்கள் சக்கரத்தின் கீழ்ப்பக்கத்திலிருக்கிறபோது பூமிக்குங் கோட்களுக்கு மத்தனை தூரமில்லை. சக்கரத்தி னுடைய மேற்பக்கத்திலே நிற்கும்போது பூமிக்குங் கிரகத் துக்கும் வெகுதூரமாயிருக்கும். இதெல்லா மிப்படி யிரு க்கும்போது பூமிக்குஞ் சந்திர சக்கரத்தின மேற்பக்கத் துக்கும் 83,160 எண்பத்து மூவாயிரத்தி நூற்றறுபது கா த தூரம். அந்த ஸ்தலத்திலேதானே சந்திர னிருக்கும் போ தொரு நாழிகைக்குள்ளே 8,712 எண்ணாயிரத்தி யெ ழுநூற்றிப் பனிரண்டுகாதம் நடக்கிறது. இதன்றியே பூமி க்குஞ் சூரிய சக்கரத்தின் மேற்பக்கத்துக்கும் 95,60,800 தொண்ணூற் றைந்திலக்ஷத் தறுபதினாயிரத்தி யெண்ணூ று காததூரம். அதிலேதானே சூரிய னிருக்கிறபோது ஒரு நாழிகைக்குள்ளே 10,00,560 பத்திலக்ஷத் தைந்நூற் றறுபதுகாதம் நடக்கிறது. இந்தப் பிரகாரமாகப் பூமிக்கும் புதன சக்கரத்தின் மேற்பக்கத்துக்கும் 1,36,93,680 கோடி

யே முப்பத்தாறிலக்ஷத்துத் தொண்ணூற்றி மூவாயிரத்தி அறுநூற் றெண்பது காதம். அவ்விடத்திலே புதனிருக்கும்போது ஒரு நாழிகையிலே 14,34,576 பதினாலு லக்ஷத்து முப்பத்தி நாலாயிரத் தைந்நூற் றெழுபத்தாறுகாதம் நடக்கிறது. இதன்றியே பூமிக்கும் வெள்ளி சக்கரத்தினுடைய மேற்பக்கத்துக்கும் 1,62,77,940 கோடியேஅறுபத்திரண்டு லக்ஷத்து எழுபத்தேழாயிரத்தித் தொளாயிரத்திநாற்பது காதம். அவ்விடத்திலேதானே வெள்ளி கிரகமிருக்கிறபோது ஒரு நாழிகையில் 17,05,308 பதினேழுலக்ஷத்து ஐயாயிரத்தி முந்நூற்றெட்டு காதம் நடக்கும். இதற்கப்பால் பூமிக்கும் செவ்வாய் சக்கரத்தின் மேற்பக்கத்துக்கும் 2,64,66,300 இரண்டுகோடியே. அறுபத்திநாலு லக்ஷத்து அறுபத்தாறுயிரத்தி முந்நூறு காதம். இப்படிப்பட்ட சக்கரத்தினுடைய மேற்பக்கத்திலே செவ்வாய்க் கிரகமிருக்கிறபோது ஒருநாழிகையில் 27,72,660 இருபத்தேழுலக்ஷத்து எழுபத்தீராயிரத்தி அறுநூற் றறுபது காதம் நடக்கும். இத்தன்மையாகப் பூமிக்கும் வியாழத்தின் மேற்பக்கத்துக்கும் 5,99,15,520 ஐந்துகோடியே தொண்ணூற்றொன்பதி லக்ஷத்திப் பதினையாயிரத் தைந்நூற் றிருபது காதம். இப்படிப்பட்ட மேற்பக்கத்திலே வியாழ மிருக்கிறபோது ஒரு நாழிகையில் 62,76,864 அறுபத்திரண்டு லக்ஷத்து எழுபத்தாறுயிரத்தி எண்ணூற் றறுபத்திநாலுகாதம் நடக்கும். கடைசியிலே பூமிக்குஞ் சனிசக்கரத்தின் மேற்பக்கத்துக்கும 11,35,95,300 பதினொரு கோடியே முப்பத்தைந்தி லட்சத்துத் தொண்ணூற் றையாயிரத்தி முந்நூறு காதம். அவ்விடத்திலேதானே சனியிருக்கிறபோது ஒரு நாழிகையில் 1,19,00,460 கோடியே பத்தொன்பது லட்சத்து நானூற் றறுபது காதம் நடக்கும்.

இந்தக்கிரகங்களுடைய அயநத்தையும் நாம் வெளிப்படுத்தும்போது முன் சொல்லப்பட்ட கிரகங்கள் மேற்கேயிருந்து கிழக்கே போகிற சுபாவ நடக்கையை நாம் நினைக்கவே யில்லையென் றறியுங்கள். அதேதென்றால் சகலமான நட்சத்திரங்களுக்கும கிரகங்களுக்கும் கிழக்கேயிருந்து மேற்கேபோகிற பலவந்த நடக்கையல்லாமல் மேற்கேயிருந்து கிழக்கேபோகிற சுபாவமான அசைவுமுண்டு. இது பிரசித்தமாய்ச் சந்திரனிடத்திற் காணலாம். அவ்

வண்ணமே யொருநாள் சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னே சந்திர னுச்சத்திலே நின்றுதானால் மறுநாளந்த நேரத்திலேதானே யுச்சத்துக்குக் கிழக்கே சந்திரனுடைய வளையம் 360 பங்கில் 13 பங்கு தாழ்ந்திருக்கும். இதெல்லாம் நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற்குச் சகலமான வளையங்களெல்லாம் 360 பங்காய்ச் சாஸ்திரிகள் பிரித்தார்களென்றறிவீர்களாக. பின்னையு மொவ்வொரு பங்கு 60 *லிபித்தமாகவும் ஒவ்வொருலிபித்தம் 60 †விலிபித்தமாகவும் பகுத்தார்களென்று நினைப்பீர்களாக. சூரியனனது தன்னுடைய சுபாவமான அசைவினாலே 59 லிபித்தமும் 8 விலிபித்தமும் நடக்கிறது. இது நிமித்தமாகச் சூரியன் றினந்தினமொருபாகஞ் சரியாய் முகிய நடவாததினாலே 360 நாளைக்குள்ளே யொருவருஷ முடியாமல் 5 நாளும் 5 தாசும் 49 லிபித்தமு மதிகப்படுகிறபடியால் ஒருவருஷத்திற்கு 365 நாளாகவும் நாலுவருஷத்துக் கொருக்காற் பினனு மொருநாளதிகமாய்ச்சேர்த்துநாலாம் வருஷத்திலே 366 நாளாகவுங் கூட்டவேணுமென்று சாஸ்திரிகள்ஸ்தாபித்தார்கள். அதிலே முதலாய்ச்சில விலிபித்தங்கள் ஏற்றக்குறைச்சலா யிருப்பதினாலே நூறு வருஷத்துக் கொருக்கால் 366 நாள் கூட்டாமல்முனனூற்று அறுபத்தைந்து நாள்மாத்திரங்கூட்டுவார்கள். சனியோவெனறால் தன்னுடைய வளையமெல்லா முகிய நடந்து முன்னின்ற ஸ்தலத்துக்குத் திரும்ப வருகிறதற்கு 29 வருஷமும் 161 நாளும் 22 தாசுஞ் செல்லும். வியாழமோ வெனறால் 11 வருஷமும் 315 நாளும் 15 தாசுஞ் செல்லும். செவ்வாயோவென்றால் ஒரு வருஷமும் 321 நாளும் 22 தாசுஞ் செல்லும். சுக்கிரனும் புதனு மிடைவிடாமற் சூரியனைப் பெருவளையங்களிலே சுற்றிக்கொண்டு வருகிறதினாலே யதுகளுடைய அசைவை வேறே விதமா

* லிபித்தமென்பது அளவைக் குறிக்கும்போது கிரகபாதையின் 360 பங்கில ஒரு பங்கின் அறுபதிலொருபஙகுக்கும் மணிநேரத்தைக் குறிக்கும்போது மினிட்டென்னும விநாடிகக்கும் உபயோகப்படுத்தி யிருக்கின்றது.

† விலிபித்தமென்பது அளவைக் குறிக்கும்போது லிபித்தத்தில் அறுபதிலொருபங்குககும் மணிநேரத்தைக குறிக்கும்போது செகன்றென்னும் நிமிஷத்திற்கும் உபயோகபபடுத்தி யிருக்கி

கப் பார்க்கவேணும். ஆனபடியினாலே வெள்ளி யொரு
விசை தனது வளையத்திலே சூரியனைச் சுற்றிக்கொண்டு
வருகிறதற்குள்ளே யேழுராசிகளும் 14 பாகமும் 47 விலி
பித்தமும் நடக்கிறது. புதனோவென்றால் ஒரு வருஷத்து
க்குள்ளே தனது வளையத்திலே சூரியனை மூன்றுவிசை சு
ற்றிக்கொண்டு வருகிறது மல்லாமல் பின்னையு மொவ்வோ
ரிராசியும் 22 பாகமும் 57 விலிபித்தமும் நடக்கிறது. இதற்
கப்பால் கிரகங்களுடைய விஷயத்திலே மகா வதிசயமான
விசேஷத்தை வெளிப்படுத்தவேண்டியிருக்கிறது. அதெ
ப்படியென்றால் சந்திர சூரியனல்லாமல் மற்றுண்டான கிர
கங்கள் வக்கிரிக்கிறது. இதற்கர்த்த மேதென்றால் ஒரு
சமயத்திலே வியாழஞ் செவ்வாய் முதலான கோட்கள்
மேற்கேயிருந்து கிழக்கே போகிறது. வேறே தறுவாயி
லேயோ வென்றால் பின்வாங்கிறாப்போலே கிழக்கேயிருந்
து மேற்கே போகிறது. ஒரு தறுவாயிலே மகா தீவிர
மாய்ப் போகிறது. வேறே தறுவாயிலே அமர்ந்து நடக்கி
றது. சில சமயங்களிலே முழுதும் நிற்கிறாப்போலே காண
பிக்கிறது. இந்த வற்புத விசேஷத்தை வெளிப்படுத்து
கிறது வெகு அருமையாயிருக்கும். இது நிமித்தமாகச்
சிந்திராச்சியத்திலிருக்கிற சோதிசாஸ்திரிகள் முதலா யித
ற்கான பிரத்தியுத்தரஞ் சொல்லுகிறதற்கு வருந்துகிற
போது புத்திக்கொவ்வாத காரியங்களைச் சொல்லிக்கொ
ண்டு வருகிறார்கள். ஆனபடியினாலே யிந்தச் சந்தேக
நிவாரணத்தை யுற்றுக் கேட்கக்கடவீர்கள்: முந்தமுந்த
கிரகத்தினுடைய வளைய சக்கரத்திலே யந்தக்கோடு மைய
மாக வேறே வளையம்பண்ணி யந்த இரண்டாம் வளையத்
தின் கீழ்ப்பக்கத்திலே கிரக மிருக்கிறதென்று விசாரித்
துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட கிரக முன் சொல்லப்
பட்ட ஸ்தலத்திலே யிருந்தந்த வளையத்திலேதானே மே
ற்கே போயினதென்று விசாரித்துக்கொள்ளுங்கள். அப்
போது கிழக்கேயிருந்து மேற்கே போயினதாகக் கண்ணு
க்குச் சுபாவமாய்க் காண்பிக்கும். அதின் பிறகந்தக் கிர
கந்தானே வளையத்தின் மேற்பக்கத்திலிருந்து கீழான
வளையத்தி லிறங்கி கிழக்கே போகிறதாக விசாரித்துக்
கொள்ளுங்கள். இந்த அயநத்தி னிமித்தமாகக் கிரக மே
ற்கேயிருந்து கிழக்கே போகிறதாகக் கண்ணுக்குக் காண

பிக்கும். இந்தப்பிரகாரமாக முன்சொல்லப்பட்ட கிரகமானது தனதிரண்டாம் வளையத்திலே சுற்றிக்கொண்டுவரும் போது அந்தக் கிரகத்தினுடைய முந்தின பெரிய வளையம் இடைவிடாமல் மெள்ளமெள்ளக் கிழக்கே போகிறதென்று விசாரித்துக்கொள்ளுங்கள். அப்போது கிரகமானது மேற்கே தீவரமாய்ப் போனாலு மந்தக்கிரகத்தின் முந்தின சக்கரத்துக்குள்ளே மெள்ள மெள்ளக் கிழக்காகப் போனதினாலே கிரகத்தினுடைய நடையிதனாலே குறைந்து போகாதிருந்தாலுங் கண்களுக்குக் குறைந்துபோனாற் போலேயு மெத்தன நடக்கிறாப்போலேயுங் காண்பிக்கும். ஆனாலந்தக் கிரகமானது மேற்கேயிருந்து கிழக்கே நோக்குகிறபோது கிரகத்தினுடைய சுவாப அசைவும் பெரிய வளையத்தினுடைய அசைவுங்கூடக் கிழக்கே போகிறதினாலே கிரகமானது தீவரமாய் நடக்கிறாப்போலே காண்பிக்கும். கடைசியிலே கிரகம் நிற்கிறாப்போலே காண்பிக்கிற வகையேதென்றால் முன் சொல்லப்பட்ட கிரகமானது மேலே யேறுகிறபோதானாலுங் கீழே யிறங்குகிறபோதென்கிலு மந்த விரண்டு எதிரான பக்கங்களிலேயுமுள்ள வளைவு கண்ணுக்குக் காண்பியாததினாலே யதிலே நடக்கும் போது செவ்வையாய்ச் சும்மா நிற்கிறாப்போலே காண்பிக்கும். ஆனபடியினாலே யிரண்டாம் வளையத்தைக் கிரகமானது ஒரு கண்ட சிரா யெப்போதுஞ் சுற்றிக்கொண்டு வருகிறதென்றுங் கிரகத்தினுடைய முந்தின வளையமெப்போது மெத்தனவாய்ப் போகிறதென்று மனதிலே யெண்ணிக்கொண்டிருந்தால் முன் சொல்லப்பட்ட ஆச்சரியமான விசேஷங்களை யெளிதாய் வெளிப்படுத்தலாம். ஆனாற் சூரியனுஞ் சந்திரனும் வக்கிரியாம லிருக்கிறதென்ன? மற்றக் கிரகங்கள் வக்கிரிக்கிறதென்னவென் { றிந்தச் சீமை சாஸ்திரிகள் பிறத்தியுத்தரஞ் சொல்லமாட்டார்கள். } ஆனால் நாம் கூடினமாத்திரஞ் சொல்லிக் காட்டுகிறோம். } நன்றாயுற்றுக்கேளுங்கள்; சூரியனுஞ் சந்திரனுங் கிரகங்களுண்டான இரண்டாம் வளையத்தைச் சுற்றிக்கொண்டு வருகிறதென்று சொன்னாலு மற்ற வளையத்திலே மெள்ள மெள்ள நடக்கிறதினாலேயு மதுகளுடைய முந்தின பெரிய வளையம் மேற்கேயிருந்து கிழக்கே சீக்கிரமாய்ச் சுற்றுகிறதினாலேயும் வக்கிரிக்கிறதற் கவகாசமில்லை.

இதெல்லா மனதிலே நன்றாய்த் தரிக்கிறதற்கு இந்தப் புத்தகத்தினுடைய முகிவிலே காண்பிக்கப்போகிற கிரகங்களுடைய சுரூபங்களையும் வளையங்களையும் நன்றாய்ப்பார்க்கவேணும்.

இப்போதைக்குக் கிரகங்களுடைய காத்திரத்தை வெளிப் படுத்துவோம். அதெப்படியென்றாற் சனி கிரகமானது 884 பூமிகொண்டதா யிருக்கும். வியாழக்கிரகமானது 681 பூமி யடங்கத்தக்கினதா யிருக்கும். செவ்வாய்க் கிரகமானது பூமியைப்பார்க்கச் சின்னதா யிருக்கிறது. அதேதென்றால்; ஏழாைச் செவ்வாய்க் கிரகம் பூமிக்குள்ளே யடங்கி யிருக்கலாம். சூரியனை மேலெழுந்தவாரியாய்ப் பார்க்கும்போது 1,728 பூமிகொண்டதா யிருக்கும். வெள்ளி ஒன்றரைப் பூமிகொண்டதா யிருக்கும். இந்தப் பூமியிலே 64 புதனிருக்கலாம். பூமியிலேதானே 56 சந்திரனடங்கி யிருக்கலாம். இதெல்லாங் கெட்டியுள்ள நியாயங்களினாலே லோகப்பிரமாண சாஸ்திரமென்கிற புத்தகத்தி லொப்புவித் திருக்கின்றது, இந்த ஏழு கிரகங்களிலே வியாழ கிரகத்தை யிடைவிடாமல் நாலு சின்ன கிரகங்கள் சுற்றிக்கொண் டிருக்கின்றது. பின்னையும் சனி கிரகத்தை யிரண்டு சின்ன கிரக மெப்போதும் வளைந்துகொண்டு வருகிறது. இதெல்லாம் நன்றாய்க் காணவேணுமானாற் பெரிய தூரதிஷ்டிக் கண்ணாடி யுண்டானாலவசியமாய்ப் பார்க்கலாம். சந்திர கிரகத்தினாலே மற்ற கிரகங்களுக்குந் தன்னுடைய அயநத்திலே யுண்டானன நக்ஷத்திரங்களுக்குங் கிராணம் வருகிறது. வெள்ளியும் புதனுஞ் சந்திரனைப்போலே வளர்பிறை தேய்பிறையா யிருக்கிறது. வியாழ கிரகத்தின் மேலே சில சமயங்களிலே யொன்று, சிலவிசை யிரண்டு, சில சமையத்திலே மூன்று பட்டைபோலக் கீற்றுகள் காண்பிக்கிறதினாலே வியாழன் தனது மையக கம்பிமேலே சுற்றிக்கொண்டு வருகிறதென்று சாஸ்திரிகள் ஸதாபித்தார்கள். சனியோவென்றால் வெவ்வேறே ரூபத்தோடே யநேகம்விசை காண்பிக்கும். சில சமையங்களிலே வியாழஞ் சனியை மறைக்கிறது. வியாழத்தைச் செவ்வாய மறைக்கிறது. வெள்ளி செவ்வாயை மறைக்கிறது. சில சமையங்களிலே பு

தன் சூரியனுடைய ஒரு பங்கை மறைக்கிறது. வெள்ளியும் புதனுஞ் சூரியனைச் சுற்றிக்கொண்டு வருகிறதென்று சொன்னோமே; சூரியனுக்குமுன் னுதயம்பண்ணினாலுஞ் சரி சூரியன் அஸ்தமித்த பிற்பாடு அஸ்தமித்தாலுஞ் சரி கிழக்கு மேற்குமாக வெதிர்த்து நிற்கும்போது வெள்ளி 49 பங்குக் கப்பாலே போகமாட்டாது. அத்தறுவாயிலெ எல்லா மதற்குள்ளே யடங்கி நடக்கும். புதனோ வென்றால் 29 பங்குக்குமே லதிகமா யிராது. இந்த ஏழு கிரகங்களுடைய விஷயத்திலே சோதிசாஸ்திரிகள் வேறே யதிசயமான விசேஷத்தைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதெப்படியென்றாற் கிரகங்கள் எங்கும் நடக்கிறதென்று காண்பித்திருந்தாலு மிராசிகளுடைய சக்கரத்திலே மாத்திரம் நடக்கிறதல்லாம லப்பாலே போகாது. இந்த ராசிகளுடைய சக்கரத்தினடுவிலே கிராணவளைய மிருக்கிறது. அந்தக் கிராண வளையத்திலே சர்வேஸ்வரனவர் சூரியனை யுண்டாக்கின நாள் துவக்கி யிதுவரைக்குஞ் சூரியனைது அங்கேயு மிங்கேயுஞ் சாயாமலொருகண்ட சீரா யதிலே நடக்கிறதென் றநுபவ சித்தியினாலே சாஸ்திரிகள் கண்டுபிடிக்கிறார்கள். சனியோ வென்றாற் கிராண சக்கரத்துக் கப்பாலே விலகி நடந்தாலும் அதுவுமிரண்டு பங்குக்கும் 48 லிபித்தத்துக்கும் அப்பாலே போகாது. வியாழமோ வென்றால் எத்தனை விலகினாலு மொரு பாகத்திற்கும் 38 லிபித்தத்துக்கும் அப்பாலே போகாது. வெள்ளி கிரக மற்றக் கிரகங்களைப் பார்க்கக் கிராண சக்கரத்தை விட்டங்கங்கே சாய்ந்து நடந்தாலும் எட்டுபங்கு 54 லிபித்தத்துக் கப்பாலே விலகாது. புதனோவென்றால் நாலுபங்கு 5 லிபித்தத்துக் கப்பாலே போகாது. கடைசியிலே சந்திரன் சக்கரத்துக் கப்பாலே மெத்த விலகி யிருக்கிறபோது 5 பங்குக்கும் 17 லிபித்தத்துக்கு மப்பாலே போகாது. ஆனால் சோதிசாஸ்திரிகள் ஏழு கிரகங்கள் ஏழுவகை யிரத்தினங்களுக்கும், ஏழுவகை திரவியங்களுக்கும் ஏழுவகை வியாதிகளுக்கும், விசேஷமான காரணமா யிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இந்தப்பிரகாரமாக இராகு, கேது என்கிற விசேஷமான விரண்டு கிரகங்க ளதிகமா யிருக்கிறதென்று சொன்னாலும் இதெல்லா மபத்தமான கதையினாலே ஸ்தாபிக்

கப்பட்டதா யிருக்கிறதினாலேயும் சந்திர சூரிய சக்கரங்களுடைய சேர்க்கைமாத்திர மிருக்கிறதினாலேயு மிந்த விசேஷத்தைச் சகுன நிவாரணத்தில் வெவ்வேறே நியாயங்களினாலே யாக்ஷேபித்ததினா லிங்கே யதைப்பற்றிப் பிரசங்கிக்கிறதற் கவகாச மில்லை. கடைசியி லறியவேண்டியதாவது: ஏழு கிரகங்களுடைய விவரத்தைப் பொதுவிலே சொன்னதற்குப் பிற்பாடு சூரிய சந்திரன் பிரதான கிரகங்களா யிருக்கிறபடியினாலே யதுகளுக்கடுத்த சில வதிசயமான விசேஷங்களை வருகிற அதிகாரத்திலே வெளிப்படுத்துவோம்.

## ௩-ம். அதிகாரம்.

### சூரியனுடைய விவரம்.

போன அதிகாரங்களிலே யேழுகிரகங்களுக் கடுத்த குணங்களையு மதிசய விசேஷங்களையுஞ் சொல்லிக் காட்டினதினா லிந்த அதிகாரத்திலே சந்திரனுஞ் சூரியனுங் கிரகங்களுக்குள்ளே யுத்தம கோட்களா யிருக்கிற தென்றும் அதுகளுக்குச் சம்பந்தமா யிருக்கிற இன்னுமநேக காரியங்களையுந் தெரியப்படுத்துகிறோம். முந்தமுந்த அறியவேண்டியதாவது: பராபரவஸ்துவாகிய கடவுளானவர் தம்முடைய மட்டில்லாத வல்லமையினா லுண்டாக்கின புத்தியில்லாத வஸ்துகளுக்குள்ளே சூரியனானது உத்தமமா யிருக்கிறதென்று சாஸ்திரிகளுஞ் சாஸ்திர மறியாதவர்களுஞ் சங்கேதம் பண்ணினார்கள். அதேதெனறாற் சூரியனானது தனது பிரகாசத்தினாலேயு முஷ்டணத்தினாலேயும் பூலோகத்தி லுண்டான சகலமான வஸதுகளுக்கு முயிரைக் கொடுக்கிறதுபோ லிருக்கின்றது. ஆனபடியினாலே யித்தனை பிரகாசத்துக்கு முக்ஷ்ணத்துக்குங் காரணமா யிருக்கிற சூரியனிடத்திலே ஒன்றில் நெருப்புள்ள அங்கிஷங்கள் முக்கியமாயிருக்கிறதென்றும், ஒன்றில் நாம் உபயோகிக்கிற அக்கினிக்கு மேலான உஷ்டணங்களைக் கொண்டிருக்கிற அக்கினியினாலே உண்டாக்கப்பட்டதா யிருக்கிறதெனறுஞ் சாஸ்திரத்தின்படியே சொல்லவேண்டி யிருக்கிறது. பூருவகாலத்தி லிருந்த சில சாஸ்திரிகள் சூரியனானது வெ

றுஞ் சுவாலையா யிருக்கிறதென்று விசாரித்தார்கள். ஆ
னால் சுவாலையானது அத்தியந்த பிரகாசத்துக்கு முஷ்டண
த்துக்குங் காரணமா யிருக்கமாட்டாது. ஆகையினாலே
இது மிகவும் அடர்த்தியுள்ள அங்கிஷங்களினாலே உண்
டாக்கப்பட்ட தென்கிறதற்குச் சந்தேகமில்லை. இதற்
குக் காரண மேதென்றால் அக்கினிக் கொழுந்திலே கை
யை வைத்தா லதினுடைய அங்கிஷங்கள் கொழுந்திலே
பிரிந்து போகிறதினாலே யத்தனை சுடாது. ஆனா லக்கி
னித் தணலிலே அங்கிஷங்க ளடர்த்தியா யிருக்கிறதினாலே
யும் பிரியக் கூடாததினாலேயு மதின் மேலே கையை வைத்
தா லுடனே வெந்துபோம். ஆனால் தணலைப்பார்க்க இரு
ம்பு அதிகமாய் நெருங்கி யிருக்கிறபடியினா லது நெருப்பி
னாலே வெந்து சிவந்துபோனா லதிகமாய்ச் சுடும். அந்த
நியாயத்தினாலே சில சாஸ்திரிகள் சூரியனானது மகா பிர
காசத்துக்கு முஷ்டணத்துக்குங் காரணமா யிருக்கிறதெ
ன்று பார்க்கும்போது சூரியனானது எரிகிற தங்கமாயிருக்
கிறதென்று நிச்சயித்தார்கள். இப்போதைக்குச் சூரியனு
க் கெந்த ரூபமுண்டென்று கேட்டால் வட்டரூபமா யிரு
க்குதென்கிறதற்குச் சந்தேகமில்லை. ஆனால் கண்ணுக்
கப்படி காண்பிக்கிறதினாலே முழுது மப்படி யிருக்கிற
தென்று விசாரிக்க வேண்டாம். அதேதென்றால் தூர
மாயிருக்கிற பொருள்கள் சதிரமாயிருந்தாலுந் திஷ்டிக்கு
வட்டம்போலே காண்பிக்கும் ஆனால் சூரியனானது வட்ட
ரூபமா யிருக்கிறதென் றெப்புவிக்க மனதுண்டானா லிரு
ள் பொருந்தின அறைக்குள்ளே திஷ்டி வாசல் விட்டதி
னுடைய கதவுகளையும் நன்றாயிடை வெளியில்லாம லடை
த்துப் பிற்பாடு சூரியனுக்கெதிராக விருக்கிற இந்தத் திஷ்
டியின் கதவி லொரு சிறு விரல்போக வட்டத்துவாரம்
பண்ணி அவ் வறைக்குள்ளே யத்துளைக் கெதிராக வொ
ரு வெள்ளைத் துப்பட்டியை விரித்துப் பிடித்தால் சூரிய
னானது துவாரத்துக்குள்ளே தனது கதிர்களை வீசும்போ
து அதினுடைய ரூபம் வட்டரூபமாகச் சீலைமேலே முழு
துங் காண்பிக்கும். அவ்வண்ணமே சூரியனிடத்திலுள்ள
சகல அங்கிஷங்களிலே நின்று கதிர் புறப்படுகிறபோ தவ
சியமாய்த் தனது ரூபத்தை முழுதுந் தோற்றப் பண்ணுகி
றது. ஆனாலந்தத் துவாரம் வட்டரூபமா யிராமலும் அங்

நச் சொரூபந் துப்பட்டியிலே படாமலுந் தரையிலே வி
ழுந்தா லப்போது முழு வட்டரூபங் காணப்போகிறதில்
லை. இதற்கப்பா லறிய வேண்டியதாவது: தூரதிஷ்டிக்
கண்ணாடியைக் கொண்டு சூரியனை யநேகநாள் பார்த்தா
லதிலே யுண்டான சிலவடையாளங்கள் நிமித்தமாகச் சூ
ரியனானது தனது மையக் கம்பிமேலே சுற்றிக்கொண்டு
வருகிறதென்று எளிதாய்க் கண்டுபிடிக்கலாம். ஆனாலிவ்
விதமாகச் சூரியன் றனது மையக் கம்பிமேலே சுற்றிக்கொ
ண்டிருப்பதாலும் எப்போதுந் தன் சொரூபத்தை வட்ட
ரூபமாகக் காண்பிக்கிறதினாலேயுஞ் சூரியனானது சக்கரத்
தைப்போ லிராமல் முழுவுண்டையா யிருக்கிறதென்கிற
து நிச்சயமாகும். ஆனால் சூரியனானது முழுது முண
டையைப்போலக் காண்பியாமல் தகடுபோலே காண்பிக்கி
றதற்குக் காரணமென்ன? எந்த வுண்டையானாலு மகா
தூரமா யிருக்கும்போ தவசியமாய்த் தகடுபோலே காண்
பிக்கும். அதேதென்றா லுண்டையானது மெத்த தூரமா
யிருக்கும்போ ததிமேலே யுண்டாயிருக்கலான கீற்றுகளுக்குந்
தகட்டிலே யுண்டாயிருக்கலான கீற்றுகளுக்கும் வேற்று
மை காண்பியாததினாலே யுண்டையானது தூரமாயிருந்
தால் முழுதுந் தகடுபோலே காண்பிக்கும். போனவதிகா
ரத்திலே பூமி சர்வலோகத்துக்கு மையமா யிருந்தாலுஞ்
சூரியனுடைய சக்கரத்துக்கு மையமல்லவென்று சொன்
னோமே இஃதிப்படி யிருக்கையிலே யவசியமாயச் சூரிய
ன் தனது சக்கரத்தின் மேற்பக்கத்தி லிருக்கும்போது
பூமிக்குத் தூரமா யிருக்கிறதுந் தவிர கண்ணுக்குச் சிறிய
தாய்க் காண்பிக்கும் சக்கரத்தின் கீழ்ப்பக்கத்தி லிருக்கும்
போது பூமிக்குக் கிட்டி யிருக்கிறது மல்லாமற் கண்களுக்
குப் பெரிதாய்க் காண்பிக்கும். அப்படித்தானே மார்கழி
மாதத்திற் பெரிதாய்க் காண்பிக்கிறது. ஆனிமாதத்திற் சிறி
யதாய்க் காண்பிக்கிறது. இதெல்லாஞ் சோதிசாஸ்திர வெ
த்தனங்களைக்கொண்டு பார்த்தால் பிரசித்தமாய்க் காண்பிக்
கும். ஆனாலிதிலே கனமான சந்தேகம் பிறக்கும். அதேதப்
படியென்றால் மார்கழி மாதத்திற் சூரியன் பூமிகிட்ட விருக்
கும்போது கடினமான வெய்யல் காண்பியாம லிருக்கிற
தென்ன? பின்னையும் ஆனிமாதத்திற் சூரியன் பூமிக்குத்
தூரமாயிருக்கும்போது மந்தாரமில்லாமற்போனால் கடின

மான வெய்யலிறைக்கிறதென்ன. இத்தொகைப்பட்ட வி சேஷங்களெல்லாம் விவரமாய்க் கண்டுபிடிக்கிறதற் கறிய வேண்டியதாவது: சூரியனுடைய கதிரானது பூமிமேலே சாயப்படுகிறபோ தந்தப் பிரகாரந்தானே சாய்ப்பாய்க் கி ளம்புகிறது. ஆனால் செவ்வையாக விழுந்தால் செவ்வே கி ளம்பும். இந்த வாச்சரியமான விசேஷத்தை யோருவமை யினலே வெளிப்படுத்துவோம். அதெப்படி யென்றால் ஒரு பந்தை யடிக்கிறபோது சாய்ப்பாக நிலத்திலே பட் டால் சாய்ப்பாகக் கிளம்பும். செவ்வையாக வடிபட்டால செவ்வையாகக் கிளம்பும். இந்தப் பிரகாரமாகப் பிரகா சத்தின் கதிர்களின் விஷயத்திலே யோசிக்கக் கடவீர்கள். ஆனபடியினலே மார்கழி மாதத்திற் சூரியன் தெற்கே வெ குவாய்ச் சாய்ந்திருக்கிறதினலேயு மதினுடைய கதிர்களிந் தச் சீமையிலே மெத்த சாய்ப்பாய் விழுகிறதினலேயுஞ் சரியா யெழும்பாமற் சாய்ப்பாய்க் கிளம்பும். ஆகையின லே விழுகிற கதிருக்குங் கிளம்புகிற கதிருக்கு மெத்ததூ ரமா யிருக்கிறபடியால் நடுவிலே அத்தனை யுஷ்டணம் பிற க்கமாட்டாது. ஆனிமாதத்திலோ வென்றால சூரியன் ற னது கதிர்களை யத்தனை சாய்ப்பாய் வீசாததினலேயும் வி ழுகிற கதிருக்குங் கிளம்புகிற கதிருக்கு மத்தனை தூரமில லாததினலேயும் நடுவிலே வெய்யல் மெத்தப் பிறக்கும். இந்தப் பிரகாரமாகத் தினந்தினஞ் சூரிய னுதயம் பண்ணு ம்போ ததினுடைய கதிர் மெத்த சாய்ப்பாய்ப் பூமிமேலே விழுகிறதினலே யுஷ்டணங் காண்பியாது. ஆறற் சூரியன ஏற ஏற மத்தியானமட்டும் விழுகிற கதிருங் கிளம்புகி ற கதிருங் கிட்டக்கிட்ட விருக்கிறதினலே வெய்யலதிகமா ய்க் காண்பிக்கும். மத்தியானத்துக்குப் பிற்பாடு இதற் கு விரோதமான வகையோடே திரும்புமென்று யோசித் துக்கொள்ளலாம்.

இப்போதைக்குச் சூரியனிடத்தில மிகவும் விளங்கு கிற வேறே யதிசயமான விசேஷங்களைச் சொல்லிக் காட் டுவோம். முதலாவது—சகலமான கிரகங்களுக்கும் நக்ஷ த்திரங்களுக்குஞ் சர்வலோகத்துக்கு முண்டான பிரகா சமெல்லாஞ் சூரியனலே வருகிறதென் றிருக்கும்போது பராபர வஸ்துவானவர் சூரியனைக்கொண்டு சகல வஸ்து

க்களுக்குஞ் செழிப்பு மலங்காரமுங் கொடுக்கிறதென் றறி வீர்களாக. முத்து ரத்தினங்களைவிட அதிசயித்திருக்கி ற விந்த ஆச்சரியமான தீபத்தை யெங்கும் பிரகாசிப்பிக் கத் தக்கதாக உலகத்தினுடைய நடுவிலே சர்வேஸ்வரன் ஸ்தாபித்தது மல்லாம லதினுடைய வுஷ்டணத்தி னிமி த்தமாகப் பூலோகத்திலுண்டான ஆவிகளையு மீரங்களையு மாகாயத்தி லேறப்பண்ணி யந்த ஆவிகள் மேகங்களாய்ப் போய் மழையாக வருஷிக்கிறது. அந்த மழைக ளெண் ணப்படாத காரியங்களுக் குதவுகிறது. இத்தொகைப்ப ட்ட விசேஷங்களெல்லாம் பூதியங்களுடைய விசேஷங்க ளை வெளிப்படுத்தும்போது கூடினமாத்திரந் தெரியப்ப ண்ணுவோம்.

2-வது.—சூரியனானது உத்தர தக்ஷண நிமித்தமா கச் சகலமான காலங்கள், வாரங்கள், மாதங்கள், வருஷ ங்கள் முதலானதுகளுக்குங் காரணமா யிருக்கும். அ தெப்படி யென்றால்: சூரியன் இராசிகளுக்குள்ளே நடக்கி கிறபோது ஒவ்வொரு இராசியிலே முப்பது நாள் ஏறக் குறைய நடக்கிறதினாலே வெவ்வேறே மாதம் பிறக்கும். இந்தப் பிரகாரமாக மேஷராசியி லிருக்கிறபோது சித்தி ரைமாதம் நடக்கும். ரிஷபத்திலே வையாசி மாதமட்டுமி ருக்கும் இப்படியே முகியுமட்டும் யோசிப்பீர்களாக க டைசியிலே பனிரண்டிராசிகளும் பனிரண்டுமாதமு முகிந் தவுடனே ஒரு வருஷஞ் சரியாகும்.

3-வது —வருஷகாலமுங் குளிர்காலமும் வசந்தகா லமுங் கோடைகாலமும் வருகிறதற்குச் சூரியனிமித்தமா யிருக்கிறது. இதிலே யாண்டவரைத் தோத்திரம் பண் ணுகிறதற்குப் பரிபூரண நியாயமுண்டு. அதேதென்று லநேக வஸ்துக்கள் விளைக்கிறதற்கும் முளைக்கிறதற்கும் வளருகிறதற்குங் காய்க்கிறதற்கும் பழுக்கிறதற்கும் மற்ற ப்பொருள்கள் பிழைக்கிறதற்கு முன் சொல்லப்பட்ட கா லங்கள் வேண்டி யிருக்கும்போ திந்தக் காலங்களெல்லாந் தப்பில்லாத கிரமத்தோடே வருகிறதற்குப் பராபர வஸ் துவானவர் புத்தியில்லாத வஸ்துவா யிருக்கிற சூரியனைச் சம்மனசுவினுடைய கைங்கரியத்தினாலே பலவந்தமாய் நடத்துகிறார்.

4-வது.—சூரியனுதயந் துவக்கி அஸ்தமிக்கு மட்டும் பகலையும் அஸ்தமிப்பு துவக்கி விடியுமட்டும் இரவையும் பிரிக்கின்றது. இவ்விதமா யிராமல் எப்போதும் பகலானாற் பூலோகம் வெந்து சாம்பலாகும். எப்போது மிரவானாலொன்றுஞ் செய்யமாட்டோம. ஆனபடியினாலே "சித்திரக்காரனானவன் பிரகாசமுள்ள வர்னங்களினாலேயுங் கறுப்பு முதலிய நிறத்தினாலேயு மகா வுச்சிதமான வேலைகளை வர்னிக்கிறப்போலே சர்வேஸ்வரனானவர் பிரகாசமான பகலையும் இருளுள்ள விராவையுந் திவ்வியசாஸ்திரத்தின்படியே கலந்து அற்புதமான கிரமத்தோடே லோகமெல்லாம நடத்திக்கொண்டு வருகிறாரென்று அர்ச். கிறிசோஸ்துமு வென்கிறவ ரருளிச் செய்தார்." ஆனால் யாதாமொருத்தன பகல் நிமித்தமாக வருகிற நன்மைகளெல்லாம் பிரசித்தமா யிருக்கின்றதே இரவினாலே வருகிற நன்மைகளெல்லா மேதென்று கேட்டாற் பிரத்தியுத்தரத்தைச் சாவதானமாய்க்கேள். பகற்காலத்திலே சகல மனுஷருக்கு மிருகங்களுக்கு முண்டான இளைப்புகளை யிராக்காலத்திலே தீர்க்கலாம். பகல் நேரத்திற் சரீரத்திலே மெத்த வுஷ்டணம் பிறக்கிறதினாலே அது மிரவினுடைய *சயித்தியத்தினாலே யமர்ந்துபோம். இதன்றியே யெப்போதாஞ் †சாகரணமென்கிற விழிப்புண்டா யிருந்தால் நரம்புகளிலேயு மிரத்தத் தாரைகளிலேயு முண்டாயிருக்கிற சீவ அக்கினி கெட்டுப் போய்த் தப்பாமற் சாவுவரும். இத்தன்மையாகப் போசனங்களெல்லாம் நன்றாய்ச் செரிக்கிறதற்கு மிகவு முதவுகின்றது. கடைசியா யிராத்திரி காலத்தினாலே வருகிற மற்று முண்டான பிரயோசனங்க ளெல்லாம் விட்டுப் பராபர வஸ்துவானவர் தமது ‡தேவோக்கித்த வேதத்திலே யறிவித்த விசேஷத்தை மிகுந்த விமரிசையோடே கேட்பீர்களாக. சர்வத்துக்கும் வல்லவரான ஆண்டவர் பகல்நேரத்திலே தம்முடைய மட்டில்லாத தயையை மனுஷருக்குக் காண்பிக்கவும், இராத்திரிகாலத்திலே தம்மை நினைத்துத் தோத்திரம் பண்ணும்படியாகவும் ஓய்வு நேரமாக இரவைக்கட்டளையிட்டிருக்கின்றார். ஆனபடியினாலே நீங்களெல்லாரு மிராத்திரிகாலஞ் செபத்தியானத்துக்கான காலமாயிருப்பதால் நன்றியறிந்த மனதோடே சர்வேஸ்வரனைத்

* குளிர்ச்சி. † தூக்கமில்லாமை. ‡ வெளிப்படுத்தல்,

தோத்திரம் பண்ணுகிறதிலே யிரண்டொரு தாசு செலவ ழிப்பீர்களாக. (பூர்வகாலத்திலே மகாபேர்பெற்ற சர்ஸ்திரி யானவர் "சர்வேஸ்வரனாலே யுண்டாக்கப்பட்ட வஸ்துக ளுக்குள்ளே நீசமான பொருளானாலும் ஆண்டவனைத் தோ த்திரம் பண்ணுகிறதற்குக் காரணமாயிருக்கச் சர்வேஸ்வர னனவர் சூரியனிடத்திலே தம்முடைய அளவில்லாத பலத் தையுங் கிருபாகடாக்ஷத்தையு மிகவும் விளங்கப்பண்ணுகி றதினாலே தினந்தினம் பிரகாசிக்கிற சூரியனைப் பார்க்கும் போது அதை யுண்டாக்கினவராகிய பராபர வஸ்துவின் பேரிலே மிகுந்த நன்றியறிந்த மனதோடே மென்மேலுந் தோத்திரம்பண்ணவேண்டாமோ?வென்றருளிச்செய்தார்.") ஆனாலிதிலெ மனுஷருடைய குருட்டாட்ட மேதென்றால் மகா காந்தியோடு சூரியன் பிரகாசிக்கிறபோது அதை யொருத்தரும் பார்க்கக்கூடாமற் சூரிய கிராணங்களினாலே யதினுடைய பிரகாச மறைந்திருக்குஞ் சமையத்தில் அந்த க்கிராணத்தைக் கண்டுபிடிக்க மாட்டாமல் மகா ஆச்சரிய மாய்ப் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூரிய கிராணங்களைத் தீர்க்கமாய்க் கண்டுபிடிக்கிறதற் கறி ய வேண்டியதாவது.

இராசி சக்கரத்தி னடுவிலே கிராணங்களுடைய வளை ய முண்டென்று சொன்னோமே யந்த வளையத்திலேதா னே யங்கேயு மிங்கேயுஞ் சாயாமற் றப்பில்லாத கிரமத் தோடே யிடைவிடாமல் நடக்கின்றது. அந்தச் சூரிய வளை யத்துக்குக் கீழாகக் குறுக்கே சந்திரனுடைய வளைய மிரு க்கின்றது அதிலே யிடைவிடாமல் நடக்கின்றது இ தெல்லா மிப்படியிருக்கையிலே யவசியமா யிரண்டு ஸ்த லங்களிலே இந்த விரண்டு சக்கரங்களுஞ் சேரும். ஆனப டியினாலே யொருகம்பி யிருக்கிறதென்று நினைத்துக்கொ ள். அந்தக் கம்பியிலே முன் சொல்லப்பட்ட விரண்டு சே ர்க்கையி லொரு சேர்க்கையை முந்தமுந்தக் கோர்த்துப் பிற்பாடு பூமியைக் கோர்த்துக் கடைசியிலே யந்த விரண் டாஞ் சக்கரத்தையுங் கோர்க்கிறாயென்று நினைத்துக்கொள். இதெல்லா மிப்படியிருக்கையிலே சூரியனானது ஒருசேர்க் கையின்மேற் சக்கரத்தி லிருக்கும்போது சந்திர னுந்தச் சேர்க்கையின் கீழ்ச்சக்கரத்திலேதானே யிருந்தால் சந்தி

ரனுக்குஞ் சூரியனுக்கு மெதிராகப் பூமியிலே நிற்கிறவர்க ளுக்குச் சூரியன் மறைந்ததினாலே சூரிய கிராணமென்று சொல்லப்படும். சூரியனை முழுது மறைத்தால் முழுக்கி ராணமென்று சொலலப்படும். பாதிமறைத்தால் அரைக் கிராணம். நாலிலொருபங்கு மறைத்தால் கால் கிராணம். ஆனபடியினாலே சூரியகிராண மேதென்றால் சூரிய னுயர மாயிருக்கப் பூமிக்குஞ் சூரியனுக்கும் நடுவாகச் சந்திரனிரு க்க அப்பால் சூரியனுடைய பிரகாச மறைந்து போய்க் கிராணமாம். அமாவாசை காலத்திலே சந்திரனுஞ் சூரிய னு மந்தச் சேர்க்கையிலே யிராமல் தப்பிப் பதினேழுபாக நீளத்துக்கப்பாலே சூரியன்போ யிருந்தால் சந்திரனு முத் தர பக்கத்திலிருந்தாற் சூரியகிராண மிருக்கலாம். பி ன்னையும் வேறே அமாவாசையிலே சந்திரன் தென்பக்கத் தி லிருக்கச் சந்திரனுஞ் சூரியனுஞ் சக்கரங்களுடைய சே ர்க்கைக்கு ஏழுபாக தூரமாயிருந்தாற் சூரிய கிராண மிருக் கலாம். ஆனால் நிதானமாய்ச் சூரிய கிராணம் வருமென் று சொலலுகிறதற்குப் பார்வையினாலே தாழ்த்தியாய்ப் போகுமோ உயர்த்தியாய்ப் போகுமோவென் றறியவே ணும் ஆனபடியினாலே சூரிய கிராண மறிகிறதற்குச் ச ந்திர சூரியனுடைய நடையைப்பார்த்து அமாவாசை கால த்திலே சந்திர சூரியன் றனது சக்கரங்களின் சேர்க்கை கிட்ட விருக்கிறதோ இலலையோவென்று பார்க்கவேணு ம், சேர்க்கையிலேதானே யொன்றில் சேர்க்கையின் ச மீபத்திலேதானே யிருக்கையில அமாவாசையானா லப் போது கிராணமா யிருக்கலாம். இல்லாதேபோனாற் கி ராணமா யிருக்கக் கூடாது.

இதற்கப்பா லறியவேண்டியதாவது முதலாவது—சூ ரிய கிராணங்களிலே சூரியனிடத்திற் சற்றாகிலும் மிருட் டில்லை. சந்திரனுடைய விருண்ட பக்கமாத்திரங் காண பிக்கும்.

2-வது.—சூரிய கிராணம் பகல் நேரந்திலே மாத்தி ரங் காண்பிக்கும்.

3-வது.—அமாவாசை காலத்திலே மாத்திரங்கிராண ம் வரும்.

4-வது.—சில பேர்களுக்குக் காற் கிராணஞ் சிலபேர் களுக்கு அரைக் கிராணம் சில பேர்களுக்கு முக்காற் கிராணங் கடைசியிலே சிலபேர்களுக்கு முழுக்கிராணஞ் சிலசமையத்திலே பிரகாச மோதிரம்போல காண்பித்து நடுவிலே யுண்டான பங்குகள் மறைந்திருக்கும்.

5-வது.—கிராணம் சூரிய வளையத்தின் மேற்குப் பக்கத்திலே துவக்கி வளையத்தின் கிழக்கு புறமாக முகியும்.

6-வது.—கிராண நேர மொவ்வொரு சீமையி லொருசாமத்துக்குமே லதிகமிராது. அதாவு முழுக்கிராணத்திலே மாத்திரம் பற்பல சீமைகளிலேயு மைந்து தாசுமாத்திர மிருக்கலாம்.

7-வது.—பற்பல ராச்சியங்களிலேயுஞ் சந்திர கிராணம் வருகிற இலக்கத்தைப் பார்க்கச் சூரிய கிராண மதிகமாயிருக்கலாம்.

8-வது.—சூரிய கிராணமுழுதும் சேர்க்கையிலே் வருகிறபோது ஒன்றில சேர்க்கையினடுத்தாப்போலே வந்தானுல் முன்னேபோன பவுர்ணமியிலேயும் பிறகு வரப்போகிற பவுர்ணமியிலேயுஞ் சநதிரகிராண மிருக்கக்கூடாது.

9-வது.—சக்கரங்களுடைய சேர்க்கைக்குத் தூரமாய்ச் சூரிய கிராணங் கண்டாலந்தக் கிராணஞ் சேர்க்கை கடக்கிறதற்கு முன் வந்துதானு பிற்பாடு வரப்போகிற பவுர்ணமி சந்திரகிராணமா யிருக்கும். சேர்க்கையைக் கடந்த பிற்பாடு தூரமாகச் சூரியகிராணம் வந்துதானு ல்ப்போ ததற்கு முன்போனபவுர்ணமியிலே் சந்திர கிராணமிருக்கும்.

10-வது.—சூரியகிராணம்போ யாறுமாதத்திலே மறுபடி சூரியகிராண மெளிதா யிருக்கலாம். ஐந்தா மாதத்திலேயு மேழா மாதத்திலேயும் பூருவமுமாய்ச் சிறிதுமா யிருக்கும்.

11-வது —ஒவ்வொரு சீமையிலொரு 'மாதத்தி லொரு கிராணமாத்திர மிருக்கவுங் காண்பார்கள். ஆனுல் உத்தரபக்கத்தி லிருக்கிறவர்களுக்கு மாதத்தின் றுவக்கத்தி லொரு கிராணம் வரலாம். அந்தக் கிராணந் தென்பக்கத்தி லிருக்கிறவர்கள் காணமாட்டார்கள். தென் பக்கத்திலேயு மப்படித்தான்.

12-வது. ஒரு வருஷத்தி லைந்து சூரிய கிராணமாத்திர மிருக்கலாம், அதிகமா யிருக்கக் கூடாது.

## ௪-ம். அதிகாரம்.

### சந்திரனுடைய விவரம்.

போன அதிகாரத்திலே சூரியனுடைய சுபாவத்தையுங் குணங்களையு மதிசயமான விசேஷங்களையுங் கூடின மாத்திரந் தெரிவித்திருப்பதினாலே இந்த அதிகாரத்திலே சந்திரனுடைய வர்த்தமானத்தை வெளிப்படுத்தத் தாற்பரியமா யிருக்கிறோம். அதெப்படியென்றால் முந்த முந்த சூரியனைப்போலே அக்கினியினுடைய அங்கிஷங்களினாலே பராபர வஸ்துவானவர் சந்திரனை யுண்டாக்கவில்லையென்று சாஸ்திரங்களைக்கொண்டே யெளிதா யொப்புவிக்கலாம். அதாவது நெருப்பிலே யுஷ்ணமும் பிரகாசமு மிருக்கிறது. ஆனாலிந்த விரண்டு குணமுஞ் சந்திரனிடத்தி லில்லாததினாலே அக்கினியுள்ள அங்கிஷங்களினாலே யுண்டாக்கப்பட்ட தல்லவென்று சொல்லவேண்டி யிருக்கிறது. அவ்வண்ணமே சந்திரனுக்குச் சுபாவமாய்ப் பிரகாசமுண்டானா லெப்போதும் பிரகாசிக்கும். ஆனால் அமாவாசி காலத்துக்குப் பிற்பாடு சந்திரன் மிகவுங் கறுப்பாய்க் காண்பிக்கிறதினாலேயும் பற்பல விதமாகச் சூரியனுக்கெதிராக நின்றதினாலேயும் வெவ்வேறே பிறை காண்பிக்கிறதினாலேயுஞ் சந்திர கிராணங்களிலே சந்திரனுடைய பிரகாசமுள்ள பக்கம் பூமியினிழலுக்குள்ளே பிரவேசித்து முழுது மிருட்டாய்ப் போகிறதினாலேயு மவசியமாய்ச் சந்திரனிடத்திற் சுபாவமாய்ப் பிரகாசமில்லையென்றுஞ் சந்திரனிடத்திற் காண்பிக்கிற காந்தியானது சூரியனுடைய கதிர்களினாலேயே வந்ததென்றும் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. இதன்றியே சந்திரனானது ஒளியுள்ளதுமா யெளிதாய்ப் பிரியலானதுமா யிருக்கிற அங்கிஷங்களினாலே யுண்டாக்கப்படாமல் அடர்த்தியானதுமாய்க் கெட்டியானதுமா யிருக்கிற அங்கிஷங்களினாற் படைக்கப்பட்டதா யிருக்கிற தென்கிறது நியாயத்துக் கொத்திருக்கின்றது. அவ்வண்ணமே யெளிதாய்ப்

பிரியலான அங்கிஷங்களினுற் சிருஷ்டிக்கப்பட் டிருந் தாற்பற்பல அசைவி னிமித்தமாகக் கெட்டியுள்ள ஸ்திரத் தைக் கொண்டிராமற் பற்பல ரூபமாய்ப் போகிறதும் அல் லாம லதிலே யுண்டான மாசுகள் வெவ்வேறே விதமாய்க் காண்பிக்கும். ஆனுல் சந்திரனுனது தன்னிடத்திலுண் டானதெல்லா மொருகண்டசிராய்க் காண்பிக்கிறதினுலே சந்திர னொளிவுள்ளதா யிராமற் கெட்டியுள்ள அங்கிஷங் களினுலே யுண்டாக்கப்பட்டதா யிருக்கிறதென்று மன திலே ஸ்தாபிக்கவேணும். இதற்கப்பா லறியவேண்டிய தாவது.

சந்திரனுனது குண்டுபோலிருந்தாலு மநேக வுயர்ந் த பருவதங்களைக்கொண்டிருக்கிறதென்று சொல்லவேண் டி யிருக்கிறது. அதெப்படியென்றுல் அஷ்டமி காலத் திலே பிரகாசமுள்ள பக்கமும், இருட்டுள்ள பக்கமுஞ் சரியாகப் பிரிந்திராமற் பிரகாசக்கிற்றுப் பின்ன பேதகமா க ரம்பம்போலே யிருக்கிறதினுலே பள்ளங்களு மேடுக ளு மவசியமாய்ச் சந்திரனிடத்திலே யிருக்கிறதென்றறி யப் பெற்ற விசேஷமாகும். அஷ்டமிகாலத்திற் சந்திர னைத் தூரதிஷ்டியினுலே பார்த்தா லிதெல்லாம் பிரசித் தமா யிருக்கும். ஆனபடியினுலே சந்திரனெங்குஞ் சம னுயிருக்கவில்லை யென்கிறது தப்பில்லாத வடையாளமா யிருக்கிறது. இந்தப் பிரகாரமாக நாலாம் பிறையிலே சந் திரனுடைய ரூபத்தைப் பார்க்கும்போது பிரகாசமுள் ள பக்கமல்லாம லிருட்டுள்ள பக்கத்திலே சில ஸ்தலங் கள் பிரகாசிக்கிறதினுலே யதிலேதானே மேடுகளிருக்கி றதென்றும் பிரகாசத்தைப் *பிரதிவாதிக்கிறதென்று மங் கீகரிக்கவேணும். இந்தப் பிரகாரமாக ஏகாதசியிலேயு முன் சொல்லப்பட்ட விலக்ஷணங்களுண்டா யிருக்கிறதினுலே யந்தப் பிரகாரந்தானே யோசிக்கக் கடவோம்.

கடைசியிலே வேறே நியாயத்தினுலே சந்திரனிடத் திலே பருவதங்க ளுண்டென் றுெப்பிவிக்கலாம். அதெப் படியென்றுல் சந்திரனிடத்திலே பிரசித்தமா யிருக்கிற மாசுகள் சூரியனுக் கெதிராய் நின்றுல் முழுதுங் கறுப்பா யிருக்கும். பிறகு அத்தனை கறுப்புக் காண்பியாது. வே

* விசேஷமான ஒரு சங்கதியை ஸ்தாபித்துச் சொல்லுகிறது.

றே சமயத்திலே சூரியன் வேறே விதமாக வந்தப்பக்கத்தைப் பிரகாசிப்பிக்கிறதினாலே கறுப்பெல்லாம் வாங்கிப்போய் முழுதும் பிரகாசமாயிருக்கும். இந்த விசேஷத்தைத் தீர விசாரித்தோமானால் பூலோகத்திலுண்டான பருவதத்தினுடைய நிழல் சூரியனுடைய பற்பல நடையினாலே வெவ்வேறே விதமாகக் காண்பிக்கிறதுபோலே சந்திரனிடத்திலுண்டான மாசுகள் சூரியனுடைய பற்பல அந்தஸ்தினாலே வெவ்வேறே விதமாகக் கண்களுக்குத் தோன்றுகிறதினாலே அவசியமாய்ச் சந்திரனிடத்திலே யுயர்ந்த பருவதங்களுண்டாயிருக்கிறதென்று ஸ்தாபிக்கக் கடவோம். அந்தப் பருவதங்களுடைய வுயரம் ஒருகாதமுண்டென்றும் ஒன்றரைக் காத முண்டென்றுங் கெட்டியுள்ள நியாயங்களினாலே சோதிசாஸ்திரிக ளொப்பிவிக்கிறார்கள். ஆனாலிந்தச் சீமையிலிருக்கிற சனங்கள் அதெல்லாங் கண்டுபிடிக்கிறது அருமையா யிருக்கிறதினாலே யிம்மாத்திரஞ் சொன்னதுபோதும். இப்போதைக்குச் சந்திரனுடைய தேய்பிறை வளர்பிறைகளை வெளிப்படுத்துவோம். அதெப்படி யென்றால்:—பூர்வீக சோதிசாஸ்திரிகள் சொல்வதுபோல சந்திரனிடத்திற் சுபாவமாய்க் கதிர் விழுகிறதினாலேபோகப்போகப் பிரகாசங் குறையவேண்டியது.

2-வது.—பவுர்ணமி காலத்திற் சகலமான பிறைகளிலே யுண்டான பிரகாசத்தைப்பார்க்கச் சுருக்கமாயிருக்கும். அதெப்படியென்றால்:—அமாவாசி காலத்திலே சந்திரனிடத்தி லதிகமான பிரகாசமுண்டாயிருந்து சூரியனை விட்டப்பாலே போகப்போக நிலாவினிடத்தி லுண்டான பிரகாசங் குறைந்துபோமென் றெண்ணப்புவித்தாப்போ லாச்சுதே. ஆனபடியினாலே சந்திரனானது பவுர்ணமிகாலத்திற் சூரியனுக்கப்பாலே மெத்த தூரமாய்ப் போனதினாலே யதினுடைய பிரகாசம் வெகுவாய்க் குறைந்ததென் றங்கீகரிக்கக் கடவதாகும்.

3-வது.—மெய்யான பவுர்ணமி காலத்திற் சந்திரனிடத்திலே பரிச்சேதமாய்ப் பிரகாசங் காண்பிக்கவுமில்லை. இருக்கவுமில்லை. அவ்வண்ணமே மெய்யான பவுர்ணமியேதென்றால், சந்திரன் முழுதுஞ் சூரியனுக்கெதிராக நிற்கிறதினாற் சந்திரனுஞ் சூரியனுந் தங்கள் சக்கரங்களுடைய

எதிரான சேர்க்கைகளினாலே யில்லாமற்போனால் முழுது மெதிராக விருக்கமாட்டாம லெப்போதுஞ் சில வேற்று மை உண்டாயிருக்கும். ஆனபடியினாலே யதிலே பவுர் ணமி வந்ததானால் மெய்யான பவுர்ணமி யல்ல சக்கரங் களுடைய சேர்க்கைகளிலே பவுர்ணமி வந்ததானா லப் போது முழுதுங் கிராணமா யிருக்கிறதினாலே யொருவ னும் பிரகாசத்தைக் காணமாட்டான், பிரகாசமேயில்லை.

இப்போது பிரபஞ்சத்தின் மேலே யுண்டாகிய சந்தி ரனுடைய சுபாவ பலத்தைச் சொல்லிக் காட்டுவோம். சுதந்தரமுள்ள மனதினாலே வருகிற காரியங்களை யேற்க னவே சொல்லுகிறதற்குச் சந்திரன் முதலான கிரகங்க ளும் நக்ஷத்திர யோகங்களுங் கரணங்களுந் திதிகளும், அப் ரபூர்வபக்ஷமு முதவா திருக்கிறது மல்லாம லித்தொகை ப்பட்ட விசேஷங்களை யங்கீகரிக்கிறது மகா பாவமாயிருக் குமொழிய மற்றப்படியல்ல. ஆனால் அசரீரியாயிருக்கிற மனதின்பேரிலே சந்திரனுக்குப் பலமில்லாமற் போனாலுங் கண்டிப்புள்ள பொருட்களிற் சிலது வர்த்திக்கிறதற்குஞ் சிலது குறைகிறதற்கும் பலமுண்டென்று சொல்லலாம். இந்தப்பிரகாரமாக விரைக்கிறதற்கும் நாட்டுகிறதற்கும் மரங்களுடைய கொம்புகளை வெட்டுகிறதற்கும் இது முத லான காரியங்களைச் செய்கிறதற்கும், அமாவாசி காலத் துக்குப் பிற்பாடு ஆனகாலமா யிருக்குமென் றனுபவ சித் தியினாலே கண்டுபிடிக்கிறோம். இதற்குக் காரணமேதென் றால்: அமாவாசி காலத்திலே சந்திரன் சூரியன் கிட்டவி ருக்கிறபோ ததிகமான பிரகாசம் உஷ்டணமுதலான நற் குணங்களைத் திரளாய்ச் * சுவிகரிக்கிறதினாலே யதற்குப் பிற்பாடு புஷ்பங்களுக்குஞ் செடிகளுக்கு மரங்களுக்கு மனு ஷருடைய சரீரங்களுக்கு மதிகமான பலத்தைக் கொடுக் கின்றது. அந்தநியாயத்தினாலே கிளிஞ்சில்களிலேயுஞ் சங் குகளிலேயு மிருக்கிற பூச்சிகளும் நத்தை ஊமச்சிகளிலிரு க்கிற பூச்சிகளுஞ் சிப்பிகளிலே முத்துக்களைக் கொண்டி ருக்கிற பூச்சிகளும் அமாவாசி காலத்திலே வர்த்தித்துப் பவுர்ணமிக்குப் பிற்பாடு குறைந்துபோம். இதன்றியே யெலும்புக்குள்ளுண்டாகிய மூளைகளும் நரம்புக்குள்ளுண்

* அங்கீகரிக்கிறது. உபயோகிக்கிறது.

டாகிய சிவ அக்கினியுந் தாதுகளிலே யுண்டான விரந்த
மும் அபரபக்ஷத்திலே குறையும். பூருவபக்ஷத்திலே வர்த்
திக்கும். இந்தப்பிரகாரமாக மரங்கள் முதலான செடிகள்
பவுர்ணமிக்குப் பிற்பாடு வெட்டினால் உளுத்துப்போ
மென் றனுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். இப்ப
டியே அமாவாசி காலத்திலே சரீரத்திலுண்டான விஷ
சலங்கள் மிகவு மதிகரிக்கிறதினாலே கடின மருந்துகளைக்
குடிக்கிறது நியாயமல்ல. கடைசியிலே சந்திரனுக்கும் பிர
பஞ்சத்தி லடங்கியிருக்கிற வஸ்துக்களுக்கு முண்டாகிய
ஐக்கத்தையுந் தொந்தத்தையும் விட்டுச் சகல சாஸ்திரங்
களுக்கு மற்புதமாகத் தோன்றுகிற ஒரு விசேஷத்தை யெ
வ்வளவாகிலும் வெளிப்படுத்துகிறோம். அதேதெனில்.—
சமுத்திரத்தினுடைய பெருக்குக்கும் வடிவுக்குந் திங்கள்
காரணமா யிருக்கிறதென் றறிவீர்களாக. ஆனால் சமுத்தி
ரத்தினுடைய ஆச்சரிய விசேஷங்களை நாமினிமேல வெளி
ப்படுத்துகையில் விஸ்தீரணமாய்ச் சொல்லப்போகிறதினா
லிந்த வர்த்தமானத்தை யிங்கே யிம்மாத்திரந் தெரிவித்
தது போதும். இந்தச் சமையத்திலே அமாவாசி பவுர்
ணமி காலங்களிலே யித்தனை யதிசயமான விசேஷங்கள்
சம்பவிக்கிறதென் றிருக்கும்போது அமாவாசி பவுர்ணமி
வருகிறதை யேதென்றறியக்கடவீர்களாக.

இயாதொரு நக்ஷத்திரத்தின்கீழே சந்திரனுஞ் சூரிய
னுங்கூடி அமாவாசி வந்ததென்று விசாரித்துக்கொள்
ளுங்கள்; சந்திரனானது தன்னுடைய வளையத்திலே நடந்து
சக்கரத்தைச் சுற்றிக்கொண்டு முன்னிருந்த ஸ்தலத்துக்கு
வருகிறதற்கு 27 நாளும், 7 தாசும், 43 விபித்தமும், 4 வி
விப்பித்தமுஞ் செல்லும். ஆனாலதுக்குள்ளே சூரியன்
தனது சுபாவ நடையினாலே மேற்கேயிருந்து கிழக்கே
யப்பாலே போனதினாற் சந்திரன் சூரியனோடே முழு
துஞ் சேர்ந்திருக்கிறதற்கு 2 நாளும், 5 தாசும், 1 விபித்
தமும் நடக்கவேணும். ஆனபடியினாலே யொரு அமாவா
சிக்கும் வேறே அமாவாசிக்கும் 29 நாளும், 12 தாசும்,
44 விபித்தமுஞ் செல்லும். ஆகையினாலே அமாவாசிக்
கும் பவுர்ணமிக்கும் 14 நாளும், 18 தாசும் 22 விபித்தமுஞ்
செல்லும். இப்படிப்பட்ட கணக்கில் மோசம்போகாத

படிக் கறியவேண்டியதாவது: சந்திரனுடைய சுபாவமான நடைமாத்திர மிங்கே பார்த்தோம். ஆனாற் பூலோகத்திலிருக்கிற மனுஷருக்குப் பற்பல காரணங்களினாலே வெவ்வேறே விதமாகச் சந்திரன் காண்பிக்கிறதினா லுண்டாகிற வகைக் கிந்தக் கணக்கு முழுதுஞ் சரியாயிருக்கமாட்டாது. சுபாவ மேனைக்குச் சரியாயிருக்கும். இந்த விகாரங்களையெல்லா மறிய மனதுண்டானால, மகா விஸ்தீரண பிரபந்தங்களை யெழுதவேண்டி யிருக்கும். ஆகையினாலே சந்திர கிராணத்தினுடைய வகைகளையெல்லாஞ் சுருக்கத்திலே சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால்;

பிரகாசமுள்ள சூரியனுடைய கதிர்களானது கண்டிப்புள்ள பொருட்களினபேரிலேபட்டா லவசியமாய் நிழல் புறப்படும். ஆனபடியினாலே சூரியனுடைய கதிர் பூமிமேலே விழுகிறபோ தவசியமாய்ச் சூரியனுக்கெதிராக விருட்டுள்ள நிழற்பிறக்கும். பின்னையும் பூமியானது மகா விஸ்தீரணமா யிருக்கிறதினாலேயும் உண்டை ரூபமா யிருக்கிறதினாலேயும் எதிரான ஆகாசத்திலே வட்டரூபமாக வுருக்ஷியாய்ப் பண்ணப்பட்ட கோபுரம்போலே யடிபெருத்து நுனிசிறுத்து அநேகமாயிரங் காதவழிக்கப்பாலே நிழற் புறப்பட்டுப் போய் விழுமென்கிறது நிச்சயமாகும். இதன்றியே சூரியனானது கிராண சக்கரத்தி லங்கங்கே பிசகாமற் செவ்வையாய் நடக்கிறதினாலே சூரியனுடைய கதிருக் கெதிராகப் பிறக்கிற பூமியின்நிழ லந்தச்சூரிய சக்கரத்திலேதானே யெதிரான சக்கரத்திலே படாதிருந்தாலும் அதற்குச் செவ்வையாய்ப் போய்விழும். ஆனபடியினாலே சந்திரனானது கிராண சக்கரத்துக்கீழே செவ்வையாக விராமற்போனால் கிராணம் வரக்கூடாது. ஆனால் சந்திரனுடைய வளையம் சூரியனுடைய கிராண சக்கரத்துக்குச் சாய்ப்பா யிருக்கிறதினாலேயும் இரண்டு விடங்களிலே மாத்திரஞ் சேர்ந்திருக்கிறதினாலேயும் இந்த விரண்டுசேர்க்கைகளிலே மாத்திரஞ் சந்திர கிராணம் வரலாமொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே யொரு சேர்க்கையிலே சூரியனிருக்க எதிர்த்து நிற்கப்பட்ட வேறே சேர்க்கையிலே சந்திரனிருக்க விப்படிப்பட்ட நேரத்திலே சந்திரனிருக்கிற ஸ்தலத்திலே பூமியினுடைய நிழல் செவ்வே விழுந்

திருக்கிறதினலே யவசியமாய் முழுக்கிராணமா யிருக்கும். பின்னையுஞ் சந்திரனனது அந்தச் சேர்க்கைக்கு 15 பாகத்துக்குள்ளாக விருக்கமட்டும் பவுர்ணமி வந்துதானல் கிராணமெவ்வளவாகிலு மிருக்கலாம். 10 பாகத்திலே பவுர்ணமி வந்துதானல் நிச்சயமா யிருக்கலாம். இதற்குள்ளே யேற்றக்குறைச்சல் வந்தாலும் அத்தனை யதிகமாய்ச் சந்திரன் மறையலாம். கடைசியிலே சந்திர கிராணத்துக்கடுத்த வேறே விசேஷமேதென்றால:

முதலாவது.—சந்திர கிராணமானது சூரியனலே சந்திரனுக்கு வந்த பிரகாசமில்லாத தன்மையா யிருக்கிறது.

2-வது.—சந்திரகிராண மிரவிலே மாத்திரங் காண்பிக்கிறது.

3-வது.—பவுர்ணமி காலத்திலேமாத்திரம் வருகிறது.

4-வது—எந்தத் தேசத்தாருக்குச் சந்திர கிராணத்தி லிரவாயிருந்ததோ அவர்களெல்லாருங் கிராணத்தைக் காண்பார்கள்.

5-வது.—சந்திர கிராணமானது அதின் வளையத்தின் கீழ்ப்பக்கத்திலே பிடித்து மேல்பக்கத்திலே முடியும்.

6-வது —சந்திர கிராணமானது எத்தனை நேரமிருந்தாலும் 4 தாசுக்குமே லதிகமா யிருக்கமாட்டாது.

7-வது.—சூரிய கிராணத்தின் கணக்கைப்பார்க்கச் சந்திரகிராண மொரு சீமையிலே தானே யதிகமான இலக்கமுண்டாயிருக்கும்,

8-வது.—சந்திர கிராணஞ் சக்கரங்களுடைய சேர்க்கையிலே யுண்டா யிருந்தால் ஒன்றிலதற்கு முன்னே போன அமாவாசி சூரிய கிராண மெவ்வளவாகிலு மிருந்தது. ஒன்றில் பிற்பாடு வரப்போகிற அமாவாசியிலே சூரியகிராண மிருக்கவேண்டியது.

9-வது.—வருஷத்துக்குள்ளே யிரண்டுவிசை சந்திர கிராண மிருக்கலாம் சுபாவமாய் ஆறுமாதத்திலே வரவேணும். ஐந்தாமாதத்திலே வந்துதானற் சின்னதா யிருக்கவேணும். ஏழாமாதத்திலே யொருக்காலும் வரவில்லை.

10-வது.—சந்திரன் சேர்க்கைக்குத் தூரமாயிருந்தால கிட்டின அமாவாசிகளி லொன்றில் சூரிய கிராணமாயிருக்கும்.

11-வது.—ஒன்றின் பிறகே யிரண்டு அடுத்தாப்போலே வருகிற பவுர்ணமியிலே யொருமிக்க எந்தச் சிமைகளிலேயு மிரண்டு சந்திரகிராண மிருக்கமாட்டாது.

12-வது—மூன்றுவிசை மாத்திர மொருவருஷத்திலே சந்திரகிராணம் வாலாமென்கிறதற்குத் தப்பாது. இனி பூதியங்களுடைய விசேஷத்தை வருகிற அதிகாரத்திற் சொல்லிக்காட்டுவோம்.

## ரு-ம். அதிகாரம்.

### பூதியங்களுடைய விவரம்.

நக்ஷத்திரங்களுடைய சக்கரங்களேயுங் கிரகங்களுடைய மண்டலங்களேயு மதுகளுக்குச்சம்பந்தமா யிருக்கிறஆச்சரிய விசேஷங்களேயும் வெளிப்படுத்தினதற்குப் பிற்பாடு பிரபஞ்சத்துக்குள்ளே யடங்கியிருக்கிற வஸ்துக்களுடைய சுபாவங்களேயுங் குணங்களேயு மறிவிக்கிறது கிரமமுள்ள நியாயமா யிருக்கின்றது. ஆகையால் முந்தமுந்த பூலோகத்திலுண்டான வஸ்துக்களுக்குப் பூதியங்கள் பிரதான காரியங்களா யிருக்கிறதினுலே யந்தப் பூதியங்களுடைய சுபாவத்தையு மாச்சரியமான குணகுணங்களேயுந் தெரியப்பண்ணத்தக்கதாகப் பிரயாசப்படுவோம். அதெப்படியென்ருல் பூதியமானது வெவ்வேறு விதமான பற்பல சுவாப குணங்களேக்கொண்டிருக்கிறதுமாய் அதினுடைய அங்கிஷங்களேக் கெடுக்கத்தக்கதாக எத்தனேபிரயாசப்பட்டாலு முன்னிருந்த அந்த குணங்களே எப்போதும்போலவே சுவிகரித்துக்கொண்டிருக்கிற பொருளுமா யிருப்பது தான் பூதியமென்று சொல்லப்படும். அதெப்படியென்ருல் தண்ணீரென்று சொல்லப்படுகிற பூதியமானது நெருப்பினுடைய வுஷ்டணத்தினுலே யெத்தனே பிரிவாய்ப் பிரிந்துபோனுலும்அக்கினியினுடைய வுக்கிரத்தினுலே யாகா புகைபோ லேறினு மதினுடைய அங்கிஷங்

லர் மறுப்டியுங்கூடி யெப்போதும்போலே தண்ணீராய்ப் போம். இப்படிப்பட்ட பூதியங்கள் நாலுமாத்திர முண் டென்று சாஸ்திரிகள் நிச்சயிக்கிறார்கள். அந்த பூதியங்க ளுடைய பேரேதென்றால், பிரிதிவு, அப்பு, தேயு, ஆகாசம். ஆக இந்த நாலுபூதியங்களும் சகலமான வஸ்துக்களையுங் கூட்டுகிறதற்கு ஏற்ற கருவிகளா யிருக்கிறதினாலேயும் பூமி, தண்ணீர், ஆகாசம், அக்கினிமுதலானதுகள் சகல பொருட்களையும் நவமாய்ப் பிறப்பிக்கிறதற்குக் காரணமா யிருக்கிறதினாலேயும் பூதியங்கள் 4 மாத்திர முண்டென்று நியாயத்தின்படியே சொல்லலாம். பின்னையுஞ் சகலவஸ் துக ளழிந்துபோகிறபோது கடைசியிலே பூதியங்களாய்ப் போகிறதினாலே யந்த நாலு பூதியங்களினாலேதானே கூட் டப்பட்டதா யிருக்கிறதென்று தப்பா தடையாளமாயி ருக்கின்றது. இப்பிரகாரந்தானே மரத்தை வெட்டி நெ ருப்பிலே போட்டா லதிலே நின்று புறப்படுகிற ஈரமு ள்ள புகையானது, தண்ணீரினுடைய அடையாளம். ஆகா சம் சுவாலையோடே கலந்திருக்கின்றது. ஆனபடியினாலே யாகாசத்துக்கும் நெருப்புக்குந் தப்பில்லாத விலக்ஷணம். கடைசியிலே அடுப்பிலே கிடக்கப்பட்ட சாம்பலானது பூமியினுடைய சுபாவத்தை நிதானமா யொப்பிவிக்கிறது. இப்படியே மற்றுமுண்டான காரியங்களின் விஷயத்திலே யோசிக்கலா மானபடியினாலே சகலமான பொருட்களி லுண்டான குணங்களிற் பிரதான நாலு குணங்கள் வெவ் வேறே விசேஷங்களைக் காண்பிக்கிறதற்குக் காரணமா யிரு க்குமாப்போலே சகலமான கண்டிப்புள்ள வஸ்துக்கள் கூட்டப்படுகிறதற்கு நாலு பூதியங்களும் நாலு பிரதான தளவாடங்களா யிருக்கிறதென்று சொல்லவேண்டி யிருக் கிறது. 1 இந்த நாலு பிரதான குணங்களுக்குப் பேரே தென்றால்; உஷ்டணம், குளிர், உலர்தல, ஈரம், ஆக 4 இந்த நாலு குணங்களும் 4 பூதியங்களிலே யெப்படி விளங்குகிற தென்றால், பிரிதிவு-உலர்தலுங், குளிருமாயிருக்கும். அப் பு-குளிரும், ஈரமுமாயிருக்கிறது. ஆகாசம், உஷ்டணமு மீர முமாயிருக்கிறது. அக்கினி-உஷ்டணமும், உலர்தலுமாயி ருக்கிறது. இதிலே பராபரவஸ்துவினுடையஅளவில்லாத விம ரிசையையுங் கனாகாணாத சாமர்த்தியத்தையுங் காணலாம். அதெப்படியென்றால், இந்த 4 பூதியங்களுந் தங்களுக்குள்ளே

விரோதமா யிருந்தாலும் அந்த வாஸ்தவத்தினாலே லோகங் கெட்டுப்போகாம லிருக்கிறதுந்தவிர உலகமெங்கும் நன் றுயிருக்கிறதிற்கும் சர்வத்துக்கும் வல்லவராயிருக்கிற ஆண் டவர் இந்த 4 பூதியங்களையும் ஆன ஸ்தலங்களிலே ஸ்தா பித்தார். அவ்வண்ணமே யொவ்வொரு பூதியத்துக் கிரண் டுபிரதான குணங்கொண்டிருக்கச்சே யொருகுணத்தினி மித்தமாக வேறே குணத்துக்குச் சேரலாமென்கிறதினு லே யிந்தச் சேரலான குணங்களைக்கொண்டு மட்டில்லாத ஞானத்தைக் கொண்டிருக்கிற சர்வேஸ்வரனுனவர் 4 பூதி யங்களை நடத்திக்கொண்டு வருகிறூர். இந்த மேரையாகப் பூமி குளிரும் உலர்தலுமா யிருக்கிறதினாலே யெல்லாத் துக்கு மஸ்திவாரமாக ஸ்தாபித்து அதற்கருகில் குளிரும் ஈரமுங் கொண்டிருக்கிற தண்ணீரைக் கட்டளையிட்டு அந்தத் தண்ணீரின்கிட்ட ஈரத்தையு முஷ்டணத்தையுங் கொண்டிருக்கிற ஆகாசத்தை யிருக்கப்பண்ணி யெல்லாத் துக்கும் மேலான வுஷ்டணத்தையு 'முலர்தலையுங் கொண் டிருக்கிற நெருப்பைக் கற்பித்தருளினுர். இந்தப் பிரகார மாகப் பூதியங்கள் கலந்திருந்தாலுஞ் சமாதானமா யிருக்கி றதினாலே யாதொரு பொல்லாப்புஞ் செய்யாமல் உலகத் திலே நன்மையுண்டாகிறதற்குத்தானே காரணமாயிருக்கி றது. ஆகையால் இந்த 4 பூதியங்களின் விஷயத்தி லறிய வேண்டின ஆச்சரியமான விசேஷங்களை மனதிலே தரித் துக்கொண்டு அது நிமித்தமாகச் சர்வேஸ்வரனை ஸ்தோத் திரம்பண்ணக்கடவோம்.

அதெப்படியென்றுற் பூதியங்களுக்குள்ளே சிலது தனது சுபாவ சம்பந்தமாயிருக்கிற விர்த்திகளைச் செய்கிற தற்கு அத்தியந்த பலமு மகா சுறுசுறுப்புங் கொண்டிருந் தாலும் அதற்கு விரோதமான மற்றொரு பூதியத்தை யுண் டாக்கிறதற்கும் எதிர்த்து யுத்தம்பண்ணுகிறதற்கும் பல மில்லை.

வேறே சில பூதியங்களோவென்று லெதிராக் நிற்கிற தற்கும் பின்வாங்காம லெப்போது மொருகண்டசீரா யிரு க்கிறதற்குஞ் சுபாவ பலத்தைக்கொண்டிருந்தாலும் ஒரு கிரியையானுலுஞ் செய்கிறதற் கவகாசமில்லை. அதற்குத் திருஷ்டாந்தரமாக:

அக்கினியானது சகல வஸ்துக்களை யெரிக்கிறதற்கு மகா சத்துவத்தைக் கொண்டிருந்தாலும் அதினுடைய ஆதாரமெல்லாம் அமர்த்துகிறதற்குக் கொஞ்சந் தண்ணீர் மாத்திரம் போரும். இப்படியே சுடுகிறதற் குண்டான பலத்தைப்போலச் சலத்தோடே யெதிர்க்கப் பலமுண்டானாலவசியமாய் உலகமெல்லாங் கெட்டுப்போம்.

பூமியோவென்றால் வஸ்துவென்னப்பட்டதெல்லாத் தோடேயு மெதிர்க்கிறதற்கும் அழிவில்லாமலுஞ் சேதமில்லாமலும் பின்வாங்காமலு மொருகண்டசீரா யெப்போது மிருக்கிறதற்கும் வல்லமை யுடைத்தானதா யிருந்தாலும் பலவந்தமாய்த் தனது சுபாவத்தினு லொன்றுஞ் செய்யமாட்டாது.

இதற்கப்பா லறியவேண்டியதாவது: இப்படிப்பட்ட நாலு பூதியங்களுஞ் சர்வேஸ்வரன் றங்களை ஸ்தாபித்த நிலைமைகளிலே சேருகிறதற் கெப்போதுஞ் சொல்லப்படாத அபேக்ஷையுள்ளதாகக் காணப்படுகிறது. அதெப்படியென்றால் ஆகாயத்தி லெத்தனை பலத்தோடே கலலுகள் குண்டுகள் முதலான கனமுள்ள வஸ்துக்க ளெறியப்பட்டாலுந் திரும்பச் சற்றுநேரத்துக்குள்ளே தனது ஆதாரமான பூமிமேலேவந்து விழுகிறது மல்லாமல் எவ்விடமதிகமாய்க் கிட்டியிருந்ததோ அவ்விடத்திலே சீக்கிரத்தில விழும். இத்தன்மைபாகப் பரிபூரணமழை வருஷித்ததற்குப் பிற்பா டந்தச் சலமுயர்ந்த பருவதங்களிலே நில்லாமற் பூமியிலே விழுந்து வாய்க்காலகளி லோடி ஆறுகளிலே விழுந்து கடைசியிலே தனது நிலைமையான சமுத்திரத்தி லோடிக் கலந்து நிற்கும். இவ்விதமாக ஆகாசம் பூமிக்குள்ளே யகப்பட்டாற் பூமியை யதிரப்பண்ணி மேலாகத் திறந்துகொண்டு தனது நிலைமைக்குச் சேரும்பொருட்டாகப் பறந்துபோம். அக்கினியோவென்றால் ஆகாசத்திலேறித் தனது மண்டலத்துக்குச் சேருகிறதற்கும் மற்றுமுள்ள பூதியங்களைப்பார்க்க வதிகமான சுறுசுறுப்போடேயும் பலவந்தத்தோடேயு மோடும். இத்தொகைப்பட்ட வுன்னதமான விசேஷங்களை யோர் மகாத்துமாவானவர் தியானிக்கும் வேளையில் திருவுளம் பற்றினதாவது: "இதேது புத்தியில்லாத வஸ்துக்களெல்லாந் தனது நிலைமைக

ளிலே சேருகிறதற் கித்தனை யாவலைக் கொண்டிருக்க புத்தியுள்ள மனுஷன்மாத்திரந் தனது நிலைமையாகிய மோக்ஷத்தை யனுபவிக்கத்தக்கதாக வுண்டாக்கப்பட்டவனு யிருந்தும் இதைச் சட்டைபண்ணுமல் தன்னுடைய ஆத்துமத்தைக் கெடுக்கிற அழிந்துபோகிற லௌகீக சுகசெலவங்களைத் தேடிக்கொண்டு திரிகிறது எவ்வளவு பயங்கரமுள்ளதா யிருக்கிறதென்று ஆச்சரியப்படுகிறுர்."

இப்போதைக்குப் பூதியங்களுக்குள்ளே யெந்த பூதிய முத்தமமாயிருக்கிறதென் றறியவேணுமென்றுல் அதுகளை யெல்லாங் கிரமத்தின்படியே யொவ்வொரு பூதியத்துக்கான நியாயங்களைச் சொல்லிக் காட்டுவோம். அதெவ்வாறெனில்:

1-வது.—பூமியை நினைக்கும்போ திதினுலே மனுஷருக்குண்டாகிற பிரயோசனத்தை முழுதுங் காண்போமாகில இது மற்றப்பூதியங்களைப் பார்க்க வுத்தமமாயிருக்கிறதென்று சொல்லக் கூடுமானதாயிருக்கின்றது. அதெப்படியென்றுற் பிரிதிவுவானது மனுஷருக்கு எள்ளளவாகிலும் பொல்லாப்பு வருத்திவியாமல எப்போதும் எண்ணப்படாத நன்மைகளுண்டாகிறதற்குக் காரணமா யிருக்கிறது.

2-வது.—அப்புவானது வருஷம் பரிபூரணமாய் வருஷிக்கிறபோது அந்தத் தண்ணீர் மிகுதியினுலே பயிர்களு மரங்களுங் கெட்டுப்போய் யீரத்தினுலே யெண்ணப்படாத மனுஷருக்கு மிருகங்களுக்கும் பற்பல வியாதிகளை வருத்தி

3-வது.—ஆகாயமானது பெரும்புச லடிக்கும்போது பெருங் கோட்டைகள் போலேயிருக்கிற விஸ்தீரணமான கப்பல்களைச் சமுத்திரத்துக்குள்ளே யழுந்தப்பண்ணி பூமிமேலே யுண்டான வுயர்ந்த விருக்ஷங்களை முதலாய் வேரோடே பிடுங்கி வீடுகளை யெல்லா மடியோடே பறக்கடித்துப் பெரிய மதில்களையும் அரண்மனைகளையுந் தகர்த்து மகா நேத்தியான வுப்பரிகைகளை யெலலாம் நிர்மூலம்பண்ணி மனுஷரையெல்லாம் பாதாளங்களிலே தள்ளிவிட்டு இந்தப்படி பிரபஞ்சத்திலே யடங்கின வஸ்துக்களையெலலாம் நாசம் பண்ணுகிறுப்போலே காண்பிக்கின்றது. பலவந்தத்தினுலே யசைக்கப்பட்ட ஆகாச மித்தனை பயங்கரமான சேதத்தை வருத்துவிக்கின்றது.

4-வது.—அக்கினியோவென்றால் இவைக ளெல்லாவற்றையும்பார்க்க அகோரமான பொல்லாப்புகளுக்குக் காரணமாயிருக்கின்றது. அதெப்படியென்றால், நெருப்பானது மகா விஸ்தீரணமான பட்டணங்களையெல்லாஞ் சற்றுநேரத்துக்குள்ளே சாம்பலாக்கி வெகு விசாலமான வனங்களையெல்லாந் தகனித்துப் பூமியைத் தனது அதிர்ச்சியினாலே நடுங்கப்பண்ணிப் பயங்கரமான இடிகளினாலே பருவதங்களையு முப்பரிகைகளையும் பிளக்கப்பண்ணி மனுஷரையு மிருகங்களையு மெரித்து ஆகாயங்களைப் பயங்கரமான சத்தங்களினாலேயு மின்னல்களினாலேயு நடுநடுங்கச்செய்து பிரபஞ்சத்தி லடங்கியிருக்கிற வஸ்துக்களை யெல்லாம் நீறாக்குகிறாப்போலே காண்பிக்கிறது. இப்படியே 4 பூதியங்களும் உலகத்துக் கபாயம் வருவிக்கத்தக்கதா யிருந்தாலு மவைகளால் அநேக நன்மைகளும் உண்டாகின்றன. அதெப்படியென்றால்:

முதலாவது.—பூமியோவெனில் மனுஷருக்கு அற்ப சேதத்தையாகிலும் வருத்தியாம லவர்களை யிரவும் பகலும் இரக்ஷித்துக்கொண்டு வருகிறதுந்தவிரப் பார்வைக் கலங்காரமான புட்பங்களையும் விநோதங்களையு மிரத்தினங்களையுந் திரவியங்களையும் முகருகிறதற்குக் கஸ்தூரி புனுகு கந்தவெடி முதலான சுகந்தங்களையும் பரிமளங்களையு மாகாரத்துக்கு வேண்டிய ருசிகரமான காய் கனிகளையு முச்சிதமான பதார்த்தங்களையும் பராமரித்துக்கொடுக்கின்றது. இதுவுந்தவிர மனுஷர் நடந்தாலுஞ் சரி இருந்தாலுஞ் சரி யெப்போது மவர்களைச் சுமந்துகொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட மனுஷருயிரோடே திரிகிறபோ தித்தனை நன்மைகளைப் பண்ணுகிறது மலலாம லவர்களுடைய ஆத்துமஞ் சரீரத்தைவிட்டுப் பிரிந்தவுடனே தன்னிடமாயிருக்கிற அந்தச் சரீரத்தைத் தனது கர்ப்பத்திலே வைத்துப் பதனம் பண்ணிக் கொள்ளுகின்றது. இத்தொகைப்பட்ட நியாயங்களை யெல்லாங்கேட்டு எது வுத்தமமான பூதியமென்று நியாயத்தீர்வை சொல்லுகிறதற்கு முன்னே மற்றுமுள்ள பூதியங்களைப்பற்றிச் சொல்லப்போகிற நியாயங்களையு மறியவேண்டிய தவசியமா யிருக்கின்றது. அதெப்படியென்றால்:

2-வது.—அப்புவானது மனுஷருக்குப் பிரதான பானமா யிருக்கிறதினாலே யது லோகத்திலில்லாமற்போனால் மிருகங்களு மனுஷ ரென்னப்பட்ட யாவரும் பிழைக்கப் போகிறதில்லை யென்பது பிரசித்தமான சத்தியமாகும். பூமியிலே நின்று ஜெனிக்கிற மரங்களுஞ் செடிகளும் பயிர்களு மற்றுமுள்ள வளர் சீவனைக்கொண்டிருக்கிற வெல்லா வஸ்துக்களுஞ் சலமில்லாமற் போனால் நில்லாது. மழையில்லாத சமயத்தில் எல்லாஞ் சாகிறுப்போ லிருக்கின்றதே; வருஷம் வருஷித்தவுடனே யெல்லாவற்றிற்கு முயிர் வருகிறுப்போ லாகுதே. உயிர் பிரதானமா யிருக்கும்போ திப்படிப்பட்ட வுயிர் நிற்கிறதற்கும் நவமாய் விர்த்திக்கிறதற்கு மிகவு முதவுகிற தண்ணீர் பிரிதிவைப்பார்க்க வதிக பிரயோசன முள்ளதென்று காண்பிக்க வில்லையோ? இதனோடு சமுத்திரத்தினாலே வருகிற பிரயோசனத்தைக்கூடக் கூட்டினா லென்ன சொல்லலாம்.

3-வது.—இப்போது ஆகாசத்தினுடைய நன்மைகளைக் கொஞ்சத்துக்குள்ளே சொல்லிக் காட்டுவோம். முந்த முந்த மனுஷர் பிறந்தவுடனே மூச்சு விடுகிறதற்கும், மூச்சு வாங்குகிறதற்கு மவசியமாய் வேண்டியிருப்பது ஆகாசந்தானே. இந்த ஆகாச மில்லாமற்போனா லொரு க்ஷணமுதலா யுயிரோ டிருக்கமாட்டோம். பூமியானது நல்ல ருசிகரமான ஆகாரங்களைக் கொடுத்தாலுந் தண்ணீர் ருச்சிதமான பானமா யிருந்தாலு முயிருக் கவசியமாய் வேண்டிய சுவாசம் விடுகிறதற் காகாச மில்லாமற்போனாற் போசன ரசங்களினா லாகிற பிரயோசன மென்ன? ஆகார பானமில்லாம லநேக நாளிருக்கலாம்; சுவாசமில்லாமற் சற்றுநேர மிருக்கக்கூடாது. இதுதவிர ஆகாசமானது பிழைக்கிறதற்கு வேண்டி யிருக்கிறது மல்லாமற் சகல வஸ்துக்களும் நன்று யிருக்கிறதற்கு முதலா யவசியமாய் வேண்டி யிருக்கின்றது. அவ்வண்ணமே ஆகாசமில்லாமற்போனா லெல்லா மிருட்டாயிருக்கும். அதேதென்றுற் பிரகாசமானது சகலமான வஸ்துக்கள் பேரிலேயும் வியாபிக்கிறதற்கு ஆகாசம் வழியாயிருக்கும்.

4-வது.—கடைசியிலே நெருப்பினுடைய பிரயோசனத்தைச் சரிவர விசாரித்தோமானால் மனுஷருக்கும் மற்ற

வஸ்துக்களுக்கும் வெகு அவசரமான பொருளென் றெளி தாய்க் கண்டு பிடிக்கலாம். அவ்வண்ணமே யிருதயமானது அக்கினிபொருந்தி யிருக்கப்பட்ட அங்கிஷங்களை யெப்போதுந் தன திரண்டு பைகளிலே தரித்திருக்கிறதினாலேயும், அந்த வுஷ்டணத்தினாலே யிரத்தத்துக்கும் அந்த விரத்தத்தைக்கொண்டு சரீரத்தினுடைய சகல அவயவங்களுக்கும் வேண்டிய பலத்தைக் கொடுக்கிறதினாலேயும் இந்த வுஷ்டணாதிக்கஞ் சரீரத்திலே யில்லாமற்போனால் சீக்கிரத்திலே யழியப்படு மென்கிறதினாலேயு மவசியமாய்த் தேயு மனுஷருக்கு வேண்டி யிருக்கிறதென்று நிச்சயமாகும். இதல்லாம லக்கினி யில்லாமற்போனால் சமைக்கிறதெப்படி? சகல கிரியைகளை நிறைவேற்றுகிற தெப்படி?

இப்படியே யொன்றுக்கொன்று தோல்வியிராத விந்த 4 பூதியங்களினாலேயும் மனுஷருக் கித்தனை நன்மைகள் வரும்போது இவைகளை மனுஷருக் குபகாரமாகக் கட்டளை பண்ணின பராபர வஸ்துவை நன்றியறிந்த மனதோடே தோத்திரம் பண்ணவேண்டி யிருக்கின்றது மல்லாமற் புத்தியில்லாத விந்நான்கு பூதியங்களுந் தன்தன் நிலையை யடைவதுபோல நாமும் நமது சொந்த நிலையாகிற மோக்ஷானந்தத்தை யடையத்தக்கதாக இவைகளையெல்லாம் படைத்த கர்த்தருமாய் மட்டில்லாத பலத்தையும் அளவில்லாத தயாபத்தையுங் கொண்டவருமா யிருக்கிற ஆண்டவரை ஸ்துதிக்கவேண்டியவர்களா யிருக்கிறோம். இதை யோருவமையினாலே தெளியப்பண்ணலாம். அதெப்படியென்றால்; ஓர் இராயனானவன் ஒரு நல்ல அரண்மனையைக்கட்டி யதிலே யிரண்டு ரத்தின தீபங்களையும் பட்டுபட்டா வளிகளையும் வைத்து விலையேறப்பெற்ற நவரத்தினங்களையுங் கட்டளையிட்டு அந்த வரண்மனையிலே யொருவனை நிறுத்தி யதிலே யுண்டான பாக்கியங்களையெல்லா மவனுக்குக் கொடுத்திருக்க அவன் இதெல்லாவற்றையுந் தந்த விராயனைச் சட்டைபண்ணாமலும் நினையாமலு மவனுக்கான ஆசாரங்களைப் பண்ணாமல் அந்தப் புத்தியில்லாத தீபங்களையு மாகார பானங்களையுங் கும்பிட்டு நமஸ்காரம் பண்ணினால் புத்திக்கும் நியாயத்துக்கு மொவ்வாத அக்கிரமமும் அநியாயமும் பயித்தியமும் அனுச்சாரமுமா யிருக்குமென்று யா

வரும் ஒப்புக்கொள்ளவேண்டியது ஞாயந்தானே. அத் தன்மைபோல இராசாதி ராசனுயிருக்கிற பராபர வஸ்து வானவர் மனுஷரை யிரக்ஷிக்கத்தக்கதாக 4 பூதியங்களை யுண்டாக்கி யதிலே யுண்டான திரவியங்களேயும் விநோ தங்களேயு மாகார பானங்களேயு முபகாரமாகக் கட்டளை யிட்டதற்குப் பிற்பாடு நாமவருக்கு நன்றியறியாதவர்களா யிருந்து சர்வ லோகத்தையு மதிலே யுண்டான வஸ்து வென்னப்பட்ட தெல்லாத்தையு மொரு வார்த்தையினுலே சிருஷ்டித்தவருமா யிரக்ஷிக்கிறவருமா யிருக்கிற சர்வேஸ் வரனைப் பிறக்கணித்து அவருக்குச் செய்யத்தக்க வுத்தம மான ஆராதனை பண்ணுமலு மனதிலே முதலா யவரை நினையாமலு மவருபகாரமாய்த் தந்தருளின புத்தியில்லாத வஸ்துக்களைக் கும்பிட்டு நமஸ்காரம் பண்ணினுல் மகா பா வதோஷமுமாய்த் துரோகமுமா யிருக்கிறதுந் தவிர அப் படிப்பட்ட பாவிகளுக்கு நீதிபரரான கர்த்தர் தமது மட் டில்லாத நீதியினுலே யாக்கினை யிடுவாரென்கிறதற்குத் தப்பாது. இன்ன மினிமேல் வரப்போகிற அதிகாரங்களி லே ஆண்டவருடைய பலமும் விமரிசையு மதிக மதிகமாய் விளங்கும் பொருட்டாக 4 பூதியங்களேயுங் கூடினமாத்தி ரந் தனித்தனியே சுவாமியினுடைய கிருபாகடாக்ஷத்தினு லே வெளிப்படுத்துவோம்.

## ௬-ம். அதிகாரம்.

### தேயுவின் விவரம்.

பூதியங்களுடைய சுபாவங்களேயுங்குணங்களேயும் பொ துவிலே யாராய்ந்து பார்த்ததற்குப் பிற்பா டதுகளைத் தனியே விசாரித்து அதிலே வரத்தக்க சந்தேகங்களை நிவா ரணம் பண்ணக்கடவோம். அதெப்படியென்றுல்:

பூதியங்களுக்குள்ளே தேயுவானது மகா சுறுசுறுப் போடே பற்பல விர்த்திகளுக்கும் *கிரிஷிகளுக்கும் பிரதா ன கையிங்கிரியமா யிருக்கிறதினுலே முந்தமுந்த அக்கி னிக்குச் சம்பந்தமாயிருக்கிற அநேக ஆச்சரியமான விசே

* தொழில்.

ஷங்களை வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால். அக்கினியானது மகா தீவரத்தோடேயும் பலத்தோடேயு மிடைவிடாம லசைவாடுகிற அங்கிஷங்களினாலே யுண்டாக்கப்பட்டதா யிருக்கின்றது. இப்படிப்பட்ட சின்ன அங்கிஷங்க ளணுப்போலே யிருந்தாலும் பற்பல ரூபங்களைக்கொண் டிருக்கின்றது. அதுகளுக்குள்ளே சிலதுக ளுண்டைகளைப்போ லிருக்கின்றது. சிலதுகள் முக்கோணமாயிருக்கின்றது.

அல்லாமலும் நெருப்பிலே யிரண்டு குணங்களுண்டா யிருக்கிறது. அதின் முதலாவது. நெருப்பினுடைய அங்கிஷஞ் சகல வகையிலுஞ் சிக்கிரத்திலசைகிறதாயிருக்கிறது. இந்தவிசேஷத்தைச் சுவாலையிலே பிரத்தியக்ஷமாய்க் காணலாம் மற்றுமுண்டான சமயங்களிலே கண்ணாலே காணாதிருந்தாலு மதினுடைய குணம் போகாதென்று யோசிக்கக் கடவோம்.

மேலும் அக்கினியானது எரிகிறபோது ஐக்கியமாயிருக்கிற வஸ்துக்களை விசேஷமான வகையோடே பிரியப் பண்ணுகிறது. ஆனபடியினாலே மேலேயுங் கீழேயும் பக்கங்களிலேயு மெந்தெந்தவகையோடேயு மசைகிறதற்கு உண்டை ரூபமா யிருக்கிறதினாலேயும் ஐக்கியமான வஸ்துக்களைப் பிரிக்கிறதற்கு முக்கோண ரூபமானது மிகவுமான வெத்தனமா யிருக்கிறதினாலேயும் நெருப்பானது முன் சொல்லப்பட்ட ரூபங்களைக் கொண்டிருக்கிற அங்கிஷங்களினாலே கூட்டப்பட்டதா யிருக்கின்றதென்று நியாயத்தின்படியே சொல்லவேண்டும்.

இப்போதைக்குச் சுவாலைக்கடுத்த விசேஷங்களை வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால்; அஸ்திவாரத்திலே பருமமாயிருந்து போகப்போகக் குறைந்து நுனியிலே கூர்மையா யிருக்கிறதற்குக் காரண மேதென்றால். இதை நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற்குத் தீபங் கொளுத்தி யிருக்கிறதென்று விசாரித்துக் கொள்ளுங்கள். அப்படிப்பட்ட தீபத்தின் சுவாலையிலே மூன் றந்தஸ்து உண்டென்று விசாரிக்கக் கடவோம். முந்த முந்த அஸ்திவாரத்தி லெண்ணெயினுடைய சில அங்கிஷங்கள் வெந்ததும் வேகாதது

மா யிருக்கிறதினாலே தீவரத்திலே யுயர ஏறமாட்டாது. நடுவிலே யிருக்கிறது அதைப்பார்க்க வதிகமாய் வெந்ததி னாலே யதிகமாய் மேலே யேறுகிறது. கடைசியிலே கொ ழுந்திலே யிருக்கிற சில அங்கிஷங்கள் மகா லகுவாயிருக்கி றதினாலே யெளிதாய் வெகுசீக்கிரத்தோடே யேறுகிறது. ஆனபடியினாலே லகுவினாலேயும் பாரத்தினாலேயு மிந்த வேற்றுமை காண்கின்றது.

மேலும் சுவாலையானது உருட்சியாகக் காண்கிற தற்குக் காரண மேதென்றால். ஆகாசமானது எங்குஞ் சூழ்ந்திருக்கிறதினாலேயுஞ் சரியாகச் சுவாலையை யிழுக்கிற தினாலேயுந் திரண்டு உருட்சியாக விருக்கிறது. இதன்றி யே யப்படிப்பட்ட சுவாலையிலே பலபல வர்ணங்கள் காண் பிக்கிறதற்கு நிமித்த மேதென்றால். அடியிலே நீலவர்ண மாயும் நடுவிலே வெண்மையாயும் கொழுந்து சிவப்பா யும் இருக்கின்றது. அஸ்திவாரத்திலெண்ணெய்யினுடைய அங்கிஷங்களைச் சுவிகரித்து நெருப்பு தனது அங்கிஷங்க ளோடு கலந்ததினாலெ நீலவர்ணங் காண்பிக்கிறது. நடுவி லே யத்தனை கலப்பில்லாததினாலே சுபாவமாய் வெண்மை காண்பிக்கிறது. சுவாலையினுடைய நுனி புகையோடே க லந்திருக்கிற படியினாலே சிகப்பு வர்ணங் காண்பிக்கிறது. அந்த நியாயத்தினாலேதானே கனநெருப்புகளிலே கட்டை கள் நன்றாய் வேகாமற் புகை கிளம்பும், அந்தப் புகையி னுடைய ஆவிகள் சுவாலையோடு கலந்து போகின்றதினா லே சில சமயங்களிற் பக்கங்களில் முதலாய்ச் சிகப்பு காண்பிக்கும். இந்தப் பிரகாரமாக எரிகிற வஸ்துக்கள் சுத்தமாயிருந்தால் பலபல வர்ணங்களைக் காண்பிக்கப்பண் ணும். மகா அழுக்குள்ள அங்கிஷங்களைக் கொண்டிருந் தால் பற்பல நிறங்கள் பிறக்கும். அந்த நியாயத்தினா லேதானே வெள்ளை மெழுகுதிரி மகா சுத்தமா யிருக்கிற தினா லதினுடைய சுவாலை மகா வெண்மையும் பிரகாச முமா யிருக்கும். மஞ்சள் மெழுகுதிரியோ வென்றால் அசுத்தமுள்ள அங்கிஷங்களைக் கொண்டிருக்கிறதினாலே யத்தனை வெண்மையும் பிரகாசமுமா யிருக்கமாட்டாது.

இது தவிர சுவாலையானது குதிக்கிறாப்போலே யிருக் கிறதற்கும் வெவ்வேறே விதமாக அசையப்படுகிறதற்கும்

காரணமேதென்றால், எரிகிற வஸ்துவினுடைய அங்கிஷங்கள் சரியாக வேகாததினாலேயுஞ் சுற்றிக்கொண்டிருக்கிற ஆகாச மசையப்பட்டிருக்கிறதினாலேயும் அப்படிப்பட்ட விகாரம் வருகிறதென் றறிவீர்களாக.

இன்னமொரு விசேஷமான காரியத்தைச் சொல்லிக் காட்டுவோம், அதென்னவென்றால்: சுவாலையினுடைய நடுவிலே யுண்டான அங்கிஷங்கள் சுடுகிறதைப்பார்க்கச் சுவாலையின் நுனியானது அதிகமான வுக்கிரத்தோடு சுடுகிறதென் றநுபவ சித்தியினாலே கண்டு பிடிக்கிறோம். இந்த வாச்சரியமான விசேஷத்துக்குக் காரணமேதென்றால், சுவாலையின் கொழுந்தை யாகாசமானது மெத்த நெருக்கிறதினாலேயுஞ் சுவாலையினுடைய கதிர்க ளதிலே யொன்றித்திருக்கிறதினாலேயும் அதிகமான வுக்கிரத்தோடு சுடுமென்றதற்குச் சந்தேகமில்லை. அந்த நியாயத்தினாலே உத்தர ராச்சியத்தி லுண்டான ஸ்படிக்க வேலைக்கார ரொரு சிறு விரற் பருமத்திலே யொரு முழ நீளத்திலே யொரு செப்புக்குழல் பண்ணி முனையிலே வளைத் தந்தக் குழல் நுனியி லெழுத்தாணி முனைபோன்ற மெல்லிய துவாரமுள்ளதாய் வைத்து ஊதுகிற பக்கத்திலே விரற்பரும துவாரமிட்டு ஊதப்படுங் காற்றினாற் சுவாலையினுடைய கதிர்களெல்லா மொன்றித்திருக்கப் பண்ணி யொன்றித்திருக்கிற அந்தக் கதிர்களுடைய வுக்கிரத்தினாலே சற்று நேரத்துக்குள்ளே வளையலும் ஸ்படிகமுந் துளிதுளியாக வுருகிப்போம். ஆனால் துளி துளியாக விழுந்து பிசின்போலே யிருக்கிறபோது அதை யெடுத்ததினாலேதானே பற்பல மிருகங்களையும் பக்ஷிகள் முதலான வெவ்வேறு விநோதங்களையு முன்சொல்லப்பட்ட தொழிற்காரருண்டு பண்ணிக்கொண்டு வருகிறார்கள்.

இதைப்பார்க்க வாச்சரியமான வெவ்வேறு காரியங்களைச் சோதிசாஸ்திரிகள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அதெப்படியென்றால்; முன்சொல்லப்பட்ட மகா சாஸ்திரிகள் சூரியனுடைய கதிர்களொன்றித்திருந்தால் மகா பலமு முக்கிரமுமா யிருக்கிறதென் றறிந்தவர்களா யிருந்ததினாலே தீப்பற்றுகிற கண்ணாடிகளைச் சம்பாதித்தார்கள். இந்தக் கண்ணாடிகளுடைய வகையேதென்றால், பஞ்சலோ

கங்களை யுருக்கிக் காற்றுப்போலே வார்ப்பித்து சிவி மகா பிரயாசத்தோடே விளக்கிக் கண்ணாடி பண்ணினதற்குப் பிற்பாடு சூரியனுடைய கதிர்களதின்மேலே விழுகிறபோ தந்தக் கண்ணாடி * தாக்கடவா யிருக்கிறதினாலே யதிலே விழுந்த எல்லாக் கதிரு மையத்திலே கூடி விழுந்த கதிர் களும் கிளம்புகிற கதிர்களு மையத்துக் கெதிராக விரண் டொருசாண் ஆகாசத்திலே ய்யரக் கூடிநிற்கும். அப்ப டிப்பட்ட விடத்திலே ஈயம், இரும்பு, செம்பு, வெள்ளி, பொன் முதலிய பஞ்சலோகங்களை வைத்தால் மழைபோ லே யுருகிப்போமென் றநுபவசித்தியினாலே நாம் தானே யெண்ணப்படாத பேர்களோடுகூடக் கண்டுபிடித்தோம். அந்தச் சாஸ்திரத்தினாலே மகா பேர்போன வித்தியார்த்தி யொருவன் பூர்வகாலத்திலஉரோமாபுரி பட்டணத்தார் கப் பல்கள்மேலே யேறிச் சிரக்கூஸ் என்கிற பட்டணத்துக்கு முத்திக்கை யிடத்தக்கதாக வந்திறங்கும்போ தவர்களுடை ய கப்பல்களெல்லா முன் சொல்லப்பட்ட சாஸ்திரியான அர்க்கிமேதஸ் என்கிறவன் தீக்கண்ணாடியினாலே வேகப் பண்ணினான். இப்படிப்பட்ட காரியங்களை யிந்தச் சீமை யிலே சோதிக்கக்கூடா திருந்தாலு மதினுடைய பிரத்திய ட்சமான அடையாளங்களைச் சூரிய காந்தத்திலேயு மூக்குக் கண்ணாடியிலேயுங் காணலாம்.

இப்போ தறியவேண்டியதாவது; சில சமையங்களிலே ஆகாசங்களிற் காண்பிக்கிற முழக்கங்களையு மின்னல்களையு மிடிகளையும் அதுகளுக்கடுத்த வநேகமான வதிசய விசே ஷங்களையும் வெளிப் படுத்துவோம். அதெவ்வாறெனில்; முதலாவது "தண்ணீரிலே யுண்டான ஆவிகளையும் பூமி நனைந்திருக்கிற ஸ்தலங்களிலே யுண்டான ஈரங்களையும் சூ ரியனுனது தனதுஷ்டணத்தின் நிமித்தமாக ஆகாசத்தி லேறப் பண்ணுகிறதுபோல்" திரவியங்களை விளைவிக்கிற பருவதங்களிலே நின்றும், பஞ்சலோகங்களுள்ள மலைகளி லே நின்று மகா வுஷ்டணத்தைக் கொண்டிருக்கிற பூமியி லே நின்றும் சூரியனுனது தனதுக்கிரத்தி னிமித்தமாக வெண்ணப்படாத புகைகளையு மக்கினியுள்ள அங்கிஷங்க ளையு மாகாசத்திலேற்றுகிற தென்றறிவாயாக. இந்த மெ

* தங்கத்திக்கதாய்,

ய்யான விசேஷத்தைக் கடினமான வெய்யற்காலத்திலே
பிரத்தியட்சமாய்க் காணலாம். அவ்வண்ணமே கோடை
காலத்தி லகோரமான வெய்யலிறைக்கிறபோது எங்கே
பார்த்தாலு மிப்படிப்பட்ட புகை யாகாசத்தி லேறுகிறது.
சில சமயங்களிலே வழிப்போக்க ரிந்தப் புகைச்சலைத் தூ
ரப்பார்க்கிறபோது நல்லத்தண்ணீருள்ள குளத்தைப்போ
லேயுஞ் சலத்தினாலே நிறைந்திருக்கிற விஸ்தீரணமான ஏ
ரியைப்போலேயுங் காண்பிக்கும். அந்த ஸ்தலத்துக்கு வ
ழிப்போக்கர் மகா தீவரத்தோடே தாகந் தீர்ப்போமென்று
போய்க் கடைசியாய்த் தங்களுக்கு மோசம் வந்ததென்றும்,
வெறுங்கானல் தங்களுக்குத் தண்ணீர்போலே காணப்
பட்டதென்றுங் காண்பார்கள். இப்படிப்பட்ட அக்கினி
யுள்ள ஆவிகளு மகா வுஷ்டணத்தைக் கொண்டிருக்கிற பு
கைகளும் ஆகாசத்தி லேறினதற்குப் பிற்பாடு சிலதுக ளீர
முள்ள ஆவிகளினாலே கூட்டப்பட்ட மேகங்களுக்குள்ளே
யகப்பட் டிந்த மேகங்கள்மேலே வேறேமேகங்கள் விழுகி
றபோ துள்ளேயுண்டான அக்கினிப்புகைக ளடர்த்தியாய்ப்
போய்க் கட்டாயமாய் நெருங்கி யிருக்கிறதினாலே சிவக்கக்
காய்ந்த இரும்பினுடைய குணங்களைச் சுவிகரித்துப் ப
ழுத்த இரும்பைப் பார்க்கக் கெட்டியாய்ப்போம். இப்ப
டியே யக்கினியினுடைய வுக்கிரத்தினாலேயு மேகங்களு
டைய அசைவினாலேயும் நெருப்புள்ள அங்கிஷங்களுக்குள்
ளே யொன்றுக்கொன்று பின்னி யிருக்கிறதினாலேயு மந்தப்
புகையெல்லா மதினாலே யெரியப்படும். எரிகிற நெருப்
புக்கு மகா விஸ்தீரணமான ஸ்தலம் வேண்டி யிருக்கிற
தினாலே கட்டாயமாய் நெருங்கி யிருக்கிற இந்த நெரு
ப்பு அங்கிஷங்கள் பிரியத்தக்கதாக அத்தியந்த பலத்தோ
டேயு மதிர்ச்சியோடேயு மேகங்களைக்கிழித்துக்கொண் டங்
கங்கே விழுகிறபோது பருவதங்களைப் பிளந்து வுப்பரிகை
களை யிடித்துப் பெரிய விருக்ஷங்களை வேரோடே பிடுங்கி ய
கோரமான பயம் வருத்திவிக்கும். இதினாலே மின்னல்க
ளும் இடிகளு முழக்கங்களு மேதென் றெளிதாய்க் கண்டுபி
டிக்கலாம். மேலும் அக்கினியுள்ள புகைக ளங்கங்கே சிதறி
யிருக்கும்போ தொன்றுக்கொன்று பின்னிக்கொண் டிருக்
கிறதினாலே வெறுஞ் சுவாலை காண்பிக்கும். எரிகிறபோது
மின்னல் காண்பிக்கும். அப்போது பயங்கரமான சத்தங்

கேளாம விருப்பதென்ன? அந்தப் புகைகள் நெருக்கமில்லா
ததினாலே வெறுஞ் சுவாலை காண்பிக்கும். அந்த நியாயத்
தினாலே சாஸ்திர மறியாதவர்க ளாகாசத்திலிருந்து பிரகா
சக் கீற்றுப்போலே நக்ஷத்திரமெரிந்து விழுகிறதென்று
சொல்லுகிறதற்குக் காரணமேதென்றா லந்த வழியாக நெ
ருப்பு அங்கிஷமுள்ள புகையுண்டா யிருக்கிறபடியினாலே
யொருபக்கத்திலே துவக்கி வேறே பக்கத்திலே முடியும். ஆ
னலிதிலே கனமான வஸ்து சயமிருக்கிறது. அவ்வண்ணமே
யந்தச் சுவாலைக்கீற்று நெருப்பின் சுபாவத்தின்படியே யுய
ரவேறுமற் கீழே விழுகிறதென்ன? அந்த அக்கினியுள்ள
புகையானது நெருப்பினுடைய அங்கிஷங்களினாலே பரிபூ
ரணபூர்த்தியா யிருக்கிறதினாலே நெருப்பு நெருப்போ
டே சேர்ந்திருக்கிறதற்குச் சுபாவமாய் விழும். இதைப்
பிரத்தியக்ஷமாய்க் கண்களாற் காணலாம். அதெப்படி
யென்றா லிரண்டு தீபங்களையேற்றி யொன்றைச் சற்றே யு
யரவைத்து வேறொன்றை யதின்கீழே பிடித்து கீழே யி
ருக்கிற தீபத்தை யூதியணைத்துப் போட்டவுடனே யக்கி
னியினாலே யடர்த்தியான புகைகிளம்பும். அந்தப்புகை
யை யுடனேதானே யந்த மேலான சுவாலைக்குச் சரியாகக்
கீழேபிடித்தா லந்தப் புகைச்சல் வழியாக மேலே யிருக்கி
ற தீபத்தின் சுவாலை யிறங்கிக் கீழேயிருக்கிற வத்தியைக்
கொளுத்திப் பிரகாசிப்பிக்கும். சற்றுபொறுத்து புகையி
ருந்தாலு மதிலே நெருப்பாங்கிஷங்க ளில்லாததினாலே பற்
றப்போகிறதில்லை. இதன்றியே இடியிடிக்கிறபோது பய
ங்கரமான சத்த மெடுக்கக் காரணமென்ன? இடியானது
மேகங்களைக் கிழிக்கிறபோ தத்தியந்த பலவந்தத்தோடே
யந்த மேகங்களை யிடித் ததினாலே யந்த மேகங்கள் மகா ப
லத்தோடே யாகாசத்தை விலக்கித் தள்ளிப்போடுகிறதி
னா லவசியமாய்ப் பயங்கரமான சத்தஞ் சத்திக்கவேணும்.
சில சமயங்களிலே யிடி விழாதிருந்தாலு மேகங்களொன்
றுக்கொன்று மகா வலுமையோடு மோதுகிறதினாலே முழ
க்கம் பிறக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. க்டைசியிலே
யிடியினுடைய சுபாவமேதென்றால், முன் சொல்லப்பட்ட
அக்கினி யங்கிஷங்களைக் கொண்டிருக்கிற புகையானது க
ட்டாயமாய் நெருங்கப்பட்டுக் காய்ந்த விரும்பினுடைய கு
ணங்களைச் சுவிகரிக்கும்போது இடியாய்ப்போம். இதெல்

லாமொரு வுவமையினுலே நன்றாய்த் தெரியப் பண்ணு வோம். அதெப்படியென்றால்; பீரங்கியிலே மருந்தைக் கெட்டித்து மகா பலத்தோடே நன்றாய்த் தாணித்தபிற்பா டு பெரியகுண்டைப்போட்டு சின்ன துவாரத்திலேயும் நெ ருப்பு கொளுத்தத் தக்கதாக மருந்துபோட்டுச் சுடுகிறபோ து மின்னலு முழக்கமு மிடியு மிந்த மூன்று விசேஷங்களை யுங் காணலாம். அதேதென்றால்; சின்ன துவாரத்திலிருக் கிற மருந்து பற்றுகிறபோது மின்னுத லடையாளம், கேட் கப்படுகிற சத்த முழக்கத்தினுடைய வடையாளம், குண் டு இடியினுடைய வடையாளமாம்.

இப்போது அக்கினி நிமித்தமாக வருகிற பூமி யதிர்ச் சியை வெளிப்படுத்துவோம். அதெப்படி யென்றால்; பூ மியிலிருந் தாகாயத்தி லநேக நெருப்பாங்கிஷங்க ளேறுகிற தென்று சொன்னோமே. இப்படிப்பட்ட நெருப்பாங்கி ஷங்களைக் கொண்டிருக்கிற புகைகள் பூமிக்குள்ளே யுண் டான அநேகந் தாரைகளுக்குள்ளே யகப்பட்டுப் புறப்படு கிறதற்கு அவகாசமில்லாமற்போனு லந்த அக்கினி யங்கி ஷங்களின் கூட்டத்துக்குப் புதிதாய் வேறே யநேக மக் கினி யங்கிஷங்களைக் கொண்டிருக்கிற ஆவிகளும் புகைக ளும் வருகிறதினுலேயு மதுகளெல்லாங் கட்டாயத்தினுலே யடர்த்தியாய் நெருங்கிப்போகிறதினுலேயும் புறப்படுகிற தற்குப் பலவந்தம் பண்ணும்போது பூமியிலே யதிர்ச்சி பிறக்கும். அந்த நியாயத்தினுலே சில ஸ்தலங்களிலே மாத் திர மதிர்ச்சியா யிருக்குமல்லாம லெங்கு மிருக்கமாட்டாது. பூமியதிர்ச்சி யிருக்கிறதற்குச் சில அடையாளங்களுண்டு. அதெப்படியென்றால்: முதலாவது.—கிணறுகளிலே யுண் டான தணணீர் வேறே காரண மில்லாமற் குழம்பாய்க் கலங்கித் துர்க்கந்தம் வீசும். 2-வது.—கேணித் தண்ணீர் கொதித்து மேலே யேறும். 3-வது.—காற்றில்லாமற் சமு த்திரம் பொங்கும். 4-வது.—கோடைகாலத்தில் மகா கு ளிர் பிறக்கும். இதன்றியே பூமிக்குள்ளேயிந்த அக்கினி ஆவிகளும் நெருப்புப் புகைகளு மெத்த வுண்டானுல் பூமி யதிர்ச்சி யநேகநாளிருக்கும். பூமியதிர்ச்சியினுலே மதில் களு முப்பரிகைகளு முதலாய் நடுங்குகிறது. சில சமையங் களிற் பூமி யிரண்டாய்ப் பிளந்துபோய்ப் பட்டணங்களையு

ழுப்பரிகைகளையும் விழுத்தாட்டுகின்றது. சில சமையங்களிலே மகா அதிர்ச்சி யுண்டானு லாறுகள் முதலாய் வேறே வழியிட்டுக்கொண்டு வேறே சீமைகளிலே போம். கடைசியிலே பூமியிலுண்டான அக்கினிப் புகைகளும் நெருப்பாவிகளு மெத்த விருக்கும்போது ஆகாசத்திலேயேறி வால் நக்ஷத்திரத்தை யுண்டாக்குகிறதற் குதவு மென்று சில சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனு லிந்தப் பக்ஷத்தை யாக்ஷேபிக்கிறதற் கநேக நியாயங்களுண்டு. வேறே சாஸ்திரிகளோ வென்றால், சூரியனானது எரிகிற தங்கமென்று சொல்லி இப்படிப்பட்ட சூரியன் றனது ஸ்மையத்திலே யத்தியந்த பலத்தோடே சுற்றிக்கொண்டு வருகிறபோது மதினுடைய பங்கு பிரிந்து போகிறபோதும் வால் நக்ஷத்திர மிருக்குமென்று விசாரித்தார்கள். இதனாலே நக்ஷத்திரங்கள் போகிற திக்குகளெல்லாம் நன்றாய் வெளிப்படுத்துகிறார்கள். கடைசியிலே வேறே சாஸ்திரிகள் பராபர வஸ்துவானவர் லோகத்தை யுண்டாக்குகிறபோது விசேஷமான சோதியை யுண்டாக்கியதிலே யநேகம் வால் நக்ஷத்திரங்களைப் பற்பல விதமாக வைத்து அதிலே யந்த வால நக்ஷத்திரங்கள் சுற்றிக்கொண்டு வருகிறபோது மேற்பக்கத்திலே யிருந்தால் மனுஷருக்குக் காணப்படாது. கீழ்ப்பக்கத்திலே யிருந்தால மனுஷர் காணலா மென்கிறார்கள். இப்படிப்பட்ட வால் நக்ஷத்திரத்தைச் சோதிசாஸ்திரிக ளெத்தனங்களினாலே மூன்று ராத்திரி பார்த்தா லெப்போது துவக்கி யெப்போது முடியுமென்று சொல்லுவார்கள். பூருவகாலத்திலே யுத்தராதிராச்சியத்தி லிருக்கின்ற விராயருடைய சமுகத்தி லநேகஞ் சாஸ்திரிகள் கூடியிருக்கும்போ தவர்களி லொருவன் நெருப்பினுடைய நிறையும் புகையினுடைய நிறையும் பார்க்கலாமோ வென்று கேட்கும்போ தெல்லாரும் பார்க்கக்கூடாதென்று சங்கேதம் பண்ணினார்கள். அந்தச் சங்கேத வார்த்தையைக் கேட்ட சாஸ்திரியானவன்றானே நானதைச் செய்கிறே னென்று சொன்னதுந் தவிர கிரியையினு லொப்புவித்தான். அதெப்படியென்று லநேகம் விறகுகளை யழைப்பித் ததிலே 500 பலம் நிறுத்துக்கொண்டு சுத்தமுள்ள வொரு ஸ்தலத்தி லெரியவிட்டு முடிந்த பிற்பாடு கண்ட சாம்பலை நிறுத்துப்பார்த்து 50 பலமாக்

திர மிருக்கிறதென்று கண்டு மற்ற 450 பலமும் நெருப்பி லேயும் புகையிலேயு மிருந்ததென்று திருஷ்டாந்தமாக வொப்புவித்தான். இப்போது நெருப்புக்குச் சம்பந்தமா யிருக்கிற சில விசேஷங்களை யின்னமும் வெளிப்படுத்து வோம். அதெப்படியென்றால்; அக்கினியுள்ள அங்கிஷங் களி னசைவினாலே யானாலும் அக்கினி பொருந்தியிருக்கிற அங்கிஷங்களி னசைவினாலேயானாலு முஷ்டணமானது பிறக்கிறதென் றநுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். அதெப்படியென்றால்; முதலாவது குளுந்திருக்கிற விரண்டு கையு மொன்றாய்த் தேய்த்தா லுஷ்டணந் தப்பாமற் பிறக் கும். 2-வது.—அநேகம்விசை கல்லோடேகல் லடிபடுகி றதினாலே அக்கினிப்பொறி கிளம்பும். 3-வது.—மூங்கி லுஞ் சில மரங்களு மொன்றோடொன் றுரைபடுவதினாலே நெருப்பு புறப்பட்டுப் பத்திக்கொள்ளும். 4-வது.—வெந்த சுண்ணாம்புக் கல்லிலே தண்ணீர் வார்த்தால் கடினமான வுஷ்டணம் புறப்படும். குளுந்த தண்ணீரைக் கொதிக்கப் பண்ணும். அவ்வண்ணமே தண்ணீரானது அக்கினி யங் கிஷங்களை மறைத்துக்கொண்டிருக்கிற சுண்ணாம்பி னங்கி ஷங்களைத் தண்ணீர் பட்டவுடனே விலகப்பண்ணிக் கரை த்து அக்கினியங்கிஷம் புறப்பட விடங் கொடுத் ததி னாலே யந்தப் பொறிகள் கிளம்பித் தனது சீக்கிர அசைவி னாலே தண்ணீரைப் பலத்தோ டசைத்துக் கொதிக்கப் பண்ணும். 5-வது.—உத்தர ராச்சியத்தி லிருக்கிற குலாரி வண்டிகளுடைய விரண் டுருளைகளுக்கும் நடுவிலே யொரு விட்டந் தைத்திருக்கிறது, அந்த விட்ட முருளையினு டைய தீவர அசைவினாலே யுஷ்டணந் திரளாய்ப் புறப்ப டும். அந்த வுக்கிரத்துக்கான கொழுப்புகளைப் பூசாமற் போனால் தப்பாமல் வெந்துபோம். 6-வது.—இரும்பை அரத்தினாலே யிராவினா லிரும்புக்கு மகா வுஷ்டணம் பிறக் கும். மற்றக்காரியங்களிலேயு மிப்படியே யோசிக்கக்கடவ து. ஆனா லிதிலே யொரு சந்தேகம் வரலாம். அதெப்படி யென்றால்; சுவாலையினுடைய அக்கினி யணுக்கள் மகா தீவ ரத்தோ டசைந்திருக்கிறதினாலே சகலமான வஸ்துக்களைப் பார்க்க வதிகமாய்ச் சுடுகிறதற்குப் பலமாயிருக்கிறதென்று காண்பிக்கிறது. ஆனா லிரும்பானது நெருப்பிலே போட் டால் சிவக்கிறதற்கு முன்னே தானே தொட்டாலுஞ் சுவா

லையைப்பார்க்க வதிகமாய்ச் சுடுகிறதென் றநுபவ சித்தியி ஞலே கண்டுபிடிக்கிறோம். இந்தச் சந்தேகத்துக்கு நிவா ரண மேதென்றால்: சுவாலையினுடைய அங்கிஷங்க ளெளி தாய்ப் பிரிகிறதினாலேயும், எதிராக் நிற்கமாட்டாததினா லேயுஞ் சுடுகிறதற்குப் பலன் குறைந்துபோகிறது. இரும் போவென்றால, நெருப்பி னங்கிஷங்களைச் சுவிகரித்ததற் குப் பிற்பா டந்த அங்கிஷங்கள் பிரிகிறது அரிமையாயி ருக்கிறதினாலேயும், இரும்பினுடைய அங்கிஷங்க ளடர்த் தியா யிருக்கிறதினாலேயுங் கை யதிலே பட்டாற் கடின மாய்ச் சுடும். கடைசியிலே ஓர் விளக்கின் சுவாலையாகிய தீபத்தை விரல்களால் அணைத்துப்போடுகிறபோது அது விரலிலே சுடாமலிருக்கிற தென்னவென்றால், சுவாலையி னுடைய அஸ்திவாரம் எண்ணெய்யில்லாததினாலேயும் அதினுடைய அங்கிஷங்கள் தீவரமா யசைவாடிக்கொண்டி ருக்கிறதினாலேயுஞ் சற்றுநேரத்துக்குள்ளே யாகாயத்திற் சிதறிப்போம். இந்த விசேஷத்தை யோ ருவமையினாலே வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால், சுவாலையி னுடைய புகைதானே சற்றுநேரத்துக்குள்ளே காணமற் போகிற தென்ன? அதுவு மிதுவு மாகாசத்தினுடைய அங் கிஷங்களுக்குள்ளே கலந்து காணமற்போகின்றது.

## ௭-ம். அதிகாரம்.

### ஆகாச விவரம்.

நாலு பூதியங்களுக்குள்ளே யாகாசமானது மகா விஸ் தீரணமா யிருக்கிறதென் றநுபவ சித்தியினாலே கண்டு பிடிக்கிறோம். அவ்வண்ணமே சர்வலோகமும் பூமிதுவக்கி நக்ஷத்திர மண்டலமட்டும் ஆகாசத்திலே நிறைந்திருக் கின்றது. இப்படிப்பட்ட விஸ்தீரணத்தை யறியவேணுமா னல், பூமிக்கும் நக்ஷத்திர மண்டலத்துக்கும் 12,60,00,000 பன்னிரண்டுகோடியே அறுபதுலக்ஷகாததூரம். இதுவு மையக் கம்பியினுடைய பாதியானபடியினாலே முழுக்கம்பி யானது 25,20,00,000 இருபத்தைந்துகோடியே இருபது லக்ஷகாததூரம். எந்தெந்த வளையத்தின் மையக்கம்பியின் பாதியளவு அகப்பட்டதோ அந்தந்த வளையமெல்லா மறி

யலாம். அதெப்படியென்றால், முழுமை யக்கம்பியை யேழு பங்காய்ப் பிரித்துக் கண்டதி லொருபங்கு புறம்பாய்வைத்து முன் சொல்லப்பட்ட முழுக்கம்பியை மூன்றைக்கொண்டு பெருக்கி யதனோடு முன் புறம்பாய்வைத்த ஏழி லொரு பங்கையுங் கூடக்கூட்டிக் கண்டது முழுவளையம். இந்தப்பிரகாரமாக ஆகாசத்தி லெத்தனை யணுக்களிருக்க லாமென் றெளிதாய்க் கண்டுபிடிக்கலாம். ஆனாலணுக்க ளினாலே யாகாசமானது கூட்டப்பட்டதா யிருந்தாலு மூன்றுவகையாய்ப் பிரிந்துபோகிறதென் றறிவாயாக. முந்தமுந்த பூமியைச் சூழ்ந்துகொண்டிருக்கிற ஆகாயமானது அநேகமாவிகளோடேயும் புகைகளோடேயும் ஈரமுள்ள அங்கிஷங்களோடேயும் அக்கினியுள்ள அங்கிஷங்களோடேயுங் கலந்திருக்கிறதென் றநுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். இரண்டா மந்தஸ்திலுண்டான ஆகாசமோவென்றால் முன்சொல்லப்பட்ட ஆவிகள் புகைகளோடு திரளாய்க் கலக்காதேபோனாலுஞ் சிலதுக ளிருக்குதென்கிற பற்பல அடையாளங்களைக் காணலாம். கடைசியிலே மூன்று மந்தஸ்திலுண்டான ஆகாயமானது ஆவிகள் புகைச்சல்கள் முதலானதுகளுடைய கலப்பில்லாமல் வெறு மாகாயம் வெறும் வெளியாயிருந்து கண்களுக்குக் காண்பிக்கிற அங்கிஷங்களைப்பார்க்க மகா சின்னதா யிருக்கிற அங்கிஷங்களினாலே கூட்டப்பட்டதா யிருக்கிறதென்று மனதிற் கெட்டியாக ஸ்தாபிக்கவேண்டியது. அவ்வணணமே: மச்சங்கள் சமுத்திரத்திலே நீந்தித் திரிகிறப்போலே யேழு கிரகங்க ளந்த ஆகாயத்தின் வெளியிலே நடக்க வேண்டி யிருக்கும்போது கிரமத்தோடு கூடின நடையைச் சுமுத்திரையாகச் செலுத்துகிறதற்கு ஆகாயமானது முன் சொல்லப்பட்ட குணங்களைக் கொண்டிருக்க வேணுமென்பது நிச்சயமாகும். இதல்லாமல் நக்ஷத்திரங்களுடைய காந்தியுங் கிரகங்களுடைய பிரகாசமும் அத்தியந்தத் தீவரத்தோடே கண்ணுக் ககப்படுகிறதற் கிப்படிப்பட்ட வழி யவசியமாய் வேண்டியிருக்கிறது. இந்தப் பிரகாரமாகச் சூரியனுக்கும் பூமிக்கும் 90,00,000 தொண்ணூறு லக்ஷகாத தூரத்துக் கதிகமா யிருந்தாலுஞ் சூரிய னுதயம்பண்ணின அந்தச் சிணத்திலேதானே கண்ணுக்குக் காண்பிக்கிறதே, வழியிலே விக்கினமுண்டாயிருந்தால் கண்ணுக்குக்காண்பிக்

கிற தெப்படி? அதிலேயும் பராபர வஸ்துவினுடைய மட்டில்லாத விமரிசையையுங் கிருபாகடாக்ஷத்தையுந் துதிக்கிறதற் கநேக காரணங்களுண்டு. அவ்வண்ணமே ஆகாயத்தை வேறே விதமாகக் கட்டளை யிட்டாராகில் ஒன்றில் கிரகங்களை வேறே ஸ்தலத்திலே ஸ்தாபித்தால் தப்பில்லாம லோகமெல்லாங் கெட்டுப்போம். ஆனால் சர்வேஸ்வரனானவர் தம்முடைய திவ்விய சாஸ்திரத்தினாலே யாகாயத்தையுங் கோட்களையு மாச்சரியமான கிரமத்தோடே கட்டளை யிட்டதினாற் சூரியனுடைய பிரகாசமும் உஷ்டணமுங் கிரகங்களுடைய நற்குணங்களும்; நக்ஷத்திரங்களுடைய கிர்க்க மனமும் ஆகாயத்தின் வழியாகப் பூமிமேலே யெளிதாய்வந்து பிரபஞ்சத்தி லுண்டான வஸ்துக்களை யெல்லாம் பிழைப்பிக்கின்றது. ஆனால் பூமியை ஒட்டியிருக்கிற ஆகாயமானது அநேக மாவிகளோடேயும் புகையோடேயும் பற்பல குணங்களைக் கொண்டிருக்கிற அங்கிஷங்களோடேயுங் கலந்திருப்பானேன்? இதினாலே பராபர வஸ்துவினுடைய அளவறுக்கப்படாத கிருபாகடாக்ஷத்தை விளங்கப்பண்ணுகின்றது. அதெப்படியென்றால், மனுஷனுடைய விருதயமானது அக்கினி பொருந்தியிருக்கிற அங்கிஷங்களுடைத்தான விரத்தத்தினா லெப்போது மசையப்பட்டிருக்கிறதினாலே யதினின்று புறப்படுகிற வுஷ்டணந் தணியாமற்போனா லவசியமாய்ச் செத்துப்போவான். இதற்காக ஆச்சரியமான வோருபாயத்தைச் சர்வத்துக்குங் கர்த்தராயிருக்கிற சர்வேசுரனானவர் செய்திருக்கின்றார். அதெப்படியென்றால், மனிதனானவன் சுவாசம் வாங்குகிறபோது அதினாலே யிருதயத்தில் நின்று புறப்படாத தன்னுஷ்டணத்தின் மிகுதியை யமர்த்தப்படுமென் றங்கிகரிக்கக் கடவதாகும். ஆனால் பூமிக்கருகேயிருக்கிற கலப்புள்ள ஆகாயமானதுமாத்திரஞ் சுவாசம் விடுகிறதற்கும் வாங்குகிறதற்கு முதவுமொழிய மற்றப்படியல்ல. இந்த நியாயத்தினாலே யுயர்ந்த பருவதங்கள் மேலே யிருக்கிற சனங்கள் பெருமூச்சு வாங்குகிறதற்கும் விடுகிறதற்கு மகா வருமையாயிருக்கும். இந்த நியாயத்தினாலேதானே சாஸ்திரிகள் ஸ்படிகத்தினா லொரு எத்தனம்பண்ணி யதிலே யொரு பக்ஷியைவைத்து அந்த ஸ்படிக வெத்தனத்தின்மே லுண்டான கலப்புள்ள ஆகாயத்தைச் சூத்திரங்களைக்கொண்டு

மேலே வாங்கினால் தீவரமாய்ப் பக்ஷி செத்துப்போம். ஆனால சாகிறதற்கு முன்னே மறுபடி கலப்புள்ள ஆகாயத்துக்கு வழிதிறந்தா லுடனே பிழைக்கும். இந்தக் கலப்புள்ள ஆகாயத்தி னிமித்தமாக ஆச்சரியமான விசேஷத்துக்குக் காரணத்தைச் சொல்லலாம். அதெப்படியென்றால், சில சமையங்களிலே சூரிய னுதயம்பண்ணும்போது சிகப்பாயும் சில சமையங்களிலே வெண்மையாயுஞ் சில சமையங்களிலே நீலமாயும் இப்படியே பற்பல சமையங்களிலே வெவ்வேறு விதமாகச் சூரியன் காண்பிக்கிறது. இதெல்லாம் பூமியினருகே யுண்டான ஆகாயம் பற்பல வகையுள்ள அங்கிஷங்களோடே கலந்திருக்கிறதினாலே வெவ்வேற்ற விதமாய்க் காண்பிக்கிறதற்குக் காரணமாயிருக்கின்றது. இந்த மேரையாகப் புகை மெத்தக் கலந்திருக்குஞ் சமையத்திற் சூரியன் சிகப்பாய்க் காண்பிக்கும். கனமான கலப்பில்லாத சமையத்திலே மகா காந்தியாயிருக்கும் ஈரமுள்ள ஆவிகளோ டாகாயம் வெகுவாய்க் கலந்திருந்தா லெப்போது சூரியன் வெளிறாய்க் காண்பிக்கும். இந்தப் பிரகாரமாக மற்ற வர்ண மேரையிலே யோசிக்கக் கடவாய். இதெல்லா மோருவமையினாலே வெளிப்படுத்துவோம். அதேதென்றால், பச்சை வர்ணத்தைக் கொண்டிருக்கிற மூக்குக் கண்ணாடியினாலே பற்பல விஷயங்களைப் பார்க்கும்போ தந்த வஸ்துவினுடைய பிரதிபிம்பம் பச்சைக் கண்ணாடிக்குள்ளே பிரவேசிப்பதினாலே கண்களுக்குச் சுபாவநிறத்தை விட்டுப் பச்சையாகத் தோன்றுகிறாப்போலே சுபாவமாய்ச் சூரியன் மகா காந்தியுமாய்ப் பிரகாசமுமா யிருந்தாலு மதினுடைய கதிர்கள் கலப்புள்ள அங்கிஷங்களைக் கொண்டிருக்கிற ஆகாயத்துக்குள்ளே பிரவேசித்ததினாலே சுபாவத்தைத் தவிழ்த்து வெவ்வேறே விதமாய்க் காண்பிக்கும். இதற்கப்பா லறியவேண்டினதாவது. பூமிக்குக் கிட்டியிருக்கிற ஆகாயமானது பற்பல ஆவிகளினாலேயும் புகைகளினாலேயுங் கலந்திருக்கிறபடியினாலே தண்ணீர்மேலேயும் பூமிமேலேயும் பரவி நின்றுகொண்டு கனத்தோ டமுழ்ந்துகிறாப்போலே காண்பிக்கும். ஆகையால் ஆகாயங் கனக்கிறதென்று பிரத்தியக்ஷமா யொப்புவிக்கலாம். அதெப்படியென்றால்; ஆட்டினுடைய சிறுநீர்ப் பையை யெடுத்து நன்றாய்ச் சுத்தம் பண்ணி நிறுத்து,

இத்தனை பலமென்று பார்த்து அதை யூதின பிற்பாடு ஆகாயமுள்ளே நிறைந்தபடியினாலே யதிகமான கனமுண்டா யிருக்கும். ஆதலாற் சுபாவமா யாகாயத்துக்குக் கனமுண்டென்று சொல்லவேண்டும். ஆனபடியினாலே சமுத்திரத்துக்குள்ளே நீந்தித் திரிகிற மக்ஷங்களைத் தண்ணீரானது சுமக்கிறாப்போலே யாகாயத்திற் பறக்கிற பட்சிகளை யந்த ஆகாயந்தானே சுமந்துக்கொண் டிருக்கிறதென்று நிச்சயிக்க வேண்டியது. இப்படிப்பட்ட கனம் மனுஷருடைய சரீரத்துக்குந் காண்பியா திருந்தாலுங் கனமில்லையென்று நிதானிக்கவேண்டாம். அதேதென்றாற் பாலவயதிலே துவக்கிப் பழகியிருக்கிற படியினாலே சரீரத்தினுடைய அங்கிஷங்களெல்லாஞ் சரியாகவிருக்கிறதினாலேயுங் கனமாயிருந்தாலும் பாரம்போலே காண்பியாது. இந்த விரண்டாம் நியாயத்தினாலே யாதொருவ னாழமுள்ள ஆற்றுக்குள்ளே யமுழ்ந்தி யிருந்தாலுஞ் சரீரத்தினுடைய அவயவங்களெல்லாஞ் சரியாகச் சுமக்கிறதினாலே கனங் காண்பியாது. இதிலே யறியவேண்டினது பூமிக்குக் கிட்டின ஆகாய மெத்தக்கனமா யிருக்கிறது. உயர யேற வேற லகுவுள்ளதா யிருக்கும். இதெல்லாங் கண்டுபிடிக்கிறதற்கோருவமை சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால், ஆட்டி னுரோமங்களினா லொரு பருவத முண்டென்று விசாரித்துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட மலையினுடைய அடிவாரத்திலிருக்கிற மயிர்களதிகமாய் நெருங்கி யமிழ்த்தப்பட்டிருக்கும். உயரப் போகப்போக நெருக்கமிலலா திருப்பதுபோலே ஆகாயத்தின் கனத்தினுடைய விஷயத்திலேயும் அப்படியே யோசிக்கக்கடவாது. அந்த நியாயத்தினா லொருவிரற் பிரமாணமுள்ள ஸ்படிகக் குழலிலே யொருபுறமடைத்திருக்க ஒருபக்கந் திறந்திருக்க அந்தத் திறந்த பக்கத்தி லிரசத்தை நிறைய வார்த்துப் பின்னை யோர் கிண்ணியிலே முக்காற் கிண்ணி யிரசம்வார்த்து அந்தக் குழலிலேயிருக்கிற விரசத்தை யெடுத்துத் திறந்த பக்கத்திலே விரலாலே மூடிக்கொண்டு தலைகீழாய்க் கவிழ்த்தாப்போலே கிண்ணியிலேவிட்டு அந்தக்குழல் கிண்ணி யிரசத்திலே பட்டபிற்பாடு விரலை வாங்கின லப்போதிந்தக் குழலிலேயிருக்கிற விரசமெல்லா மதிலே விழாமற் குழலிலே யொருபங்கு நிற்கும். அவ்வண்ணமே கிண்ணியிலிருக்கிற

விரசத்தின்மேலே யாகாயம் நெருங்கியிருக்கிறப்படியினாலே குழலிலிருக்கிற பங்கு விழவொட்டாது. அந்த நியாயத்தினாலேதானே சிறுபிள்ளைகள் பீச்சாங்குழலென்னும் விளையாடுகிற குழலிலே சிலையினாலே சுற்றப்பட்டவொரு கழியினாலே தண்ணீரை யேற்றுகிறதும் விடுகிறதுமாய் விளையாடுகிறார்களல்லோ அதிலே தண்ணீ ரேறுகிறதற்குக் காரணத்தைச் சொல்லலாம். அதேதென்றால், ஆகாயமானது தண்ணீரை நெருக்கிறதினாலே விக்கினமில்லாத ஸ்தலத்திலே யேறும். இந்தப்பிரகாரமாகப் பெரிய விராசாக்களுடைய தோட்டங்களிலே யெங்குந் தண்ணீரை யிறைக்கிறதற்கு மகா வுச்சிதமான வெத்தனத்தை யுண்டாக்குவார்கள். அந்தப் பெரிய குழலைக் கிணற்றிலே வைத்துக்கொண்டு கிணற்றுத்தண்ணீரை 40 அடியுயர மேறப்பண்ணுவார்கள். அதேதென்றால், தண்ணீர்மேலே யுண்டான ஆகாய மதைக் கெட்டியாக அமிழ்த்துகிறதினாலே யெளிதான வழியுள்ள குழலுக்குள்ளே யேறுகின்றது. ஆனாலிதிலே கனமான வதிசயங் காண்பிக்கிறது. அவ்வண்ணமே குழல்களுக்குள்ளே யிருந் தேறுகிற தண்ணீர் 40 அடிமாத்திர மேறுகிறதென்று மதிகமா யேறாமலே னவ்வளவிலே நிற்கிறதென்றால் இந்த விசேஷத்தினால் ஆகாயத்தினுடையகன மெம்மாத்திர முண்டென் றெப்புவிக்கிறது. அதெப்படியென்றால், ஆகாயத்தினுடைய கனந் தண்ணீரேறுகிறதற்குக் காரணமா யிருக்கும்போது தண்ணீ ரதிகமா யேறமாட்டாத சமையத்தி லவ்வளவுமாத்திர மாகாயத்துக்குப் பலமிருந்தது. அப்பா லேற்றிவிக்கிறதற்குப் பலமில்லையென்று தப்பாதடையாளமா யிருக்கிறது. இதெல்லாமிப்படி யிருக்கையில் சகல வஸ்துக்களுடைய கனங்களைத் திராசிலே தூக்கி நிறுத்துப்பார்க்கிறப்போலே யிதினாலே ஆகாயத்தினுடைய கனமறியலாம். இதிலேயுமநேகம்விசை சோதனை பார்த்ததற்குப் பிற்பாடு ஆகாயத்தைப் பார்க்கச் சலம் ஆயிரம்விசை கனமாயிருக்கிறதென்றும், ஆகாயந் தண்ணீரைப்பார்க்க ஆயிரம்விசை லகுவாயிருக்குறதென்றுஞ் சாஸ்திரிகள் சங்கேதம் பண்ணினார்கள். ஆனபடியினாலே யகலத்திலேயும், நிகளத்திலேயும் ஓரடி சதிரமுள்ள வொருபாத்திரத்தை யுண்டாக்கி யதற்கு யரம் 32 அடிவைத்து அதிலே தண்ணீர் நிறையவார்த்

து அந்தத்தண்ணீருடைய கனம் பார்க்கும்போது 26,880 இருபத்தாறாயிரத் தெண்ணூற்றெண்பது பலங் கண்டதென் றநேகந்தரஞ் சோதனைபார்த் திருக்கின்றது. ஆனபடியினலே 40 அடி யுயரத்திற்குமேலே தண்ணீரேற மாட்டா திருக்கும்போது முன்சொன்ன பிரமாணமாகச் சதிரத் தூண்போலே பூமியிலே துவக்கி லகுவான ஆகாயமட்டு முண்டாயிருந்தா லந்தத் தூணுக்குள்ளே யடங்கின ஆகாயம் 26,099 இருபத்தாறாயிரத்தித் தொண்ணூத்தொன்பது பலங் கனமாயிருக்கும். கடைசியிலே ஆகாயமானது போகப்போக லகுவா யிருக்குமென் றெப்புவிக்கத்தக்கதாக அறியத்தக்கதாவது: முன் சொல்லப்பட்ட இரசக்கிண்ணியுங் குழலு மலையினுடைய அடிவாரத்தி லிருக்கும்போது குழலிலே யிரச மதிகமாயேறும். மலையின் மேலாக விருக்கும்போது குழலிலே கொஞ்சமாயிருக்கும். அவ்வண்ணமே பருவதத்தினடியிலே யாகாயமெத்த விருக்கிறபடியினலே யிரச மதிகமா யேறப்பண்ணும். மலை மேலாக ஆகாயத்துக் கத்தனை கனமில்லாததினலே யத்தனை யிரசமேறமாட்டாது.

இப்போது ஆகாயத்திலே ஆகாய அசைவினல் வீசுகிற காற்றினுடைய சுபாவத்தையுங் காரணங்களையுஞ் சங்க்ஷேபமாகச் சர்வேஸ்வரனுடைய கிருபையினலே வெளிப்படுத்துவோம். இந்த விஷயத்திலே முக்கியமாய் அறியவேண்டியதாவது: ஆகாயஞ் சும்மாயிருந்தால் வெறு மாகாயமென்று சொல்லவேணும். ஆகாய மசையப்பட்டால் காற்றென்று சொல்லப்படும். ஆனலிப்படியே யாகாய மசைகிறதற்குக் காரணத்தைச் சொல்லுகிறதிலே சாஸ்திரிகள் மகா பிரயாசைப்பட்டார்கள். அதெவ்வாறெனில் சிலபேர்கள் பூமியிலிருந் தாகாயத்திலேறின ஆவிகளும் புகைகளுஞ் சூரியனுடைய வுஷ்டணத்தினலே மிகவும் விலாசமாக வுப்புகிறபோது அங்கங்கே யிருக்கிற ஆகாயங்களை யசைத்துக் காற்று புறப்படப் பண்ணுமென்றும் வேறே சிலர் சூரியனனது தானே தனதுஷ்ணத்தினலே நெருக்கமா யிருக்கிற ஆகாயத்தினுடைய அங்கிஷங்களைப் பிரியப்பண்ணி விலாசமாய்ப் பரம்பப் பண்ணுவதினலே யாகாயத்தை யங்கங்கே வீசப்பண்ணுகிறதென்று

ம் வேறு சாஸ்திரிக ளுயர்ந்த ஆகாயத்திலிருக்கிற பெரிய மேகங்கள் தாழவிருக்கிற மேகங்கள்மேலே விழுகிறதினால் மிகுதியான வாய்வு பிறக்கப் பண்ணுகிறதென்றும் வேறே சாஸ்திரிகளோவென்றால் சந்திர சூரிய கிரக நக்ஷத்திரங்களுடைய நடையினாலே யாகாயத்தை மகா தீவரத்தோடேயும் பலத்தோடேயு மசைக்கிறதினாற் காற்றுண்டாமென்றும் எழுதிவைத்தார்கள். இப்படிப்பட்ட மகாத்துமாக்கள் தங்களுடைய பக்ஷத்தை யொப்புவிக்கத்தக்கதாக நிச்சயமான விசேஷத்தைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் சம சக்கரத்தின் கீழே யுண்டான பெரிய சமுத்திரத்தின்மேலே கிழக்கேயிருந் தெப்போது மேற்கே காற்று வீசுகிறது. பூமிமேலே வேறே காற்று வீசுகிறதுக்குக் காரணமேதென்று லங்கங்கே யுயர்ந்த பருவதங்கள் குறுக்கே யிருக்கிறதினாலே காற்று வெவ்வேறே விதமாய் வீசுகிறதற்குக் காரணமா யிருக்கும். இதல்லாமல் ஆவிகளும் புகைகளும் வெவ்வேறே விதமாக உப்பிப்போகிறதினாலேயு மாகாயத்தினுடைய மேலந்தஸ்திலிருந்து தள்ளுண்டு போகிறதினாலேயும் பற்பல விதமாய்க் காற்றுவீசும். இதல்லாமற் சூரியனானது. உத்தர தக்ஷண அயனத்தி னிமித்தமாக விந்தச் சிந்து ராச்சியத்திலே வீசுகிற விரண்டு பிரதான காற்றுகளுக்கும் பிரதான காரணமா யிருக்கிறதென்றறிவீர்களாக. இந்தச் சீமைகளில் மேற்காற்று மகா வுஷ்டணமா யிருக்கிறது. கீழ்காற்று மகா குளுமையா யிருக்கும். இதற்குக் காரணமேதென்றால் வடமேற்கில வெகு ராச்சியங்களுண்டா யிருக்கிறபடியால் சூரியனுடைய வுஷ்ணத்தினாலே பூமிக்கு அனலதிகமா யிருக்கிறபடியினாலே யந்தவழியி லேறுகிற காற்று வுஷ்ணத்தைச் சுவிகரிக்கும். கீழ்காற்று கிட்டின சமுத்திரத்தின் தண்ணீர்மேலே வருகிறதினாற் குளுந்திருக்கும். ஆனால் மேற்சமுத்திரங் கிட்டி யிருக்கிறபேர்க ளிதற்கு விரோதமா யோசிக்கவேணும். இத்தைய வரைக்கும் நம்மாலே பண்ணப்பட்ட பிரசங்கத்தி னிமித்தமாக வாய்வானது ஐந்தாம் பூதியமா யிருக்கக் கூடாதென்பது பிரசித்தமான சத்தியமாகும். அவ்வண்ணமே காற்றானது அசையப்பட்ட ஆகாயமா யிருக்கும் போது வேறே பூதியமா யிருக்கிறதென்று சொல்லுகிறதற் கவகாசமில்லை. இதை யோருவமையினாலே தெரியப்பண்

ணுவோம். ஒரு மனுஷன் சில சமயங்களிற் சும்மா யிருக்கிறான். சில சமயங்களிலே நடக்கிறான். அப்படிப்பட்டவனை யிரண்டு மனுஷனென்று சொல்லக்கூடா திருக்குமாப்போலே வெறு மாகாயமும் அசைவுள்ள ஆகாயமு மொரே பூதியமல்லாம லிரண்டு பூதியமென்று சொல்லக்கூடாது. ஆனபடியினாலே யிந்த வபத்தமான விசேஷத்தைவிட்டு இப்போது ஆகாய அசைவாகிற காற்றினாலே வருகிற பிரயோசனத்தைப் பராமரிப்போம். முந்தமுந்த சமுத்திரத்தின்மேலே யுண்டான கப்பல்களெல்லாம் நாலு திக்குகளிலேயும் பதினாறு கோணங்களிலேயு முண்டான சீமைகளுக்குப் போகிறதற் குதவுகிறது. பூமிமேலே திரிகிற குடியானவர்களுக்கு வெள்ளாமை தானியந் தூற்றுகிறதற் கொத்தாசையாகும். கடின வெய்ய லிறைக்கும்போது மனுஷருக் காரோக்கியத்தையுங் குளிர்ச்சியையும் வருத்திவிக்கும். இதல்லாமல் மத்தியானத்திற் பூமியெங்குமகா அனல் வீசுகிறபோது காற்றானது மேகங்களை யங்கங்கே சிதறப்பண்ணிச் சூரியனை மறைப்பித்து மந்தாரம் வருத்திவிக்கும். இந்த விஷயத்துக் கடுத்த சந்தேகந் தெளியச்சொல்லுவோம். சில சமையங்களிலேமந்தாரகாலத்திலே சூரிய கதிர் பூமிமேலேபடாதிருந்தாலும் இறுக்கமான உஷ்டணமதிகமாய்க் காண்பிக்கிற தென்ன? அந்தச் சமையங்களிலே பூமியிலே யிருந் தாகாயத்தி லேறுகிற கானல் மேலாகாயத்துக் கேறுகிறதற்கு மேகங்கள் விக்கினமா யிருக்கிறதினாலேயு மதுகளாலே மறுபடி பூமிமேலே தள்ளப்படுகிறதினாலேயு மதிகமான வுஷ்டணம் பிறக்குமென்று சந்தேகமில்லை. கடைசியிலே காற்றினால் வருகிற கனமானபிரயோசன மேதெனறால், ஒரு சீமையிலே மிகுதியாய்ப் பெருவாரிக்காச்ச லுண்டானா லாகாசத்திலே விஷமுள்ள அங்கிஷங்கள் மெத்தக் கலந்திருக்கிறபடியினாலே பெருங்காற்று அதிலே யடித்தாலங்கங்கே யந்தந்த விஷமுள்ள அங்கிஷங்களைச் சிதறப் பண்ணி ஆரோக்கியம் வருத்திவிக்கும். அந்தப் பெருவாரிக் காச்சலிலே யநேக மனுஷர் தீவரமாய்ச் சாகிறதற்கும் வியாதிக்காரர் கிட்டவிருந்தா லவனுடைய வியாதியை யெளிதாய்ப் பிடிக்கிறதற்குங் காரண மேதென்றால் மனுஷரிடைவிடாமற் சுவாசம் வாங்கிறதினாலேயும் விடுகிறதினாலேயு மாகாயத்திற் கலந்திருக்கிற விஷ அங்கிஷங்களைச்

சுவிகரிப்பார்கள். வியாதிக்காரனண்டையிற் பொல்லாத அங்கிஷங்கள் திரளாயிருக்கிறதினலே யெளிதாய் வியாதி வரும். கடைசியி லாகாயத்தில் மேகங்களு மழையும் பனி முதலானவைகளு முண்டாயிருந்தாலு மதுகளெல்லாம் அப்புவென்கிற பூதியத்துக்குச் சம்பந்தமா யிருக்கிறதினலே அவைகளையெல்லாம் வருகிற அதிகாரத்திற் கூடின மாத்திரம் வெளிப்படுத்துவோம்.

## அ-ம். அதிகாரம்.

### அப்புவின் விவரம்.

பூருவகாலத்திற் சில சாஸ்திரிகள் அப்புவானது பிரதான பூதியமா யிருக்கிறது மல்லாமற் சகலமான வஸ்துக்களைப் பிழைப்பிக்கிறதற்கு ஏக பூதியமா யிருக்கிறதென்று சொன்னர்கள். இந்தப் பக்ஷத்தை யொப்புவிக்கத் தக்கதாக முதலாவது.—கண்டிப்புள்ள வஸ்துக்கள் கடைசியிலே தண்ணீராய்ப் போமென்று சொல்லுகிறர்கள். 2-வது.—ஸ்படிக பாத்திரங்களிலே மழைத்தண்ணீரை வார்த்த ததிலே சில செடிகள் முளைந்தது வளர்ந்தது என்கிறர்கள். 3-வது.—பெரிய தொட்டி சம்பாதித்து அதிலே 2800 பல முலர்ந்த மண்ணைப்போட் டதிலே யெழுபது பலமுள்ள வொரு கொம்பை நாட்டி யதற்குத் தினந்தினந் தண்ணீரிறைத் தந்த பூமிக்குள்ளே வேர் விழுந்து செடியாய் வளர்ந்து ஐந்து வருஷத்துக்குப்பிற்பா டதைப் பிடுங்கின பிறகு முன்னிருந்த மண்ணை மறுபடி நிறுத்துப்பார்க்க மூன்று நாலு பலமாத்திரங் குறைந்திருக்கிறதென்று கண்டதினலேயும்; மரம் 2,240 பலங் கனமிருந்ததினலேயு மந்த மர மழையினலேயு மிறைக்கப்பட்டத் தண்ணீரினலேயு மாத்திரம் வளர்ந்ததென்றும் சகல காரியங்களிலேயு மிப்படி யோசிக்க வேண்டுமென்றுந் தண்ணீர் ஏக பூதியமா யிருக்கிறதென்றுஞ் சொல்லிக்கொண்டு வருகிறர்கள். ஆனலிந்தக் காரியங்களைச் சரியாய் விசாரித்தோமானல் கண்டிப்புள்ள வஸ்துக்கள் கடைசியிலே தண்ணீராய்ப் போமென்கிறது பொய்யான விசேஷமா யிருக்கிறதென்றுந் தண்ணீர் சகல வஸ்துக்கள் பிழைக்கிறதற் குதவியா யிருந்

தாலும் ஏக வுதவியல்லவெனறும்; தண்ணீருக்குள்ளே தா
னே பூமியினுடைய மெலிவான அங்கிஷங்களும் அக்கினியி
னுடைய புகைச்சலு மாகாயத்தினுடைய அணுக்களுங் கலந்
திருக்கிறதென்றும் அந்தக் கலப்பி னிமித்தமாக வளர் சீவ
னைக்கொண்டிருக்கிற மரங்களுஞ் செடிகளும் பூக்களும் வர்த்
திக்கின்றனவென்று மனுபவ சித்தியினலே கண்டு பிடிக்கி
றோம். அவ்வண்ணமே மழைத் தண்ணீரு மற்றத் தண்
ணீரு மநேகநா ளசைவில்லாமற்போனு லழியப்பட்டு நாற்ற
மெடுக்குதென்று தினந்தினங் காண்கிறதினலே யவசிய
மாய்த் தண்ணீரிலே கலப்பிருக்கிறதென்றும், அந்தக் கலப்
பினலே யதற் கழிவு பிறக்கிறதென்றும், கலப்பில்லாமற்
போனு லழிவு வரக்கூடாதென்று மங்கீகரிக்கக் கடவோம்.
இதலலாமற் கலப்பில்லாத தண்ணீரினலேமாத்திரம் மரங்க
ளுஞ் செடிகளுங் கூட்டப்பட்டதா யிருந்தா லெல்லா மொ
ருமிக்கஅழிந்துபோமென்றும் பின்ன பேதகமில்லாமலொ
ரு கூஷிணத்திற் கெட்டுப்போமென்றுஞ் சொல்லவேண்டி யி
ருக்கும். ஆனல் முன் சொல்லப்பட்ட வஸ்துக்களிலே சில
து தீவரமா யழிகிப்போமென்றுஞ் சிலதுக்கள் நாள் வட்டத்
திலே மாத்திரங்கெடுமென்று மிருக்கும்போது அவசியமாய்
வெவ்வேறே சுபாவங்களைக் கொண்டிருக்கிற அங்கிஷங்க
ளினலே யுண்டாக்கப்பட்டதுக ளென்று தப்பா தடையா
ளமாகும். அதிலே மெய்யான விசேஷ மேதென்றல் தண்
ணீரானது மகா அவசரமான பூதியமா யிருக்கிறதென்றும்
சகல பூதியங்களுடைய குழல்போலே யிருக்கிறதென்றும்,
அதினுடைய ஈரம் புட்பங்களுஞ் செடிகளும் வளருகிதற்
குதவியா யிருக்கிறதென்று மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கு
மனுஷருக்கு மகத்தியம் வேண்டிய பானமா யிருக்கிறதென்
றும் பிரசித்தமான சத்தியமாகும். இப்போதைக்குத் தண்
ணீருடைய அங்கிஷங்க ளெப்படி யிருக்கிறதென்று கேட்
டால், சில சாஸ்திரிகள் தண்ணனை யமுழ்க்கிறது மகா
வருமையா யிருக்கிறதென்று மதினுடைய அங்கிஷங்கள்
சதிரமா யிருக்கிறதென்றும் ஸ்தாபித்தார்கள். இந்தப்
பக்ஷமானது நியாயத்துக் கொவ்வாததா யிருக்கிறதென்று
காண்பிக்கிறது. அதேதென்றல், அப்புவானது சதிர அங்
கிஷங்களினலே சேர்க்கப்பட்டதா யிருந்தால் வெள்ளம்
வரும்போது தண்ணீர் தீவரமா யோடுகிறதற் கவகாசமில்

லே. ஆனால் வேறே சாஸ்திரிகளோ வென்றால்; தண்ணீருடைய அங்கிஷங்கள் சற்று நிகளமுமாய் மச்சம்போலே நழுவப்படத் தக்கதுமாய்த் துவளுகிறதுமாய்ப் பாம்புபோலே யுருட்சியுடா யிருக்கிறதென்று சொன்னார்கள். அவ்வண்ணமே யிப்படிப்பட்ட குணங்களைக் கொண்டிருப்பதால் தண்ணீருக்குச் சம்பந்தமாயிருக்கிற பிரதான் விசேஷங்களெல்லாஞ் சுபாவமாய் வெளிப்படுத்தலாம். முதலாவது.—சலத்தை யமுழ்த்தினு லெளிதா யமுங்காமல் பக்கங்களிற் பிதுங்கிப்போம். 2-வது.—தண்ணீர் வாய்க்காற் சற்று வளைந்திருந்தாற் சீக்கிரமா யோடும். 3-வது.—வஸ்திரமுதலான வஸ்துக்களுக்குள்ளே யெளிதாய்ப் பிரவேசிக்கும். 4-வது.—அசுத்தங்களை யெல்லாந் தள்ளுகிறதற்கான அங்கிஷங்களா யிருக்கிறது மல்லாமற் சீலைமுதலான வஸ்துக்களை நனையப்பண்ணினதற்குப் பிற்பாடு காற்றினாலே யாகிலும் வெயிலினாலே யாகிலு மெளிதா யாகாயத்திற் பறந்துபோம். 5-வது.—சமனாக விருக்கிற வஸ்துக்கள் மேலே விழுந்த சலந் துளிதுளியாக நிற்குமல்லாமற் கலக்கமாட்டாது. இந்தப் பிரகாரமாக மற்றுமுண்டான காரியங்களிலே யோசிக்கக் கடவீர்கள். இங்கே ஊற்றுகளுடைய விசேஷங்களைச் சொல்லிக் காட்டுவோம். முந்தமுந்த ஊற்றுகளுக்குக் காரண மேதென்ற லிந்த விஷயத்திலே சாஸ்திரிகளுடைய பற்பல பக்ஷங்களைச் சொல்லிக்காட்டுவோம். அதெப்படியென்றால்; சில வித்தியாபாரகர் சமுத்திரமானது பூமிக்குள்ளா யிருக்கிற சிறு தாரைகளுக்குள்ளே பிரவேசித்துப் பூமி மணற்குள்ளே போகப்போக வடிக்கட்டுகிறதுப்போலே உப்பு அங்கிஷங்களைவிட்டுத் தண்ணீர் லகுவாயிருக்கிறதினாலே பூமிமேலே யேறிக்கிளம்புமென்கிறார்கள் ஆனாலிந்தப்பக்ஷத்துக் கநேகம் விரோதமான காரியமுண்டு. அதெப்படியென்றாற் சிலர் தண்ணீர் லகுவினாலே பூமிமேலே கொஞ்சமாயேறினாலு முயர்ந்த பருவதங்கள் மேலேயிருக்கிற ஊற்றுக்களி லெப்படியேறுமென்கிறார்கள். வேறே சாஸ்திரிகள் ஸ்தலங்களிலே யுண்டான மணல்கள் தண்ணீரைச் சுவிகரிக்கிறதுப்போலே யிருக்குமென் றெழுதிவைத்தார்கள். இதற்கநேக விரோதமான நியாயங்களுண்டு. வேறே சாஸ்திரிகளோவென்றால், பூமிக்குள்ளே யநேக ஸ்தலங்களிலேயக்கினி அங்கிஷங்கள் கூடுகிறதினாலே மேலே யோ

டுகிற தண்ணீரைத் துளிதுளியாகத் தன துஷ்டணத்தினு
லே மணற் றாரைகளிலேயு மலைகளுடைய வெடிப்புகளிலே
யு மேறப்பண்ணி ஊற்றாறும் நெருப்புள்ள அங்கிஷங்களைக்
கொண்டிருக்கிற ஸ்தலங்களுக்குள்ளே தண்ணீரோடுகின்
றதென் றொப்பிவிக்கத் தக்கதாகச் சில விடங்களிற் கொ
திக்கிற தண்ணீர் புறப்படுகிறதென் றனுபவ சித்தியினாலே
கண்டுபிடித்தார்கள். கடைசியிலே வேறே சாஸ்திரிக ளிந்
தப் பக்ஷங்களை யெல்லாம் விட்டு ஊற்றுகளெல்லா மழை
யினுடைய தண்ணீரினாலே வருகிறதென்று சொல்லுகிறார்
கள். அவ்வண்ணமே பருவதங்கள் மேலே திரளாய்த்
தண்ணீர் விழுகிறபோ ததிலுண்டான பள்ளங்களிற்கூடி ம
ணல் கொஞ்சமா யிருக்கிறதிலே பிரவேசித்து மெள்ள
மெள்ள இறங்கி யநேக வூற்றுகளுக்குக் காரணமாயிருக்
கும். இதற்கடையாள மேதென்றால்: கோடைகாலத்தில
ஊற்றில் ஒன்றில் தண்ணீரில்லை. ஒன்றில் கொஞ்சமா யி
ருக்கும். மழைகாலத்திலேயோ வென்றால் திரளாய்த்தண்
ணீரூறும். மகா பேர்போன ஒரு சாஸ்திரியானவ ரிந்தப்
பக்ஷத்தை யொப்பிவித்தது மல்லாமற் சகல ஆறுகளு ம
ழைகளினாலே வருகிறதென்று கெட்டியான நியாயத்தினா
லே ஸ்தாபித்தார். அதெப்படியென்றால்: நீளத்திலேயு ம
கலத்திலேயு முயரத்திலேயு மிரண்டுமுழப் பிரமாணமுள்
ள பாத்திரத்தை யுண்டாக்கி யொருவருஷ மழையினா லதி
லே விழுந்த தண்ணீரையெல்லாம் பார்க்கும்போது முப்ப
து விரற்கடை யாழமுண்டா யிருந்தது. ஆனபடியினாலே
யிந்தப் பிரகாரமா யெங்கு மிப்படியே மழை பெய்ததென்
று விசாரித்துக்கொள். இப்படிப்பட்ட தண்ணீரெல்லா
மொவ்வொரு சீமையிலே கூடினால் உலகமெங்கு முண்
டான ஆறுகளிலொரு வருஷத்துக்குள்ளே யோடுகிற தண்
ணீரைப்பார்க்க நாலத்தனை யிருக்கலாமென் றெளிதாய்க்
கண்டுபிடிக்கலாம். ஆனபடியினாலே பூமி சுவிகரிக்கிற தண்
ணீரு மாகாசத்திற் போகிற ஆவிகளுமல்லாமல் ஆறுகளி
லே யோடுகிற தண்ணீர் மிஞ்சிப்போம். இப்போ திரண்
டாறுகளி லோடுகிற தண்ணீரெத்தனையதிக சீக்கிரத்
தோடே யோடுமென்றறிய மனதுண்டானா லொரு மா
வுண்டை பண்ணி அந்த வுண்டையை முந்த முந்த வோ
ராற்றிற்போட்டு அது வுருண்டுபோகவிட்டு ஒன்று துவக்கி

நூறுமட்டும் விடாம லெண்ணிக்கொண்டு கடைசியான
ஸ்தலத்திலே நிறுத்தி முன் றுவக்கின ஸ்தலத்துக்கு மு
டிந்த ஸ்தலத்துக்கு மெத்தனை கோ லுண்டென்று பார்த்து
இந்தப் பிரகாரமாக வேறே யாற்றிலேயும் பார்த்து எதி
லே யதிகமான அளவுண்டா யிருக்கிறதோ வதிலே தண்
ணீர் சீக்கிர நடையென்று சொல்லப்படும். இதற்கப்பா
லறியவேண்டியதாவது. ஆற்றிலே யோடுகிற தண்ணீர்
சமுத்திரத்துக்குப் போகிறதற்கு முன்னே யெம்மாத்தி
ரந் தணிவாய்ப் போகிறதென் றறியவேணுமானால் ஆற்றி
னடுவிலே யுயர்ந்த கோல் நாட்டி யதற்குக் கிழக்கே நூற
டிக்கப்பா லெதிராக வேறே யோ ருயர்ந்த கோலை நாட்டி
யந்த விரண்டு மரமுந் தண்ணீர் மேலாக வெத்தனை விரற்
கடை யுண்டென்று பார்த்தந்த ஆறு மேற்கே நின்று வந்
துதானால் மேலக்கோல் கிட்ட நின்று பருமமா யிருக்கிற
சதிரப் பலகையைச் சம்பாதித் ததிலே யிரண்டு பக்கத்தி
லெதிராகச் சரியான விரண்டு சின்ன கொம்புகளைக்கட்டி
யிரண்டுஞ் சரியாக வொரு பார்வையிலே விழுகிறப்போ
லே யிரண்டு துவாரம் பண்ணி பக்கங்களிலே சாயாமற் ச
திரப் பலகையோடு கட்டித் துவார வழியாகக் கிழக்கே
யெதிராக நிற்கிற கோலைப்பார்த்து எத்தனத்தினுடைய து
வாரத்துக்குந் தண்ணீருக்கு மெத்தனை விரற்கடை யுண்
டென்று பார்த்துக் கிழக்கே யிருக்கிற கோலிலே துவாரத்
தின் வழியாகக் கண்டு குறித்த கீற்றுக்கு மெத்தனை வி
ரற்கடை யுண்டென்று பார்த்து முந்தின மேற் கீற்றுக்
கோலுக்கு மிதற்கு மெத்தனை விரற்கடை யதிகமா யிருக்கி
றதோ அத்தனை தண்ணீர் தணிந்தோடுகிறதென் றறிய
லாம். இந்தப் பிரகாரமாகப் போகப் போகச் சமுத்திர
மட்டு மெம்மாத்திரந் தணிவு வுண்டென் றறியலாம். இப்
போதைக்கு மழைகளினாலே யாறுகளெல்லாம் வருகிற
தென்று சொன்னோமே, மழைகளுக்குக் காரணமேதென்
றால்சமுத்திரத்திலேயும் பூமியிலேயு முண்டானஆவிகளினா
லே வருகிறதென் றறிவாயாக. அதெப்படி யென்றால்; சூ
ரியனானது தனது கதிர்களுடைய பலத்தினாலே சமுத்தி
ரத்திலேயும் பூமியிலே யுண்டான ஈரமுள்ள ஸ்தலங்களி
லேயு மெண்ணப்படாத ஆவிகளை யிடைவிடாம லாகாசத்
தி லேற்றப்பண்ணுகிறது. புகைபோலே யேறுகிற விந்த ஆ

விகள் போகப்போக ஆகாசங் குளிர்ந்திருக்கும்போ தந்தக் குளிர் நிமித்தமாக வொன்ருய்க்கூடி மேகங்களாய்ப் போகிறது. பெரிய பருவதங்கள் கிட்ட வாசமா யிருக்கிறபேர்களிதைத் தினந்தினங் கண்ணுலே பார்த்துக்கொண் டிருக்கிருர்கள். அவ்வண்ணமே முந்தமுந்தப் புகைபோலே காணப்படுகிற ஆவிகள் சற்று நேரத்துக்குப் பிற்பாடு மேகங்களாய்ப் போச்சுதென்று கண்ணுக்கு முதலாய்ப் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறது. கீழேயிருந் திப்படிப்பட்ட விசேஷத்தைக் கண்டவர்க ளுயர்ந்த பருவதங்கள் மேலே யேறினல் கீழ்த்தரமான ஸ்தலங்களிலே யீரமுள்ள ஆவிகள் புகையாக வேறினற்ருனே மேகங்களாகப் போகிறதென்று காண்பார்கள். கடைசியிலே யிந்த மேகங்கள் காற்றினலே யங்கங்கே யொதுங்கித் திரண்டு குளிர் மிகுதியால் துளிதுளியாக விழுகிறபோது மழை வருஷிக்கிறதென்று சொல்லப்படும். ஆனல் சூரிய கதிரின் உஷ்டணத்தினலே யாவிகள் மாத்திர மேறுகிறதென்று விசாரிக்கவேண்டாம். பூமிக்குள்ளே யுண்டான அக்கினி யங்கிஷங்களினலேயு முஷ்டணத்தினலேயும் ஈரமுள்ள ஆவிகளாகாசத்திலே யேறப்படுமென்பது சந்தேகமில்லை. இந்த விசேஷத்தை யோர்ருவமையினலே தெரியப் பண்ணுகிறேம். அதெப்படியென்ருல், யாதொரு வைக்கோல் வீட்டின்மேலே மழை பெய்ததற்குப் பிற்பா டந்தச் சிறு வைக்கோல் தண்ணீரினலே நனைந்திருக்கிறபடியினலே யந்த வீட்டுக்குள்ளே தீயெரியப்பண்ணின லந்த வுஷ்டணத்தினலே தட்டைச் * சிகின்மேலே யுண்டான தண்ணீரெல்லாம் ஆவிகளாகப் புறப்பட் டாகாசத்தி லேறுகிறுப்போலே பூமிமேலே யீரமுள்ள ஸ்தலங்களுக்குக் கீழே யநேகம் விசை யக்கினி யங்கிஷங்களுண்டா யிருக்கிறதினலே யீரமுள்ள ஆவிகளைப் புகைபோலே யாகாயத்தி லேறப்பண்ணுமென்று யோசிப்பாயாக. கடைசியிலே பனிநீருண்டாகிற வகையினலே மழையினுடைய விசேஷங்களெல்லா மெளிதாய்க் கண்டுபிடிக்கலாம். அதெப்படியென்ருல்; ஈயத்தினலே பூசப்பட்ட ஒரு செம்பு சட்டியைச் சம்பாதித்து அதிலே பரிமளமுள்ள புட்பங்களை நிரம்பப்போட்டு அந்தச் சட்டியினுடைய வாய்க்குச் சரியாகக் குடைவா யிருக்கிற

* மேன்கூரை.

வொருமுழ வுயரமுள்ளவேறொரு செம்புசட்டியால் சந்தில்
லாமல் நன்றாய்மூடி யந்த மேன்மூடியி னடியிலே கமண்ட
ல மூக்குப்போலே வளைவாய்த் தறையை நோக்கப்பண்ணி
அதின்பிற கந்தப் பாத்திர மிரண்டையுந் தூக்கி யடுப்பிலே
வைத்துக் கொஞ்சமாய்த் தீயெரியப் பண்ணினால் புட்பங்க
ளி லுண்டாகிய ஈரமுள்ள அங்கிஷங்கள் மெல்லிய புகை
போலே யுயரவேறி மேல்மூடியினுடைய உச்சிமட்டும்போ
யவ்விடங் குளிர்ந்திருக்கிறபடியினாலே யிந்த ஆவிகளெல்
லாங் கூடித் துளிதுளியாக மூக்கின் குழலி லிறங்கிப் பு
றத்தியிலே விழுகிறாப்போலே மழையினுடைய விஷயங்க
ளிலே யோசிப்பாயாக. பின்னையு முன்பனி பின்பனி
யேதென்றால் பகல் நேரத்திற் சூரியனுடைய கதிர்களினா
லே யாகாசத்திற் கொஞ்சமா யேறின பற்பல ஆவிகளும் பு
கைகளுஞ் சூரிய னஸ்தமிக்கிறபோ தாகாசத்தி லதிகமா யே
றுகிறதற் கவகாச மில்லாததினாற் சுபாவமாய்ப் பூமிமேலே
விழுகிறது. இதற்குப் பெயர் முன்பனி யென்கிறார்கள். இப்
படியே யிராத்திரிகாலத்திலே பூமிக்குள்ளே யுண்டான
புகைகளு மாறுகளிலே யுண்டான ஆவிகளும் ஆகாசத்திற்
கொஞ்சமாயேறி மேலாகாயத்துக்குப் போகிறதற்குப் பல
மில்லாததினாலே யதிகாலமே பூமிமேலே விழுகிறது. இதற்
குப் பெயர் பின்பனி யென்கிறார்கள். ஆனா லிப்படிப்பட்ட
பனிகளிலே யாகாச அங்கிஷங்கள் கலந்திருக்கிற படியினா
லேயு மந்தத் தூற்குணங்களைத் தள்ளுகிறதற் குஷ்டணம்
போதாததினாலேயு முன் சொல்லப்பட்ட பனி மனிதர்
மேலே விழுந்தால் சில சமயங்களிற் பனியோடே கலந்தி
ருக்கிற வாகாசத்தைச் சுவாசத்தினாலே சுவிகரித்தா லநே
கம் வியாதிகளுக்குக் காரணமாயிருக்கும். வருகிற அதிகா
ரத்தில் தண்ணீருக்குச் சம்பந்தமாயிருக்கிற பிரதான காரி
யமாகிற சமுத்திரத்தினுடைய வநேக வதிசயமான விசே
ஷங்களைச் சங்க்ஷேபமாகச் சொல்லிக் காட்டுவோம்.

## ௯-ம. அதிகாரம்.

### சமுத்திரத்தின் விவரம்.

பராபர வஸ்துவானவர் சமுத்திரத்திலே தம தளவில்
லாத மகிமையினுடைய குறிப்பிடத்தைக் காண்பித்தா

றொன்று மகாத்துமாக்க ளெழுதிவைத்தார்கள். அதெப்ப டியென்றால்; சமுத்திரமானது காற்றில்லாத சமையத்திலே ஸ்படிகத்தைப்போலவுங் கண்ணாடியைப்போலவு மிருக்கிற படியினாலே பராபர வஸ்துவினுடைய அளவில்லாத தயை யைக் காண்பிக்கப் பண்ணுகின்றது. அன்றியும் கடலான து மகா பலத்தோடே யசைக்கப்பட்டுக் காற்றுகளுக்குந் தங்களுக்கும் அகோரமான யுத்தமுண்டாயிருக்க வுயர்ந்த பருவதங்களைப்போலே யாகாயத்திலே மிகவும் ஏறப் பா தாளத்தைத் திறந் தாகாயத்தில் மோத சாகரம் பயங்கர மான சத்தத்தோடே கர்ச்சிக்க இது முதலான கடினமான கோபத்தினுடைய அடையாளமா யிருக்கும்போது கடவு ளுடைய அளவில்லாத நீதியை வெளிப்படுத்துகிறது. இத் தன்மையாகச் சமுத்திரத்தினுடைய வதிசயமான ஆழமா னது பரப்பொருளினுடைய அளவறுக்கப்படாத விமரிசை யின் பரமரகசியங்களைக் காண்பிக்கும். பராபர வஸ்து வானவர் புத்திக்குள்ளே யடங்காதவருமாய் மனோவாக்குக் கெட்டாத சகல நன்மைச் சொரூபியுமா யிருப்பதுந் தவி ரத் தம்மிடத்திலே யற்ப குற்றத்தினுடைய நிழல் முதலா யிருக்கக்கூடா திருக்குமாப்போலே சமுத்திரமானது நா சத்தையு மழியப்பட்ட வஸ்துக்களையும் பிரேதங்களையுந் தன்னிடத்தி லிருக்கவொட்டாம லசுத்தங்களை யெல்லாந் தள்ளிப்போடுகின்றது. இப்படியே சமுத்திரமானது மகா மகா விஸ்தீரணமாயுஞ் சகலமான ஆறுகளுக்குங் காரண மாயு மிருந்தாலுந் தன தாவிகளைக்கொண் டெங்கு மழை வருஷிக்கப் பண்ணினாலுந் தன்னிடத்திலே குறைவில்லாம லெப்போதும் நிறைந்திருக்குமாப்போலே கடவுளானவ ரெங்கும் வியாபித்து மட்டில்லாத தயையோ டெண்ணப் படாத நன்மைகளைப் பண்ணினாலும் எண்ணிக்கைக்குள் ளே யடங்காத வுத்தம தானங்களைக் கட்டளையிட்டாலு மெப்போது மட்டில்லாத நன்மைகளுடைய பூர்த்தியா யி ருக்கிறார். இப்படிப்பட்ட சமுத்திரத்தைச் சர்வேஸ்வர னானவர் மனுஷருக் குதவியாகவே யுண்டாக்கினார். அதெப் படியென்றால், அநேக விராச்சியங்க ளொன்றுக்கொன்று தூரமாயிருந்தாலுஞ் சமுத்திரமானது மகா தீவரத்தோடே ஒன்றிக்கச் செய்கிறதினாலே கிட்டினாப்போலே காண்பிக் கும். இந்தச் சமுத்திரத்துக்குள்ளே யங்கங்கே யநேகம் ஸ்த

லங்களிலே யாண்டவர் தீவுகளை யுண்டாக்கின வகை யே தென்று லிந்த ராச்சியத்திற் பெரிய பாதைகளிலே தண் ணீர்ப்பந்தல்களுஞ் சத்திரங்களு மண்டபங்களு முண்டா யிருக்கிறதுபோலே மனுஷர் பிழைக்கிறதற்கு வேண்டிய தெல்லா முபகாரமாகக் கொண்டிருக்கிற தீவுகளைச் சர் வேஸ்வரனவர் தமது சத்திரமாகச் சமுத்திர யாத்திரை போகிறவர்களுக்குக் கட்டளையிட்டருளினர். ஆனு லிப் படிப்பட்ட கடலானது உப்புத்தண்ணீரைக் கொண்டிருப் பானேன்? இதற்குப் பிரதியுத்தரத்தை யுற்றுக்கேள். சமுத் திரத்திலே யுப்புத்தண்ணீ ரில்லாமற்போனுற் சில நாளைக் குள்ளாகக் கெட்டழிந்துபோம். மேலும் மகாமகாப் பார முள்ள கப்பல்களைச் சுமக்கிறதற்கு நல்ல தண்ணீரைப் பார்க்க வுப்புத்தண்ணீர் பலமாயிருக்கும். இந்த வுப்புத் தானே யெப்படிவருகிறதென்றுல் சில சாஸ்திரிகள் சூரிய னுடைய உக்கிரத்தினலே வருகிறதென்கிறுர்கள். வேறே பேர்கள் சமுத்திரத்துக்குள்ளேதானே வுப்புமலைக ளுண் டாயிருக்கிறதென்றும் அந்த வுப்புக் கரைந்து அதினலே யுப்புத் தண்ணீராய்ப் போச்சுதென்கிறுர்கள். கடைசி யிலே வேறே மகாத்துமாக்கள் சர்வேஸ்வரன் லோகத்தை யுண்டாக்குகிறபோது சமுத்திரத்தையு மப்படியே யுண் டாக்கினுனென்கிறுர்கள்.

இப்போது சமுத்திரத்தி லுண்டான மேலான வதி சயத்தை வெளிப்படுத்துவோம். அதெப்படி யென்றுல்; தினந்தினங் கடலானது பூமிமேலே மெள்ளமெள்ள வேறி இப்படி யைந்து தாசு ஏறினதற்குப்பிற்பா டொரு தாசு சும்மாயிருந்து அதின்பிறகு ஐந்து தாசுக்குள்ளே மெள் ளமெள்ள வாங்கிப்போம். பின்னையுமொரு தாசு சும்மா யிருந்து எப்போதும் போலே யேறி யெப்போதும் போ லே வாங்கிப்போமென் றநுபவ சித்தியினலே கண்டுபி டிக்கிறோம். இப்படிப்பட்ட சமுத்திரத்தினுடைய வற் புதமான வடிவுக்கும் பெருக்குக்குங் காரணத்தைச் சொல் லத்தக்கதாக வெண்ணப்படாத சாஸ்திரிகள் பிரயாசப் பட்டார்கள். அவர்களுக்குள்ளே மகா பேர்போன சாஸ் திரியாகிய அரிஸ்தோ தலியானு வென்கிறவர் அநேக வரு ஷ மிந்த வதிசயமான விசேஷத்துக்குக் காரணத்தைத்

தேடினதற்குப் பிற்பாடதைக் கண்டுபிடிக்கமாட்டாமற் சமுத்திரத்தைப்பார்த்து நீ யென்னிடத்தி லகப்படவில்லை நானுனனிடத்தி லகப்படுவேனென்று சொல்லிக் கடலிலே விழுந்து செத்தார். ஆனலிந்த விஷயத்திலே சாஸ்திரிகளுடைய பற்பல பக்ஷங்களைச் சொல்லிக் காட்டுவோம். சில சாஸ்திரிகள் கரைதுவக்கி யுள்ளே போகப்போகச் சமுத்திரத்தி னிலஞ் சாய்ப்பாய்ப் போகுதென்று சொல்லி யந்தப் பாதாளத்தின் வழியாய்க் கரைகளிலே யுண்டான தண்ணீர் நிரம்பிப்போ யன்னியோன்னியமா யெதிராக மோதி மகா பலத்தோடே திரும்பத் தள்ளுண்டு போமென்கிறார்கள். வேறே பேர்கள் கடலின்கீழே மகா விஸ்தீரணமான பாதாளங்க ளுண்டென்று மதிலே தீ நாக்குகளும் நெருப்பாங்கிஷங்களும் வெகு அடர்த்தியா யிருக்கிறதினலே மகா பலத்தோடே யசைத் திந்த அசைவினலே மேலே யிருக்கிற தண்ணீரைக் கொதிக்கப்பண்ணி யிப்படி பொங்கியிருக்கிற தண்ணீர் பூமிமேலே மெள்ளமெள்ள வேறி மறுபடி சுபாவகனத்தினலே கடலிலே விழுந்துபோமென்று மறுபடி நெருக்கமாயிருக்கிற அக்கினி மேலே விழுந்து பொங்குமென்றும், இப்படி யேற்றமு மிறக்கமுமா யிருக்குமென்றுஞ் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். வேறே சில வித்தியாபாரகர் வடக்கேயிருக்கிற துற்க நக்ஷத்திரத்துக்குக் கீழேயு மந்த ஸ்தலத்துக் கெதிராகத் தென்பக்கத்திலேயும் பயங்கரமான பாதாளங்க ளுண்டாயிருக்க அந்தப் பாதாளங்களுக்குள்ளே பெரும் புசல் பிரவேசித்து அத்தியந்த பலத்தோடே சமுத்திரத்துத் தண்ணீரைத் தள்ளிப்போட்டுக் கடல்மேலே யேறப்பண்ணினதற்குப் பிற்பாடு சமுத்திரத்தினுடைய தண்ணீர் சுபாவ கனத்தினலே கீழேவிழுந் தாகாசத்தைத் துரத்தி யிப்படி கடலின் சலத்துக்கு மாகாசத்துக்கு முண்டான அன்னியோன்னிய யுத்தத்தினலே சமுத்திரத்தினுடைய பெருக்கும் வடிவும் வருகுதென்றார்கள். வேறேபேர்கள் பூமியிலுண்டான ஆறுகள் சமுத்திரத்திலே விழுகிறபோதும் கடல்த் தண்ணீரை யெல்லாந் தள்ளும்போதும் தள்ளுண்டுபோன தண்ணீர் திரும்பஆறுகள்மேலே விழுகிறபோதும் பெருக்கும் வடிவும் வருகிறதென்று ஸ்தாபித்தார்கள். சிலபேர்கள் மனுஷருக்குண்டான மூன்றுமுறை நாலாமுறைக் காய்ச்ச லெப்போ

து மேறக்குறைய வொரு நேரத்திலே வருகிறதென்றுந் து ராங்கிஷங்க ளிரத்தத்தோடே கலந்திருக்கிறபடியினலே பொங்குகிறதற்குக் காரணமா யிருக்கிறதென்றும் அறிந்து சமுத்திரத்துக்குள்ளேயு மநேக வர்னவுப்பு கலந்திருக்கிற தினலே பெருக்குக்கும் வடிவுக்குங் காரணமென்கிறர்கள். வேறேபேர்கள் சமுத்திர மிருகமுண்டென்றுசொல்லி அது சுவாசம் விடுகிறபோதும் வாங்குகிறபோதும் பெருக்கும் வடிவும் வருகிறதென்கிறர்கள். ஆனல் வேறே யநேக மகாத்துமாக்கள் முன் சொல்லப்பட்ட நியாயங்கள் ஒன்றில் பிரத்தியக்ஷமான தப்பறையா யிருக்கிறதென்றும் ஒன்றில் கெட்டியுள்ள நியாயங்களினலே ஸ்தாபிக்கப்படவில்லை யென்றுங் கண்டிந்த வதிசயத்துக்குக் காரணத்தைத் தேடத்தக்கதாகச் சோதிமண்டல மட்டும் புத்தியினலே யேறித் திருவுளம் பற்றினதாவது. சகல மண்டலத்துக்கு முதல் மண்டலம் நக்ஷத்திரத்தையுங் கிரகங்களையு மாகாயத்தையுங் கிழக்கேயிருந்து மேற்கே தள்ளுகிறபோது சமுத்திரத்தையுங் கூடத் தள்ளுகிறதென்றும், சமுத்திரம் மறுபடி தனது சுபாவ அசைவினலே கிழக்கே போகிறதென்றுஞ் சொன்னர்கள். வேறேபேர்கள் சூரியனனது சமுத்திரத்தினுடைய அலைகளைத் தனது கதிர்களினலே யுப்பப்பண்ணி யேற்றவிறக்கத்துக்குக் காரணமா யிருக்குமென்கிறர்கள். கடைசியிலே வேறே யநேகஞ் சாஸ்திரிகள் சந்திரனலே யிப்படிப்பட்ட வதிசயம் வருகிறதென்று ஸ்தாபித்தார்கள். அவர்களுடைய பக்ஷத்தை நன்றய்க் கண்டுபிடிக்கிறதற் கறியவேண்டியதாவது. முதலாவது.—ஒரு தாசிலே பதினைந்து பாகமுண்டென்று விசாரித்துக் கொள்ளுங்கள். அந்தப் பாகங்களிலே தினந்தினம் பதின்மூன்றுபாகமும் நாற்பத்தெட்டுவிபித்தமும் ஒருநாள் வருகிற பெருக்குக்கு மறுநாள் வருகிற பெருக்குக்குந் தாமதமாயிருக்கும். இந்தப் பிரகாரமாக வின்று சூரியனுதயத்திற் பெருகத் துவக்கினல் நாளைக்கு முக்கால்தாசுக்குப் பிறகு துவக்கும். 2-வது.—பவுர்ணமி அமாவாசி காலங்களிற் பெருக்க மதிகமாயிருக்கும். ஆனபடியினலே சந்திரனனது உதயம் பண்ணுகிறதற்குத் தினந்தின முக்கால் தாசு தாமதம் பண்ணுகிறதினலேயும் அமாவாசி பவுர்ணமியிலே யதிகமான பலத்தைக்கொண்டிருக்

கிறதினாலேயும் வடிவுக்கும் பெருக்குக்குஞ் சந்திரனானது பிரதான காரணமா யிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனாலிந்தக்காரணத்தை வெளிப்படுத்துகிறதிலே இரண்டுவகையுண்டு. அதெப்படியென்றால், ஊசிக் காந்தமானது இரும்பைத் தனக்குச் சேரத்தக்கதாக விழுக்கிறாப்போலே சந்திரன் சமுத்திரத்தின்மேலே யேறுகிறபோது சமுத்திரத்தை யுயர்த்துகிறதற்கு விசேஷமான பலமுண்டென்றுஞ் சந்திர னப்பாலே கடந்ததற்குப் பிற்பாடு சுபாவமாய்த் தணிந்துபோமென்றும் அங்கிகரிக்கிறார்கள். வேறே சிலபேர்களோ வென்றால், சகல கிரகங்களைப் பார்க்கச் சந்திரன் பூமிக்குக்கிட்ட விருக்கிறபடியினாலே சமுத்திரத்தின்மேலே யேறுகிறபோது கடலுக்குஞ் சந்திரனுக்கும் நடுவேயிருக்கிற வாகாயத்தை அமுழ்த்தி அமுழ்த்தப்பட்ட வாகாயஞ் சாகரத்தை யமுழ்த்தி யதினுடைய அலைகளைப் பூமிமேலே யேறப்பண்ணிச் சந்திரன் போனதற்குப்பிற்பா டெப்போதும்போலே வற்றுமென்றுஞ் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். கடைசியிலே சில ஸ்தலங்களிற் பெருக்குக்கும் வடிவுக்கும் வேற்றுமை யுண்டாயிருந்தால் கரைகளுடைய பலபல அந்தஸ்துக்கள் முதலான பற்பல காரணங்களினாலே வருமென றறிவாயாக. இப்போதைக்குச் சமுத்திரத்திற் காணலான வதிசயமான காரியங்களைச் சுருக்கத்திலே சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால், சில விரத்தினங்களைப் பார்க்க விலையேறப் பெற்றதுமாய் மனுஷருக்கு மிகவு முதவுகிறதுமாயிருக்கிற முத்துக்கள் பவளங்கள் அம்பர்கள் சமுத்திரத்திலே கிடைக்கும். முந்தமுந்த முத்துக்களைப் பார்க்கும்போ தொரு காரியத்திலே பூமிக்குள்ளே யுண்டான திரவியங்களையும் பருவதங்களிலேயுண்டான விரத்தினங்களையும் விட அதிசயித்திருக்கிறது. அவ்வண்ணமே, வெள்ளியும் பொன்னுந் திரவியங்கள் விளைகிற ஸ்தலத்திலே யகப்படுகிறபோது அநேக மண்ணோடேயு மசுத்தங்களோடேயுங் கலந்திருக்கிறபடியினாலேயதுகளெல்லாம் பிரகாசமா யிருக்கத்தக்கதாகவுஞ்சுத்தமாயிருக்கத்தக்கதாகவு மநேக மிடங்களிலே கழுவி மகா பிரயாசத்தோ டுருகப்பண்ணவேணும். வச்சிரமுதலான விரத்தினங்களோவென்றால் பருவதங்களிலேயின் றெடுத்ததற்குப் பிற்பாடு எத்தனை யெச்சரிக்கையோடேயும் பிர

யாசத்தோடேயுந் தகுமான ரூபங்களைக் கொண்டிருக்கிற
தற்குச் செப்பனிடவேணும். முத்துக்களோ வென்றால்,
எத்தனை பெரிதாயிருந்தாலுஞ் சிப்பியிலே நின்றெடுத்த வு
டனே யிராசாக்களுடைய கிரீடத்திலே பதிக்கலாம். அதற்
கொன்று கூட்டவுங் குறைக்கவுந் தேவையில்லை; சமுத்
திரத்துக்குள்ளேதானே முத்தானது சாங்கோபாங்கமாய்
முடியும். இப்போது பவளத்தின் விசேஷத்தைக்கேள்:
பவளமானது சின்னச் செடிபோலே சமுத்திரத்தினு
டைய * கயத்திலேயுங் கடலிலே யுண்டான பாறைகள்
மேலேயு முளைத்துவரும். பவளங்களெல்லாஞ் சிகப்பா யி
ருக்கிறதென்று விசாரிக்கவேண்டாம். சகல வர்னங்களை
யுங் கொண்டிருக்கிற பவளங்களுமுண்டு.நாமுங் கண்டோம்.
சில செடிகள் பலபல வர்னங்களைக் கொண்டிருக்கிற
கொம்புகளைத் தரித்திருக்கிறது. மற்றுமுண்டான செ
டிகளில பழமும் விரையு முண்டாயிருக்குமாப்போலே
பவளச் செடிகளுக்குக் கொட்டை யுண்டென்று விசாரிக்க
வேண்டாம். கொம்புகளிலே நின்று பால்போலே யிரண்டு
மூன்றுதுளி தரையிலே விழுந்து வேறே பவளச் செடிக
ளுக்கு விரையாயிருக்கும். பவளங்கள் சமுத்திரத்துக்
குள்ளே யிருக்கும்போ தத்தனை கெட்டியாயிராம லாகா
சத்திலே வந்தபிற்பாடு மாத்திரங் கல்லுப்போலே
போம். கடைசியிலே சில அம்பரானது கோமேதகம்
போலே யிருக்கும். வேறே சில அம்பர் சாம்பல் வர்
ணம்போலே யிருக்கும். அப்படிப்பட்ட அம்பர் சமுத்
திரத்துக்குள்ளே யுண்டான வூற்றுக்களிலே நின்று புறப்
பட்டு அலைகளினுடைய அசைவினாலே யடிபட்டுப் ப
ரிமளத்தையு முச்சித குணத்தையுஞ் சுவிகரிக்கிற தென்கி
றார்கள். வேறே சிலபேர்கள் காளான் மணலிலே வெடிக்
கிறாப்போலே கடலிலே யுண்டான கயத்தின் மணலுக்
குள்ளேயாகிலு மவ்விடத்தின் பாறைகளின் வெடிப்புக
ளிலே யென்கிலும் புறப்பட்டுப் பெரும் புயல்களினாலே ச
முத்திர மசைக்கப் படுகிறபோது அம்பரென்கிறதைப் பி
டுங்கி யங்கேயு மிங்கேயுந் தள்ளிக் கரையிலொதுக்கிப்போ
டுமென்கிறார்கள். சிலபேர்கள் அம்பரானது ஒருவகைத் தே
னென்று சொல்லுகிறார்கள். அதெப்படியென்றால் சமுத்

* ஆழம்.

திரத்தி ஞோரத்திலுண்டான பருவதங்களிலே தேனீ தே னைவைத்து அந்த இராட்டு சூரியனுடைய கதிர்களினாலே சூ ழப்பட்டு உஷ்டணத்தின் மிகுதியினாலே பேர்ந்துபோய்ச் சமுத்திரத்திலே விழுந்ததினாலே யடிபட்டு அதினுடைய நல்ல குணங்களைச் சுவிகரித்துக் கரையிலே தள்ளுண்டு போம். *இப்படிப்பட்ட முத்துக்களும் பவளங்களும் அம் பர்களுங் கண்களுக்கு மகா அலங்காரமாய்க் காண்பிக்கிறது மல்லாம வெதுகளுடைய பொடி யெண்ணப்படாத மருந்துக ளுக்குமாகும்.

இப்போதைக்கு வேறே சந்தேகத்தை நிவாரணம் பண்ணுவோம். அதெப்படியென்றால், இத்தனை யாறுகள் சமுத்திரத்தில் விழுந்ததற்குப் பிற்பா டித்தனை வருஷ காலஞ் சமுத்திரம் பெருகாம லிருக்கிறதென்ன? இதற் குப் பிரத்தி யுத்தரத்தை விவரமாய்க்கேள். ஒரு நாளை யிலே சகல வாறுகள் சமுத்திரத்திலே விழுகிற தண்ணீ ரெல்லாஞ் சமுத்திரத்தினுடைய பெருக்குக்கு வேற்றுமை காண்பிக்க அவகாசமில்லை. அவ்வண்ணமே பூலோகமா னது மேல் தாக்கிலே யேறக்குறைய பாதி பூமியிருக்கப் பாதி தண்ணீரிருக்கச் சகலமான ஆறுகளிற் கடலிலே வி ழுகிற தண்ணீரெல்லா முன்சொல்லப்பட்ட விஸ்தீரணத் திலே பரம்பிச் சிதறின லொரு விரற்பிரமாணமுதலா யுய ரங் காண்பியாது. பின்னேயு மாறுகளுடைய தண்ணீர் சமுத்திரத்தி லோடுகிறபோ ததற்குச் சரியாக வொன்றில் பூமிக்குள்ளாக விருக்கிற வாய்க்காலுக்குள்ளேயு மொன் றில் மேகங்களுக்கு ஆவிகளாகவும் போகப்பண்ணும். ஆனால் சமுத்திரத்திலே தண்ணீரில்லாமற்போனால் சர்வலோகத் திலேயுள்ள ஆறுகளெல்லாந் தண்ணீரினாலே நிறைந்திருந் தால வேறே சமுத்திர முண்டாயிருக்கிறதற் கெத்தனை நாள் எத்தனை வருஷஞ் செல்லும்? இதெல்லாம் நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற் கறியவேண்டினதாவது: கடலினுடைய ஆழமானது கடற்கரையின்கிட்ட கொஞ்சமாயிருந்தாலும் நடுவேயு மற்ற ஸ்தலங்களிலேயும் வெகு வேற்றுமை காண் பிக்கும். அநேகம் பெரிய விராசாக்களு மிராயருஞ் சமுத் திரத்தினுடைய ஆழத்தை யறியத்தக்கதாகத் தாற்பரிய மாயிருந் தெங்குங் கப்பல்களை யனுப்பி சமுத்திரத்தினு

டைய கயத்தைச் சோதிக்கச்சொல்லி சமுத்திர சாஸ்திரி களுக்குக் கட்டளையிட்டார்கள். அந்தப்பிரகாரமாக அநந்தம் பேர்களெங்கும்போய்ச் சோதித்ததற்குப் பிற்பாடு சில விடங்களிலே நூறுபாகம், சில ஸ்தலங்களிலே யிருநூறுபாகம், வேறே ஸ்தலங்களிலே ஐந்நூறு பாகமாகக்கண்டது முன்றி வேறே சில விடங்களிலே கயங்கண்டுபிடிக்கமாட்டாமலும்போனார்கள். ஆனாலிது அபுரூபம் இதெல்லா மிப்படியிருக்கையி லெங்கும் 200 பாக முண்டென்று விசாரித்துக் கொள். பின்னையும் பூலோகத்திற் பெரிய ஆறுகளுஞ் சின்ன ஆறுகளு மெத்த வுண்டாயிருந்தாலும் பெரிய ஆறுகளுடைய அளவைக்குறைத்துச் சின்ன வாறுகளுடைய அளவைப் பெருக்கி யிந்த வாறுகளெல்லாந் தங்களுக்குள்ளே சரியாயிருக்கிறதென்று விசாரித்துக்கொள். ஒவ்வோ ராறு 10 பாக மாழமாயிருக்க 1,000 பாக மகலமாயிருக்க ஒரு தாசுக்குள்ளே 10,000 பாகமோட இப்படிப்பட்ட 10,000 பாக மென்னவென்று லிந்தச் சிமைக்காத மொருகாதமுங் காதத்தில் மூன்றத்தொரு பங்குமாகும். சமுத்திரத்திலே விழுகிற ஆறுகளைச் சோதித்த சமுத்திர சாஸ்திரிகளெல்லாருமாக 3,602 ஆறுகள் கண்டதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், துற்க நக்ஷத்திரத்தின் கீழேயிருக்கிற ஆறுகளையு மதற்கு விரோதமான பக்கத்திலிருக்கிற நதிகளையும் குளிர் நிமித்தமாக வறிகிறது மகா வருமையா யிருக்கிறபடியினாலே யின்னம் 400 கூட்டி ஆக 4,000 ஆறுக ளுண்டென்று விசாரித்துக்கொள். ஒவ்வொரு ஆறும் ஒவ்வொரு காவேரியென்று நினைத்துக்கொள். இப்படியே, 4,000 காவேரி இடைவிடாமல் தண்ணீரில்லாத சமுத்திரத்திலே விழுந்தால் முழுதும் நிரம்புகிறதற்கு 30 வருஷமும் 6 மாதமுஞ் செல்லும். ஒரு காவேரிமாத்திரம் விழுந்தால் 1,21,092 லக்ஷத்து இருபத்தொராயிரத்தித் தொண்ணூற்றிரண்டு வருஷஞ்செல்லும். இப்போதைக்குச் சமுத்திரத்தினுடைய தண்ணீருப்புத் தண்ணீராக விருக்கிறபடியினாலே பாரங்களைச் சுமக்கிறதற் கதிகமான பல முண்டென்று சொன்னோமே, அந்த நியாயத்தினாலே சிலகப்பல்கள் விக்கினமில்லாமற் கடலிலே யோடினதற்குப் பிற்பாடு நல்ல தண்ணீருள்ள ஆறுகளிலே வந்தவுடனே யமுழ்ந்திப் போயிற்று. கடைசியிலே எந்தத் தண்ணீர் நன்றாயிருக்குதென்

றறியவேணுமானால் எந்தத்தண்ணீர் லகுவாயிருக்குதோ வதுவே நல்ல தண்ணீர். ஆனாற் சில வஸ்துக்க ளமிழ்ந் திப் போகிறதென்னும் சிலதுகள் மிதக்குகிறதென்று மறி யவேணுமால் எந்த வஸ்து தனது அந்தஸ்துக்குத் தக்கது தண்ணீரைப் பார்க்க லகுவாயிருக்கிறதோ அதுவும் அமி ழ்ந்திப்போம். எந்த வஸ்து தனது அந்தஸ்துக்குத் தக்க தண்ணீரைப் பார்க்க லகுவாயிருக்கிறதோ அது மிதக்கும். இந்தப்பிரகாரமாகச் சின்ன மணல் தண்ணீரில் விழுந்தா லழுந்திப்போம் பெரிய விட்டஞ் சமுத்திரத்தில் விழுந் தால் மிதக்கும். அவ்வண்ணமே விட்டத்தைப் பார்க்கச் சிறுமணல் இலகுவாயிருந்தாலு மந்த மணல் ரூபத்துக்குத் தண்ணீர் வார்த்து நிறுத்தால தண்ணீரைப் பார்க்க மணல் கனமாயிருக்கும். விட்டமோ வென்று லந்த ரூபத்துக்குத் தக்க தண்ணீர்வார்த்து நிறுத்தால் விட்டம் தண்ணீரைப் பார்க்கலகுவாயிருக்கும். இதெல்லா மிப்படி யிருக்கையிலே கர்சுதண்ணீரிலே விழுந்தா லமிழ்ந்திப் போகிறதென்ன. குடிக்கிற செம்பு மிதக்கிற தென்ன? செம்பு ஆகாயத்தினா லே நிறைந்திருக்கிற படியினாலே யந்த ஆகாயமுஞ் செம்பு மதற்குச் சரியான தண்ணீரைப் பார்க்க லகுவாயிருக்கும்.

## ௧0–ம். அதிகாரம்.

### மீன் விபரம்.

நாலு பூதியங்களுக்கும் அஸ்திவாரமா யிருக்கிற பிரிதி வென்கிற பூதியத்துக்குச் சம்பந்தமா யிருக்கிற வநேகவதி சயங்களை யிந்த அதிகாரத்திலே சர்வேஸ்வரனுடைய கிரு பையைக் கொண்டு வெளிப்படுத்துகிறோம். ஆனா லவை களெல்லா மனதிலே நன்றாய்த் தரிக்கிறதற்கு நம்மாலே யுண்டாக்கப்பட்ட லோகப்பிரமாண சாஸ்திரத்தி லெழுதி யிருக்கிற காரியங்களிற் சிலதைச் சங்க்ஷேபமாக விங்கேசொ லலிக்காட்டுவோம்.

அதெப்படியென்றால், 16 கீற்றுகொண்டது ஒரு வி ரல். 16 விரல் கொண்டது ஒரு பாதம். 5 பாதங்கொண்டது ஒருபாகம். 3,000 பாகங்கொண்டது ஒரு காதம்இப்படிப்

ட்சாஸ்திர காதத்தைக் கெட்டிக்கார னொருத்த னொரு தாசுக்குள்ளே நடப்பான். இப்படிப்பட்ட காதங்கள் பூலோகத்தைச் சுற்றிக்கொண்டு வருகிறதற்கெத்தனை காதமிருக்கிறதென்று கண்டு பிடிக்கிறதற்கு முன்னே கடலும் பூமியுமென்கிற பூலோகத்தின் ரூபத்தையும் ஸ்தலத்தையும் பராமரிக்கக்கடவோம். அதெப்படியென்றால்; சர்வலோகத்திலே பூலோகமானது நடுவாயிருக்கிறதென்றும், வட்ட ரூபமாயிருக்கிறதென்றும், எளிதா யொப்புவிக்கலாம். அதெப்படியென்றால்; முதலாவது.—பூலோகத்தி லெந்த ஸ்தலத்திலே யிருந்தாலும் பரமண்டலங்களுடைய பாதியை யெப்போதுங் காணலாம்.

2-வது —பன்னிரண்டிராசிக ளிடைவிடாம லசைந்து கொண்டிருந்தாலும் தரிசன சக்கரத்தின்மே லெப்போதும் [illegible]

3-வது.—ஒரு நக்ஷத்திரம் அஸ்தமிக்கிறபோ ததற்கு முழுது மெதிராயிருக்கிற வேறொரு நக்ஷத்திர முதயம் பண்ணுகின்றது.

4-வது.—தரிசன சக்கரத்திலே சந்திர கிராணம் வரும்போது சந்திரனுஞ் சூரியனு மெதிராகத் தரிசன சக்கரத்தி லிருக்கிற தென்று காணலாம்.

5-வது.—சம சக்கரத்தின் கீழே யிருக்கிற சனங்களுக்கு இரவும் பகலுஞ் சரியாயிருக்கின்றது. ஆகையாற் பூமி சர்வலோகத்தினுடைய மையத்தி லிலலாமற்போனால் முன் சொல்லப்பட்டவர்களுக் கிரவும் பகலுஞ் சரியா யிருக்கப் போகிறதில்லை.

6-வது.—சந்திர கிராணம் சூரிய னெதிராக நிற்கிறதினாலேயும் பூமியினுடைய நிழலினாலேயும் வருகிறதல்லோ? ஆனால் பூமி சர்வலோகத்தினுடைய மையமாயில்லாதிருந்தாலுஞ் சந்திரனுடைய கிராண மிருக்கலாம். ஆனபடியினாலே வெவ்வேறே அபத்தங்க ளெல்லாஞ் சொல்லாதபடிக்குப் பூமி சர்வலோகத்தினுடைய மையமா யிருக்கிறதென்று சொல்லவேண்டியது.

இப்போதைக்குப் பூமியானது உண்டைபோலே வட்டரூபமாயிருக்கிறதென்று கெட்டியுள்ள நியாயங்களாலே

யொபபுஷககலாம. அமதபபடியெனறால, முதலாவது.—சந்திரகிராணங்கள் வரும்போது பற்பல ஸ்தலங்களிலே வாசமாயிருக்கிற வநேகஞ் சனங்க ளிப்படிப்பட்டகிராணங் களை யொருமிக்கக் கண்டாலு மப்படிப்பட்ட பலபல ஸ்த லங்களிலே வெவ்வேறே காலங்களிருக்கும். சில பேர்க ளுக்குச் சூரிய னஸ்தமிக்கிறது. சில பேர்களுக்கு அஸ்த மித்து ஒருசாமம். வேறே சில பேர்களுக்கு நடுச்சாமம். ஆகையாற் பூமி வட்டரூபமா யில்லாதிருந்தா லிந்தக் கால வேற்றுமை காண்பிக்கமாட்டாது.

2-வது.—வடக்கேயிருந்து தெற்கே செவ்வேபோனால் துற்க நக்ஷத்திரங் கீழே காண்பிக்கும். பின்னையுந் தென் பக்கத்திலே மறைந்திருக்கிற நக்ஷத்திரங்கள் நவமா யுதயம் பண்ணும். கடைசியிலே • தெற்கேயிருந்து வடக்கேபோ னால் துற்க நக்ஷத்திர மேலே யேறுகிறுப்போலே காண்பிக் கும். ஆனபடியினாலே பூமி யுண்டைபோலே வட்டரூப மா யில்லாமற்போனா லிந்த விசேஷங்களை யொருக்காலுங் காணப்போகிறதில்லை.

3-வது.—சமுத்திரத்தி லோடுகிற கப்பல்மேலேயுண் டான சனங்கள் முந்தமுந்தப் பருவத்தினுடைய சிகரத் தைப் பார்ப்பார்கள். பின்னையும் போகப்போக மலையி னடிவாரத்தைக் காண்பார்கள். இந்தப் பிரகாரமாய்த் தூ ரத்தி லெதிராக வருகிற வேறே கப்பலின் பாய்மரத்தினு டைய நுனியை முந்தமுந்தக் கண்டதற்குப்பிற்பாடுமுழுக் கப்பலையுங் காண்பார்கள். ஆனபடியினாலே சமுத்திரமும் பூமியோடேகூட வட்டரூபமா யிருக்கிறது. இதன்றியே ஆறுகளெல்லா மிடைவிடாமற் சமுத்திரத்தில் விழுகிறதே. ஆனபடியினாலே சமுத்திரத்துக்கும் பூமிக்கு மொரு மை யக்கம்பி யுண்டாயிருக்கும்.

4-வது.—பூமி வட்டரூப மல்லாதேபோனா லநேக மபத்தங்களையெல்லாஞ் சொல்லவேண்டி யிருக்கும். அதெ ப்படியென்றால், பூமிமேலே யிருக்கிற சனங்களெல்லாருக் குஞ் சந்திரனுஞ் சூரியனு மொருமிக்க வொரு க்ஷணத்தி லே காண்பிக்கும். இதன்றியே சில பேர்களுக்குச் சூரிய னுதயம் பண்ணி மத்தியானமட்டு மிரண்டு சின்ன நாழி

கை மாத்திரஞ் செல்லும். மத்தியானந் துவக்கி யஸ்தமித் துமட்டு மிருபத்தெட்டு நாழிகை செல்லும். வேறே பேர் களுக்கு இதற்கு விரோதமாகக் காண்பிக்கும். ஆனபடியி னு லிப்படிப்பட்ட அபத்தங்களை யெல்லாஞ் சொல்லாதப டிக்குப் பூமி யுண்டைபோலே வட்டரூபமா யிருக்கிறதெ ன்று சொல்லவேண்டி யிருக்கின்றது.

இதன்றியே பூமி வட்டரூபமாக விருக்கச்சே யதினு டைய அளவு பிரமாணத்தை நன்றாய்க் கண்டுபிடிக்கிற தற்கு முந்தமுந்த பூமியினுடைய வளையத்தை யறியவே ணும். அதெப்படியென்றால் பூமியினுடைய வளையம் 7920 காதவழி இப்படிப்பட்ட வளையத்தினுடைய மையக் கம்பி 2,520 காதம். இப்படிப்பட்ட மையக் கம்பியினு டைய பாதி 1,260 காதவழி. இப்படிப்பட்ட மையக்கம்பி யினுடைய பாதியைவளையக்கதிரென்று சொல்லுவார்கள். பின்னையும் பூமியின்தாக்கு ரூபமான புறத்திப் பக்கமெல் லாம் 1,99,58,400, கோடியே. தொண்ணூற்றொன்பது ல க்ஷத்து ஐம்பத்தெண்ணாயிரத்து நானூறு காதவழி. இப்ப டிப்பட்ட பூமியை யிரண்டாய்ப் பிளந்தால் மேற்பக்கத்தி லே 49,89,600 நாற்பத்தொன்பதுலக்ஷத்து எண்பத்தொன் பதினாயிரத்து அறுநூறு காதவழி. கடைசியிலே பூமியெல் லாங்கூட வுள்ளேயும் புறத்தியிலேயு மெல்லாமாகிய அளவு. 838,25,28,000 எண்ணூற்று முப்பத்தெட்டு கோடியே இரு பத்தைந்து லக்ஷத்து இருபத்தெண்ணாயிரங் காதவழியான படியினாலே பூமிக்குள்ளே யெத்தனை மணலிருக்கலாமென் று இந்த அளவைப் பார்த்துச் சுமுத்தினாயாகச் சொல்ல லாம். இப்படிப்பட்ட அளவுப் பிரமாணத்தைக் கெட்டி யுள்ள நியாயங்களினாலே நம்மாலுண்டாக்கப்பட் டிருக்கிற லோகப் பிரமாணமென்கிற புத்தகத்தி லொப்புவித்திருக் கின்றது. அதுகளையறிய மனதுள்ளவர்கள் அதை வாசித் து அறிந்துக்கொள்ளக் கடவார்கள்.

இப்பொது சில வுதியசமான சந்தேகங்களுக்குப்பிற த்தியுத்தரஞ் சொல்லுவோம். அதெப்படியென்றால், ஒ ரு ஏணிமேலே யிரண்டு மனுஷ ரொருமிக்கக் காலெதிராக வைத்துக்கொண்டு ஏறுகிற வகை யென்ன? முப்பத

டி யேணியென்று விசாரித்துக்கொள். அந்த வேணி பூமியினுடைய மையத்திலே பதினைந்தடி யிருக்க. இ ரண்டுபேர் அவனவ னெதிராகக் கால் வைத்துக்கொ ண்டு அதினுடைய விரண்டு தலைப்பிலேயு மாளுக்கொ ரு தலைப்பிலே யேறலாம். அவ்வண்ணமே சர்வலோ கத்துக்கும் பூமி மையமாயிருக்க, பூமியினுடைய மையமா னது சகலமான வஸ்துக்களைப்பார்க்கக் கீழ்த்தரமான ஸ்த லத்திலே யிருக்கும். ஆனபடியினாலே யந்த மையத்துக் குத் தூரமாய்ப் போகிறவர்களும் வருகிறவர்களு மவசியமா யேறுவார்கள். இதல்லாமற் பூலோகத்தி லுண்டான கண் டிப்புள்ள வஸ்துக்களெல்லா மந்த மையத்துக்குப் போகிற தற்குச் சுபாவமா யிழுக்கப்படும். அந்த நியாயத்தினாலே பூலோகம் வட்டரூபமாக விருக்கும்போது வேறே பக்கத் தில் நமக் கெதிராக நிற்கிறவர்கள் நம்மைப்போலே சுபாவ மாய் நிற்கிறார்கள். அவ்வண்ணமே சுபாவமா யந்த மையத் துக் கிழுக்கப்படுமாப்போலே யவர்களும் பூமியின் மையத் துக் கிழுக்கப்படுவார்கள். அவர்களுடைய இருப்பைச் சில பேர் கண்டுபிடிக்க மாட்டாதிருக்கிறாப்போலே நம்முடைய விருப்பை யவர்களுங் கண்டுபிடிக்கமாட்டார்கள். இத்தன் மையாக விரண்டு சுவர் பூமியிலே செவ்வே வைத்திருந்தா லந்தச் சுவர் உயர ஏறவேறப் பிரிந்துபோம். பூமிக்குக் கீழே மையத்துக்குப் போகப்போக வொன்றித்துப்போம். அந்த நியாயத்தினாலே வட்டமுள்ள பூமிமேலே வளையா மற் செவ்வையா யிருக்கிற பாலத்தின்மேலே மனுஷர் நடந் தால் சிலநா ளதிலே நடந்ததற்குப் பிற்பாடு போகப்போ கப் பூமிமேலே சாய்ந்துபோய்க் கடைசியிலே கட்டாயத்தி னாலே விழுவார்கள். இந்தப் பிரகாரமாகப் பூமி வட்டரூ பமா யிருக்க வதின்மேலே நடக்கிற மனுஷர் பூமியின் வளை யத்திலே நடக்கிறபோது பூமியின்மேலே கால் நடந்த தூ ரத்தைப்பார்க்கத் தலை யதிகமானதூரம் நடந்ததென்கிற தற்குத் தப்பாது.

இப்போது பூமியெல்லா மூன்று விதமாய்ப் பிரி கிறதென் றறிவாயாக. சம சக்கரத்தின் கீழே யிருக் கிற பூமியானது சூரியனுடைய வுக்கிரத்தினாலே விசே ஷமாய்ச் சுடப்படும். இரண்டு பக்கத்திலேயுஞ் சூரிய

ளை நிறுத்து சக்கரமட்டு மதற்குள்ளே யுண்டான பூமி யில் விசேஷமா யுஷ்டண முண்டென் றறிவாயாக. பின் னையுந் துற்க நக்ஷத்திரத்தின் கீழேயு மந்த நக்ஷத்திரத் துக் கிருபத்து மூன்றரைப்பாக மிப்பாலேயு மிருபத்து மூன்றரைப் பாக மப்பாலேயுமாக வொரு வளைய முண்டே யந்த வளையத்தின் கீழே யிருக்கிற சனங்களுக்குச் சொல் லப்படாத குளிர்கால மதற் கெதிராக விருக்கிற பூமியிலே யு மிப்படி யோசிப்பாயாக. இந்தக் குளிருள்ள பூமிக்கு முஷ்டணமுள்ள பூமிக்கும் நடுவிலே வடக்கேயுந் தெற் கேயு மட்டுள்ள பூமியென்று சொல்லப்படும். உஷ்டண சீமையி லுண்டான சனங்களுக்குத் தலைக்கு நேரா யொரு வருஷத்தி லிரண்டுவிசை சூரிய னிறங்குகிறது. அப்போ து மத்தியானத்திலே நிழலில்லை. மற்றச் சமையங்களிலே சிலவிசை வடக்கே நிழல் சாய்ந்து போகிறது. சிலவிசை தெற்கே சாய்ந்துபோகிறது. சம சக்கரத்தின் கீழே யிருக் கிறவர்களுக் கெப்போது மிரவும் பகலுஞ் சரியாயிருக்கும். ஆனால் சம சக்கரந் துவக்கி நிறுத்து சக்கரமட்டு முத்தர பக்கத்திலே கீழாயிருக்கிற சனங்களுக்குச் சூரியனுடைய வுத்திராயணத்தி னிமித்தமாகத் தினந்தினம் பகல் நேர மதிகமதிகமாய் வர்த்திக்கும். இராக்காலம் குறையும். தெற் கத்தியருக்கு இதற்கு விரோதமா யோசிக்கக் கடவாய் பின்னையும் வடக்கத்தியரில் சூரியனை நிறுத்துகிற சக்கரத் தின் கீழிருக்கிற சனங்களுக்கு ஆனிமாதம் பதினொந்தாந் தேதி பகல் பதின்மூன்றரை தாசும், மார்கழிமாதம் பதினொந் தாந்தேதி பகல் பத்தரை தாசு மிருக்கும். குறையெல்லா மிராத்திரி, முன் சொல்லப்பட்ட பெரிய பகலிலே சூரிய னவர்கள் தலைக்குநேரா யிருக்கும். சின்னப்பகலிலே சூரி யன் நாற்பத்தேழரை பாகந் தூரமாய்த் தெற்கே யிருக்கும். இந்தச் சீமைகளிலேயோ வென்றால் பெரியபகல். பதின் மூன்றே முக்கால் தாசு. சின்னபகல் பதின்மூன்றேகால் தாசும், மற்றுமுள்ள பூமிமேலே யிருக்கிற சனங்களுக் கோவென்றால் சூரிய னொருக்காலு மவர்கள் தலைக்குநேரே வராது. வடக்கத்தியருக்கு நிழ லெப்போதும் வடக்கே போகிறது. சூரியன் சம சக்கரத்திலே யிருக்கிறபோது மாத்திரம் லோகமுழுதும் இராப்பகல் சரியாயிருக்கிற தல் லாமல் மற்றுமுண்டான நாட்களிலே சூரிய னுத்தராய

ணத்திலே ஆனிமாத மிருபத்தோராந்தேதிமட்டுந் தினந்தி னம் பகல் வர்த்திக்கும். அந்நாள்துவக்கி மார்கழிமாத மிரு பத்தோராந் தேதிமட்டும் தக்ஷணாயநத்தி னிமித்தமாகத் தினந்தினம் பகல் குறைந்துபோம். அவர்களுக்கு அரு ணோதயமு முன்மாலையும் பெரிதா யிருக்கும். துற்க நக்ஷத் திரத்துக்குக் கீழே சனங்களுண்டா யிருந்தா லவர்களுக்கு ஆறுமாதஞ் சூரியனைக் காணமல் முழு விராத்திரி. வேறே யாறுமாத மிராவில்லாம லெப்போதும் பகலா யிருக்கும். பின்னையுஞ் சந்திரனை மாதந்தோறு மிடைவிடாமற் பார்ப் பார்கள். பதினைந்துநாள் காணதிருப்பார்கள். சூரியனையுஞ் சந்திரனையும் பார்க்கும்போது உதயமு மஸ்தமிப்பு மில் லாம லிடைவிடாமலவர்களைச் சுற்றிக்கொண்டு வரும். அ வர்களுக்கு நக்ஷத்திர வுதயமு மஸ்தமிப்பு மில்லை. பாதி நக்ஷத்திரங்களை யெப்போதுங் காணலாம். அவர்களுக்குக் கீழ்காற்று மேல்காற்றும் வடகாற்று மில்லை. எப்போதுந் தென்றல் மாத்திர மிருக்கும்.

இதற்கப்பா லறிய வேண்டினதாவது; யாதாமொருத் தன் பூலோகத்தைச் சுற்றிக்கொண்டு போன லந்தப்பயண த்திலே கிழக்கு முகமா யெப்போதும் நடந்தால் புரப்பட் ட ஸ்லத்துக்குத் திரும்ப வரும்போது அதற்கு முந்தித் த மக்கு வயதிலே சரியா யிருக்கிறவர்களைப் பார்க்க வொருநா ளவனுக் கதிகமா யிருக்கும் ஆனல் மேற்கு முகமாக யெப் போதும் நடந்தா லிதற்கு விரோதமான வகையோடே யோசித்துக்கொள். இதற்குக் காரண மேதென்றல் கிழக் கே போகிறவன் சூரியனுடைய அயனத்தின்படியே நடந் ததினலே யுவசியமாய்ப் பூலோகத்தைச் சுத்திக்கொண்டு வருகிறதற் குள்ளே யொருநா ளதிகமாயாயிருக்க வேணும். ஆனல் மேற்கே போகிறவர்கள் சூரியனுடைய அயனத்துக் கெதிராகப் போகிறதினலே யொருநாள் குறைந்து போம்.

இப்போதைக்குப் பருவதங்களுடைய அளவு சங் க்ஷேபமாகச் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென் று லந்தப் பருவதங்களுடைய நுனிமேலே யேறுகிறதற்கு மூன்று காத தூரத்துக் கதிகமா யிருந்தாலும் பூலோகத்தி லிருக்கிற பருவதங்களுக்குள்ளே யொரு மலையுரனலும்

நுனிக்கும் அதற்கு நேரான அடிக்கும் இந்தச்சிமைக்கா தத்தில் ஒன்றைாக்காத மில்லையென்று சாஸ்திரிகள் சங்கே தம் பண்ணினார்கள். இதுவு மெளிதாயொப்பு விக்கலாம்.

இங்கே சாஸ்திர வெத்தனங்களில்லாமல் மலைகளி னுடைய உயரத்தை அளவெடுக்கும் விதங் காண்பிக் கப்படுவது. முதலாவது.—எந்தமலையை உயரமறியவேண் டியிருக்கின்றதோ அந்தமலையி னடிவாரத்தின் சமபூமியிற் சிலவடிகளுக் கிப்பால் ஓர் கொம்பை நிறுத்தி அக் கொம்பி னுனிக்கும் மலையி னுச்சிக்கும் பொருந்தும் படியான இ டத்தி லுட்கார்ந்து பார்த்துக் கொம்புநின்ற இடத்திற்கும் பொருந்தப்பார்த்த விடத்துக்குமுள்ள அளவை யெடுத் துக் கொள்ளுகிது. 2-வது.—முன்கொம்பு நின்றவிடத் திற்கும் பொருந்தப்பார்த்த விடத்திற்கும் நேராகவே பின் னுஞ் சில அடிகளுக்கிப்பால் முன்னிறுத்திய கொம்பையா வது அல்லது அதற்குச்சரியான வேறொரு கொம்பையாவ து நாட்டி முன்போலவே யிதற்கும் மேற்படி மலையின துச்சிக்கும் பொருந்தும்படியான விடத்திற்குப்போய் உட் கார்ந்து பார்த்து இதையு மளவெடுத்துக்கொண்டு முன் தொகையை இதிற்கழித்து மீதினிற்குந் தொகையைக் குறித் துக்கொள்ளுகிறது. 3-வது.—முதற்கொம்பு பொருந்தும்ப டி உட்கார்ந்துபார்த்த விடத்திலிருந்து இரண்டாவதுகொம் புபொருந்தப்பார்த்த கடைசியிடமட்டும் ஏகாண்டத்திற் கொரே அளவா யெடுத்துக் கொண்டு இதைமுன் சொல் லிய கொம்புகளி லொன்றி னளவாற் பெருக்கிக் கூடிய தொ கையை முன் கழித்த மீதியை குறித்துவைத்திருக்குந் தொகை யாற் பிரித்தால் என்னவருகின்றதோ அதுதான் மலையினு யரமென் றறியவும்.

இதெல்லா மிப்படி யிருக்கையிலே மேகங்கள் பெரிய பருவதங்களின் மேலே முதலாய் நிற்கிறது அபூருபமா யிருக்கும்போது மேகமான் தெத்தனை யுயரமா யிருந்தாலு மூன்று காதவழி தூர மிருக்கமாட்டாது. இந்தப் பிரகார மாக்க் காற்றுக ளிந்தப் பருவதங்கள் மேலே வீசுகிறதில்லை. இதற்கடையாள மேதென்றால், அந்த மலைமேலே கிடக் கிற தூசிமே லெழுதின வெழுத்து பத்து வருஷத்துக்குப் பிற்பாடு பார்க்கிறபோ தப்படியே யிருந்தது. அந்தபருவ

தங்கள் மேலே காற்றடிக்கிற தென்று சொன்னாலு மகா அபுரூபமா யிருக்கிறதல்லாம லந்த நுனியைப் பார்க்க வுயரங் கொஞ்சமாயிருக்கும்.

கடைசியிலே பருவதங்களுக்குள்ளே யுண்டான விரத்தினங்களுடைய விவரத்தையுந் திரவியங்கள் விளைகிற ஸ்தலங்களிலே யுண்டான பஞ்சலோகத்தினுடைய சில விசேஷங்களையுஞ் சுருக்கத்திற் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால்; வச்சிரம், வயிடூரியங், கோமேதகம், புட்பராகம், தாளம், மரகதம், நீலம், பவளம், கெம்பு ஆக வொன்பது வகை இரத்தினங்கள் முதலான வநேக மாணிக்கங்கள் மலைக்குள்ளே யுண்டான வெடிப்புகளுக்குள்ளே யிருக்கும். உருகின மணலாலே வளைய லுண்டாக்கப் படுகிறாப் போலேயிருதுவான அங்கிஷங்களினாலே முந்த முந்த வுண்டாக்கப்பட்டுப் பிறகு கல்லுப் போலே கெட்டியாய்ப் போம். முன் சொல்லப்பட்ட அங்கிஷங்களினாலே யுண்டாக்கப் பட்டாமற்போனா லொருக்காலு மிந்தப் பிரகாசம் வராது. வேறே சிலபேர்கள் உப்பு மண்மேலே தண்ணீர் விட்டால் மறுபடி யுப்பாய்ப் போகிறாப் போலே வெடிப்புகளுக் குள்ளே யுண்டான மாணிக்கங்களை யுண்டாக்குகிற தற்கு வேண்டியதா யிருக்கிற அங்கிஷங்கள் தண்ணீரினாலே யூறப்பட்டதற்குப் பிற்பாடு இரத்தனங்களாய்ப் போகிறதற்கு ஆனதா யிருக்குமென்று சொல்லுகிறார்கள். இரத்தினங்களுடைய வர்னமோவென்றால் சுபாவமாயிரத்தினங்களுக் கிராமல் பலபல காரணங்களினாலே வருமென்று சொல்லுகிறார்கள். சில சமயங்களிற் பஞ்சலோகங்களுடைய புகையினாலேயும், சில சமயங்களிலே விசேஷமான சாரத்தினாலேயும், சில சமயங்களிலே கெந்தகம் இரச முதலா னதுகளுடைய குணங்களைச் சுவிகரித்ததினாலேயும் பலபல வர்னங்களைக் கொண்டிருக்கும். அந்த நியாயத்தினாலே சில தரவாய்களில் வச்சிரமானது கோமேதக வர்ணம் போலே யிருக்கும். சில சமயங்களிலே யேறக்குறைய பச்சையானது நீல வர்ணங்களைக் கொண்டிருக்கும். மற்றுண்டான விரத்தினங்களோ வென்றால் சாங்கோபாங்கமாக உண்டாக்கப்படுகிறதற்கு முன்னே யதுகளுடைய குணங்களுக் கானவர்ணம் நன்றாய்க் காண்பியாது. இப்படிப்பட்

ட வர்ணங்களிரத்தினங்களுக்குச் சுபாவமா யிருக்க வில்லை யென்கிற அடையாள மேதென்றால். ஏறக்குறைய விரத்தினத்தினுடைய வர்ணங்களெல்லா முக்கிரத்தினாலே வெவ்வேறே விதமாய்ப்போம்.

கடைசியிலே பஞ்சலோகங்களுடைய குணங்களை யறிவிக்கத் தக்கதாக நாலைந்து வார்த்தை சொல்லுவோம். முந்த முந்த திரவியங்கள் விளைகிற ஸ்தலங்களிலே யிடைவிடாம லெண்ணெய் புகைபோலே யாவிக ளங்கங்கே யோடி யிப்படிப்பட்ட ஆவிகளும் புகைகளு மொன்றாய்க் கூடி லோகங்களை யுண்டாக்குகிறதற்கு அஸ்திவாரம். அதின்பிற கொவ்வொரு லோகத்துக்கான அங்கிஷங்க ளதனோடு கூடி வெவ்வேறே லோகங்களைப் பிறப்பிக்குமென்று பஞ்சலோக சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். வேறே பேர்க ளிரும்பல்லாமற் பஞ்சலோகமெல்லாம் இரசத்தினாலே வருகிற தென்கிறார்கள். ஆனால் ரசத்தினாலே லோகங்கள் வாராதிருந்தாலு மதுகளைச் சாங்கோபாங்கம் பண்ணுகிறதற்கு மெத்த வுதவுமென்பதிற் சந்தேகமில்லை. சில சமையங்களிலே பொன்னும் வெள்ளியும் பருவதங்களுடைய நரம்புகளாகக் கொடிபோலே யுள்ளேயும் புறத்தியிலேயு மங்கங்கே சுற்றிக்கொண்டிருக்கும். வேறே சமயங்களிலே மணல்போலே யனேக வசுத்தங்களோடே கலந்திருக்கும். அப்போதந்தத் திரவியங்களைப் பிரிக்கிறதற்கு மகா பிரயாசமாயிருக்கும். பொன் வெள்ளி விளைகிற ஸ்தலங்களேதென்றால் சில சமயங்களிற் பூமிக்குள்ளே கிடைத்திருந்தாலு மகா அபுரூபம், எப்போது மேறக்குறைய சில பருவதங்களுக்குள்ளே யிருக்கும்.

திரவியங்கள் விளைகிற பருவதங்களுடைய அடையாள மேதென்றால் கோடைகாலத்தி லந்தமலைகள் மேலே நீலமுள்ள சுவாலைகள் புறப்பட்டோடிக்கொண்டு திரியும். அவ்விடத்தின் சமீபங்களிலே ஆறுகளுண்டானால் அதிலே பொன் பொடிகள் மணலோடு கலந்திருக்கும். அந்த ஸ்தலங்கள் மேலே யனேக வுஷ்டணங்களுள்ள ஆவிகள் புறப்படும். அங்கே யொருக்காலும் பனி நில்லாது. அதிலே பெரிய மரங்கள் வளரமாட்டாது. சின்னச் செடிகளிருந்தாலு மதுகளெல்லாஞ் செத்துப்போனப் போலேயு மதுகளு

டைய இலை மஞ்சள் வர்ணமா யிருந்து தீவரமா யுதிர்ந்து போம். இப்படிப்பட்ட திரவியங்கள் விளைகிற ஸ்தலத்திலே யிரசமும் கெந்தகமுதலானதுந் திரளாய்க் கலந்திருக்கும். சில சமையங்களிலே ஊசிக்காந்தமு மகப்படும்.

இந்த ஊசிக்காந்தமானது இரும்பைத் தன்னோடு சேர்க்கவு மிழுக்கவும் பண்ணுகிற காரண மேதென்று லந்த வூசிக்காந்தத்தி லுண்டான சின்ன அங்கிஷங்க ளிடைவிடாம லத்தியந்த பலத்தோடே புறப்பட்டுக் கிட்டின ஆகாயத்தினாலே தள்ளப்பட்டுத் திரும்பத் தன்னுடைய ஸ்தலத்துக்குப் போகிறபோது இரும்புக்குள்ளே பிரவேசித்து அதைத் தன்னோ டிழுத்துக்கொண்டு போம்.

பிரதான வஸ்துக்களுடைய கனத்தை யறிகிறதற்குபாய மேதென்றால், ஒரு சதிரப் பாத்திரத்திலே யுருகின லோகங்களை வார்த்தா லெம்மாத்திரங் கன மிருக்கு மென்று நிறுத்தறியலாம். இந்தப் பிரகாரமாக வநேகம்விசை சோதனை பார்த்ததற்குப் பிற்பா டந்தப் பாத்திரத்தி லுருக்கப்பட்ட பொன்னானது நூறு பலமுண்டானா லதிலே வார்த்த இரச மெழுபத்தொன்றரைப் பல மிருக்கும். இந்தப் பாத்திரத்திலேதானே யீயம் வார்த்து நிறுத்தால் அறுபதரைப் பலம், வெள்ளி ஐம்பத்து நாலரைப் பலம், செம்பு நாற்பத்தேழுபலமும். ஒரு பலத்தில் மூன்றத்தொரு பங்கும்.பித்தளை, நாற்பத் தைந்துபலம்.இரும்பு, நாற்பத்திரண்டுபலம் மகா சுத்தமுள்ள துத்துநாகம், முப்பத் தொன்பது பலம் ஊசிக்காந்த, மிருபத்து நாலுபலம் கருங்கல் 21 பலம் கல், 14 பலம் ஸ்படிக்கம், 12 பலமு மொரு பலத்திலைந்தி லொருபங்கும், தண்ணீ ரைந்து பலமும், பலத்தின் மூன்றத்தொரு பங்கும் முந்திரிகைப் பழத்தின் ரசம் $5\frac{1}{4}$ பலம், மெழுகு 5 பலம் எண்ணெய் $4\frac{3}{4}$ பலம். இப்படியே வுயிரில்லாத வஸ்துக்களுடைய சுபாவங்களையுங் குணங்களையும் வெளிப்படுத்தினதற்குப் பிற்பாடு உயிருள்ள வஸ்துக்களுடைய சுபாவங்களையுங் குணங்களையும் வருகிற அதிகாரத்திற் சர்வேஸ்வரனுடைய கிருபையினாலே வெளிப்படுத்துவோம்.

## கக-ம். அதிகாரம்.

### வளர் சீவ வஸ்துக்களின் விவரம்.

மட்டில்லாத தயையையும் அளவில்லாத வல்லமையை யுங் கொண்டிருக்கிற பராபர வஸ்துவினாலே யுண்டாக்கப் பட்ட வுயிரில்லாத வஸ்துக்களுடைய சுபாவத்தையு மாச் சரியமான விசேஷங்களையு மாராய்ந்து பார்த்ததற்குப் பிற் பாடு, சர்வத்துக்கும் வல்லவரா யிருக்கிற சர்வேஸ்வரன் பேரி லதிக மதிகமாய்த் தோத்திரம் பண்ணுகிறதற்கும் அ வருடைய சித்தத்துக்குப் பொருந்தியிருக்கிற தருமங்களைச் சுறுசுறுப்போடே பண்ணுகிறதற்குந் தயாபரரான ஆண்ட வர் மனுஷருக் குதாரமாய்த் தந்தருளின வுயிருள்ள வஸ் துக்களுடைய சுபாவத்தையுஞ் சாதாரணமான குணங்களை யும் பராக்கின்றி பரிசோதிக்கக் கடவோம்.

முந்தமுந்த இதி லறியவேண்டினதாவது, ஜீவப்பிரா ணிகளில் மூன்றுவகை யுண்டென்று சாஸ்திரிகள் சங்கே தம் பண்ணினார்கள். முதலாவது.—வளர்சிவன். 2-வது.- பஞ்சேந்திரியச் சீவன். 3-வது.—நரசீவன். ஆகையா லிந்த வதிகாரத்திலே வளர்த்தியுள்ள சீவனுக்குச் சம்பந்தமா யி ருக்கிற வாச்சரியமான விசேஷங்களைச் சொல்லிக் காட்டு வோம்.

அதெப்படியென்றால், புல்லும் புட்பங்களும் விருக்ஷங் களும் வளர்சிவனாயிருக்கிறதென்று சொல்லுகிறோம். அவ் வண்ணமே முன் சொல்லப்பட்ட செடிகளும் பூண்டுகளும் விரையிலே யிருந்து புறப்பட்டு முளைத்து வளர்ந்து கொம் புகளாய்ப் போய் அதுகளிலே யிலைகளும் அரும்புகளுங் காய்களு முண்டாயிருக்கிறதினாலேயும் வேரிலிருந்து நரம்பு களின் வழியாகச் சாரங்கள் முழுதுமேறி யத்தியந்த கிரமத் தோடே மரத்தினுடைய அங்கிஷங்களெல்லாம் பிழைக்கிற தற் கெங்குஞ் சுற்றிக்கொண்டு போகிறதினாலேயு மிதெல் லா முயிருள்ள வஸ்துவினுடைய அடையாளமா யிருக்கும். ஆனா லிப்படிப்பட்ட விருக்ஷங்களுக்குப் பஞ்சேந்திரியங்க ளுடைய சீவனினற்பவடையாள முதலா யில்லாததினாலே யு மூர்த்திலுண்டான வதிசயங்களெல்லாம் வளர்த்தியென்

கிற வயிவிர்த்தியிலே யடங்கி யிருக்கிறதினலேயும் பூண்டுகளிலேயுஞ் செடிகளிலேயும் வளர் சீவன் மாத்திர மிருக்கிறதென்று சாஸ்திரிக ளங்கீகரிக்கிறர்கள். இப்போது புட்பங்களுஞ் செடிகளும் பூமியிலே விதைக்கப்பட்டு முளைத்து வளர்ந்து பூத்துக் காய்த்துப் பழுக்கும் வகைகளை யெவ்வளவாகிலுஞ் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால், பூண்டுகளுடைய வித்து ஈரமுள்ள பூமிக்குள்ளே விதைக்கப்பட்டிருக்கும்போது பூமிக்குள்ளே யுண்டான ஈரத்தினலேயும் புகைகளினலேயும் ஆவிகளினலேயும் நனையப்படுகிற அந்த வித்தானது ஈரிக்கப்பட்டு மிருதுவாய்ப் போம். இப்படியே நமர்ந்துபோன வித்து மதிலே யுண்டான நரம்புகளு முப்பிப்போய்ச் சிலதுகள் பூமிக்குள்ளே வேராய் விழுந்து சிலதுகள் மேலேயேறி வேரைக்கொண்டு ஆன சாரங்களைச் சுவிகரித்துச் சூரியனுடைய கதிர்களினலே யந்த சாரத்துக்கு அசைவுண்டாய் மெள்ளமெள்ள வுயர்ந்து விருக்ஷங்களாய் வளர்ந்து காய்த்துப் பழுக்கும். இதெல்லா மெவ்வளவாகிலுங் கண்டுபிடிக்கிறதற் கறியவேண்டினதாவது. பெரிய மரங்களிலே யிருக்கிறதெல்லாஞ் சுருக்கத்திலே வித்துகளிலே யடங்கியிருக்கிறதென் றறிவாயாக ஆனபடியினலே கொம்புகளு மிலைகளுங் காய்கள் முதலானதுகளும் வித்தென்கிற குறிப்பிடத்திலே காணப்படலாம். அதெப்படியென்றால், ஒரு விசேஷமான கண்ணுடி யுண்டு. அதினலே யணுக்கள்முதலாய் மகா பெரிதாய்க் காண்பிக்கும். இப்படிப்பட்ட கண்ணுடியைக் கொண் டொரு வித்தைப் பகுத்து நன்றாய்ப் பார்த்தா லந்த வித்திலேதானே மரத்தினுடைய பிரதான காரியங்களெல்லாஞ் சுருக்கத்திலே காணலாம். இதெல்லா மிரண் டுவமையினலே வெளிப்படுத்தலாம். அதெப்படியென்றால், எங்கு மடைத்திருக்கிற வறையிலே சூரியனுக் கெதிராயிருக்கிற பக்கத்திலே திட்டிவாயில் விட்டு அதைக் கதவினலே யடைத் தந்தக் கதவிலே யொரு சிறுவிரற் பிரமாணம் வட்டத் துவாரம் பண்ணின லந்தத் துவாரத்துக் கெதிராகப் புறத்திப் பட்ட வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்க ளிந்தத் துவாரத்துக்குள்ளே கூடி யெதிராக வுள்ள சுண்ணும்பினற் பூசப்பட்ட சுவரில் விஸ்தாரமாய்க் காண்பிக்கும். ஆனபடியினலே திட்டிவாயில் முன்பாக விருக்கிற சுவர், மரங்கள், மிரு

கங்கள் முதலான வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்களெல்லா மிந்தத் துவாரத்துக்குள்ளே கலப்பில்லாமற் சுருக்கத்திலே யடங்கிநுழைந்ததற்குப் பிற்பா டப்பாலே கடந்து விஸ்திரித்துச் சுவர்மேலே பெரிதாய்க் காண்பிக்கிறாப்போலே மரங்களி லுண்டாகிய பிரதான அங்கிஷங்களெல்லாஞ் சுருக்கத்திலே வித்தி லடங்கி யிருக்கிறது மல்லாமல் விஸ்திரித்ததற்குப் பிற்பாடு பாரமான விருக்ஷமாய்ப் போம். பின்னையும் பெரிய மனுஷரிடத்தி லுண்டான அவயவங்களுந் தத்துவங்களுஞ் சின்ன குழந்தையிடத்திலே சுருக்கமா யிருக்கிறாப்போலேயு மந்தச் சின்ன அவயவங்களுந் தத்துவங்களும் ஆகாரபான நிமித்தமாகப் பெரிய மனுஷனைப் போகிறாப்போலேயு மரத்தி லுண்டான வேரும் அடிமரமுங் கொம்புகளுங் கனிகளும் வித்திலே குறிப்பிடப் பிரகாரமாகச் சங்க்ஷேபமா யிருக்கிறதுந் தவிர பூமிக்குள்ளே யுண்டான சாரத்தி னிமித்தமாகவு மாவிகள் நிமித்தமாகவு மிந்தச் சின்ன தத்துவங்கள் விஸ்திரித்துப் பெரிய விருக்ஷமாய்ப் போம். இதற்கப்பா லறியவேண்டியதாவது;

மனுஷரு மிருகங்களுஞ் சருமத்தினாலே மூடப்பட்டிருக்குமாப்போலே விருக்ஷங்களெல்லாம் பட்டையினாலே மூடியிருக்கிறது. இப்படிப்பட்ட பட்டைகளுக்குள்ளே யநேக நரம்புக ளெங்கும் பரம்பி மரத்தினுடைய கொம்புகளெல்லாம் பிழைக்கிறதற்கு வேண்டிய சாரங் ளிந்த நரம்புகள் வழியாக வேறிப்பாயும். ஆனா லிப்படிப்பட்ட மரங்களிலே யித்தனை யிலைக ளிருப்பானேன்? முதலாவது.—சர்வேஸ்வரனவர் மனுஷருக்காக விருக்ஷங்களை யுண்டாக்கினதினாலே யந்த மரங்களுடைய நிழலிலே மனுஷ ரிருக்கிறதற் கவசியமா யிலைகள் வேண்டியிருந்தது.

2-வது.—புட்பங்களுங் காய்களும் புதுசாய்ப் புறப்படுகிறபோது பச்சையா யிருக்கிறதினாலேயும் பலமில்லாததினாலேயு மதுகளுக்கு ஆகாசத்தினுடைய கனத்தினாலேயும் வேறே குணங்களினாலேயு மோசம் வராதபடிக் கதுகள் யிலைகளினாலே மறைக்கப்படும்.

3-வது.—சூரியனுடைய வுக்கிரத்தினாலே யிப்படிப்பட்ட புட்பங்களையுங் கனிகளையும் வெதும்பவொட்டாமற் சூரிய கதிருக் கெதிராக இலைகளானதுகள் பரிசைபோலே

நிற்கிறது. ஆனால் சூரியனுடைய வுஷ்டணமானது கனிகள் பழுக்கிறதற் கவசியமாய் வேண்டி யிருக்கிறதினாலே விருக்ஷங்களி லுண்டான இலைகள் தாறுமாறாகத் தழைத்திருக்கிறதென்று காண்பித்திருந்தாலுஞ் சூரியனுடைய கதிர்களிற் சிலதுகள் தழைகளுக்குள்ளே பிரவேசித்து ஆனவகையோடே மாத்திரங் கனிகள் மேலே படுகிறதற்குச் சர்வேஸ்வரனுடைய மட்டில்லாத சாமர்த்தியத்தினாலே ஸ்தாபிக்கப்பட்டதென் றனுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம்.

4-வது.—மரத்தினுடைய சாரமானது திரளாய் நரம்புகள் வழியாக முட்ட வேறுகிறதினாலே யதுகளை யிலைகள் சுவிகரியாமற்போனா லீரத்தினுடைய மிகுதியினாலே காயாமலும் பழுக்காமலு மரங்கள் முழுதுங் கெட்டுப்போமென்பதற்குச் சந்தேகமில்லை.

இதுவுமல்லாமல் இலைகளானவை வடிக் கட்டுகிறாப்போலே சாரத்தின் கனமுள்ளதுமாய்ப் பதமில்லாததுமாயிருக்கிற அங்கிஷங்களைச் சுவிகரித்துப் புட்பங்களுக்குங் கனிகளுக்கும் பதமுள்ளதுமாய்க் காய்ந்திருக்கிறதுமாயிருக்கிற சாரத்தினுடைய அங்கிஷங்களை விடுகிறதினாலே மகாப் பிரயோசனமா யிருக்கிற தென்பதற்குச் சந்தேகமில்லை; அந்த நியாயத்தினாலே மரங்களுடைய இலைகளுக்கு வாசனை கொஞ்சமா யிருக்கும். புட்பங்களுங் கனிகளுமெத்தப் பரிமளிக்கும். அவ்வண்ணமே "சுகந்தமானது உலரப்பட்ட அங்கிஷங்களினாலே கூட்டப்பட்டதா யிருக்கிறதென்று சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்" அந்த நியாயத்தினாலே பழங்களும் மகா ருசிகரமாயிருக்கும். அவ்வண்ணமே கனிகள் பழுக்கிறதற்குச் சாரத்தினுடைய அங்கிஷங்களா லுலர்ந்ததுமாய்ப் பதமுள்ளதுமா யிருக்கவேணும்.

இனி பூமிமேலேயுள்ள இலைக்கறிகளையும் எண்ணப்படாத புட்பங்களையும் பழுக்கிற விருக்ஷங்களையும் உற்றுணர்ந்து விசாரிக்கிறபோ தனுகளை யளவில்லாத கிருபாகடாக்ஷத்தோடே தந்தருளின பராபர வஸ்துவின்பேரிலே தோத்திரம் பண்ணவேண்டாமோ? காய் கறிகளுடைய இலக்கத்தைப் பார்க்கும்போது எண்ணிக்கைக்குள்ளே யடங்கா

தரா யிருக்கிறதென்று காண்பிக்கிறது. அதெப்படியென்றால், சிலதுகள் பூமிமேலே வளருகிறது. சிலதுகள் பூமியின்கீழே கிழங்குகளாய்ப் பெருக்கிறது. மனுஷருடைய குணங்களுக்குத் தக்கது சிலதுகள் குளிர்த்தி யுண்டாக்கும், சிலதுகளுஷ்டணிக்கும், சிலதுகள் பத்தியத்துக்காகும், சிலதுக ளாரோக்கியக் காரருக்காகும், காலங்களுக்குத் தக்கது வெவ்வேறே காய்கறிகள் கிடைத்துக்கொண்டு வரும், சிலதுகள் மனுஷருக் குதவாமற்போனால், மனுஷருக்கு வேண்டிய மிருகங்களுக்குதவும், சிலதுகள் பக்ஷிக்கிறதற் குதவாமற்போனால், வியாதிகளுக் கவுழ்தமாயிருக்கும். இப்படிப்பட்ட சஞ்சீவிகளுக்குள்ளே சிலதுகள் வாதத்தை யடக்கும், சிலதுகள் பித்தத்தை யமர்த்தும், சிலதுகள் சிலேஷ்மத்தை யறுக்கும், சிலதுக ளிரத்தத்தைச் சுத்தமாக்கும், சிலதுகள் வயிற்றுக் குஷ்டணத்தை வருத்திவிக்கும், சிலதுகள் கல்லீரலுடைய வுஷ்டணத்தை யமர்த்தும், சிலதுகள் கல்லீரலிலே யுண்டான மணலைக் கரைத்துப் போடும், சிலதுகள் கண்களிலே யுண்டான புகைச்சலைத் தள்ளி மகாப் பிரகாசம் வருத்திவிக்கும், சிலதுகள் ஊசிக் காந்த மிரும்பை யிழுக்கிறதுபோலே சரீரத்தி லுண்டான துற்குணங்களை யெல்லாந் தன்னோடேகூட விழுத்துக்கொண்டுபோம், இதுமுதலான விசேஷங்களை நன்றாய் விசாரித்த சாஸ்திரியானவர் பராபர வஸ்துவைப் பார்த்துத் திருவுளம் பற்றினதாவது, "ஆ! அளவறுக்கப்படாத கிருபாகடாக்ஷத்தைக் கொண்டிருக்கிற ஆண்டவரோ மனுஷரை யிரக்ஷிக்கத்தக்கதாக வெண்ணப்படாத வுபகாரங்களைப் பண்ணினு லு மிப்படிப்பட்ட உபகாரங்களைப் பெற்றுக்கொள்ளுகிற துரோகிகளாகிற மனுஷர் நன்றியறியாதவர்களா யிருந்து தேவரீரைச் சட்டைபண்ணாமலுந் தேவரீரை நினையாமலுந் தங்களுடைய பொல்லாத விச்சைகளைத் தீர்க்கத் திரிகிறார்களொழிய மற்றப்படி யல்லவென்றார்."

மேலும் புட்பங்களுடைய வதிசயமான விசேஷங்களை யாராய்ந்து பார்த்தா லின்னம் பராபர வஸ்துவை யதிகமாய் ஸ்துதிக்கிறதற்கு நியாயமுண்டு. அதெப்படியென்றால், பராபர வஸ்துவானவர் நல்ல பிதாவைப்போலே நமக்கவசரமானதுகளைத் தந்தருளினதுமல்லாமல் நமக்குச்

சந்தோஷம் வருத்திவிக்கத் தக்கதாக எண்ணப்படாத பரிமள புட்பங்களை யுண்டாக்கினார். அந்தப் புட்பங்களுடைய விநோதத்தைய மலங்காரத்தையும் பார்க்கும்போ தெங்களுக்கு நறுகந்தங்களை வீசுகிற விந்தப் புட்பங்களி னிமித்தமாக அவைகளைப்படைத்த தயாபரரான கர்த்தரை ஸ்துதிக்க மனது வருமொழிய மற்றப்படியல்ல. இப்படிப்பட்ட புட்பங்களுடைய எண்ணிக்கையைச் சொல்லுகிறவனார்? மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம், பிச்சி, மருக்கொழுந்து, தாமரை, செங்கழுநீர், அல்லி, ஆம்பல், நீர்க்கோட்டான், குங்குமம், முளரி, மகிளம்பூ, அசோகு, குவளை, வாடாமல்லி, அலரி, செந்தாமரை, அரவிந்தம், பற்பம், பங்கசம், புண்டரீகம், குமுதம், கொன்றை, மயிற்கொன்றை, பன்னீர்ப்பூ, புன்னைப்பூ, சூரியகாந்தம், லிரியு, ரோசம். இதுமுதலான எண்ணிக்கைக்குள்ளே யடங்காத அநேக புட்பவளங்களைச் சொல்லுகிறதார்? இப்படிப்பட்ட புட்பங்களை நந்தவனங்களிலேயும் பருவதங்களிலேயுஞ் சிங்காரத்தோப்புகளிலேயும் விஸ்தீரணத் தோட்டங் காடுமுதலான வனங்களிலேயுங் குளங்களிலேயுந் தயாபரரான கர்த்தர் திரளாய்ப் படைத்தார். அதுகளுக்குள்ளே சிலபுட்பங்கள் கெம்பு போலேயும் வச்சிரம்போலேயுங் கோமேதகம்போலேயு மற்றுமுள்ள நவரத்தினங்கள் பிரகாரமாகவுமிருக்கும். இப்படிப்பட்ட வர்னங்களுடைய பிரகாசத்தையுங் காந்தியையும் இதழ்களுடைய வின்பத்தையும் விநோதத்தையும் பரிமளத்தையும் வர்னிக்கிறவனார்? இராத்திரி காலத்திலே சோதிமண்டலங்களிலே யெண்ணப்படாதிருக்கும் நக்ஷத்திரங்களைப்போலே இவைகளும் நந்தவனங்களிலேயு மற்றுமுண்டான விடங்களிலேயும் கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்குஞ் சமானமாய் எண்ணிக்கைக்குள்ளே யடங்காத புட்பங்கள் பிரகாசிக்கும்.

இப்படிப்பட்ட புட்பங்களுக்குள்ளே மகா சிங்காரமான செந்தாமரைப் பூவை யொரு மகாத்துமா வானவர் தன் கையிலே பிடித்துக்கொண்டு அந்தப் பூவைப் பார்த்துத்திருவுளம் பற்றினதாவது. சர்வத்துக்கும் வல்லவராயிருக்கிற பராபர வஸ்துவானவர் ஏனுன்னை. யுண்டாக்கினார்? எந்தக் கருத்தோடே யெந்தத் தாற்பரியத்தோடே

யுன்னைப் படைத்தார்? அசரீரியா யிருக்கிற ஆண்டவருக்
கும் அவருடைய சம்மனசுகளுக்கும் உன்னாலாகிற பிரயோ
சன மொன்றுமில்லையே, மனுஷருக்கும் நீ அவசரமான வ
ஸ்துவல்லவே. ஆனபடியினாலே திவ்விய பிதாவாயிருக்கி
ற சர்வேஸ்வரனுடைய மட்டில்லாத கிருபா கடாக்ஷத்தை
யெவ்வளவாகிலுங் கண்டு பிடிக்கிறேன். அதேதென்றால்
கர்த்தருக் கடிமையா யிருக்கிற வெனக்குச் சந்தோஷத்தை
வருத்திவிக்கச் சித்தமாயிருந்ததினாலல்லோ உன்னைப் படை
த்தாரென்றதுந் தவிர இந்த வார்த்தை யருளிச் செய்ததற்
குப்பிற்பாடு பராபர வஸ்துவைப் பார்த்து அத்தியந்த பத்
தியோடே விண்ணப்பம் பண்ணினதாவது. "ஆ! அளவில்
லாத மகிமையுள்ள ஆண்டவரே நீசப் பூச்சியாயிருக்கிற
வென்மேல் அத்தியந்த தயையாயிருந்து நான்பிழைக்கிறதற்
கு வேண்டிய அவசரமான காரியங்களைத் தந்தென்னை யிர
க்ஷிக்கிறதுமல்லாமல் அடியேனுக்கு மகிழ்ச்சி வருத்திவிக்கி
றதற்காக விந்தப் புட்பத்தையு மின்னமு மநேகவிதமுள்ள
மலர்களையுஞ் சிருஷ்டித்ததினாலே தேவரீருக்கு மட்டில்லா
த தோத்திர முண்டாகக்கடவது." இதுவுமன்றி அளவில்
லாத ஞானத்தைக்கொண் டிருக்கிற தேவரீர் ரொருநாளைக்
குள்ளே யழிந்துபோகிற விந்தப் புட்பத்தை யித்தனை வே
டிக்கையான வர்னங்களினாலேயும் விநோதமுள்ள இணக்
கத்தினாலேயு மலங்கரித்திருக்கின்றதினா லும்முடைய தே
வ சுபாவத்திலே மனோவாக்குக் கெட்டாததுமாய்ப் புத்தி
சந்நிதானத்திலே யடங்காததுமா யளவறுக்கப்படாததுமா
யிருக்கிற பெருமை மகிமை கீர்த்தி குணாதிசயமுதலிய
அநந்த நன்மைகளுடைய கரைகாணாத கருணாசமுத்திரமா
யிருக்கிறீரென்பதற்குச் சந்தேகமில்லையே இப்படிப்பட்ட
மட்டில்லாத நன்மைப் பிரவாகங்களைப் பிரத்தியக்ஷமான
தெரிசனத்தினாலே காண்கிறதற்கு மதுகளைத் தெரிசித்து அ
தனாலே வருகிற சந்தோஷத்தினுடைய பரிபூரண பூர்த்தி
யை யெனக்குத் தந்தருளுமென்றார். இப்படியே யிந்த ம
காத்துமாவானவர் புட்பங்களைப்பார்த்துத் தியானம் பண்
ணினாப்போலே நீயுந் தியானிப்பாயாக.

இப்போது விருக்ஷங்களுடைய வகையிலே யறிய
வேண்டின சில விசேஷங்களைச் சொல்லிக் காட்டுவோம்.

அதெப்படியென்றால், முந்தமுந்த அந்த மரங்களுடைய எண்ணிக்கையைச் சொல்லுகிறது மகா அரிமையா யிருக்கும். அதெவ்வணமென்றால், தென்னைமரம், கமுகு, வாழை, பனை, கரும்பு, பலா, சீனி, கொய்யா, நெல்லி, இலுப்பை, ஆலத்தி, அரசு, இச்சி, புளி, முந்திரிகை, தொட்டைமுந்திரிகை, அகத்தி, முருங்கை, ஆத்தி, இலவு, வேம்பு, ஒதி, புன்னை, புங்கு, பூவரசு, நாரத்தை, எலுமிச்சை, கொழுஞ்சி, அழுஞ்சி, மாதளை, கொம்மட்டி, மாவிலங்கு, தேக்கு, மூங்கில், பாலை, வெட்பாலை, நுணா, கருவேல், வெள்வேல், அடம்பு, அசோகு, எட்டி, முருக்கு, இலந்தை, நவ்வல், நரிநவ்வல், நெட்டி, நரியிலந்தை, கடம்பு, கிலுகிலுப்பை, வரப்பூலா, களச்சி, இண்டு, மருக்காலை, உசிலை, வனனி, பாதிரிமரம் இது முதலான அநேக விருக்ஷங்களையு மதுகளுக்குண்டான சுபாவங்களையும் குணங்களையும் பிரயோசனங்களையும் நன்மைகளையும் சாஸ்திரிகளெல்லாருங் கூடினாலுஞ் சொல்லமாட்டார்கள். இந்த விருக்ஷங்களுக்குள்ளே சிலது பழுக்கும் சிலது பழுக்காது. சிலது மிருகங்களுக்கும், சிலது மனுஷருக்கும், சிலது நிழலுக்கும் உதவும். வெவ்வேறே காலங்களில் வெவ்வேறே மரங்கள் காய்க்கும். ஒருமரத்துக் கொருபெயர்மாத்திர மிருந்தாலு மதிலே யநேக சாதிகளடங்கி யிருக்கும். இந்தப் பிரகாரமாக வாழைக்கொருபெயரா யிருந்தாலு மதிலே மொந்தன், ரஸ்தாளி, கருவாழை, செவ்வாழை, நாடன் இது முதலான பலசாதிக ளுண்டாயிருக்கும்.

இதற்கப்பா லறியவேண்டினதாவது ; சிற்ப சாஸ்திரிக ளானவர்கள் அரண்மனை கட்டத்தக்கதாக முந்த முந்த அஸ்திவாரத்தைப் பறிக்கிறபோலே மரங்கள் வளருகிறதற்கு முன்னே தன்னுடைய வுயரத்துக்கும் பருமத்துக்குந் தக்கது பூமிக்குள்ளே வெகு விசாலமாய் வேரோடப்பண்ணும். அதின்பிறகு அடிமரம் தூண்போலே வளர்ந்து மரத்தினுடைய தலையையுங் கைகளாகிற கொம்புகளையுஞ் சுமக்கும். இலைகள் மயிர் மேனையாக விருக்கும். புட்பங்களும் பழங்களு முடமைகள்போலே யிருக்கும். ஆனாலந்த புட்பங்களும் பழங்களு மிலைகளு முழுதுந் தனக்குள்ளாகச் சரியா யிருக்குதென்று காண

பித்தாலும் பத்தும் பத்தா யதுகளைத் தனித்தனி யே பார்க்கும்போது இலை இலைகளுக்கும் பூ பூக்களுக்கும் பழம் பழங்களுக்கும் முழுதுஞ் சரியா யிருக்கப்போகிற தில்லையென்று பிரத்தியக்ஷமாகும். வர்ணத்திலே யானு லும் பருமத்திலேயானுலும் அங்கிஷங்களுடைய இணைக் கத்திலேயானுலும் ரூபத்திலேயானுலு மெவ்வளவாகிலும் வித்தியாசமா யிருக்குமென் றங்கீகரிக்கக் கடவதாகும். இ திலே பராபர வஸ்துவினுடைய அளவில்லாத விமரிசை யையுஞ் சாமர்த்தியத்தையுங் காணலாம். அதெப்படியென் ருல் ஒரு சித்திரக்காரன் பச்சை வர்னத்தினுலே 4000 இலை வித்தியாசமாக வெழுதமாட்டான். கடவுளோவென்றுல் கோடாகோடி யிலைகள் புட்பங்கள் பழங்களை யுண்டாக்கி னுலுந் தங்களுக்குள்ளே பின்னபேதகமா யிருக்குமல்லாம லொன்றுக்கு ஒன்று முதலாய்ச் சரியாயிருக்கப் போகிற தில்லை. இப்படிப்பட்ட பழங்களை வர்ணிக்கிறதற் கவகாச மில்லாமற் போனுலு மதுகளுக்குள்ளே யொரு பழத்தை யானுலு மெடுத்துச் சோதித்துப் பார்ப்போம்.

ஒருமாதளம் பழத்தைக் கையிலே பிடித்து முழுதுந் தீர விசாரித்தாயானு லதிலே மகா வதிசயமான விசேஷங்க ளைக் காணலாம். முந்தமுந்த சூரியனுடைய வுக்கிரத்தினு லேயும், ஆகாசத்தினுடைய பலபல துற்குணங்களினுலே யும், காற்றுகளினுலேயு மோசம் வராதபடிக் கெங்குந் தன தோட்டினுலே மூடியிருக்கும். பலபல வர்னங்களினுலே யலங்கரிக்கப்பட்ட அந்த வோடு புறத்தியிலே கெட்டியா யிருந்தாலு முள்ளே மகா மிருதுவாயிருக்கிறது. மாதளைக ளுடைய விதைகளெல்லாம் அநேக அங்கணங்களிலே பிரிந் திருக்கிறது. அந்தப்பலபல அங்கணங்களை மகா மிருது வான சரும மூடியிருக்கிறது. அந்தத் தோலானது மிருது வாயிருக்கிறதற்குக் காரணமேதென்றுல். பச்சையாயிருக் கிற விதைகளுக்குக் கேடு வராதபடிக்கு இப்படி மெல்லிய தாயிருக்கும். இதல்லாம லொரு அங்கணத்திலே யுண்டா னவிதைகளழிந்துபோனுல் மற்ற அங்கணத்துக் கிப்படி வ ராதபடிக்கு அந்தச் சருமந் தடையாயிருக்கின்றது. இது வுந்தவிர .கெம்புகளைப்பார்க்க மகா பிரகாசமா யிருக்கிற அந்த மாதளை விதைகளி லெவ்வொன்றுக்கு மோர் சிறிய

வாலுண்டு அந்த வாலைக்கொண்டு மரத்திலுண்டான சாரத்தைச் சுவிகரித்து அதனாலே பிழைத்திருக்கும். இப்படிப்பட்ட ஆச்சரியமான பழங்கள் சகல பழங்களுக்கும் இராசாவைப்போலே யிருக்கிறதென்கிற அடையாளமாக முனையிலே மகா சிங்காரமான முடியினாலே சோடிக்கப்பட்டதா யிருக்கிறது. அந்த முடியைப் பார்த்துத்தான் லோகத்திலுண்டான பேர்போன விராசாக்க ளெல்லாரும் தங்கள் தலையிலே கிரீடங்களைச்செய்து தரித்துக் கொண் டிருக்கிறார்களென் றெண்ணலாம். கடைசியிலே யிப்படிப்பட்ட மரங்களும், புட்பங்களும், பூண்டுகளும் நாள் வட்டத்திலே யழிந்து போகாதிருக்கும்படிக்குப் பராபரவஸ்துவானவ ரதிசயமான வோ ருபாயம் பண்ணியிருக்கிறார். அதேதெனில் சகலமான புல்லுகளும், புட்பங்களுந் தங்களுடைய சாதிக்குத்தக்கது எண்ணப்படாத விரைகளையும் எண்ணப்படாத கிழங்குகளையுங் கொட்டைகளையும் வித்துக்களையு முண்டாக்குகிறதற்குப் பலமுள்ளதுமாய் அந்த விரை வித்து கொட்டை முதலானதுகளாலந்த எண்ணப்படாத செடிகளை நவமாய் முளைப்பிக்கிறதற் கேதுவுள்ளதுமா யிருக்கின்றது.

அதெப்படி யென்றால் யாதாமொருவிரையைக் கையிலே யெடுத்துப்பார்த்தால், முதலாவது.—அதைச்சுற்றியிருக்கிற அந்தந்தச் சாதிகளுக்குத் தக்கதாகிய மேல்த் தோலையாவது ஓட்டையாவது காண்போம். 2-வது.—இத்தோலுக்குள்ளே அல்லது ஓட்டுக்குள்ளே யோர்மெல்லிய தோலைக் காணலாம். 3-வது.—அதற் கடியில் இருபிளப்பாய் அல்லது பருக்கக்கூடாததாகிய (இவைகளிற் சிலதை அரிசியென்றுஞ் சொல்லப்பட்ட) பருப்பிருக்கின்றது. 4-வது.—அந்தப்பருப்புக்குள்ளே மிகவுஞ் சிறியதும் மிருதுவுமான ஓர் முளையிருக்கின்றது. 5-வது.—இந்த முளையிற் பின்னாலுண்டாகப்போகிற இலை, பூ, காய், கனி முதலாயினவைகள் அடுக்கடுக்கா யிருக்கின்றது. இவ்வடுக்குகள்தான் சகலவித செடிகளுக்கும் அவைகளிலுள்ள யாவற்றிற்குங் காரணமா யிருக்கின்றது. அதெப்படியென்றால், விரையானது புதைக்கப்பட்ட மறுதினத்தில் அல்லது 2-ம் 3-ம் 4-ம் 5-ம் தினத்தில் அந்தந்த ஜாதிக்குத் தக்கதுபோல

முளைக்கும். அந்த முளையைச் சூழ்ந்திருக்கும் பருப்பான து அதற்கு ஆகாரமாயிருக்கும். வேறொன்று சொல்லப்படு கிற அடிபாகமானது மேலே கிளம்பிப் பின்பு பூமியிலுள்ள சலத்தை யிழுக்கும்படிக்கு விரையை அல்லது கொட்டை யை வளைத்துக்கொண்டு பூமிக்குள்ளே செல்லுகின்றது. மேற்பாகமாகிய முளையானது தலைகீழாய் நாட்டப்பட்டிரு ந்தபோதிலும் வளைத்துக்கொண்டு மேலே கிளம்பித் துவக் கத்தில் நுட்பமான இலைகளையும், பின்பு கணக்கற்ற தடித்த இலைகளையும் பற்பல கிளைகளையும், பூ, காய்கனிமுதலாயின வைகளையும் தருகின்றது. அடிபாகமாகிய வேரானது அ நேகவகைப் பிரிவுகளாய் உள்ளே நுழைந்து விருக்ஷங்களை அல்லது செடிகளை விழவொட்டாமல் நாலு பக்கங்களிலே யும் இழுத்துப் பிடித்துக்கொண் டிருப்பதுந்தவிர அவ்வேர் களின் முனையில் மிகவும் எளிதாய் ஜலத்தைக் கிரகிக்கத் தக்கதாய் கடவுளா லேற்படுத்தப்பட்டிருக்கின்ற மிருது வான பஞ்சுபோன்ற வேர்களால் பூமியி லுண்டான ஜலங் களை யுறிஞ்சி பட்டைகளின் வழியாயும் கர்ப்பத்தின் வழி யாயும் மேலே யேற்றுகின்றது. ஆகையால் யாதாமொரு இலையைக் கையிலே யெடுத்து உற்றுப்பார்த்தால் அதிலே அளவிறந்த கிளைகளாக வோடுகின்ற நரம்புகளைக் காண் போம். அவைகள் பூண்டுகளிலுள்ள சாரத்தை இலைகளின் எப்பக்கத்திலுஞ் செலுத்திக் காப்பாற்றிக்கொண்டு வரு கின்ற குழல்களா யிருக்கின்றது. இப்படியே பூவினிதழ் களையும் காய் கனிகளையும் யோசிக்கவேண்டியது. இதுவுந் தவிரப் பூமியிலே நீரில்லாமற் காய்ந்திருக்குந் தருணங்க ளிற் குளுங்காற்றின் வழியாய் வருகிற அப்புவின் அங்கிஷங் களை இலைகளானது கிரகித்து வேர்மட்டும பாய்ச்சுகின்றது.

இப்படியே வளர்சீவனுக்குச் சம்பந்தமாயிருக்கிற வி சேஷங்களையெல்லாம் வெளிப்படுத்தினமையால் இனி பஞ்சேந்திரிய சீவனுக்கடுத்த வர்த்தமானங்களைச் சர்வேஸ் வரனுடைய அனுக்கிரகத்தினாலே வருகிற அதிகாரத்திலே கூடினமாத்திரம் வெளிப்படுத்துவோம்.

## கஉ-ம். அதிகாரம்.

### பஞ்சேந்திரியச் சீவசெந்துக்களுடைய விவரம்.

புட்பங்க ளிடத்திலேயும், விருக்ஷங்க ளிடத்திலேயு மெத்தனை யதிசயமான விசேஷங்க ளடங்கியிருந்தாலு ம துகளுக்கு வளர்த்தியாகிற சீவன்மாத்திர முண்டாயிருக்கி றபடியினாலே அவைகளெல்லாம் பஞ்சேந்திரியங்களை யு டைய சீவனைக்கொண்டிருக்கிற யெல்லாப் பிராணிகளுக் கும் கீழ்த்தரமா யிருக்கிறதென் றங்கீகரிக்கக் கடவதா கும். அவ்வண்ணமே பஞ்சேந்திரியச் சீவனுள்ள வஸ்து களுக்கு வளர்த்தியாகிற அபிவிர்த்தி யுண்டாயிருக்கிறது மலலாமல்' அப்பாலே கடந்து சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். என்னும் பஞ்சேந்திரியங்களுக்குச் சம் பந்தமாயிருக்கிற சேஷ்டைகளை யெல்லாம் பண்ணுகிறதி னாலே வளர்சீவனுள்ள வஸ்துவென்னப்பட்ட யாவையும் விட இவைகள் மிகவு மதிசயித்திருக்கிற தென்பதற் குச் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட பஞ்சேந்திரியங்களு டைய சுபாவத்தையுங் குணங்களையும் வெளிப்படுத்தத் தக்கதாக இவ்விடத்திலே யவகாச முண்டென்று காண் பித்தாலும் இனிமேல் வரப்போகிற அதிகாரங்களிலே பிண் டத்தின்மேல் வியாக்கியானம் பண்ணும்போது பஞ்சேந்தி ரியங்களுக்கடுத்த வதிசய விசேஷங்களை விஸ்தாரமாய்த் தெரியப்பண்ணப் போகிறதினாலே யிந்த அதிகாரத்தில் யோசனை புத்தியில்லாமற் பஞ்சேந்திரியச் சீவனைமாத்திரங் கொண்டிருக்கிற மிருகங்களுடைய சாமர்த்தியத்தையும் அதற்கடுத்த வற்புத வர்த்தமானத்தையும் வெளிப்படுத்து வோம். முந்தமுந்த அறியவேண்டினதாவது, மிருகங்க ளிற் சிலதுகள் ஊர்வன, சிலதுகள் நடப்பன, சிலதுகள் பறப்பன. இந்தப் பிரகார முண்டாயிருந்தாலுஞ் சாங் கோபாங்கமான மிருகங்களுக்கு மாத்திரம் பஞ்சேந்திரியங் களும் உள்ளிந்திரியங்களும் நினைவு மதிக்கிற சத்திய மிருக் கும். மற்றச் செந்துகளுக் கிப்படி கிடையாதென் றங்கீக ரிக்கக் கடவதாகும். இந்தப் பிரகாரமாக நத்தை, நெட்டூ தி, ஊமச்சி, நகர்வண்டு, நாக்குப்பாம்பு முதலான பூச்சிக ளுக்கு நினைவுஞ் செவியுமில்லை. எறும்பு, செல்லு முத லானதுகளுக்குக் கண்ணில்லை. இப்படியே மற்றுமுண்டா

ன செந்துக்களுடைய விஷயத்திலே யோசிக்கக் கடவாய். ஆனால் பஞ்சேந்திரியங்களைக் கொண்டிருந்தாலுஞ் சரி அல்லது அவைகளிலே சிலதுகளைமாத்திரங் கொண்டிருந்தாலுஞ் சரி அந்த மிருக செந்துக்களிலே விளங்குகிற ஆச்சரியமான சாமர்த்தியத்தைப் பார்க்கும்போ தவைகளை யதுகளுக்குத் தந்தருளின சர்வேஸ்வரன்பேரிலே தோத்திரம் பண்ணவேண்டியது நியாயமா யிருக்கின்றது. இவைகள் கொண்டிருக்குஞ் சாமர்த்தியங்களில் விசேஷமாய் நாலுகாரியங்களை மாத்திரம் பரிட்சிப்போம். அதெப்படியென்றால்: முதலாவது.—மிருகங்கள் தாங்கள் பிழைக்கிறதற்குப் பண்ணுகிற வுபாயங்களையும். 2-வது.—தங்களுக்கு மோசம் வராதிருக்கப் பண்ணுகிற தந்திரங்களையும். 3-வது.—தாங்க ளாரோக்கியமா யிருக்கிறதற்கும், வியாதியாயிருந்தா லந்த நோக்காட்டைத் தள்ளுகிறதற்கும் உபயோகம் பண்ணுகிற ஔஷ்தங்களையும். 4-வது.—தங்களுடைய குஞ்சு குட்டிகளைக் காப்பாற்றுகிறதற்குக் கொண்டிருக்குங் கவலைகளையும் வெளிப்படுத்துவோம். முந்தமுந்த அளவில்லாத தயையைக்கொண்டிருக்கிற சர்வேஸ்வரனானவர் சகலமான மிருகங்களும் பிழைக்கிறதற்கான இரைகளைப் படைத்தது மல்லாம லந்த இரைகளை யவைக ளறிகிறதற்கும் பரிக்ஷிக்கிறதற்கும் வேண்டிய சாமர்த்தியத்தையுந் தந்தருளினார். இந்தப் பிரகாரமாக ஆடுமாடு முதலானதுகள் காட்டிலே திரியும்போ ததிலே யெண்ணப்படாத புல்லுகளுண்டாயிருக்க வதுகளிற் சிலதுகள் விஷத்தைக் கொண்டிருக்கிறதுமாய் வர்ணங்களைப் பார்க்கும்போ தாரோக்கியம் வருத்திவிக்கிற புல்லுக்கு முழுதுஞ் சரியொத்ததுமா யிருந்தாலும் புத்தியில்லாத இந்த மிருகங்கள் வைத்திய சாஸ்திரங்களை யறியாமற் போனாலுஞ் சர்வேஸ்வர னவைகளுக்குத் தந்தருளின சாமர்த்தியத்தினாலே நஞ்சுள்ள புல்லுகளைத் தொடாமல் தங்களுக்கான புல்லுகளைமாத்திரமேய்கின்றன. இதல்லாமல் ஆட்டுக்குட்டி பிறந்தவுடனே ஆயிரம் ஆடுகளுக்குள்ளே தனது தாயைத் தேடி மற்ற வாடுகளைச் சட்டைபண்ணாமல் தனது தாய் முலையிலே மாத்திரம் பால் குடிக்க ஆசையாயிருந்து அதைக் கண்டவுடனே யூட்டப்போம். இப்படியேதானே தாயானது அநேகம் ஆட்டுக்குட்டிகளைச் சட்டைபண்ணாமல் தனது குட்டியின்

சத்தத்தைக் கேட்டவுடனே யதன்கிட்டே வோடும். விஷயத்திலே மேய்க்கிறவனுக் கநேகம் விசை யடையாள மறியாமல் மோசம் வந்தாலுந் தாயாட்டுக்கும் குட்டியாட்டுக்கு மொருக்காலு மோசம் வந்ததில்லை. இதல்லாமற் பசுமாடு, ஆடு, ஒட்டக முதலானதுகள் பகல்நேரத்தில் நிரம்ப மேய்ந்ததற்குப் பிற்பா டந்த புல்லுகளை நன்றாய் மெல்லாமல் விழுங்கினதினாலே யிராத்திரி காலத்தில் மறுபடி வாயில் வரப்பண்ணி மெள்ளமெள்ள மென்று மறுபடி யுட்கொண் டெளிதாய்ச் செரித்துப் பாலாய்ப் போகும். அந்த நியாயத்தினாலே யதிகாலமேயு மிராத்திரி காலத்திலேயும் பால் கறக்கலாம். வேறே மிருகங்கள் பிழைக்கிறதற்குப் பண்ணுகிற தந்திரங்க ளெண்ணிக்கை யில்லை. இதற்கப்பாலறியவேண்டினதாவது.

பற்பல மிருகங்களுக்கு வெவ்வேறே யிரைக ளுண்டாயிருக்கிறபடியினாலே யாகாயத்திலானாலும் பூமிக்குள்ளென்கிலுந் தண்ணீர்க்குள்ளே யாகிலு முண்டான தீனிகளை மிருகங்கள் பராமரிக்கிறதற்கு அதற்கேற்ற எத்தனங்களாகிற விசேஷமான அவயங்களைக் கட்டளையிட்டார் இந்தப்பிரகாரமாகச், சிங்கம், புலி முதலான துஷ்ட மிருகங்கள் வேட்டை நிமித்தமாகத் தப்பிப் பிழைக்கவேண்டி யிருக்கிறதினாலே பிடிக்கிறதற்கும் கடிக்கிறதற்குங் கடினமான பற்களையுங் கூரமுள்ள நகங்களையும் ஓடுகிறதற்கு லகுவையுங் கர்த்தர் கட்டளை யிட்டார். அந்த நியாயத்தினாலே வேட்டையாடுகிற பக்ஷிகளுக்குக் கால்களிலே பலத்த நகங்களும், கூர்மையுள்ளதுமாய் வளைவுள்ளதுமா யிருக்கிற மூக்குங், கத்திபோ லிருக்கிற தாள்வாயு முண்டாயிருக்கும். காகங் கழுகுமுதலிய பிணங்களைத் தின்கிற பக்ஷிகள் பிரேதங்களுடைய நாற்றத்தை யொருகாத வழியிலே கண்டுபிடிக்கும். தானியங்களைத் தின்கிற பக்ஷிகளுக்கு மூக்கு வளையாமற் கூர்மையாயிருக்கும். குப்பைக்குள்ளே கிடக்கிற தானியங்களைக் கண்டுபிடிக்கிறதற்குக் கால்களில் விரலும் நகமுமுண்டு. சலத்திலே சஞ்சரித்து இரைகளைத் தேடுகிற பக்ஷிகளுக்கோ வென்றால், அகலமான காலும் விரல்களுக்கு நடுவே சருமங்களுமுண்டு. இப்படிப்பட்ட கால்களினாலே தண்ணீருக்குள்ளேயு மேலேயும் நீந்தி யோடுகி

றது. பின்னையுமதுகளுடைய வாய் வட்டமாயிருந்து கடை வாயிலே அரம்போ லிருக்கும். அதேதினலென்றால், யா தொரு சிறு மச்சங்களை விழுங்குகிறபோது நழுவிப்போகா தபடிக் கதிலே சிக்கப்பண்ணும். இதல்லாமற் சில மிரு கங்கள் மகா வுயரமா யிருக்கும்போ ததுகள் மேய்கிறதற் குக் குனியவேண்டி யிருக்கிறதினலே கழுத்து மகா நீகள மாயிருக்கும். யானைக்கோவென்றால் கழுத்துக் கொஞ்சமா யிருக்கிறபடியினலே தலை குனியமாட்டா திருந்தாலுந் தும் பிக்கையைக்கொண்டு தின்கிறதற்குங் குடிக்கிறதற்கும் வேண்டியதெல்லாஞ் சம்பாதிக்கும். ஆக்குல பக்ஷியோ வென்றால் மகா வுயரமாயேறித் தனது கூர்மையுள்ள திஷ் டியினலே மகா தூரமாயிருக்கிற இரையைப் பார்த் ததின் மேலே வெகு தீவரத்தோடு விழுகிறது மல்லாமற் சில சம யங்களிலே ஆமையைத் தனது நகத்தினலேல் தூக்குகிற பொழு தந்த ஆமை தன்னை ஓட்டினலே முழுது மூடியி ருக்கிறதைக் கண்டு உள்ளே யுண்டான மாங்கிஷங்களைத் தின்னும் பொருட்டாய் ஆமையை யுயரத்தூக்கிப் பாறை மேலே போட்டுடைத்துத் தின்னும்.

இதன்றியே வேட்டை நாய்களுடைய சாமர்த்தியத் தைச் சொல்லுகிறவனர்? சிலதுகள் மகா வேகமாயோடி முயல்மேலே விழுகிறது. சிலதுகள் கவுதாரியைக் கண்ட வுடனே யதை மறிக்கிறப்போலே யப்பாலே போகவொட் டாமல் விசேஷமான வகையோடே குலைத்து அதினலே வேட்டைக்காரனுக் கொப்புக் கொடுக்கும். வேறே நாய் கள் தண்ணீருக்குள்ளே தாரா முதலியவைகளையும் பிடிக் கும்.

இதுவுந்தவிர மிருகங்கள் வியாதியாயிருந்தால் தங்க ளுடைய நோக்காட்டுக்கான ஔஷதங்களைச் சம்பாதிக்கிற சாமர்த்தியத்தை வெளிப்படுத்துவோம். அதெப்படியென் றால், மிருகங்களுடைய சரீரமானது நாலு பூதிபங்களினலே கூட்டப்பட்டதா யிருக்கிறதினலே யவசியமா யநேகம் விசை யதுகளுக்கு விகாரங்களும் வியாதிகளும் வரவேண்டி யிருக்கும். மனுஷர் வியாதியா யிருக்கும்போது ஒன்றில் தங்கள் புத்தியைக்கொண்டு ஆன மருந்துகளைச் சம்பாதிக் கிறார்கள். ஒன்றில் ஔஷதங்களை யறிந்திருக்கிற வயித்தி

யளைக் கேட்கிறார்கள். யோசனை புத்தியில்லாத மிருகங்களோவென்றால் அவைகளுக்குச் சர்வேஸ்வரன் கட்டளைபண்ணின சாமர்த்தியத்தினாலே மனுஷர்முதலா யறியாத சஞ்சீவிகளை யறிந்திருக்கின்றது. இந்தப்பிரகாரமாக வுத்தராதி ராச்சியத்தி லுண்டாகிய அருந்தோவென்கிற பக்ஷியானது தனது குஞ்சுகளுக்குக் கண் தெரியாமற்போனால் அவைகள் பார்வையடையும் படிக்கு கேலி தேர்ணியுவென்கிற செடியினுடைய தழையைப் பறித்துக் கண்ணிலே யொற்றும். அப்படியே போத்தாமுவென்கிற மிருகமானது வியாதியா யிருக்கும்போது நீர்க்கரும்பு அறுத்தபிற்பாடு கூர்மையா யிருக்கின்ற அதினடிக் கட்டையினருகே சென்று அதினாலே தனது துடையிலிருக்கிற பெரிய விரத்தத்தாரையைக் குத்தி யிரத்தம் வாங்கும். ஆனால் காயத்தி லிரத்த மதிகமாய்ப் புறப்பட்டுப் போகாதபடிக்குத் தகுமான விரத்தம் வடிந்தபின் சேற்றிலே விழுந்து புரண்டு இரத்தத்துவாரத்தை யடைத்துப்போடும். பின்னையும் காட்டாடுகள் வேட்டைக்காரராலே காயம்பட்டால் திக்கித்தாமு வென்கிற செடியினுடைய இலையைக் காயத்திற்போட்டு அதிலே ஊடுருவிசிற்கும் குண்டு அம்புகளையுந் தள்ளிக் காயத்தைக் குணப்படுத்தும். கரடியானது விஷந்தின்று லெறும்பைத் தின்று விஷம்போக்கும். நாய், நரி, பூனை முதலானது அசீரணமாயிருந்தால் வாந்தி பண்ணுகிறதற் கொரு விசேஷமான புல்லுண்டு அதைத் தின்னும். கடைசியிலே ஆகாசத்திலே பறக்கிற பட்சிகளும் பூமிமேலே திரிகிற மிருகங்களும் தண்ணீருக்குள்ளே நீந்துகிற மச்சங்களும் ஆன காலங்களிலே வெவ்வேறே சீமைகளுக்குப் போம்.

இப்போது மிருகங்கள் தங்களுடைய யுத்தத்தி லெதிர்க்

சுருக்கத்திலே வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால்; சிலதுகளுக்குக் கெட்டியுள்ளதுமாய்க், கூர்மையுள்ளதுமா யிருக்கிறநகங்களுண்டு. சிலதுகளுக்குப் பயங்கரமான பற்களுண்டு. சிலதுகளுக்குத் தலையிலே யிரண்டுகொம்புகளுண்டு. சிலதுகளுக்கு நெற்றியிலே யொரு கொம்புண்டு. வேறே சிலதுகளுக்குப் பலத்த வோடுகளுண்டு. சிலது

களுக்குச் சருமங் கெட்டியா யிருக்கிறதினாலே யம்புகளை ய திலே பூரவொட்டாது. சிலதுகளுக்குக் காலிலே யிருக்கிற குளம்பு கெட்டியா யிருக்கிறது. சிலதுகள் யுத்தம்பண்ண மாட்டாமற்போனா லோடுகிறதற்கு மகா பலமும் லகுவு முண்டாயிருக்கும். இந்தப் பிரகாரமாக முயல், மான் மு தலானதுகளும் பூமிமேலே யோடினாலு மாகாசத்திற் பறக் கிற பக்ஷிகளைப்போற் பறந்துபோம்.

கடைசியிலே மிருகங்க்ள் தங்களுடைய குஞ்சுகளையுங் குட்டிகளையுங் காப்பாற்றுகிற வகையைச் சுருக்கத்திலே வெளிப்படுத்துவோம். இந்த விஷயத்திலே மிருகங்களி டத்திற் காண்பிக்கிற கவலைகளைப் பார்க்கும்போ தாச்சரி யமா யிருக்கிறதற் கேதுவுண்டு. அவ்வண்ணமே சிலதுக ளெந்தெந்த வாபத்துக்கும் எந்தெந்த இக்கட்டுக்கும் பயப் படாமற் தண்ணீருக்குள்ளேயும் நெருப்புக்குள்ளேயும் வி ழுந்து குஞ்சுகளுக்குங் குட்டிகளுக்கும் பிராணனைக் கொ டுக்கும். நீசமான கோழிமுதலாய்க் குஞ்சுகளுக்கு மோ சம் வராதபடிக்குச் சகல துஷ்ட மிருகங்களுக்கு முதலாய்ப் பயப்படாம லெதிர்த்து நிற்கும். குஞ்சுகளைப் பிழைப்பிக் கிறதற்குத் தானே பட்டினியாயிருக்கும். யாதொரு இரை யைக்கண்டால் தனது குஞ்சுகளுக்குக் காண்பித்து வேறே குஞ்சுகள் வந்தாற் கொத்தும். சிங்கம், புலி முதலானது களெத்தனை பசித்திருந்தாலுங் கெபிக்குள்ளே யொளித்தி ருக்கிற தனது குட்டிகளுக்கு முந்தமுந்த மாங்கிஷங்களைக் கொண்டுபோம். பக்ஷிகளானதுகள் நிழலிலே குஞ்சுக ளைப் பொரித்தாலுஞ் சில சமயங்களிலே சூரியனுடைய கதிர்படாம லிறகினாலே குஞ்சுகளை மூடிக்கொள்ளும். பெலிக்கானென்கிற பக்ஷி குஞ்சுகளுக் கிரையில்லாத சம யத்திலே தன்னெஞ்சைக் குத்திக் குஞ்சுகள் இரத்தத்தைக் குடிக்கப்பண்ணும். குஞ்சுகள் நன்றாயிருக்கிறதற்குப் ப க்ஷிகள் கூண்டுபண்ணுகிற விதத்தை விசாரித்தால் மகா வதிசயம் பிறக்கும். அதெப்படியெனறால், சில பக்ஷிகள் கூடு கட்டுகிறபோது குச்சுகளையும், புல்லுகளையும், நார்க ளையு மங்கங்கே தேடிக்கொண்டுவந்து பின்னி யஸ்திவாரம் போலே போட்டுப் பிறகு உள்ளே மிருதுவா யிருக்கிறதற் குப் பஞ்சு, மயிரு, மிறகுங் கொண்டுவந்து மனுஷரறியாத

சாஸ்திரத்தின்படியே பரப்பிவைக்கும். தூக்கணங் குருவி யானது தென்னீர்க்குகளைக் கிழித்துக்கொண்டு தைத்து மகா விநோதமாகப் பின்னி யிரண்டந்தஸ்தாய்ப் பிரித்துக் கொம்புகளிற் கட்டிவைத்து அதற்குக் கீழேதானே வழிவி ட்டு மேலே பார்த்தால் வழியில்லா திருக்குமாப்போலே பண்ணும். சிலதோவென்றால், சிற்பியனைப்போலே பஞ் சு சம்பாதித்துத் திரித்தொரு பக்கத்தில் முடிந்து மூக்கி ஞலே யிலைகளைக் கொத்தி யதிலே யந்தச்சரட்டாலே தைத் துத் தொன்னையைப்போலே பண்ணி யதிலே நிரம்பப் பஞ் சிட்டுப்பரப்பி யந்தக் கூட்டிலே குஞ்சு பொரிக்கும்.

மிருகங்களைப்பற்றி மேலே சொல்லிய சமாசாரத்தைக் கேட்கிறதிலே நீங்கள் மோசம்போக வேண்டாம். அதாவ து: இத்தனை யாச்சரியமான விசேஷங்களை விசாரிக்கும் போ திப்படிப்பட்ட மிருகங்களுக்கு யோசிக்கிற புத்தி உண்டோ இல்லையோவென்கிற சந்தேகப்படத் தேவை யில்லை அதேதென்று லிதெல்லாம் யோசனை புத்தியினு லே வந்துதானுல் மற்றுமுண்டான காரியங்களிலேயு மிப்ப டிப்பட்ட புத்தியைக் காண்பிக்கும். ஆனுல் சர்வேஸ்வரனு னவர் மிருகசாதிகள் காள்வட்டத்திலே குறைந்து நிர்மூல மாய்ப் போகாதபடிக் கிவ்விதமான சாமர்த்தியத்தைக் கட் டளை யிட்டார். இதற்குத் தப்பாத அடையாளமேதென் றுல, மிருகங்களுடைய குஞ்சுகளுங் குட்டிகளும் பெரி தாய்ப் போனதற்குப் பிற்பாடு தாய் தகப்பனை யறியாமல் தாய் தகப்பனுங் குஞ்சு குட்டிகளை முழுது மறியாமற் போ கின்றது. ஆனபடியினுலே யிப்படிப்பட்ட சாமர்த்திய மெல்லாம் யோசிக்கிற புத்தியினுலேயும் மெய்யான பக்ஷத் தினுலேயும் வாராமல் தப்பில்லாத கிரமத்தோடு சகலத்தை யும் நடத்திக்கொண்டு வருகிற சர்வேஸ்வரனுடைய அளவி ல்லாத விமரிசையினுலே வருமென்கிறதற்குத் தப்பாது. ஆனபடியினுலே யிந்த விஷயத்தி லவர்பேரிலே தோத்திரம் பண்ணவேணுமொழிய மற்றப்படி யல்ல. இதெல்லா மோருவமையினுலே வெளிப்படுத்துவோம். அதெப்படி யென்றுல், கெட்டிக்காரனுமாய் மகா சமர்த்தனுமா யிருக்கி ற வொரு சேவகனை வில்லுக்காரன் மறைவுள்ள ஸ்தலத் திலிருந்து தனக்கெதிராக விருக்கிற சுவரின் வளையக்

கோட்டிலே யுண்டான நடுக்குறியிலே சுமுத்திரையாக அம்பை யெய்து அதிலே படப்பண்ணினு லப்படிப்பட்ட அம்பு அந்தக் குறியிலே பட்டதை வேறொருத்தன் கண்டு இந்த அம்புக்கு மகா புத்திபு மாலோசனையு முண்டென்றும் இது அங்கங்கே சாயாமல் நடுவிலேதானே பட்டமையால் இப்படிப்பட்ட புத்தி வேறென்றுக்கு மிராதென்றுஞ் சொல்லாமல் இந்த அம்பு இதிலே மாத்திரந் தைத்ததை யு மற்றொரு சேஷ்டையும் அது செய்யமாட்டா தென்ப தையும் ஆலோசித்து வில்லுக்காரனைக் காணுதிருந்தாலு மகா கெட்டிக்காரனை யாதொருத்தன் அவசியமா யிந்த அம்பை யெய்திருக்கிறனென்று சொல்லுவானொழிய மற் றப்படியல்ல. அத்தன்மைபோலே மிருகங்கள் சில காரி யங்களுக்கு மாத்திரஞ் சாமர்த்திய முள்ளதுமாய மற்றுமு ண்டான அநேக காரியங்களிலே யோசனை புத்தியினுடை ய அற்பவடையாள முதலா யிலலாததுமா யிருப்பதினுல மிருகங்களுடைய சேஷ்டைகளெல்லாம் யோசிக்கிற வா லோசனையினுலே வருகிறதென்றுவிசாரியாமல மிருகவினங் களெல்லாம் நாள்வட்டத்திலே கெட்டுப்போகாதபடிக்குச் சர்வேஸ்வர னிதெல்லாந் தம்முடைய அளவில்லாத விமரி சையினுலே நடத்திக்கொண்டு வருகிறுனென் றங்கீகரித்து இதற்காக ஆண்டவர்பேரிலே தோத்திரம்பண்ணக் கட வோமாக. இதல்லாமல் மிருகங்களுக்கு வேணும் வேண் டாமென்கிற புத்தியின் பலனுண்டா யிருக்குமேயொழிய அதுகளுக்குச் சுதந்தரமுள்ள மனதில்லை. அதிருக்குமே யானல் புண்ணியமும் பாவமு மிருகங்களுக்கு மிருக்கும் ஆனலிதற்கு எள்பிரமாணமானு மடையாளமில்லை. ஆ னபடியினுலே மிருகங்களுக்கு யோசனைபுத்தியில்லை யென் றவசியமா யங்கீகரிக்கக் கடவதாகும். இதற்கடுத்த வே றே யநேக நியாயங்களை யவனவ னெளிதாய்க்கண்டுபிடிக் கலா மென்கிறதினுலே யிம்மாத்திரஞ் சொல்லிக்காட்டின துபோதும்.

இற்றை வரைக்கு மிருகங்கள் தாங்கள் தனித்தனி யே பிழைக்கிறதற்குப் பண்ணுகிற வுபாயத்தைச் சொன் னபடியினுலே இங்கே கூட்டமாய்த் திரிகிற மிருகங்களைச் சர்வேஸ்வரனடத்தும்வகையைச் சுருக்கத்திலே சொல்லிக்

காட்டுவோம். அதெப்படியென்ருல; பெரிய மிருகங்க
ளிலே சர்வேஸ்வரனுடைய விமரிசையும் பலமுங் காண்பித்
திருந்தாலும் நீசமான பூச்சிகளிலேயும் எறும்புகளிலேயும்
தேனீக்களிலேயு மதிகமாய் விளங்குகிறதென்று மகாத்து
மாக்க ளெழுதிவைத்தார்கள். அதெவ்வாறெனிற் சிறுவு
டல்களிலே யிந்திரியங்களுந் தத்துவங்களுங் கிரமத்தோ டி
ருக்கிறது மகா வருமையா யிருக்கும். எறும்புகளுடைய
கூட்டத்தின் வகையை விசாரிக்கும்போது அதிகமான வா
ச்சரியமுள்ளதா யிருக்கின்றது. அதேதென்ருலநேக எ
றும்புகள் கூடி வேறே யெத்தனமில்லாமல் தங்களுடைய
வாயினுலேயும் காலினுலேயுங் களஞ்சியத்துக்குப் போகிற
பாதையைப் பற்பல சுற்றுக்களாக மறைத்து மகா பிரயா
சத்தோடே வழியாக்கி தானியங்களைச் சம்பாதிக்கும். சி
ல சமயங்களிலே யநேக வெறும்புகள் தானியக் கதிர்களின்
கிட்ட கூடிப்பலத்த வெறும்புகள் மேலேயேறித் தட்டை
யைக் கடித்துத் துண்டித்துக் கதிரை விழப்பண்ணும். மற்
ற எறும்புகள் தானியப்பருக்கை யெல்லா முதிர்த்து ஆ
ளுக்கொனருய்ப் பங்கிட்டுக் கொடுத்து சேருவைக்காரன்
போலே யிருக்கிற வொன்று கூட்டிக்கொண்டுபோய்க் க
ளஞ்சியத்துக்குந் தாங்களிருக்கிறதற்கும் பிரோத மடக்கிற
தற்கு மிருத மூன்று வகைக்கு மூன்றுவிதமாகக் கட்டின
வறைக்குள்ளே வைத்துக்கொண்டு அதுகள் முளையாதப
டிக்கு முளையைக் கிள்ளிப்போடும். மழை வருஷிக்கிற
தற்கு முன்னே தனது வீடு ஈரமாய்ப் போமென்று முன
ஞடியறிந்து அதற்குப் பயப்பட்டு முட்டைகளை வெய்யலி
லே காயவைத்து உலர்ந்தவிடத்திற் கொண்டுபோம். இ
தைப்பார்க்கத் தேனீக்களுடைய கூட்டமதிசயமா யிருக்
கும். எல்லாத்துக்கு மொரு வண்டு இராசாவைப்போலே
யிருக்கும். இந்த விராசா வெங்கேபோனுலும் மற்ற ஈக்
கள் கூடவே வளைந்துக்கொண்டு போயிருக்கிறதற்கான
ஸ்தலத்தைச் சம்பாதித்து எண்ணப்படாத ஆறுகோண
முள்ள கூடுகள் குழல்போலே மெழுகாலே பண்ணி பலத்
த வீக்கள் புட்பங்களிலே விழுந்து இரசத்தையுண்டுஅமிர்த
மான தேனுக்கி முன் சொல்லப்பட்ட அறைகளிலே பத்
திரமாய் வைக்கும். வேலை செய்கிற தேனீக்களு மற்றத்
தேனீக்களு மிரைகள் சம்பாதிக்கும். இராத்திரி காலத்தி

லே யொருசத்தமானாலுமில்லை. அதிகாலமேயோவென்று லொருபெரிய தேனீ புறப்பட்டு மகா சத்தத்தோடே தேனீக்க ளெல்லாத்தையு மெழுப்பும். யாதாமொரு ஈ சோம்பலினாலே வேலை செய்யாமற்போனால் பெரிய ஈ தனது கொடுக்கினாலே கொட்டும். இந்த வர்த்தமானத் தையு மிதைப்பார்க்க வதிசயமான விசேஷங்களையு ம நேக மகாத்துமாக்கள் வெகு வருஷந்தேனீயின் கூட் டத்தைப் பரிக்ஷித் தெழுதி வைத்தார்கள். இவைக ளெல்லாவற்றையும் பார்க்கப் பூச்சிகளுடைய விசேஷங்க ளை விசாரிக்கும்போது புத்திக்கடங்காத ஆச்சரியத்தைவ ருத்திவிக்கின்றது. அதெப்படியென்றால், இளம் பூச்சிகள் துவக்கத்தி லொருவகை ரூபத்திலிருந்து பின்பு வளர வளரத் தன் சொந்த ஜாதியி னிலைமைக்கு வருகின்றது. அதெப்படியென்றால், அவைகள் முட்டையினின்று வெளி யே வந்தமாத்திரத்திற் புழுக்களாக நெளிந்துக்கொண்டி ருந்து அழுகின மாமிச முதலியவற்றையும் மெல்லிய வி லைகளையுந் தின்று சிலகாலமானபின் தன்னை மறைக்கும்ப டியான கூண்டுகளைக்கட்டி பிரேதம்போ லசைவற் றுள்ளே கிடந்து தக்க பிராயம் வந்தபின் சிறைவளர்ந்து வண்டு, ஈ, குளவி முதலிய ரூபங்களைக்கொண்டு பறந்துதிரியும். இவ்வி த பூச்சிகளி லநேகம் முட்டையிட்டவுடனே மாண்டுபோ கின்றன. ஆகிலுந் தானிடு முட்டையினின்று வெளிப்படுங் குஞ்சுகளுக்கேற்ற ஆகார மிருக்கும்படியான விடந்தேடி அங்கே தனது முட்டையை பீச்சுகின்றன. இதற்குத் தி ருஷ்டாந்தமாக பூக்களின் தேனை யருந்துகின்ற வண்டுக ளிற் சிலது முட்டைகளை யம்மலரி லிடுவதினா லவைகள் காய்களால் மூடப்பட்டு தக்க காலத்திற் பொரித்து அங் குள்ள பருப்புகளைத் தின்று பெரிதாய் வளர்ந்தபிற்பாடு ப ழத்தைப்பீறி வெளியே புறப்பட்டு போய்விடுகின்றது. இ தற்குத் திருஷடாந்தரமாக மாங்கொட்டையிற் காணலாம். வேறே சிலதோவென்றால் மிருகங்களின தேகத்தில் நாவிற் கெட்டின விடத்தில் முட்டைகளைப் பீச்சுவதினால் அம் மிருகங்களின் நாவிலகப்பட் டுள்ளேசென்று குடல்களிற் றங்கி அங்கே பொரிக்கப்பட்டு சாணங்களின் வழியாக வெ ளிப்பட்டுப் பறந்துபோகின்றது. இப்படியே லோகத்தி லுண்டான மற்ற ஒவ்வொரு வஸ்துக்களிடத்திலேயுஞ் சர்

வேஸ்வரனுடைய அளவில்லாத விமரிசை மிகவும் விளங்கி
னாலும் இவைகளெல்லாவற்றையும் விட சர்வலோகத்தின்
குறிப்பிடமா யிருக்கிற மனுஷனிடத்தி லதிகமாய்ப் பிரகாசி
க்கு மென்பது குன்றாத சத்தியமாகும். ஆனபடியினாலே
மனிதரென்னப்பட்ட யாவரும் சகல நன்மைச் சுபாவமா
யிருக்கிற திரியேக சர்வேஸ்வரனைத் தோத்திரம் பண்ண
வேணுமென்று மிகவு மபேக்ஷையா யிருந்து இதுவரையிற்
சொல்லிய இந்த 12 அதிகாரங்களிலும் அண்டத்தின்பேரி
லே வியாக்கியானம் பண்ணினமையால் இனிவரும் அதிகா
ரங்களிலே பிண்டத்தையு மத
வெளிப்படுத்த

## கரு-ம். அதிகாரம்.

# பிண்டமானது அண்டத்தின்

## குறிப்பிடமா யிருக்கிற விவரம்.

சர்வலோகத்தையு முண்டாக்கினவருமாய்த் தப்பில்லாத கிரமத்தோடு சகலத்தையும் நடத்திக்கொண்டு வருபவருமா யிருக்கிற பராபர வஸ்துவினுடைய அத்தியந்த கிருபாகடாக்ஷத்தினாலே அண்ட வியாக்கியானம் பண்ணினதற்குப் பிற்பாடு சர்வத்துக்கும் வல்லவரா யிருக்கிற கடவுளுடைய மனோவாக்குக் கெட்டாத மகிமை கீர்த்திப்பிரதாப சோபனங்கள் மென்மேலு மதிகமதிகமாய் விளங்கத் தக்கதாகப் பிண்ட வியாகியானத்தை வெளிப்படுத்தத் துடங்கினோம்.

அதெப்படியென்றால், மனுஷர் சுபாவமானது சர்வலோகத்திலே யடங்கி யிருக்கிற வஸ்துக்களுடைய குறிப்பிடமாயிருக்கிறதென் றங்கிகரிக்க கடவதாகும். இது நிமித்தமாக விந்தச் சீமையி லிருக்கிற சனங்கள் அண்டத்துக்கொத்தது பிண்டத்துக்கென்று சொல்லுகிறார்கள். இதிலெம்மாத்திரமும் மோசம் வராதபடிக்குப் பிண்டமென்கிற வார்த்தைக்குச் சாஸ்திரமறியாதவர்கள் சொல்லுகிறாப்போலே செத்த பிரேதமென்கிற அர்த்தத்தைக் கொண்டிருக்கிறதென்று நினையாமல் பிண்டமென்கிற பதத்துக்கு (நரசீவனைக்கொண்ட) தேகமென்கிற சுபாவமான அர்த்தமுள்ளதென்று விசாரிக்கக் கடவோம். சர்வலோகத்திலுண்டான வஸ்துக்களுடைய சுபாவத்தைப் பார்க்கும்போ திந்தப்பொரு ளென்னப்பட்ட யாவும் நாலுவித அந்தஸ்திற் பிரிந்திருக்கிறதென்று சாஸ்திரிகள் சங்கேதம்

அவைகளின் முதலாமந்தஸ்திற் குறிக்கப்பட்ட வைகளாவன. சிலதுகளுக்கு வளர்சீவனில்லாமலும் இந்திரியச் சீவனில்லாமலும் யோசனை புத்தியில்லாமலும் வெவ்வேறு மாறுதலும் ஸ்திதியு முண்டு. இந்த முந்தின அந்தஸ்திலே

சோதிமண்டலங்களு மதிலுள்ள சந்திர சூரிய நக்ஷத்திரங்களுங் கிரகங்களும் பூதியங்களு மதிலே யுண்டான வுயிரில்லாத எல்லா வஸ்துக்களு மடங்கி யிருக்கின்றது.

இரண்டாமந்தஸ்த் தேதென்றால், நரசிவ னில்லாமலும் பஞ்சேந்திரியங்களினாலே வருகிற சேஷ்டைக ளில்லாமலும் வளர் சிவனைமாத்திரங் கொண்டிருக்கிற சகலவித பொருட்களு மிரண்டா மந்தஸ்தென்று சொல்லப்படும். அவைக ளெதென்றாற், புற்களும், புட்பங்களுஞ், செடிகள் முதலிய விருக்ஷங்களும் ஆகிய இவைமுதலாயினவைகளாம்.

மூன்றுமந்தஸ்திலே பஞ்சேந்திரியங்களைக் கொண்டிருக்கிற மிருகங்களெல்லா மடங்கியிருக்கின்றன.

நாலாமந்தஸ்திலோ வென்றால் யோசனை புத்தியுள்ள பிரதான வஸ்துக்களாய் விளங்கப்பட்டவைகளே.

இதெல்லா மிப்படி யிருக்கையி லிந்த நாலு அந்தஸ்துக்களிலே யிருக்கிற சுபாவமெல்லா மனுஷரிடத்திலே மிகவும் பிரகாசிக்கிற தென்கிறது பிரசித்தமான சத்தியமாயிருக்கிற படியினாலே மனுஷர் சுபாவமானது சர்வலோகத்தினுடைய குறிப்பிடமா யிருக்கிறதென் றங்கீகரிக்கக் கடவோம். அதெப்படியென்றால், முந்தின அந்தஸ்திலே யுண்டான வஸ்துகளுக்குள்ளே ஆகுதலும் ஸ்திதியு மிருப்பதுபோல் மனுஷரிடத்திலேயும் ஆகுதலும் ஸ்திதியுமுண்டு. இரண்டா மந்தஸ்திதிலே யுண்டான புட்பங்களுஞ் செடிகளும் வளர்கிறதுபோல் மனுஷரும் வளருகிறார்கள். மூன்றுமந்தஸ்துக்கடுத்த மிருகங்களுக்குப் பஞ்சேந்திரியங்களும் பஞ்சேந்திரியச்சேஷ்டைகளு மிருப்பதுபோல் மனுஷரிடத்திலேயும் பஞ்சேந்திரியங்களு மவைகளுடைய சேஷ்டைகளுமுண்டு. நாலாமந்தஸ்துக்குச் சம்பந்தமா யிருக்கிற யோசனை புத்தியும் வேண்டும், வேண்டாமென்கிற பலத்தைக் கொண்டிருக்கிற சுதந்தரமுள்ள மனதும் பிரசித்தமாய் மனுஷரிடத்திலே காணப்படும். ஆகையால் மனுஷர் சுபாவமானது சர்வலோகத்தினுடைய குறிப்பிடமா யிருக்கிறதென்பது தப்பில்லாத சத்தியமாகும்.

இப்படிப்பட்ட விசேஷத்தை முற்றுமுணர்ந்த வோர் மகாத்துமாவானவர் திருவுளம் பற்றினதாவது: மட்டில்

லாத வல்லமையையுந் தயாளத்தையுங் கொண்டிருக்கிற கர்த்தரானவர் லோகத்தையு மதிலே நிறைந்திருக்கிற வெண்ணப்படாத வஸ்துக்களேயும் படைத்ததற்குப் பிற்பாடு அதுகளுடைய குறிப்பிடமாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அதெத்தன்மையோவென்றால்: சம்பிரதியானவன் றனது கணக்குகளே யெல்லாம் விஸ்திரணமாய்க் குறித்தபிற்பாடு கூடிய தொகையை நாலு ஐந்து அக்ஷரங்களுக்குள்ளே யடக்கிவைக்கிறப்போலே யளவறுக்கப்படாத ஞானத்தையுஞ் சாமர்த்தியத்தையுங் கொண்டிருக்கிற சர்வேஸ்வரனானவர் எண்ணிக்கைக்குள் ளடங்காத வஸ்துக்களே யுண்டாக்கி யவைகளெல்லாந் தொகையாக மனுஷர் சுபாவத்திலடக்கிவைத்திருக்கிறார்.

ஆனா லிந்த சத்திய மதிகமதிகமாய் விளங்கத்தக்கதாக முன் சொன்ன நாலு அந்தஸ்துக்களிலேயும் அடங்கியிருக்கிற வஸ்துக்களேத் தனித்தனியே பார்த் ததுகளெல்லா மொத்தமாயும் உத்தமப் பிரகாரமாயும் மனுஷரிடத்திலே யடங்கியிருக்கிறதென்று கூடினமாத்திரஞ் சொல்லிக் காட்டுவோம். இந்த விஷயத்திலே யநேகருக்கு மயக்கமுண்டாகும். அதெப்படியென்றால், சர்வ லோகத்திலுமுண்டான பொருட்களெல்லாம் பிண்டமாகிற மனிதனிடத்திலே நிச்சயமா யிருக்கிறதென்று சொன்னால் பிரத்தியக்ஷமான தப்பறையா யிருக்கிறதென்றும், பயித்தியக்காரனுடைய வார்த்தைக்குச் சமானமா யிருக்குதென்றுஞ் சொல்லுவார்கள். அப்படியே யாதாமொருத்தன் சூரியனுஞ், சந்திரனும், நக்ஷத்திரங்களுங், கிரகங்களு, மரங்களு, மிருகங்களுங், கற்கள் முதலானதுகளுஞ் சுபாவமுமாய் உறுதியுமாய் மெய்யாகவே மனுஷரிடத்தி லிருக்கிறதென்று சொன்னால் பிரசித்தமான தப்பறையா யிருக்கிறதுமல்லாமலதுகளேச் சொல்லுகிறவனே யாவரும் பயித்தியக்காரனென்றே சொல்லுவார்கள். ஆனபடியினாலே அண்டத்துக் கொத்தது பிண்டத்துக்கென்று வழங்குகிற வார்த்தைக்கு அர்த்த மேதென்றால்; நாலு அந்தஸ்துகளிலே யடங்கியிருக்கிற வஸ்துக்களுடைய வகையை மேலே நம்மாற் சொல்லப்பட்ட பிரகாரமாகப் பிண்டத்தி லுண்டாயிருக்கிறதுந்தவிர அந்தந்தப் பொருட்களேத் தனித்தனியே பார்க்கும்போது

அந்தந்துக்களுடைய வொவ்வொரு அடையாளமு மொவ்வோரி லக்ஷணமு மிருக்கிறதென் றர்த்தமாகும். இதுவுஞ் சகல காரியங்களிலேயு மல்ல, இந்தப் பிரகாரமாகப் பிண்டமா னது ஒரு பட்டினம்போ லிருக்கிறதென்றும் அரண்மனை போலிருக்கிறதென்றுஞ் சொல்லும்போது மனுஷர்சுபாவ மெய்யான அரண்மனையுமாய் மெய்யான பட்டினமுமாயி ருக்கிறதென்று முதிர்ந்த பயித்தியத்தைக் கொண்டிருக்கிற வன் முதலாய்ச் சொலலமாட்டான். ஆனா லிந்த வுவமை களுக்குந் திஷ்டாந்தங்களுக்கு மர்த்த மேதென்றால், லொரு அரண்மனையிலே பலபல அங்கணங்க ளிருக்குமாப்போலே மனுஷர் தேகத்திலே பலபல அங்கண முண்டு. சுவரும், கைமரமுதலான துக்ளும், வீட்டிலிருக்குமாப்போலே நரர் சரீரத்திலே காலகளும் பக்க எலும்புகளு முள்ளெலும்புகளு முண்டாயிருக்கிறது. இந்தப் பிரகாரமாகப் பட்டினத்திலே வாசலகளுந் தெருவீதிகளு மிருக்குமாப்போலே தேகத்தி லே மெய், வாய், கண், மூக்குச், செவி முதலியவைகள் வா சலபோலேயு முள்ளேயுண்டான சில தத்துவங்கள் தெரு வீதிகள்போலேயும் வீடுகள்போலேயு மிருக்கும். இதெல் லா மிப்படி யிருக்கையிலே இதுவிஷயத்திலே நம்மாற் சொல்லப்போகிற வியாக்கியானத்தை யொரு திஷ்டாந்தம் போலே யெண்ணவேணுமொழிய மற்றப்படியல்ல.

அதெப்படியென்றால், முந்தின அந்தஸ்திலே யடங் கி யிருக்கிற வஸ்துக்களுக்கு மனுஷருக்கு முண்டான விசே ஷமான தலையையும் அதின் பாவனையையுங் கிரகிக்கிறதற் கறியவேண்டினதாவது. சீவனிலலாத பொருள்க ளென் னப்பட்ட யாவு மதிசயமான கிரமத்தோடேயும் விமரிசை யோடேயு மடுக்கடுக்காய் வைத்திருக்குமாப்போலே மனுஷ ரிடத்திலே யுண்டான தத்துவங்களெல்லாந் திவ்விய சித் தத்தின்படியே யற்புதமான வொழுங்கா யிருக்கிறது.

அவ்வண்ணமே மேலான மகிமையைக் கொண்டிருக்கி ற பரமண்டலங்களெல்லா முயர்ந்த ஸ்தலத்தி லிருக்கிறது மல்லாமல் பூதியங்களாகிற கீழ்த்தரமான வஸ்துக்கள் தாழ்த்தியா யிருக்கிறது. இந்தப் பிரகாரமாகப் பூதியங்க ளுக்குள்ளே தேயுவென்கிற பூதிய மேலான பெருமை கொணடிருக்கிறபடியினாலே யுயர வேறுகிறது. ஆகாய

மிரண்டாமந்தஸ்திலே வைத்திருக்கிறது. தண்ணீரும் பூமியு மெல்லாத்துகளுங் கீழே ஸ்தாபிக்கப்பட்டதா யிருக்கிறது. அத்தன்மைபோலே மனுஷ்ரிடத்திலுண்டான சகலமான அவயவங்களுக்குள்ளே தலையானது பிரதான அவயவமா யிருக்கிறதினாலே யுயர்ந்த ஸ்தலத்திலே ஸ்தாபிக்கப்பட்டது. கால் நீசமா யிருக்கிறதினாலேயு மற்ற தத்துவங்களைச் சுமக்கிறதினாலேயுங் கீழ் ஸ்தலங்களிலே வைக்கப்பட்டது. வேறே தத்துவங்க ளதுகளுடைய மகிமைக்குத் தக்கது அடுக்கடுக்காய்க் காண்பிக்கிறது.

இதற்கப்பால் பரமண்டலங்களெல்லாம் பிரபஞ்சத்துக்குள்ளே யடங்கி யிருக்கிற காரியங்கள் ஆன வகையோயோடே நடக்கிறதற் குதவுகிறப்போலேயுஞ் சூரியனானது கிரகங்களுடைய நடுவிலிருந்து சகலமான வஸ்துகளுக்கும் பிரகாசத்தையு முஷ்ணத்தையுங் கொடுக்கிறப்போலேயு மனுஷனுடைய சிரசானது உறுப்புகளை யெல்லாம் நடத்துகிறதென்றும் இருதயமானது திரேகத்தினுடைய நடுவிலிருந்து மேலேயிருக்கிற அங்கிஷங்களுக்குங் கீழே யுண்டான அங்கங்களுக்குஞ் சகலமான அவயவங்களுக்கு மிரத்தத்தினிமித்தமாகப் பலத்தையு முஷ்ணத்தையுங் கொடுக்கிறதென்று பிரசித்தமாய்க் காண்பிக்கிறது.

இதல்லாமல் நரசரீரத்திலே யுண்டாயிருக்கிற நாலு பிரதான குணங்கள் நாலு பூதியங்களுக்கு மடையாளமா யிருக்கும். அதெப்படியென்றால்? குளிரு மீரமுமா யிருக்கிற வாதமானது தண்ணீர்க்கடையாளம். உஷ்டமுமா யுலர்ந்ததுமா யிருக்கிற பித்தமானது நெருப்புக் கடையாளமாம். குளிருமா யுலர்ந்ததுமா யிருக்கிற சிலேஷ்டுமம் பூமியினுடைய அடையாளம். உஷ்ணமுமா யீரமுமா யிருக்கிற விரத்தமானது ஆகாயத்துக் கடையாளம். ஈரமுள்ளதுமாய் மிருதுவுமா யிருக்கிற தலையிலுள்ள மூளையானது சந்திரனுடைய அடையாளம். இருதயம் சூரியனுடைய அடையாளம். நல்வீரல் வியாழனுடைய அடையாளம். பிச்சுப்பை செவ்வாய்க்கு லக்ஷணம். வாவீரல் சனியினுடைய அடையாளம். மாங்காய் சுக்கிரனுடைய அடையாளம். காற்றும் பெரும்புசலு மெப்படி யிருக்குமென்று சொல்லத் தேவையில்லை. இரத்தத் தாரைகள் ஆறுகளு

டைய அடையாளம். கண்ணீர் மழைகளுடைய அடை யாளம். வெயர்வை பனியினுடைய அடையாளம். அவ யவங்களுடைய நடுக்குதல் பூமியினுடைய அதிர்ச்சியி ன டையாளம். கோபத்திறைலே சிவந்திருக்கிற கண்ணனது இடிக்கு மின்னலுக்கு மடையாளம் மணல்களும் கல்லு களு மநேகம் விசை சிறுநீர்த்தாரையி லிருப்பதால் சலப் பைகள் சமுத்திரத்தினடையாளம் இரத்த மிடைவிடாம லேறுகிறது மிறங்குகிறதுங் கடலினுடைய வடிவுக்கும் பெருக்குக்கு மடையாளம். அஸதிகள் பருவதங்களுடைய வடையாளம். 9 வகை இரத்தினங்களுடைய விவரங்களை கண்களுக்குள்ளேயும் புறத்தியிலேயுங் காண்பிக்கும் ஆகை யாற் சகலமான வர்னங்களையும் பிண்டத்திலே காணலாம். நித்திரையுஞ் சாகரணமும் இராப்பகலுக் கடையாளம்.

லோகத்திலுள்ள இரண்டாமந்தஸ்தி லகப்பட்ட வஸ் துக்கள் பிண்டத்தி லொரு பிரகாரமாய்க் காணலாம். அ தெப்படியென்றால், புல்லுகளும், புட்பங்களுங், விருக்ஷங் களிலே யடங்கி யிருக்கிறபடியினாலே விருக்ஷங்களுக்கு ம னுஷருக்கு முண்டாகிற சம்பந்தத்தை மாத்திரஞ் சொல் லிக்காட்டுவோம். அவ்வண்ணமே மனுஷருடைய கால் மரத்தினுடைய வேருக்கடையாளம். வயிறு நெஞ்சுமென் கிற அடிப்பிண்டம் அடி மரத்தினுடைய அடையாளம். ரண்டு கை கொம்புகளுடைய அடையாளம். மயிர் ளுடைய அடையாளம். மூடப்பட்ட கண்ணனது அரும் புகளுடைய அடையாளம். திறக்கப்பட்ட கண்ணனது மலர்ந்த பூவினடையாளம். மனுஷனுடைய பாவபுண்ணி யம் மரத்தினுடைய அழுகின பழங்களுக்கும் நல்ல கனிக ளுக்கு மடையாளம்.

மூன்றுமந்தஸ்தி லுண்டான மிருகங்களுடைய பஞ் சேந்திரியங்களும் தத்துவங்களு முத்தமப் பிரகாரமாகப் பிண்டத்திலே யுண்டென்று பிரத்தியக்ஷமாய் வருகிற அதி காரத்தி லொப்புவிப்போம். நாலாமந்தஸ்திலே பரம தூதர் களுடைய அசரீரி சுபாவமும் நினைவும் சுதந்திர மனதும் யோசிக்கிற புத்தியும் நரசீவனிடத்திலே பிரசித்தமா யி ருக்கிறதென்று கடைசி அதிகாரத்திலே கெட்டியாக ஒப் புவிப்போம்.

இதற்கப்பாலறிய வேண்டியதாவது, சர்வலோகத்தி லுண்டான வஸ்துக்களுடைய சுபாவ மனுஷரிடத்தி லுண்டென்று சொன்னாலுங் கண்டிப்புள்ள வஸ்துக்களிடத்தி லே யுண்டான வநேகங் குறைச்சலைத் தள்ளிப்போட்டு அப்பாலே கடந்து மேலான நன்மைகளுண்டாயிருக்குமென் றறிவாயாக. இந்தப் பிரகாரமாக மிருகங்களுக்கும் பஞ்சேந்திரியங்களுண்டென்று சொல்லுகிறபடியே இதெல்லா மனுஷர் சுபாவத்திலே யுத்தமபிரகாரமா யிருக்குதென்கிறதற்குச் சந்தேகமில்லை. இதெல்லா மினிமேல் பிரசித்தமான நியாயங்களினாலே யொப்புவிப்போம்.

இப்போது மிருக சரீரத்துக்கும் மனுஷர் தேகத்துக்கு மநேக காரியங்களிலே மகா வித்தியாசமா யிருக்கிறதென் றறிவாயாக. அதெப்படியென்றால், முதலாவது. சகலமான மிருகங்களும் பூமியிலே பிறந்து செத்தவுடனே வேறே கெதியில்லாமல் மறுபடி மண்ணைப் போகிறதற் கடையாளமாகக் குனிந்துகொண் டெப்போதும் பூமியைப் பார்த்துக்கொண்டு திரியும். மனுஷனோவென்றால் மோக்ஷராச்சியத்துக்குப் போகிறதற்குச் சர்வேஸ்வரனாலே யுண்டாக்கப்பட்டவனா யிருக்கிறதினா லெப்போதும் நிமிர்ந்து பரலோகத்தைப் பார்த்துக்கொண் டிருக்கிறான். ஆனால் மனுஷர்கள் தங்களுடைய மகிமையை யறியாமலும் உத்தம கெதியைக் கண்டுபிடியாமலும் அழிந்துபோகிற வாழ்வுகளை யபேக்ஷித்து நீசமான மிருகங்கள்போலே பூலோகத்திலே திரிகிறார்கள். இப்படிப்பட்ட விசேஷத்தை வாசிக்கிறவர்களும் கேட்கிறவர்களுந் தங்களுடைய விர்த்திகளைப் பரிக்ஷித்துப் பாவங்களைத் தள்ளிப்போட்டு அநேக தருமங்களைச்செய்து எப்படியானாலும் பரிபூரண பூர்த்தி வருவிக்கிற பரமானந்தமாகிற மோக்ஷத்தை யநுபவிக்கப் பிரயாசைப்படக் கடவார்கள். 2-வது.—மனுஷருடைய தலையானது ஏறக்குறைய வுண்டைபோலே யிருக்கும். அவ்வண்ணமே, யிப்படிப்பட்ட ரூபமானது பார்க்கிறதற்குஞ் சுகதானத்துக்கு மெளிதான அசைவுக்கும் பஞ்சேந்திரிய நிமித்தமாகப் பலபல சேஷ்டைகளைப் பண்ணுவிக்கிற. ஆத்துமத்தினுடைய பத்திராசனத்துக்குமான கைங்கிரியமா யிருக்கும். மிருகங்களுடைய தலையோவென்

ருல் பற்பல ரூபமாயிருக்கும். 3-வது.—மனுஷனுக்கு மாத்திரம் புற விந்திரியங்களுடைய சேஷ்டைகளையு முள்ளிந்திரியங்களுடைய விர்த்திகளையும் நல்ல மேரையாகப் பண்ணுகிறதற்கு ஈரமுமாய் விஸ்தீரணமுமா யிருக்கிற மூளை வேண்டியிருக்கிறபடியினலே இந்தக் குணங்களுள்ள மூளையைச் சிரசிலே கொண்டிருப்பான். மிருகங்களுடைய தலையிலோவென்ருல் மூளை கொஞ்சமா யிருக்கும். 4-வது மனுஷன்மாத்திர முச்சிதமான முகத்தைக்கொண் டிருப்பான். அதிலே மகிமையுஞ் சகலமான ஆசையும் பிரகாசிக்கிறது. மிருகங்களோவென்ருல் அவலக்ஷண முகத்தை மாத்திரங் கொண்டிருக்கும். 5-வது.—மனுஷருக்கு மாத்திரம் பலபல வர்னமுள்ள கண்களுண்டு. மிருகங்களோ வென்ருல் தங்கள் சாதிக்கொத்த கண்களை மாத்திரங் கொண்டிருக்கும். 6-வது.—மனுஷரிடத்திலே மாத்திர மிரண்டு கண்ணுறுங் கிட்ட விருக்கிறது. இப்படிப்பட்ட இருப்பு சாங்கோபாங்கமான சேஷ்டைகளைப் பண்ணத்தக்கதாக வேண்டியிருநதது. 7-வது.—மனுஷருக்கு மாத்திரங் கீழ்மேலாகிய விரண்டு நிமைகளிலேயும் மயிர் வளர்ந்திருக்கும். 8-வது.—மனுஷருக்குமாத்திர முகவழகும் மூக்கு நிமிர்ந்ததாயு மிருக்கும். 9-வது —மனுஷருக்கு மாத்திரந் திருஷ்டியின் கிற்றுச் செவ்வையா யிருக்கும். 10-வது.—மனுஷருக்கு முன்னுக விருக்கிற அவயவங்கள்மிருகங்களுக்கு கீழேதானே யிருக்கும். பிறகேயிருக்கிற அவயவங்கள் மிருகங்களுக்கு மேலாக விருக்கும். 11-வது.—மிருகங்களுடைய முன்னங்காலுந் தொடையு மநேக எலும்புகளினலே கூட்டப்பட்டதா யிருக்கிறது. மனுஷனுக்குக் கொஞ்சம். 12-வது.—இறகில்லாமல் நடக்கிற மிருகங்களெல்லாம் நாலு காலோடு திரியும். மனுஷன் மாத்திரம் அண்ணுர்ந்து கொண்டு பரமண்டலத்தைப் பார்த்திரண்டு காலோடு நடக்கிருன். 13-வது.—மனுஷனைவன் நாசிவனைக்கொண்டிருந்தநேக காரியங்கள் பேரிலே தியானம் பண்ணவேண்டியிருக்கிறதினலே யவனுக்குமாத்திர முளுக்கார்ந்திருக்கிறதற்கு வல்லமையுண்டு. மற்ற மிருகங்களெல்லா முளுக்கார்ந்திருக்க மாட்டாது. 14-வது.—ஸ்பரிசமானது மனுஷனுக்கு மகா அவசியமாய் வேண்டி யிருக்கிறதினலே மனுஷனுக்கு மாத்திரஞ் சரும மிருதுவா யிருக்கிறது. இந்தப்

பிரகாரமர்கச் சீவனில்லாத வஸ்துக்களுக்குள்ளேயும் வளர் சீவனுள்ள பொருட்களுக்குள்ளேயும் பஞ்சேந்திரியமுள்ள வஸ்துக்களுக்குள்ளேயும் உண்டான எல்லாக் குணங்களும் மனுஷரிடத்திற் காணப்படுகிறதுமல்லாம லவனப்பாலே கடந்து வித்தியாசமுள்ள வஸ்துக்களைச் சகல காரியங்களி லேயு மதிசயித்திருப்பான். இது நிமித்தமாகச் சில சாஸ் திரிகள் பிண்டமானது சர்வலோகத்தினுடைய குறிப்பிட மா யிருக்கிறதுமல்லாமற் சகல காரியங்களுக்கும் நல்ல மாத்திரிகையா யிருக்கின்றதென் றெழுதிவைத்தார்கள்.

அதெப்படியென்றால், சகலமான வஸ்துக்களையு மளக் கிறதற்குங் கண்டிப்புள்ள வஸ்துக்களுக் குண்டான வுயரத் தையும் நீளத்தையு மகலத்தையு மதிக்கிறதற்கு மனுஷரு டைய அவயவங்களைப் பார்த் தந்த வஸ்துக்களுடைய பிர மாணத்தைச் சொல்லலாம். அவ்வண்ணமே பிண்டத்தி னுடைய விரலகளையும் சாணையு முழத்தையும் பாதத்தை யுங் குறித்துக் கண்டிப்புள்ள பொருட்களிலே யெத்தனை அடி யெத்தனை முழ முண்டென்று சொல்லுவார்கள். ஆ கையால் இதெல்லா மிப்படி யிருக்கையிலே பிண்டத்தினு டைய தத்துவங்களைத் தனித்தனியே வெளிப்படுத்துகிற தற்கு முன்னே பொதுவிலே நரசீவ சரீரத்தினுடைய அள வெல்லாம் நன்றாச் சொல்லிக் காட்டுவோம். முந்தமுந்த அறியவேண்டியதாவது: சகலமான அளவுகளுக்கும் பிர மாண சாஸ்திரிகள் சொல்லுகிறபடியே வளையஞ் சதிரம் முக்கோணம். ஆகிய இம் மூன்றுருவங்களும் பிரதானமா னதா யிருக்கிறதுந்தவிர மற்றதற்கு மாத்திரிகையான கார ணமாயிருக்கும். இதெல்லா மிப்படி யிருக்கையிலே பிண் டமானது சர்வ லோகத்தினுடைய குறிப்பிடமுமாய் மாத்தி ரிகையுமா யிருக்கிறதினாலே யிப்படிப்பட்ட ரூப முத்தம பிரகாரமாக மனுஷரிடத்தி லிருக்கிறதென் றொப்புவிக்கக் கடவோம். அதெப்படியென்றா லொரு பெரிய வயதுள்ள மனுஷனை மல்லார்ந்து படுத்துக்கொள்ளச் சொல்லி யி ரண்டு கைகளையு மகலமாய் விரித்துத் தலையின்கிட்டக் கொ ண்டுபோய் நீட்டச்சொல்லி யதின்பிறகு கூடினமாத்திரங் காலை யகலமாய் நீட்டினாற்போல விரிக்கப் பண்ணவேணும். மேல் யறியவேண்டியதாவது: கூற்றுடிக ளல்லாமல் மற்

ற மனுஷருக் குடம்பு அத்தனை துவளாததினாலே கூறாடி
களைப்போலே நன்றாய் நீட்டமாட்டார்கள். ஆனா லான
வகையோடே விரித்தா லப்போது தொப்புளிலே பெரிய
சுவாசத்தினுடைய ஒரு காலை நிறுத்தி வேறே காலைக்
கொண்டு வீசினால் ஒரு வளைய முண்டாகும். அந்த வளை
யங் கையிலே யுண்டான பாம்பு விரலையுங் காலின் பெரு
விரலையுந் தொட்டுக்கொண்டாற்போலச் சுற்றிவரும். இதல்
லாம லிரண்டு கால்களுடைய பெருவிரலுக்குள்ளே யொரு
கீற்று மிரண்டு பாம்பு விரல்களிலே யொரு கீற்று மிந்த
விரண்டு கீற்றுஞ் சேருகிறதற்குப் பெருவிரல் துவக்கிப்
பாம்பு விரல்மட்டு மிரண்டு பக்கத்திலே கீறினா லப்போது
சாங்கோபாங்கமான சதிரமா யிருக்கும். இந்தச் சதிரமுஞ்
சாஸ்திரத்தின்படியே வளையத்துக்குள்ளே முழுது மடங்கி
யிருக்கும். கடைசியிலே வலது பாம்பு விரல்துவக்கி யிட
துகாற் பெருவிரல் மட்டு மொரு கீற்றுத் தொப்புள்
வழியாகக் கீறி யெதிரான பக்கத்திலேயு மப்படியே கீறி
னால் சரியாக நாலு கோணம் பிறக்கும். இந்த நாலு கோ
ணங்களுஞ் சரியாகச் சதிரத்திலே யடங்கியிருக்கும். இந்
தப் பிரமாணத்தைப் பார்த்ததற்குப் பிற்பாடு மனுஷன்
செவ்வே நிமிர்ந்திருக்கவேணும். இப்படியே நிமிர்ந்திருக்
கிற மனுஷனானவன சாங்கோ பாங்கமா யிருந்தால் தன்
விரலினாலே தொண்ணூற்றாறு விரற்கடையாவது, எட்
டுச்சாணாவது, நாலு முழமாவது, ஒரு பாகமாவது உயரமா
யிருப்பான் எந்தப்படி பார்த்தாலு மவனவன் றன்னைத்
தன் கையினாலேதானே யுச்சிதுவக்கி யுள்ளங்கால்மட்டு
மளந்துகொள்ளவேண்டியது. பூருவகாலத்தி லிந்தச் சீமை
யி லுண்டான சிலபேர்கள் மனுஷருடைய வுயரம் 96 விரற்
கடை யிருக்கிறதென்று கேட்டு வியர்த்தமாய் 96 தத்து
வங்களை விதித்தார்கள். இனி பிண்டத்தினுடைய அவய
வங்களைத் தனித்தனியே யளந்து பார்ப்போம். உச்சியி
லே துவக்கித் தாழ்வாய்க் கட்டைவரைக்கு மொருசா
ணுயரம். அந்தச் சாணை நாலாய்ப் பிரித்து யுச்சிது
வக்கி நெற்றி மேற்புறமட்டு மொரு பங்கும். அவ்விடந்து
வக்கி மூக்கின் தண்டு துவக்கமட்டு மொரு பங்கும். அவ்
விடந்துவக்கி மூக்கி னுனிமட்டு மொரு பங்கும் அவ்விடந்
துவக்கித் தாழ்வாய்மட்டு மொரு பங்கும். அப்படியே உச்

சிக் கழுத்திலிருந்து தொண்டைக் குழிமட்டும் நாலத்தொருபங் கிருக்கிறது. தாழ்வாய்க் கட்டைதுவக்கி யீரற்குலேமட்டும் ஒருசாணுயரமுண்டு. அவ்விடந்துவக்கித் தொப்புள்மட்டு மொருசாணுயரம். அவ்விடந்துவக்கிக் குய்யத்தானமட்டு மொருசாணுயரம் அவ்விடந்துவக்கி முழங்காலுக்குக் கிழ்மட்டு மிரண்டுசாணள விருக்கிறது. அவ்விடந்துவக்கிக் கெண்டைச் சதைக்கீழ்மட்டு மொருசாணுயரம். அவ்விடந்துவக்கிக் குதிகால்மட்டு மொருசாணுயர மிருக்கும். இப்படிப்பட்ட மனுஷன்கையைக் கூடின மாத்திரம் விரித்தா லந்தப் பாகத்தி னீளத்துக்கு மவன்சரீர வுயரத்துக்குஞ் சரியாயிருக்கும். நெஞ்சினுடைய நடுவே துவக்கித் தோள்ப்பட்டை முகியுமட்டு மொருசாண். அவ்விடந்துவக்கி முழங்கைமட்டு மொருசாண். அவ்விடந்துவக்கி மணிக்கட்டுமட்டு மொருசாண். மணிக்கட்டுத் துவக்கி பாம்புவிரல் நுனிமட்டு மொருசாண். மெத்த வகலமாயிருக்கிற விலா விரண்டுசாண் நிகளமும் அகலங் கொஞ்சமாயிருக்கிற விலா விரண்டு முகவளவும் தலேயும் மணிக்கட்டு துவக்கி விரல் நுனியும் பாதமும் ஓரளவா யிருக்கிறது. நெற்றியுயரமும், மூக்கும், காதும், பெருவிரல் நிகளமுஞ் சரியாயிருக்கும். கண்ணும், நாசியும், வாயுஞ், சரியாயிருக்கும் மேற் சொல்லப்பட்ட விசேஷங்கள் சிறுபிள்ளேகளுக்குச் செல்லத்தக்கதல்ல. அந்தவகை வேறு. அதெப்படியென்றால், சிறுபிள்ளேகளுக்கு அததினுடைய ஐந்து தலேயளவுமாத்திரமுண்டு. அதில் தலேதுவக்கிக் குய்யத்தானமட்டு மூன்றுதலே. அவ்விடந்துவக்கிப் பாதமட்டு மிரண்டு தலேயுயரமாத்திர மிருக்கும். ஆகையாற் காற்பக்கம் பிற்பாடதிகமாய் வளரும். பின்னேயு மகலங் கொஞ்சமா யிருக்கிற விலா வொருதலே கைவிரித்தாற் சரீரவுயரஞ் சரியாயிருக்கும். மணிக்கட்டு கழுத்திற் பாதி கால் மணிக்கட்டு மப்படியேதானே யிருக்கும். இதெல்லா மிப்படி யிருக்கையிலே பிண்டப் பிரமாண சாஸ்திரிக ளின்னமு மதிகமான அளவுகளேச் சொலலிக்கொண்டு வருகிறார்கள். இதெல்லா மிங்கே சொல்லுகிறதற் கவகாசமில்லாத படியினாலே யிம்மாத்திரஞ் சொன்னது போதும். இந்தப் பிண்ட மென்கிற மாத்திரிகையைப் பார்த்துச் சாஸ்திரிகளுந் தொழிற்காரருந் தங்களுடைய சாஸ்திரங்களுக்குந் தொழில்களுக்கு மடுத்த

காரியங்களை நடத்துகிறார்கள். இந்தப்பிரகாரமாக நல்ல அரண்மனை நல்ல தேவாலய முதலான நேத்தியுள்ள விநோத வேலைகளெல்லாம் பண்ணுகிறதற் கிந்த மாத்திரிகை வெகுவுதவியாயிருக்கும்.

ஆனபடியினாலே பிண்டத்தினுடைய அஸ்திகளையுந் தலையையும் நெஞ்சையும் குக்ஷியையும் சாணகராதியையுமதிலே யுண்டான தத்துவங்களையும் இனிவரும் அதிகாரங்களிலே வெளிப்படுத்துவோம்.

## கச-ம். அதிகாரம்.

### அஸ்தியினுடைய விவரம்.

அஸ்திகளானது பிண்டத்துக் கஸ்திவாரமா யிருக்கிறதினாலே திரேகத்தை நன்றாயறிகிறதற் கவசியமா யெலும்புகளுடைய விவரத்தை முன்னதாக வெளிப்படுத்த வேண்டியிருக்கின்றது. இதலலாம லஸ்திக ளநேக மாங்கிஷநரம்புகளினாலே கட்டியிருக்கிறதினாலேயுந் துளையுள்ள வெலும்புகள் வழியாக விரத்தத் தாரைகளுந் தாதுக்களு மோடுகிறதினாலேயு மிப்படிப்பட்ட தாதுக்களையும் நரம்புகளையும் நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற்கு அங்கங்களுடைய வர்த்தமானத்தைத் தெரியப்பண்ணக் கடவோம். ஆனபடியினாலே யஸ்திகளுடைய *நிரூபணத்தையும் எலும்புகளுக்குள்ளே யுண்டான வித்தியாசத்தையுஞ் சந்துகளுடைய காரணங்களையு மங்கஙகளுடைய எண்ணிக்கைகளையுஞ் சங்க்ஷேபமாகச் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால்? அஸ்தியானது பிண்டத்துக்கு மகா ஸ்திரமுள்ள அவயவமென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட வெலும்புகளுக்குள்ளேயுண்டான வேற்றுமைகளை யெல்லாம் முதலாவது.—உறுதியினாலேயும், 2-வது.— பிரமாணத்தி னாலேயும், 3-வது.—ரூபத்தினாலேயும், 4-வது.—இருப்பிடத்தினாலேயும், 5-வது.—பிரயோசனத்தினாலேயும், 6-வது.—அசைவினாலேயும், 7-வது.—சருமத்தினாலேயும், 8-வது.—துவாரங்களினாலேயுங் கிரகிக்கலாம். அதெப்படியென்றால்.

முதலாவது.—சில அஸ்திகள் சுபாவமாய் வெகுகெட்டியா யிருக்கிறது. சிலதுக ளத்தனை ஸ்திரமா யிருக்கிற தில்லை சிலதுகள் மிருதுவா யிருக்கும் இந்தப்பிரகாரமாகத் துடை யெலும் கெட்டியா யிருக்கும். உள்ளெழும்புக ளத்தனை ஸ்திரமில்லை. நெஞ்செலும்பு மிருதுவா யிருக்கும்.

2-வது.—இதன்றியே சிலதுகள் பெரிதா யிருக்கும். சிலதுகள் மட்டாயிருக்கும். இப்படியே துடை யஸ்திகளுங் குதிரைமுகப் பக்கத்தி னஸ்திகளும்பெரியதா யிருக்கும். சிரசி னஸ்திகள் தட்டையாயிருக்கும். விரல்களுடைய அஸ்திகள் சின்னதா யிருக்கும்.

3-வது.—அஸ்திகளுடைய சுபாவத்தையும் பிரமாணத்தையும் பார்த்து அதற்குள்ளே வேற்றுமை கண்டாற்போலே ரூபத்தினிமித்தமாகவு மிருப்பிடத்தினிமித்தமாகவும் வித்தியாசமுண்டா யிருக்கும். அப்படியே சிலதுகள் வட்ட ரூபமா யிருக்கும் சிலதுகள் சதிரமா யிருக்கும். சிலதுகள் முக்கோணலா யிருக்கும் சிலதுகள் தட்டுப்போலே யிருக்கும். இந்தப்பிரகாரமாகச் சின்ன சக்கர வெலும்பு வட்டமா யிருக்கிறது. சிரசின் சுவரெலும்பு சதிரமா யிருக்கிறது. நெஞ்சியினுடைய கடைசியான வெலும்பு முக்கோணமா யிருக்கும். வாயினுடைய மேலண்ணத்தி னெலும்புகள் தட்டுப்போலிருக்கும்

4-வது.—இதுதவிர சிலதுக ளுயரமாயிருக்கும். சிலதுகள் நடுவிலே யிருக்கும். சிலதுக ளஸ்திவாரத்தி லிருக்கும். இவ்விதமாகக் கபால முயரமா யிருக்கிறது. பக்க வெலும்புகள் நடுவிலிருக்கிறது. காலெலும்புக ளஸ்திவாரத்தி லிருக்கும்.

5-வது.—இப்போதைக்கு அஸ்திகளுடைய பிரயோசனத்தையு மசைவையுங் குறித் ததுகளுக்குள்ளே யுண்டான பின்னபேதத்தைச் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால், சில அங்கங்கள் திரேகத்தைச் சுமக்கும். சிலதுகள் பிரதான தத்துவங்களை மூடும். சிலதுகள் அப்படியே மூடி மறைக்கிறதுமல்லாமல் மோசம் வராதபடிக்குப் *பரிசைபோலே யிருக்கும். இந்தப் பிரகாரமாகத் துடை

* கேடகம்.

கால்களுடைய அங்கங்கள் திரேகத்தைச் சுமக்கும். பக்க் வெலும்புகள் வெள்ளீரலையு மிருதயத்தையு மூடும். கபாலஞ் சிரசின் மூளையை மூடுகிறதல்லாம லதற்கு மோசம் வராதபடிக்குப் பரிசைபோலே யிருக்கும்.

6-வது.—இதன்றியே சிலதுகள் பிரத்தியக்ஷமா யசையும். சிலதுக ளிரகசியமா யசையும். சிலதுகள் பரிச்சேதமா யசையாது. இந்தவிதமாகக் கால்களுடைய அஸ்திகளும் விரல்களுடைய அஸ்திகளும் பிரத்தியக்ஷமா யசையும். உள்ளங்கை யுள்ளங் கால்களுடைய அஸ்திக ளசைந்தாலு மத்தனை காண்பியாது. தலையினுடைய அஸ்திகள் பரிச்சேதமாய் அசைவைக் காண்பியாது.

7-வது.—கடைசியிலே அஸ்திகளுடைய சருமத்தையுந் துவாரத்தையும் விசாரித்தா லதற்குள்ளே பேதகங் காணப்படும். அவ்வண்ணமே சிலதுகள் நாள்வட்டத்திலே கெட்டியா யிருக்கும். சிலதுகள் தாயாருடைய வுதிரத்திலேதானே சாங்கோபாங்கமாக விருக்கும். இந்த மேனையாய்க் காதினுடைய மூன்று சின்ன எலும்புகள் தாயாருடைய வுதிரத்திலேதானே மகா ஸ்திரமாயிருக்கும். அந்த அஸ்திகள் மெள்ளமெள்ளக் கெட்டியாய்ப் போம். தாள்வா யஸ்திகள் தீவரமாய்க் கெட்டியாயிருக்கும் கபாலத்திலேசிலதுக ளநேக வருஷத்துக்குப் பிற்பாடு மகா ஸ்திரமாய்ப்போம்.

8-வது.இதல்லாமற் சிலதுகள் குழல்போலே யிருக்கும். உள்ளேயு மூளை மெத்தவிருக்கும். சிலதுகள் பலபல தாரைகளுக்கு வழியாயிருக்கத் திறந்திருக்கும். சிலதுகள் சிறு துவாரங்களினாலே நிறைந்திருக்கும். இந்தப் பிரகாரமாகக் கைகா லெலும்புகளுடைய குழலுக்குள்ளே மெத்த மூளை யிருக்கும். கபால அஸ்திவாரத்தி னெலும்புகளுக்குள்ளே சில தாரைகள் போம். மூக்கு அஸ்தி யநேகந் துவாரங்களால் நிறைந்திருக்கும்.

இப்படியே யிந்த வெட்டுப் பிரிவுகளையுஞ் சொல்லிக் காட்டினதற்குப் பிற்பாடு அஸ்திகளுடைய சந்துக்களை வெளிப்படுத்தக் கடவோம் அதெப்படியென்று லஸ்திகள் நன்றாயிருக்கிறதற்கு மசைகிறதற்கும் வேண்டின சந்

துக்களை ஒழுங்குடன் விசாரிக்கிறவன் அதிலே விசேஷமா ய்ப் பிண்டத்தை யுண்டாக்கின பராபர வஸ்துவினுடைய அளவில்லாத விமரிசையையுஞ் சாமர்த்தியத்தையுங் காண் பானொழிய மற்றப்படியல்ல. அவ்வண்ணமே பலபல சந் துக்களுடைய வகைகளுண்டா யிருந்தாலு மவசியமா யது களை யெல்லாம் ஆனமேனாயாக அவயவங்களை யசைக்கிற தற்கு வேண்டியிருக்கின்றது. இவைகளில் ஒரு சந்துமாத் திர மில்லாதிருந்தால் பிண்டமான துவற்றக்குறைச்சலா யி ருக்கும். அவ்வண்ணமே சில அஸ்திகள் விக்கினமில்லாம லசைகிறதுக்குச் சாசுவதமா யிருக்கும். சிலதுகள்குழிபோ லே பள்ளமா யிருக்கும். அதற்குள்ளே சரியாகப் பிர வேசிக்கிறதற்கு மசைகிறதற்கும் வேறே யஸ்தி பருமமா யிருக்கும். சிலதுக ளன்னியோன்னியமாய்ப் பிடிக்கும் படிக்கும் சிலதுகள் ரம்பத்தைப்போலே யிருந்து அந்தப் பல்லுக ளன்னியோன்னியமாய்ப் பின்னி ஸ்திரமாயிருக் கும் இந்தச் சந்துக்க ளெல்லாமல் மாங்கிஷக் கற்றைகளினு லேயும் நரம்புகளினுலேயு மஸ்திகள் கட்டி யிருக்கின்றது. இதெல்லாம் உள்ளதுள்ளபடியே விசாரித்தோமானல் சர் வுத்துக்கும் வல்லவரா யிருக்கிற ஆண்டவர்பேரிலே தோத் திரம் பண்ணுகிறதற்கு விசேஷமான நியாயமுண்டாகும். இதற்கப்பால் அறியவேண்டியதாவது அஸ்திகளுக்குக் கா ரணமேதென்று லதற்குப் பிரத்தியுத்தரத்தைக் கண்டு பிடிக்கிறதற்கு மனதிலே கெட்டியாக வொரு காரியத்தை ஸ்தாபிக்கவேணும். அதேதென்றால் வித்துக்களிலே யி ருந்து விருக்ஷத்தினுடைய பட்டையுங், கொம்புகளுங், மிலை களும், புட்பங்களுங், காய்களுங், கனிகளும் புறப்படுகிறாப் போலே மனுஷருடைய சரீரத்திலே நின்று எலும்புகளு மாங்கிஷங்களு மிரத்தத் தாரைகளுங் கொழுப்பு முதலா னதுகளும் புறப்படும். அப்படியே சூரியனுடைய வுஷ் டணத்தினுலே மரங்களுடைய அங்கிஷங்க ளெல்லாம் விஸ்திரித்து மெள்ளமெள்ள சாங்கோபாங்கமாய்ப் போ கிறாப்போலே பிண்டத்திலுள்ள சுபாவவுஷ்டணத்தினு லே ஸ்திரமுள்ள அங்கிஷங்கள் பிரிந்து அடர்த்தியாய்ப் போ யஸ்திகளாய்ப் போகிறதற்குக் காரணமாயிருக்கும். இத்தனை வேற்றுமையுள்ள தத்துவங்க ளுஷ்டணத்தினு லே எப்படி ஸ்திரமுள்ள தாகுமென்று கேட்டா வி

தெல்லாம் பலபல அங்கிஷங்களுடைய அமரிக்கையினு லே வருமென்றறிவாயாக. இந்த மெய்யான விசேஷத்தை யொருவமையினுலே வெளியாக்குவோம். சூரியனுடைய வுஷ்டணத்தினுலே சேறு உறைந்து கட்டியாய்ப் போகின் றது. மெழுகானது உருகி நீற்றுப்போகின்றது. அதெப்ப டியென்றால், சேற்றுக்கு மெழுகுக்கும் வெவ்வேறே யங்கி ஷங்களுண்டாயிருக்ககிறதினுலே யிந்த வித்தியாச முண் டாகின்றது இதுபோல நர பிண்டத்தின் பற்பல அவய வங்களுடைய வகையிலே மகா பின்னபேதமா யிருக்கிறதி னுலே யாச்சரியப்படத் தேவையில்லை. இதுதவிர மனிதனி டத்தி லுண்டான அஸ்திக ளெதினுலே பிழைக்கிறதென் றும் வளருகிறதென்றுங் கேட்டால் எலும்புகளுக்குள்ளே யுண்டான மூளையினுலேயும் நரம்புகளினுலே யுண்டான சாரங்களினுலேயும் இரத்தத் தாரைகளினுலேயு முண்டாகி றதென் றறிவாயாக. அவ்வண்ணமே யிப்படிப்பட்ட சா ரங்களை அஸ்திகள் சுவிகரிக்கிறதினுலே மெள்ளமெள்ள வர் த்திக்கும். இதன்றியே பிண்டம் பிறந்த நாள்துவக்கி யிரு பது வருஷமட்டு மஸ்திகள் வளருகிறது. அதற்குப் பிற் பாடு 21-ம். வருஷந்துவக்கி 60-ம். வருஷமட்டு மொரு கனை ட சீராயிருக்கும். 60-ம். வருஷந்துவக்கி மரணபரியந்த மெள்ளமெள்ளக் குறைந்துபோகிறது மன்றி அஸ்திகளு டைய அங்கிஷங்க ளடர்த்தியாய்ப் போம்.

இதுவுந்தவிர அஸ்திகளுடைய வர்ணமேதென்றால், சிலதுகள் மெத்த வெண்மையாயும், சிலதுகள் சாம்பல் வர் ணமாயு மிருக்கிறது மல்லாமல்,அஸ்திகளெல்லா மகா மெல் லிய சருமத்தினுலே மூடப்பட்டதாயு மிருக்கும். இந்தச் சருமத்தைக் காயங்கள் நிமித்தமாகத் தொட்டால் வெகு வாய் நோகும். அஸ்தியைப் பரிச்சித்தால் நோகாது.

கடைசியிலே யஸ்திகளுடைய எண்ணிக்கை யேதென் றால், நரபிண்டத்திலே 249 அஸ்திகள் சரியாயிருக்கிறதென் றறிவாயாக. அதெப்படியென்றால், தலையிலே 60 எலும்பு களுண்டு. அடிப்பிண்டத்திலே 67 எலும்புக ளிருக்கிறது. தோள்துவக்கி விரல்மட்டும் மிரண்டு கைகளிலேயும் கை யொன்றுக்கு 31-ஆக. 62 அஸ்திக ளிருக்கிறது. இரண்டு கால்களிலேயுந் தொடைகளிலேயும் 60 எலும்புக ளுண்டு

ஆக 249 அஸ்திக ளுண்டாயிருக்கின்றன. இத்தனை யெ லும்புக ளில்லாமற்போனால் மனுஷருடைய சரீர மசைய வும், குனியவும், நிமிரவும், உட்காரவும், நடக்கவும், பிடிக்க வு மெல்லவு மற்றச் சேஷ்டைகளை யொழுங்கோடே செய் யவு மாட்டாது.

அஸ்திகளுடைய எண்ணிக்கைகளைப் பொதுவிலே பார்த்ததற்குப் பிற்பாடு தனித்தனியே யங்கங்களெல்லாம் பரிக்ஷிக்கவேணும். முந்தமுந்த தலையிலே 60 எலும்புக ளுண்டென்று சொன்னோமே அதுகளுக்குள்ளே கபாலத் துக்குள் 14 முகத்துக்குள் 46 அஸ்திகளிருக்கும். கபாலத் தினுடைய 14 எலும்பேதென்றால், நெற்றி யஸ்தியொன்று கபாலத்தின் பின்னஸ்தியொன்று. சுவரஸ்தி யிரண்டு. கா லஸ்தி யிரண்டு கபாலத்தி னஸ்திவார அஸ்தியொன்று. துவார எலும்பொன்று. இரண்டு காதிலுமுள்ள சின்ன அஸ்திகளாறு ஆக 14. இந்த 14 அஸ்திகளுங் கபாலத்தின் பற்பல பொருத்தங்களாகச் சேர்ந்திருக்கும். முகத்திலே 46 அங்கங்க ளேதென்றால், மேல் வாயிலே 27 அவையா வன மூக்கி னஸ்தி யொன்று. அதனிரு பக்கத்தின் ஒவ் வொரு பக்கத்திலும் அவ்வைந்து பல்லுகள் 16 ஆக. 27 கீழ்வாயிலே 19 எலும்புகளுண்டு. அவையாவன: பல்லுகள் 16, கடைவாயி னிரண்டு பக்கத்திலேயும் பல்லுகளுக்குக் கடைசியிலேயு மிரண்டஸ்தி, பற்களுடைய அஸ்திவாரத் தின் அஸ்தி யொன்று ஆக 19. ஆகமொத்தம் 60 எலும்பு கள் தலையிலே யிருக்கிறது. அடிப்பிண்டத்திலே 67 எலும் புக ளுண்டென்று சொன்னோமே. அதாவது: உள்ளே நெஞ்சில் முள்ளெலும்புகள் 32. பக்க எலும்புகள் 24. இது களின் மேலேயுந் தோள்மேலேயுமுள்ள திறப்பெலும்பு கள் 2. முன்னெஞ்சிலேயுள்ள அஸ்தி 3. இடுப்புக்கருகில் அஸ்திகள் 6 ஆக. அடிப்பிண்டத்திலே 67 எலும்புகளுண்டு. தோள் துவக்கி விரல்மட்டு மொவ்வொரு கைக்கு 31 அஸ் திக ளுண்டென்று சொன்னோமே. அதுகளுக்குப் பேரே தென்றால், தோளஸ்தி யொன்று, கைப்பட்டை யஸ்தி யொன்று, முன்கையிற் பெரிய எலும்பொன்று, சிறிய எ லும்பொன்று, மணிக்கட்டுத்துவக்கி விரல்மட்டும் சின்ன அஸ்தி 12 ஒவ்வொரு விரல்களில் மும்மூன்றுக விர லைந்து

க்கும்அஸ்திகள் 15. ஆக 31. மற்றக்கையிலே எலும்புகள் 31. ஆக கையெலும்புகள் 62. கால்களிலேயோவென்றால் அஸ்திகள் 60 மாத்திர முண்டு. அதெப்படியென்று லொவ்வொரு காலிலே முந்தமுந்த தொடையஸ்தி யொன்று. முழங்கால் சில்லு ஒன்று. குதிரைமுகத் தெலும்பொன்று. கெண்டைக்கால் அஸ்தி யொன்று. மணிக்கட்டுதுவக்கி விரல்கள்மட்டும் எலும்புகள் 12. விரல்கள் ஐந்துக்கும் எலும்புகள் 14. ஆகக் காலொன்றுக்கு எலும்பு 30 ஆக கால்களிரண்டுக்கும் எலும்புகள் 60. இவ்விதமாய் ஆக யெலும்புகளுடைய மொத்தம் 249. ஆனால் சில சாஸ்திரிகள் 217 அஸ்திகள்மாத்திர முண்டென்று சாற்றினார்கள்.

இதற்குக் காரணமேதென்றால், பிண்ட சாஸ்திரிகளுக்குள்ளே பல் விஷயத்திலே தர்க்கமுண்டு. சிலபேர்கள் பற்கள் எலும்புகளென்று சொல்லுகிறார்கள். சிலபேர்க ளல்லவென்று சாதிக்கிறார்கள். அஸ்திகளுடைய எண்ணிக்கைக்குள்ளே பல்லுக ளடங்காதென்று சொல்லுகிறவர்களுடைய நியாயங்களையும் வெளிப்படுத்துவோம். அதுகளுக்கு விரோதமான பக்ஷத்தை யநுசரிக்கிறவர்களுடைய பிரத்தி யுத்தரத்தையுந் தெரியப்பண்ணுவோம். அதெப்படியென்றால் சிலர்மனுஷன் பிறக்கிறபோது கணக்குண்டான அஸ்திகளோடு பிறப்பான். பற்களோவென்றால், பிண்டம் பிறந் தேழுமாதத்திற்குப்பிறகு தோன்றுமென்று சொல்லுகிறார்கள். வேறுசிலர் பற்க ளெலும்புகளோடுகூடத் தாயா ருதிரத்திலே யிருந்தது. ஆனால் சின்ன பள்ளங்களிலே அடங்கி யிருப்பதினாலே அது முளைக்கிறதற்கு எழுமாதஞ் செல்லும் என்கிறார்கள். ஆனால் இதிலேயும் பராபர வஸ்துவினுடைய விமரிசை காணப்படுகின்றது. அதெப்படியென்றால், முதலாவது.—பற்களானவை குழந்தைப்பருவத்திற் பிரயோசன மில்லாததினாலேயுந் தாயாருடைய மிருதுவான முலையை யுபாதிக்கு மென்கிறதினாலேயு மந்தக்காலத்திலே காண்பியாமல் பிற்பாடு காணப்படும். 2-வது.—மெய்யான அஸ்திக ளெப்போதுஞ் சரீரத்திலிருந்து நாளுக்குநாள் பலத்துப்போம். பற்களோவென்றால் முளைத்த ஏழாம் வயதிலே விழுந்துபோம். இதற்குப் பிரத்தியுத்தர மேதென்றால், மெய்யான பற்கள் நிற்

கும். விழுகிற பற்கள் மெய்யான பற்களுடைய நுனியாக மாத்திர மிருக்கும். ஒன்றில் சிலபேர்கள் சொல்லுகிறாப் போலே புட்பம் விழுகிறபோது கனிக்கு இடங்கொடுக்கிறாப்போலே புட்பங்கள்போலே யிருக்கிற முந்தின பற்கள் விழுகிறது. கனிகளுக்குச் சமானமாயிருக்கிற மெய்யான பற்கள் முளைக்கிறதற்கும் பலக்கிறதற்குங் காரணமாயிருக்கும். இது நிமித்தமாகப் பிற்பாடு முளைக்கிற பற்களுக்கு வேருண்டு. அதற்குப் பின்பு சிலதுகள் விழுந்தால் வியாதி நிமித்தமாக விழும். அப்படியேதானே யெலும்புகளும் வியாதி நிமித்தமாக விழுகிறது. இந்தப்பிரகாரந்தானே குஷ்டவியாதி நிமித்தமாகவும் வேறே காரணங்களி னிமித்தமும் விரல்களுடைய எலும்புகள் விழுகிறது. 3-வது.—எலும்புக ளெண்ணிக்கையிலே வர்த்திக்கிறதில்லை. ஆனால் பற்கள் வர்த்திக்கிறது. ஆனால் இதற்கு முந்தமுந்த விரண்டு முளைக்கிறது. பிறகு வேறே யிரண்டு தோன்றுகிறது. இந்தப்பிரகாரமாக முப்பத்திரண்டு பற்கள் தோன்றுமட்டு மெப்போது மெண்ணிக்கையிலே வர்த்தித்துக்கொண்டு வருகிறது. இதற்குப் பிரத்தியுத்தரமாவது: பற்களெல்லா மொருமிக்க முளையாமற்போனாலு மொருமிக்கத் துவக்கியிருந்தன. ஆனால் சிலதுகளுக்கு அங்கிஷங்க ளடர்த்தியா யிருக்கிறதினாலேயும் பலமதிகமா யிருக்கிறதினாலேயு முளைக்கிறதற் கநேக நாட்செல்லும். இந்தப் பிரகாரமாகக் கீரை விரையையு மரத்தினுடைய கொட்டையையு மொருநாளையிலே விரைத்தாலு மது தீவரமாய் முளைக்கும். இதற் கநேக நாட்செல்லும். 4-வது.—பற்கள் மெல்லிய சருமத்தினாலே மூடப்படாம லிருக்கிறதுந்தவிரக் கண்களுக்கு முதலாய்ப் பிரத்தியக்ஷமாய்த் தோன்றுகிறது. சகல அஸ்திகளோவென்றால், மாங்கிஷங்களுக்குள்ளே மறைந்திருக்கிறது மல்லாமல் மெல்லிய சருமத்தினாலேயும் மூடப்பட்டிருக்கின்றது. இந்தச் சந்தேகத்துக்குப் பிரத்தியுத்தரமாவது: பற்களி னிரண்டு பக்கங்களையும் பரிக்ஷிக்கவேணும். புறத்திலே காண்பிக்கிற அங்கிஷம் போசனத்தை மெல்லுகிறதற்கு வேண்டி யிருக்கிறபடியினாலே கண்ணுக்குத் தெரியும். வேறே பக்கங்களோவென்றால், மாங்கிஷத்துக்குள்ளே மறைந்திருக்கிறது மல்லாமல் மெல்லிசான தோலாலே மூடியிருக்கிறது. 5-வது.—எலும்புகள் 20 வருஷமட்டு

மெப்போது வளரும். பிற்பாடொரு கண்டசிரா வெப்போ
து மிருக்கும். பற்களோவென்று லெப்போதும் வளரும்.
இதற்குப் பிரத்தியுத்தரமாவது: சர்வேஸ்வரனுடைய மட்
டிலலாத விமரிசையினுலே யெலும்புகள் 20 வயதுமட்டு
மாத்திரம் வர்த்திக்கும். அவ்வண்ணமே யெப்போது மா
ணபரியந்தம் வளர்ந்தால் மனுஷ னிராக்ஷதனைப் போவான்.
ஆகையால மனுஷனனவன் சாங்கோபாங்கமா யிருக்கிறதற்
கொரு விசேஷமான வுபாயங் குறித்திருக்கிறது பற்களோ
வென்றால், தினந்தின மெல்லுகிறதினுலேயும் வேறே யசை
வினுலேயுங் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைந்து போ
கிறதினுலே யவ்வளவுக்குத் தினந்தினம் வர்த்திக்கவேண
டி யிருக்கிறது. ஆனு லெத்தனை வர்த்தித்தாலு மெப்
போது மந்தமட்டிலேதானே நிற்கும். இன்னமும் வே
றே நியாயங்களைச் சிலர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்
ஆனுற் பிண்டசாஸ்திரிக விஷயத்திலே பண்ணுகிற
தர்க்கத்தைக் கண்டுபிடிக்கிறதற் கிம்மாத்திரஞ் சொன்னது
போதும். ஏனென்றால் இந்த அஸ்தி விஷயத்திலேதர்க்
கம் பண்ணுகிறப்போலே மற்றுமுண்டான பிரசித்தமில
லாத வெவ்வொருவிஷயங்களிலேயும் வெகுவாய்த்தர்க்கித்து
அவரவர் தனது பக்ஷத்தை நிலைப்பிக்கத் தக்கதாகவும்
விரோதமான பக்ஷத்தை யாக்ஷேபிக்கத் தக்கதாகவு மெத்
தவும் பிரயாசப்படுவார்கள். ஆனபடியினுலே யிந்தத் தே
சத்தாரைப்போலே கினவு கண்டாற்போலே மனதின்படி
யே விதித்துக்கொண்டு அண்டபிண்ட வியாக்கியானம்
பண்ணுகிறார்களென்று விசாரிக்கவும் எண்ணவும் வேண
டாம்.

இப்போது எலும்பு வகையிலே யுண்டான சில வாச்
சரிய விசேஷங்களைச் சொல்லிக்காட்டுவோம். அதெப்ப
டியென்றால, சோடுகளா யிருக்கிற அஸ்திகள் சரியாக வள
ரும். இந்தப் பிரகாரமாக ஐந்து வயதுள்ள ஒரு பிள்ளை
யிரண்டு கையையுஞ் சரியாகக் குவித்தா லிரண்டு பெருவி
ரல் முழுதுஞ் சரியாயிருக்கும். இரண்டாள்காட்டி விர
லுஞ் சமனு யிருக்கும். இரண்டு பாம்புவிரல்களும் பின்
னபேத மில்லாம லிருக்கும். இரண்டு மோதிர விரலுஞ்
சுண்டுவிர லும் நிதானமா யிருக்கும். பதினைந்து வருஷ த

நுக்குப பிற்பாடு மறுபடி சோதித்தால முழுதுஞ் சரியாய வளர்ந்ததென்றும் எட்பிரமாணமானாலும் வித்தியாச மில லாம லிருக்குமென்றும் பிரத்தியக்ஷமாய்க் காணலாம் அதிலே சர்வேஸ்வரனுடைய மட்டிலலாத விமரிசை முழுதும விளங்குகிறது. அவ்வண்ணமே, பிரதிதினமும் ஆகாரபான நிமித்தமாகச் சாணகராதியாகிற சகல அவயவங்கள் வளருகிறபோ தொவ்வொரு பக்கத்திலேயு முள்ள அதற் கெதிரான சோடுகள் சரியாக விரத்தத்தைச் சுவிகரித்து வேற்றுமை யிலலாம லொருகண்டசிராய்ப் பெருத்து வளரும் இரண்டு கைகளுடைய அஸ்திகள் விஷயத்திலே பாசித்தாற் போலே காலகளுடைய எலும்புகளிலேயும் பக்க எலும்புகளிலேயும் யோசிக்கக் கடவோம்.

இதற்கப்பா லறியவேண்டியதாவது, ஒவ்வொரு அஸ்தியும் விசேஷமான ஒவ்வொரு காரியத்துக் குதவுகிறதினாலே அதற்கும் விசேஷமான ஒருநேரூபமுண்டு. அதின் சிலதுகள் குனிகிறதற்குஞ், சிலதுகள் நடக்கிறதற்குஞ், சிலதுகள் பத்திரமா யிருக்கிறதற்கும், சில துக ளுட்காருகிறதற்கும், சிலதுக ளசைகிறதற்கும், சிலதுகள் சுமக்கிறதற்கும், சிலதுகள் மெல்லுகிறதற்கும், சிலதுகள் தாங்குகிறதற்கும், சிலதுகள் கேட்கிறதற்கும், சிலதுகள் முகந்து பார்க்கிறதற்கும், சிலதுகள் ஸ்பரிசிக்கிறதற்கும், சிலதுகள் தெரிசிக்கிறதற்கு முதவும். பூர்வகாலத்திலொரு பெரிய சாஸ்திரியானவர் பிண்டத்தினுடைய அஸ்திகள் மேலே யநேக வருஷத் தியானம் பண்ணினதற்குப் பிற்பாடு அந்த அஸ்திகளை வேறே வகைபோட ஸ்தாபித்தா லென்னவருமோவென்று புத்தியினாலே சோதித்துப்பார்த்துச் சர்வேஸ்வரன் கட்டளையிட்ட வொழுங்கலலாமல வேறே விதமாக அதுகளை வைத்தால் மோசம் வருமென்று கண்டு திருவுளம்பற்றினதாவது. “அளவறுக்கப்படாத நியாயத்தையும் விமரிசையையுங் கொண்டிருக்கிற பராபர வஸ்துவானவரே யுமக் களவில்லாத தோத்திரமுண்டாகக் கடவது. என்னுடைய தாயாருடைய வுதரத்திலே நானே யவளறியாம லிந்த அஸ்திகளெல்லாம் பிண்டத்துக் கஸ்திவாரமா யிருக்கிறதற்கும் எண்ணிக்கைக்குள்ளே யடங்காத சேஷ்டைகளுக் குதவியா யிருக்கிறதற்குங் கற்பித்தருளின

தினாலே நன்றியறிந்த மனதோடே தேவரீரை ஸ்துதிக்கிறேனென் றருளிச் செய்தார்" இதெல்லாம் ஒழுங்கோடே தியானிக்கிறவன் அவசியமா யொரு கடவுள், ஒரு வஸ்து, ஒரு தேவன், ஒரு கர்த்தன், ஒரு ஆதிகாரணம், ஒரு சர்வேஸ்வர னிருக்கிறுரென்று கெட்டியாக மனதிலே ஸ்தாபிக்கிறது மல்லாமல் இப்படிப்பட்ட மட்டில்லாத பலத்தையுங் கிருபா கடாக்ஷத்தையுங் கொண்டிருக்கிற ஆண்டவர்பேரிலே ஸ்தோத்திரம் பண்ணித் தப்பில்லாத கிரமத்தோடே சகலத்தையும் நடத்திக்கொண்டு வருகிற பராபர வஸ்துவினுடைய சித்தத்துக்குப் பொருந்தாத பாவங்களைத்தள்ளிப் போட்டு அவருடைய சித்தத்துக்குப் பொருந்தின தருமங்களைச் செய்துக்கொண்டு வருவான்.

## கரு-ம். அதிகாரம்.

### சிரசின் விவரம்.

சிரசானது உச்சியிலே துவக்கி முந்தின முள்ளெலும்பு மட்டு மடங்கி யிருக்கின்றது. தலையினுடைய ரூபமானது ஏறக்குறைய வட்டமா யிருக்கும். காதுகளுடைய ஸ்தலங்களிலே தகடுபோலேயிருந்து தாழ் வாய்க்கட்டைமட்டுங் கொஞ்சம் நீளமா யிருக்கும். பஞ்சேந்திரியங்களினாலே வருகிற சேஷ்டைகளை நன்றாய்ப் பண்ணுகிறதற்கு மூளை மெத்த வேண்டி யிருக்கிறதினாலே யிப்படிப்பட்ட மூளையை மூடுகிறதற்குப் பெரிய தலை வேண்டி யிருந்தது. அந்த நியாயத்தினாலே சின்ன தலையைப்பார்க்கப் பெரியதலை நன்றாயிருக்கும். ஆனாலந்தப் பருமமு மட்டமா யிருக்கவேணும்.

சிரசானது பிண்டத்தினுடைய வுயர்ந்த ஸ்தலத்திலே ஸ்தாபிக்கப் படுகிறதற்குக் காரணமேதென்றால், சிரசின் மூளை வழியாய்ப் புறப்படுகிற நரம்புகளில் அநேகஞ் ஜீவ வணுக்களோடுகின்றன. அந்த ஜீவ வணுக்களின் ஓட்டத்தின் மிகுதியினாலே நரம்புகளெல்லா மசைக்கப்பட்டு மற்ற அவயவங்களை யெழுக்கிறதினாலே சிரசானது உயர்ந்த ஸ்தலத்திலே யிருக்கவேண்டி யிருந்தது. அதெப்படியென்றால் சிங்காரத்தோப்புகளிலேயு மிராசாக்களுடைய நந்தவ

ண்களிலேயும் உயர்ந்த ஸ்தலத்திலிருந்து பற்பல வாய்க்கால்களின் வழியாய்த் தோட்டங்களி லுண்டான புட்பங்களுக்கும், விருக்ஷங்களுக்கும் ஜலம் இறைக்கப்படுகிறுப்போலே முன் சொல்லப்பட்ட காரணங்களுக்காக தலையானது உயர்ந்த ஸ்தலத்திலே யிருக்கவேண்டி யிருந்தது. மேலும் இருதயமானது நடுவிலே யிருந்தாலு மேலே யுண்டான அவயவங்களையுங் கீழே யுண்டான சாணகராதிகளையும் பிழைப்பிக்கிறதற்கு இரத்தத் தாரைகளைக்கொண்டு மகா பலத்தோடு சீவ வக்கினியைத் தள்ளினுலு மிப்படிப்பட்ட வலுமை சிரசின் மூளையிலிருந்துண்டாகிறதினுற் பராபரவஸ்துவானவர் தலையை யுயர்ந்த ஸ்தலத்திலே வைக்கச் சித்தமானுர். முந்த முந்த நரர் தலையிலே உண்டாயிருக்கிற மயிர்களுடைய சுபாவமேதென்றுல் நீளமுமாய், மெல்லியதுமாய்க் குளிருமா யுலர்ந்ததுமா யிருக்கும். சில பிண்டசாஸ்திரிகள் மயிர்கள் பிண்டத்துக்கு மெய்யான அங்கிஷங்களல்ல வென்றுர்கள். அதேதென்றுல் மற்ற அவயவங்களைப்போலே யுயிருள்ளதா யிருக்கவில்லை யென்றும், பிண்டத்துக்கு யாதொரு விக்கினமில்லாமல் மயிர்களைக் கத்திரிக்கிறதையும், முழுதுஞ் சவரம் பண்ணுகிறதையுந் திஷ்டாந்தரப்படுத்துகிறுர்கள்.

இப்படிப்பட்ட மயிர்கள் பிறக்கிற வகையேதென்றுல்தந்த ரோமங்களிரத்தத்தினுடைய அசுத்தமான புகையிலேயுண்டாக்கப்பட்டு அந்தவொட்டடையுள்ள புகையானது பிண்டத்தின் புறத்திப் பக்கத்திலே உஷ்ணத்தினுலே தள்ளுண்டுபோய் ரோமத்துவாரத்துக்குள்ளே கட்டாயத்தினுலே யடர்த்தியாய்ப்போய்ப் பெரிய மயிர்களையுஞ் சின்ன ரோமங்களையு முண்டாக்குகின்றது. இதிலே யறியவேண்டினதாவது. இரத்தத்தினுடைய அசுத்தமான புகையைத்தள்ளுகிற வுஷ்ணமானது மிகுதியானுலொன்றில் வேரோடு மயிர்களைக் கெடுக்கிறது. ஒன்றில் வர்த்திக்கவொட்டாது. அந்த நியாயத்தினுலேதானே அபிசீன விராச்சியத்திலுண்டான சனங்களுடைய மயிர் வர்த்தியாது. மயிர்களுடைய பருமமும் நீளமும் வெவ்வேறே விதமா யிருக்கும். இதற்குக் காரணமேதென்றுல் மயிர் வளருகிறதற்கு வேண்டிய சார மெத்த வுண்டானு லப்போது நீள

மா யிருக்கும். கொஞ்சமுண்டானால் வளராது. ஆனாற் சிலதுகள் பருமமாயுஞ், சிலதுகள் மெல்லிசாயு மிருக்கிற தென்ன? ரோமத்துவாரங்கள் பெரியதானாற் பருமமாயிருக்குஞ் சின்னதானால் மெல்லிதாயிருக்கும். இதற்கப்பால் சில பேர்களுக்குச் சுருட்டு மயிருண்டு. சிலபேர்களுக்கு வளையாமலிருக்கும். இதற்குக் காரணமென்ன? ரோமத்துவாரங்கள செவ்வே யிருந்தால் வளையாதிருக்கும். சாய்ப்பானாற் சுருண்டுபோ யிருக்கும் மயிர்களுடைய ரூபமென்ன? கண்ணுக் குருட்சியாகக் காண்பித்தாலுஞ் சின்ன வஸ்துக்களைப் பெரியதாய்க் காண்பிக்கிற கண்ணாடியைக்கொண்டு பார்த்தாற் சிலதுகள் முக்கோண ரூபமாயுஞ், சிலதுகள் சதிரமாயுஞ், சிலதுகளுருட்சியாயுங் காண்பிக்கும். இத்தொகைப்பட்ட ரூபங்களுக்குக் காரணமேதென்றால், ரோமத்துவாரங்க ளெந்த ரூபமாயிருக்கின்றதோ அதுகளுடைய வழியாக வருகிற மயிர்களும் அந்த ரூபத்தையே கொண்டிருக்கும். பின்னையும் அவைக ளநேக விழைகளினாலே யுண்டாக்கப்பட் டிருப்பதால் ஒவ்வொருமயிரையும் பிளந்து கிளைகிளையாக நீளத்திலேதானே யநேகவிதமாகப் பிரிக்கலாம். சில சமயங்களிலே யந்த இழைகளுடைய பிரிவு முனையிலே காண்பிக்கும். இதன்றியே ரோமங்கள் குழல்போலே துவாரங்களைக் கொண்டிருக்கின்றன. இந்த விசேஷத்தை முன் சொல்லப்பட்ட கண்ணாடியாற் காணலாம். இதுவுமன்றி சிலவிசை யவலக்ஷண வியாதிகள் நிமித்தமாகத் தலையிலுண்டான விரத்தமநத ரோமங்கள் வழியாக வோடுகின்றது. ரோமங்களின் வர்ண மெதினாலே வருகிறதென்றால் பற்பல விராச்சியங்களுடைய வெவ்வேறே குணத்தினாலேயுஞ் சரீரங்களுடைய வெவ்வேறே சுபாவங்களினாலேயும் வயதுக்குத்தக்க சாரத்தின் குணத்தினாலேயும் வெவ்வேறே வர்ணங்களுக்குக் காரணமா யிருக்கும். இநதப் பிரகாரமாக வுஷ்டணுதி சீமையிலே பிறந்தவர்களுக்கு மயிர் கறுப்பா யிருக்கும். குளிரான விராச்சியத்திலே பிறந்தவர்களுக்கு மயிர் செம்பட்டையா யிருக்கும். வெவ்வேறு சீமையிலே திரிகிறவர்களுக்கு மயிர் கறுப்புமல்ல செம்பட்டையு மல்ல. இதன்றியே யந்த வித்தியாசங்களினாலேதானே சரீரங்களுடைய சுபாவமுஞ் சாரத்தின் குணமும் வெவ்வேறே நிறங்களைப் பிறக்கப்பண்

ணும். ஆனா லெந்தச் சீமையிலே பிறந்தாலு மெந்தச் சரீரத்தின் வகையைக் கொண்டிருந்தாலும் வயதுசென்றபின் மயிரெல்லாம் வெள்ளையாய்ப்போம். அப்படியே கிழவர்களுக்குள்ளே மயிர் வளருகிற சாரங் கொஞ்சமானபடியினாலே மயிர் வேறே வர்ணமாய்ப்போம். இந்த மயிர்கள் தோலிற் சென்மித்துப் பிற்பாடு அதிலே நாட்டப்பட்டாற்போலே வளரும். இந்தத் தோலையு மதற்குண்டான குணங்களையுங் குஷ்டி விவரத்தைச் சொல்லும்போது வெளிப்படுத்துவோம்.

இந்தத் தோலின் கீழே கபாலங் காண்பிக்கும். இந்தக் கபாலத்திலேயு முகத்திலேயு மிருபத்து மெலும்புகளுண்டென்று முன்னே சொல்லியிருக்கின்றோமாகையால் இங்கே யொரு விசேஷத்தை மாத்திரம் வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால தலையிலேதானே யநேகங் கபாலப் பொருத்தங்களுண்டு. அவைகள் மெய்யான பொருத்தமென்றும் பொய்யான பொருத்தமென்றுஞ் சொல்லப்படும். மெய்யான பொருத்தத்தினாலே கபால அஸ்திகளிரண்டு ரம்பங்களுடைய பற்களன்னியோன்னியமாய்ப் பின்னியிருப்பதுபோலே பின்னலாயிருக்கும். பொய்யான பொருத்தங்களோவென்றால், மீன் செலாம்புகளைப்போலே யடுக்கடுக்காயிருக்கும். இந்தக் கபாலப் பொருத்தங்களினாலே பிரயோசனமேதென்றால் அந்த வழியாக இடைவிடாமற் றலையிலே மிஞ்சின ஆவிகளும் புகைகளும் வீசப்படும். ஆனால அடர்த்தியான கபாலப் பொருத்தங்களைக் கொண்டிருக்கிறவர்களுக் கவைக ளப்புறப்படுகிறதற் கவகாசமில்லாததினாலே யநேகம் விசை தலைநோவுண்டாம். இந்தச் சீமையிலே தத்துவங்களை யறியாத வநேகம்பேர்க ளிந்தக் கபாலப் பொருத்தலைத் தலையெழுத்தென்றும், லலாட லிபியென்றுந் தாறுமாறாய் விதித்தார்கள். கபாலத்தினுடைய மேற்பக்கத்தின் கீழே யநேக ஸ்தலங்களிலே கபாலத்தோடே சேர்ந்திருக்கின்ற கெட்டியான சருமமுண்டு. அந்தத் தோலுக்குக் கீழாக வேறே மெல்லியதான சருமமுண்டு. இந்த விரண்டு தோலகளினாலே மூளையு மதிலேயுண்டான தத்துவங்களு மூடியிருக்கின்றது. இந்தத் தோல்களை வாங்கினால் மூளையெல்லாம் பிரத்தியட்சமாய்க் காணலாயிருக்

கும். இப்படிப்பட்ட மூளையானது இரண்டுவிதமாகப் பிரிந்திருக்கின்றது. அது முன் மூளையென்றும், பின்மூளையென்றுஞ் சொல்லப்படும். முன் மூளையானது பெரியதா யிருக்கும். பின் மூளையானது சிறியதா யிருக்கும். இந்த விரண்டு மூளைகளுங் கெட்டியான தோலின் மடிப்பினாலே பிரிந்திருக்கும். இந்த மூளையினுடைய ரூபமானது கபால ரூபத்தைப் போலவே யிருக்கும். இதல்லாமல் வயிற்றிலே குடல் பலபல விதமாகச் சுற்றிக்கொண் டிருக்கிறாப்போல மூளையின் புறத்திப்பக்கம் அனேகவிதமாய்ச் சுருண்டிருக்கும். இப்படியே உழப்பட்ட நிலத்திலே பள்ளங்களு மேடுகளுங் காணப்படுகிறாப்போலே யிங்கேயுஞ் சில பள்ளங்களு மேடுகளுங் காண்பிக்கும். இந்தச் சின்ன பள்ளங்களிலே சிவ அணுக்கள் மெத்த அடங்கி யிருக்கிறது. ஆனபடியினாலே யிப்படிப்பட்ட பள்ளங்களைக் கொண்டிருக்கிற சனங்கள் மற்றவர்களைப்பார்க்கப் பிரதிபிம்பங்களை யுண்டாக்குகிற தற்கான அமரிக்கையுள்ள வெத்தனங்களைக் கொண்டிருக்கிறதினாலே காரியங்களைக் கண்டுபிடிக்கிறதற்கு மகாபுத்திக்கூர்மை யுள்ளவர்களா யிருக்கிறார்கள். சிரசினுடைய மூளைக்கிரண்டசைவுண்டு. உப்புகிறபோ தநேகஞ் சீவவணுக்களைச் சுவிகரிக்கின்றது. வற்றுகிறபோது நரம்புகளிலே சீவவணுக்களைத் தள்ளுகின்றது. இந்த மூளையானது நரசீவனுடைய விருத்திகளுக்குப் பிரதான கைங்கிரியமுமா யிருக்கின்றதுமல்லாற் சீவவணுக்களையும்நரம்புகளுடைய சாரத்தையும் வடிக்கட்டி நரம்புகளின் வழியாகச் சகல அவயவங்களுக்குமிந்தச் சீவவணுக்களை யுதாரமாய்க் கொடுக்கின்றது. அன்றியும், இரண்டுவகையங்கிஷங்கள் மூளையிலே யிருக்கின்றது. சிலதுகள் சாம்பல் வர்ணம் போலே யிருக்கும். சிலதுகள் கற்கள்போலே யிருக்கும். முந்தின அங்கிஷங்கள் மகா மிருதுவாயிருக்கும். வேறே யங்கிஷங்கள் கூடியவரையில் ஸ்திரமாயிருக்கும். கல்லைப்போலே யிருக்கிற அங்கிஷங்கள் திறந்திருந்தா லிரண்டுபெரிய பள்ளங்கள் காண்பிக்கும். அதினுடைய நுனியானது மூக்கினடியிலே துவக்கும். அதின்பிறகு போகப்போக விசாலமாயிருக்கும். இந்த விரண்டு பள்ளங்களையும் படல்போலே யிருக்கிற வொரு சருமத்தினாலே பிரித்திருக்கின்றது. இந்தப் பள்ளங்களுடைய நடுவிலே யொ

ரு துவாரமுண்டு. அந்த வழியிலே மூளையிலுண்டான அநேக ஈரங்களு மிஞ்சின சலங்களும் கழிந்துபோகிறது. அந்த விரண்டு பள்ளங்கள் கூடுகிற ஸ்தலத்திலொரு தாக்கிருக்கிறது அந்தத் தாக்கு மூன்று தூண்களினாலே தாங்கி யிருக்கின்றது. இரண்டு பின் தூண்களின் பிறகே மூன்று பள்ளங்களுண்டு. அதிலே யெண்ணப்படாத சின்ன விரத்தத் தாரைகளினாலேயும், நரம்புகளினாலேயும் நிறைந்திருக்கிற வலைபோலே மகா மெல்லிசான தோற்கள் காணப்படும். அந்த மூளையினுடைய அநேக ஸ்தலங்களிலே யெண்ணிக்கைக்குள் ளடங்காத சின்ன பருக்கைபோலே அநேக அங்கிஷங்களுண்டு. அந்த அங்கிஷங்கள் வழியாகச் சிவ வணுக்கள் வடிக்கட்டப்படும். அதின் பிறகு ஒரு வாய்க்கால்போலே நாலாம் பள்ளத்துக்குப் போகிறதற்கோர் வழியிருக்கின்றது. சின்ன மூளையானது கீழ்ப்பக்கத்திலே பெரிய மூளையோ டொன்றித் திருந்தாலும் மேற்பக்கத்திலே கெட்டியான சருமத்தினுடைய மடிப்பினாலே பிரிந்திருக்கின்றது. அதினுடைய நிகளத்தைப் பார்க்க அகலமானது மிஞ்சியிருக்கும். இரண்டு பக்கத்திலே செதுக்கப்பட்ட வொரு வுண்டைபோலே யிருக்கின்றது. சின்ன மூளையினுடைய அங்கிஷங்கள் பெரிய மூளையினுடையஅங்கிஷங்களைப்பார்க்க ஸ்திரமா யிருக்கும். பெரிய மூளையானது சின்னமூளையைப் பார்க்க ஆறத்தனை பெரியதா யிருக்கின்றது. சின்ன மூளையானது சாம்பல் வர்னமா யிருக்கின்றது. சில ஸ்தலங்களிலே வெள்ளையா யிருக்கும். சின்ன மூளைக்குள்ளே முன் சொல்லப்பட்ட நாலாம் பள்ள மிருக்கிறது. இது முள்ளெலும்பினுடைய பக்கத்திலே முடியும். மூளையினுடைய சுபாவத்தையுங் குணங்களையும் வெளிப்படுத்தினதற்குப் பிற்பாடதிலே நின்று புறப்படுகிற நரம்புகளைத் தெரியப்பண்ணக் கடவோம். முள்ளெலும்புக்குள்ளே யுண்டான மூளையினுடைய வாலிலே நின்று 32 நரம்புகளுடைய சோடுகள் புறப்படுகிறதுமல்லாமல் தலையிலே யுண்டான மூளையிலே தானே பத்து நரம்புகளுடைய சோடுகள் புறப்படுகிறது. முந்தின சோடு மூக்கிலேபோய் முகர்ந்து பார்க்க வுதவும். இரண்டாஞ் சோடு திஷ்டி நரம்புகளென்று சொல்லப்படும். அந்த நரம்புகள் முந்தமுந்தக் கிட்டிப்போய்ப் பிறகு

ஒன்றித்துக் கடைசியிலே பிரிந்துபோ யிரண்டு கண்களி லேயும்போம். மூன்றாஞ்சோடு கண்களை யசைக்கிற நரம்புகள். நாலாஞ்சோடு ஆசைகளைக் காண்பிக்கிற கண்களுடைய அசைவை யிழுக்கிற நரம்புகள். ஐந்தாஞ் சோடு மூன்றுவிதமாய்ப் பிரிந்தொருபங்கு கண்களுக்குப் போகின்றது. வேறே யிரண்டுபங்கு மேல் வாய்க்குந் தாழ் வாய்க்கும் போகிறது. ஆறாஞ்சோடு ருசியினுடைய நரம்புகளென்று சொல்லப்படும். ஏழாஞ்சோடு செவிகளுடைய நரம்புகள். எட்டாஞ்சோடு பொதுநரம்புகளாக அநேக ஸ்தலங்களுக்குப் போகின்றன. ஒன்பதாஞ்சோடும் அநேக விடங்களுக்குப் போகிறதுமல்லாமல் விசேஷமாய் நாவுக்குப்போம். பத்தாஞ்சோடு அநேக அவயவங்களுக்குள்ளே பிரிந்துபோம். இதற்கப்பா லறியவேண்டியதாவது. மூளையை அஸ்திவாரத்திலே பார்த்தால் கீழ்ப்பக்கமகா வதிசயமா யிருக்கும். கபாலத்துக்குள்ளே யுண்டான ஆறு பெரிய பள்ளங்களை மூளையானது நிறைத்ததினாலே யதிலே ஆறு மேடுகள் காணப்படும். முள்ளெலும்புகளுக்குள்ளே யுண்டான மூளையினுடைய வால் முப்பத்திரண்டு சோடுகளுக்கு வேராயிருக்கிறது. அந்த நரம்புகள் சகல அவயவங்களுக்குள்ளே பிரவேசித்து மாங்கிஷங்களோடு கலந்து ஸ்பரிசத்தினாலே வருகிற நோவுக்குஞ் சந்தோஷத்துக்குங் காரணமா யிருக்கும். இப்படியே முன் சொல்லப்பட்ட 32 நரம்புகளுடைய சோடுகளிலே நின்று புறப்படுகிற நரம்புகள் எண்ணிக்கையில்லாமற் சரீரத்துக்குள்ளே யெங்கும் பரம்பி யிருக்கும். அதற்குள்ளே யிடைவிடாமற் சீவ அணுக்களோடுகின்றது. ஆனபடியினாலே யிதெல்லாஞ் செவ்வே நடத்துகிறதற்கு மேலான பலம் வேணும். அந்தப் பலத்தைக் கொண்டிருக்கிற பொருளானது மனுஷரிடத்திலே நரசீவனென்று சொல்லப்படும்.

இப்படிப்பட்ட நரசீவனானது சிரசின மூளையிலே தனக்கொத்திருக்கிற விருத்திகளைச் செய்யும். பிண்ட சாஸ்திரிகள் நரசீவனுக்கு மூன்றுவித பலமுண்டென்று சொலலுகிறார்கள். அதேதென்றால் மதிக்கிற சத்தி, யோசிக்கிற சத்தி, ஸ்மரணிக்கிற சத்தி, ஆக மூன்று சத்தி. நரசீவனனது அசரீரியா யிருந்தாலுஞ் சரீரத்தோடு அயிக்கமா

யிருக்கிறதினாலே திரேகத்தினுடைய பஞ்சேந்திரியங்களைக் கொண்டு தனது கிரியைகளைத் துவக்கிறது. மதிக்கிற சத்தியினாலே யந்தந்த வஸ்துவினுடைய ரூபங்களும் பிரதி பிம்பங்களு முள்ளிந்திரியத்திலே மதிக்கப்படும். அதினாலே பற்பல விசார மாத்துமத்துக்கு வரும். இந்த மதிக்கிற சத்திக்குதவுகிற மூளையினுடைய பங்கேதென்றால், நெற்றியின்கிட்டே யிருக்கிற மூளையினுடைய பங்கு மதிக்கிறதற்குதவு மென்கிறார்கள். அவ்வண்ணமேயாதா மொருத்தனொரு காரியத்தின் பேரிலே யோசிக்கவுந் தியானம் பண்ணவு மனதுண்டானாற் சுபாவமாய் நெற்றியிலே கையை வைத்து விசாரப்படுகிறான். இதல்லாமல் ஸ்மரணத்தினிமித்தமாக மறந்துபோன காரியத்தைத் திரும்ப நினைக்க மனதுண்டானாற் சிரசின் பின் பக்கத்தைத் தொட்டுக் கொண்டிருப்பான். ஆனதா லது நினைவுக் குதவுமென்கிற அடையாளம். இதெல்லா மினிமேல் நரசீவனுடைய குணங்களையுஞ் சுபாவத்தையும் விஸ்தீரணமாய் வெளிப்படுத்துகிறபோது தெரியப்பண்ணுவோம். அப்போது யோசிக்கிற வகையையுஞ் சொல்லிக்காட்டுவோம். இப்போது முகத்தையு மதற் குண்டான விசேஷங்களையு மறிவிப்போம். அதெப்படியென்றால், மனுஷனிடத்திலே முகமானது விசேஷமாய்ப் பிரகாசிக்கிறது அதிலே மகிமையின் பத்திராசனம் ஸ்தாபிக்கப்பட்டது. துஷ்டமிருகங்கள் முதலாய் அதைக்கண்டால் ஓடிப்போம். சர்வேஸ்வரனாலே யுண்டாக்கப்பட்ட கண்டிப்புள்ள வஸ்துக்களுக் குள்ளே யுத்தமவிராச்சியபாரம் பண்ணுகிற நரசீவனனது பஞ்சேந்திரியங்களைக் கொண்டு எதிரே யுண்டான வஸ்துக்களை யறிகின்றது. பிரதானி தளவாய் மந்திரிமார் முதலான பிரபுக்கள் இராயருடைய சமுகத்திலே நடந்த சேதிகளையெல்லாம் விண்ணப்பம் பண்ணுகிறதுபோலே மெய், வாய், கண், மூக்கு, செவி, யென்கிற பஞ்சேந்திரியங்கள் நரசீவனுடைய கைங்கிரியமா யிருக்கிறதினாலே முன்னே யுண்டான வஸ்துக்களுடைய சுபாவங்களையுங் குணங்களையும் நர ஆத்துமத்துக்குத் தெரியப்பண்ணும்.

முதலாவது.—நெற்றியானது புத்தியினுடைய அடையாளங்களைக் காண்பிக்கும். அவ்வண்ணமே சின்ன நெற்றியுள்ளவன் மிகுந்த புத்தியுடையவனாயிருப்பது அபூருவம்.

பெரிய நெற்றியானது நலல புத்தியினுடைய லக்ஷணம். அதேதென்றால், பெரிய நெற்றியிலே மூளையானது அமிழ்க்கப்படாமல் எளிதாய்ப் புத்தியினுடைய சேஷ்டைக் குதவும். நெற்றியானது மேலே மயிர்களுக்குள்ளேயும் பக்கத்திலே காலஅஸ்திகளுக்குள்ளேயும் கீழே புருவத்திற்கு மேலேயும் அடங்கியிருக்கிறது. அந்தக் கால அஸ்தியென்கிற பேருக் கர்த்த மேதென்றால்: மனுஷனானவன் வயதாகாலமாகிறபோ தவ்விடத்திலே முந்தமுந்த நரைத்துப்போய்க் காலங்களைக் காண்பிக்கிறதினாலே கால அஸ்தி யென்கிற பேருண்டாச்சுது. நெற்றியானது மாங்கிஷ நரம்புகளினாலே யசையும். முகத்திலே யுண்டான சருமமோவென்றால் வாயிலேயும், மூக்கிலேயும், கண்ணிலேயும், காதிலேயும் வழிவிட்டுத் திறக்கப்பட்டிருக்கிறது.

2-வது.—கண்ணானது சகல அவயவங்களைப் பார்க்க முகத்திலே யதிகமாய் விளங்குகிறது. ஆகையினாலேதான் விலைமதியாத மாணிக்கங்களைப் பட்டுப்பட்டாவளிகளினாலே பூச்சியமாய் மூடிவைத்திருக்கிறாப்போலே சகலமான விரத்தினங்களையு மிகவு மதிசயித்திருக்கிற கண்களிரண்டையும் இரண்டு நிமைகளினாலேயும் பற்பல சருமங்களினாலேயும் பத்திரமாய் மூடியிருக்கின்றது. இப்படிப்பட்ட கண்களுடைய சுபாவ சம்பந்த மேதென்றால், இரண்டு கண்ணு மொருமிக்கப் பின்னபேதமில்லாம லுயர்த்துகிறதும். ஒருமிக்கத் தாழ்த்துகிறதும், ஒருமிக்கத் திக்குகளைப் பார்க்கிறதும், இதனறியே யொருவஸ்துவினுடைய பிரதி பிம்பங்கள் இரண்டு கண்களிலேயு மெழுதப் பட்டிருந்தாலு மிந்த விரண்டு பிரதி பிம்பங்கள் பொது விந்திரியத்திலே யொன்றித்து வொரு வஸ்துவாக மாத்திரங் காண்பிக்கின்றது. இந்தப்பிரகாரமாக விரண்டு கண்கள் முன்பாக ஒரு வச்சிரத்தை வைத்தா லிரண்டு வச்சிரங் காண்பியாம லொரு வச்சிரமாத்திரந் தோன்றுகின்றது. பின்னையு மிந்தக் கண்களுடைய சுரூபமேதென்றா லதிகமான பலத்தோடேயு மெளிதான அசைவோடேயு மங்கங்கே திரும்புகிறதற்கு வுண்டை ரூபமாகச் செய்யப்பட்டிருக்கின்றது. மேலும் கண்களுக்கு மோசம் வராதபடிக்கு அவைகள் கெபிக்குள்ளே பதிந் திருக்கிறதுந்தவிர மற்றுமுண்டான சரீரத்தினு

டைய அவயவங்களுக்கு வருகிற விக்கினங்களை யெல்லாம் நீக்கத்தக்கதாக உயர்ந்த ஸ்தலத்திலே வேவுக்காரர்போலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. இதன்றியே கண்களுக்குக் குளிர் முதலான ஆகாயத்தினுடைய பற்பல விகாரங்கள் நிமித்தமாக மோசம் வாராதபடிக்குக் கண்களிலே மாங்கிஷங்கள் கிடையாது. இப்படிப்பட்ட கண்களுக்குள்ளே சர்வ லோகத்திலே யுண்டான சகலமான கண்டிப்புள்ள வஸ்துவின் சுரூபங்கள் சுபாவமான வர்ணங்களோ டொரு க்ஷணத்திலே யுச்சிதமா யெழுதப்படும். இந்தப்பிரகாரமாகச் சந்திர சூரிய நக்ஷத்திரங்களெல்லா மெத்தனை தூரமாயிருந்தாலுஞ் சோதி மண்டலங்க ளெத்தனை விஸ்தீரணமாயிருந்தாலுங் கண்களிலே யொரு க்ஷணத்திலே தெரிகின்றது. ஆனால் கண்டிப்புள்ள பொருட்களைக் கண்கள் பார்க்கிறதுந்தவிர அசரீரியா யிருக்கிற நரசீவனுடைய இரகசியமான எண்ணங்களை முதலாய் வெளிப்படுத்தும். அதெப்படி யென்றால், ஒருவனுடைய மனதிலுண்டான வன்மமும், பக்ஷமும், கோபமும், பயமும், சாதுவும், துணிவும், நம்பிக்கையும், அகங்காரமும், தாழ்ச்சியும், நிந்தையும், வணக்கமும், பராக்கும், அவதான முதலான ஆசைகளெல்லாம் அவனவனுடைய கண்களிலே சுபாவமாய்க் காணலாமென்று பிரத்தியட்சமான அநுபவத்தினாலே கண்டுபிடிக்கிறோம். கடைசியிலே விலையேறப்பெற்ற மாணிக்கங்கள் தங்கத்திலே பதித்திருந்தால் சம்பிரமமாகக் காண்பிக்கிறாப் போலேயும், சந்திர சூரியன் சோதி மண்டலங்களிலே விளங்குகிறாப்போலேயு மிரண்டு கண்களும் அலங்காரமாக முகத்திலே பதிக்கப்பட்டு மிகவும் பிரகாசிக்கிறதென்கிறது பிரத்தியட்சமாகும். இப்போதைக்குப் பார்வை யெப்படி வருகிற தென்று விந்தப் பிண்ட சாஸ்திரத்தினுடைய இரகசியத்தைக் கண்டுபிடிக்கிறதற்கு முன்னே யறியவேண்டினதாவது: கண்ணானது ஆறு தோல்களினாலே மூடியிருக்கின்றது. முந்தின சருமமானது மகா வெண்மையாயிருக்கும். இரண்டாந் தோலானது நகம்போலவுங் குளம்புபோலவு மிருக்கும். மூன்றாவது கறுத்த முந்திரிகைப் பழம்போலே யிருக்கும். நான்காவது திஷ்டி நரம்பு நூல்களினாலே யுண்டாக்கப்பட்ட வேர் வலைக் கொப்பாயிருக்கும். அதிலே பிரதி பிம்பங்க ளெழுதப்படும்.

ஐந்தாவது வளையில் நிறத்தை யொத்திருக்கிறதினாலே வளை யிற் றோலென்று சொல்லப்படும். ஆறாவது சிலந்திப் பூச்சி வலைபோலே யிருக்கும். இதல்லாமற் கண்ணிலே மூன்றுவகை இரசங்களுண்டு. தண்ணீர்போலே யிருக்கிற இரசம் கண்ணின்முன் பக்கத்திலே யிருக்கும். இதினு டைய பிரயோசன மேதென்றால், கண்ணெப்போதும் ஈர மா யிருக்கிறதற்கும் பிரகாசத்தின் கதிர்களினாலே யுலரா தபடிக்கு முதவும். இரண்டாம் ரசமேதென்றால், உருகின வளையில்போலே கண்ணின் பின்பக்கத்திலே யிருக்கும் வலைத் தோலானது ஆன வகையோடே விரிந்திருக்கிறதற் குதவும். மூன்றும் இரசம் உறைந்ததுமாய் முழுதும் ஸ்ப டிகம் போன்றதுமாய் நடுவிலே ஸ்தாபிக்கப்பட்டதுமாய் ஏறக்குறைய வட்ட ரூபமுள்ளதுமா யிருக்கும். அதினு டைய பிரயோசனமென்ன பிரகாசத்தினுடைய கதிர்கள் ஆன வகையோடே யுள்ளே பிரவேசிக்கிறதற்கும் புறப்படு கிறதற்கு முதவும். ஆறு தோல்களில் மூன்று இரசங்க ளடங்கி யிருக்கிறது. மூன்று இரசங்களின் பிரதிபிம்பங்களை யுச்சிதவிதமாகக் கண்ணிலே யெழுதப்படுகிறதற் குதவும். அதெப்படி யென்றால், ஒரு வஸ்துவின்மேலே பிரகாசம் படுகிறபோ தந்தப் பிரகாசமானது அப்படிப்பட்ட வஸ் துவினுடைய ரூபத்தை யெடுத் தப்பாலே கிளம்பிக் கண் களிலே விழுகிறது. அவ்வண்ணமே விழிக்குள்ளே புகுந் து மூன்று இரசங்களுக்குள்ளே பிரவேசித் தப்புற முள் ளேதானே யுருவிப் புறப்படுகிறபோது கண் முகிவிலே யுண்டான நரம்புகளுடைய வலையின் சில நூல்கள்மேலே பட்டால் காணப்பட்ட வஸ்துவினுடைய ரூப மந்தக் கதிர் களினாலே திஷ்டி நரம்பிலே யெழுதப்படும். அதின்பிற கந்த ரூபமானது திஷ்டி நரம்பு வழியாக வேறிப் பொது விந்திரியத்திலே வருகிறது. அந்தப் பொது விந்திரியத் திலே யுண்டான ரூபத்தைக் கிரிகிக்கிறதற்கு ஆத்துமத் துக்கு விசேஷமான பல முண்டு. அந்த நியாயத்தினாலே வஸ்துக்களைக் காணாதிருந்தாலு மந்த ரூபங்கள் பொது விந் திரியத்திலே யுண்டானா லந்த வஸ்துக்களைக் கண்டாற் போலே யிருக்கும். இது நிமித்தமாக விராத்திரி காலத் திலே நித்திரையி லிந்த ரூபங்கள் தாறுமாறாக் அசைந் தி ருக்கிறதினாலே சொற்பனத்தைக் காண்கிறோம். ஆனால்

யாதாமொருத்தன் பார்வை சம்பவிக்கிற வகையை யறிய மனதுண்டானு லொரு அறைமிலே பிரகாச மிராம லெங்கும் நன்ற யடைத்துப்போட்டுச் சூரியனுக் கெதிராக விருக்கிற திஷ்டிக் கதவிலொரு விரற் பிரமாணம் வட்டத் துவாரத்தைத் துளைத் திரண்டு பக்கத்திலே புடைப்புள்ள ஸ்படிக்கத்தை யதிலே ஸ்தாபித் துள்ளே யொரு வெள்ளைத் துப்பட்டியைப் பிடித்தா லதிலே புறத்திலே யுண்டான சகல வஸ்துக்களுடைய பிரதி பிம்பங்களுஞ் சுரூபங்களு மெழுதப்படும். அப்படியே யந்தத் துவாரம்போலே கறுப்பு விழியிருக்கும். இது ஸ்படிக்கத்துக்குச்சரியாயிருந்து இந்தத் துப்பட்டியிலே பிரதிபிம்பங்க ளெழுதியிருக்குமாப்போலே திஷ்டி நரம்புகளுடைய நூல்களிலே சுரூபங்க ளெழுதப்படும். கண்ணிலே யுண்டான இரசங்களுந் தோல்களு மதிக பிரகாசத்தோடே யுச்சிதமாக வெழுதப்படுகிறதற் குதவும். கடைசியிலே யந்த ரூபத்தைத் துப்பட்டியிலே தலைகீழா யெழுதி யிருக்குமாப் போலே யப்படித்தானே கண்ணிலே காண்பிக்கும்.

3-வது.—மனுஷர் கேட்கிற வகையை வெளிப்படுத்துவோம். அதெப்படி யென்றால்: செவியினுலே தொனியைக் கிரகிக்கிற விந்திரியமானது மகா வுச்சிதமா யிருக்கிறது. காதினுடைய புறத்திப்பட்ட அங்கிஷங்களை நாம் சொல்லாதிருந்தாலு முள்ளே யுண்டான தத்துவங்களைச் சுருக்கத்திலே சொல்லிக் காட்டுவோம். உட்காதினுடைய வகையேதென்றால், உள்ளே பாம்புபோலே நெளிகிற பாதையுண்டு. அதற்குப் பிற்பாடு துவாரங் காணப்படும். அந்தத்துவாரத்தின் முகிலே யொருதோல் விரிந்திருக்கிறது. அப்பா லொரு சின்ன கெபிபோலே யிருக்கிறது. அதிலே யாகாய மிருக்கிறது. இந்தச்சின்ன கெபிக்குள்ளே மூன்று சின்ன வெலும்புகளுண்டு. அந்த அஸ்திகளுடைய ரூபத்துக்குத் தக்கதுபேருண்டு. ஒன்றுக்குப்பேர் சுத்தியல். மற்றென்று கூடம். மூன்றுவது அங்கவடி. இந்த மூன்றெலும்புகளை நரம் பசைக்கிறது. கடைசியிலே செவியினுடைய நரம்புகளதிலே முகியும். இதெல்லா மிப்படி யிருக்கையி லொருகாரியத்தை யின்ன மறியவேண்டி யிருக்கிறது. அதெப்படியென்று லாகாயமானது அசையாதிருக்கும்

பேர்து பற்பல விதமாக வடிபட்ட அந்த வாகாயங் கிட்ட
விருக்கிற வாகாயத்துக் கசைவு கொடுக்கும். இதெல்லா
மோரு வமையினாலே வெளிப்படுத்துவோம். அசையாத
குளத்திலொரு கல்லைப் போட்டால் முந்தமுந்தக் கல்லு வி
ழுந்த விடத்தி லொரு சின்ன வளையமுண்டாம். அந்தச்
சின்ன வளைய மிரண்டாம் வளையத்துக்குக் காரணமா யிரு
க்கும். இப்படி யேபோகப்போகக் கடைசியிலே பெரிய
வளையமாய்க் கரைமட்டும் வரும். அத்தன்மையாகத் தொ
னிவிஷயத்தை யோசிப்பாயாக. நாவினாலேயும் பற்களினா
லேயு மண்ணத்தினாலேயு மாகாய மடிபட் டந்த அசை
வைக் கிட்டின ஆகாயத்துக்குக் கொடுக்கிறது. கடைசி
யிலே போகப்போகக் காதிலே விழுகிறது. அந்தக் காதான
து ஆகாயத்திலே யந்தச் சத்தத்தைக் கேட்கிற பாதையின்
வழியாகத் துவாரத்துக்குள்ளே விழப்பண்ணி யந்தத்
தொனி யங்கே விசையாக விரிந்திருக்கிற சருமத்தை ய
சைத்து அந்த அசைவினாலே யப்பாலே யிருக்கிற மூன்று
சின்ன வெலும்புகளை யசைத்து அந்த அசைவினாலே
தொனி பலத்துப்போய் செவியினுடைய நரம்புகளின் வ
ழியாக வந்த சத்தம் பொது விந்திரியத்திலே போகிறது.
அப்போது ஆத்துமம் சத்தத்தையும் வார்த்தைகளையுங்

4-வது.—இதல்லாமல் ஆக்கிராணத்தினுடைய வகை
யேதென்றால், கண்டிப்புள்ள வஸ்துக்களிடத்திலே நின்று
எண்ணப்படாத ஆவிகளும் புகைகளுஞ் சின்ன வணுக்க
ளுடைய புகைகளும் புறப்படுகிறது. இந்த விதமாக வி
சேஷமாய்ப் புட்பங்களு மகா கந்தமுள்ள பொருட்களு
மிடைவிடாமல் வாசனையுள்ள ஆவிகளை வீசுகிறது. இந்
த ஆவிகளும் புகைகளும் நாசிக்குள்ளே பிரவேசித்து அங்
கே யிருக்கிற சில மாங்கிஷ வுண்டைகள் மேலேபட்டுக் க
டைசியிலே யாக்கிராணத்தி னரம்புகள் வழியாகப் பொது
இந்திரியத்தி லேறினவுடனே நரசீவனானது துற்கந்தத்
தையும் நற்கந்தத்தையுங் கிரகிக்கிறது.

5-வது.—கடைசியிலே சுவை யிந்திரியத்தைக் கண்டு
பிடிக்கிற வகையேதென்றால், நாவின்மேலே யெண்ணப்ப
டாத கூர்மையுள்ள அங்கிஷங்க ளிருக்கிறது. அப்படிப்

ப்பட்ட அங்கிஷங்கள் மேலே தின்கிற வஸ்துக்களுடைய அ
ணுக்களுங் குடிக்கிற பானத்தினுடைய ஆவிகளும் படுகிற
போது சரீரத்துக் கொத்திருந்தால் உருசிபிறக்கும். ஒவ்
வாமற்போனு லரோசகம் பிறக்கும் அவ்வண்ணமே இந்தக்
கூர்மையுள்ள சின்ன அங்கிஷங்கள் ஒன்றில் நாக்கு நரம்பு
களுடைய நூல்களா யிருக்கும். ஒன்றி லதுகளோடு க
லந்திருக்கும். அந்த நரம்புகள் வழியாகப் பொது இந்திரி
யத்தி னரம்புக ளசையப்படும். அந்த அசைவுக்குத் தக்
கது ஆத்துமமானது நல்லது மாகாததும் உருசியு மரோ
சகமுங் கிரகிக்கிறது. வாக்குக் கடுத்த வநேக மதிசயங்க
ளின்னமுண்டு. இனிமேல் குக்ஷி* வியாக்கியானத்தையும்
போசன சீரணத்தையுஞ் சொல்லும்போ ததுகளை விஸ்
தீரணமாய் வெளிப்படுத்துவோம்.

## கசு-ம். அதிகாரம்.

### நெஞ்சின் விவரம்.

நெஞ்சை நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற்கு இப்படிப்
பட்ட நெஞ்சிலே யிருதய மடங்கியிருக்கிற தென்றுசொல்
லவேணும். ஆகையால் நெஞ்சானது கழுத்தினுடைய முகி
விலே துவக்கிக் குக்ஷியையும் நெஞ்சையும் பிரிக்கிற சரும
மட்டும் அமைக்கப்பட்டதா யிருக்கின்றது. முன்னே பக்க
வெலும்புகளைச் சேர்க்கிற அஸ்தியினுலேயும் பிறகே முள்
ளெலும்புகளினுலேயும் பக்கத்திலே விலா வஸ்திகளினுலேயு
மூடப்பட்டதா யிருக்கிறது. முன்னே காண்பிக்கிற பக்
கத்துக்கு நெஞ்சென்கிற நாமமுண்டாயிற்று. பிறகே
யுண்டான பக்கத்துக்கு முதுகென்று சொல்லப்படும்.
நெஞ்சினுடைய ரூபமேதென்றால், பெரிய முட்டைபோ
லே யிருக்கிறது. முன் பக்கத்திலே யகலமுமாய்த் தட்
டையுமா யிருக்கும். இதிப்படியா யில்லாமற் போனுல்
நெஞ்சுக்குள்ளே யடங்கி யிருக்கிற பிரதான தத்துவங்க
ளுடைய சேஷ்டைகளுக் குதவாது. இது நிமித்தமாக
சின்ன நெஞ்சைக் கொண்டிருக்கிறவர்கள் அநேககவருஷம்
பிழைத்திருக்க மாட்டார்கள். அதினுடைய சுபாவமே
தென்றால், மாங்கிஷங்களினுலேயு மஸ்திகளினுலேயுங் கூட்

* வயிறு.

டப்பட்டதா யிருக்கிறது. உயர்ந்த ஸ்தலத்தி லிருக்கிற கபாலமுழுது மெலும்புகளினுலேயுங் கீழே யிருக்கிற வயிறு முழுது மாங்கிஷங்களினுலேயும் உண்டாக்கப்பட்டதா யிருக்கின்றது. நடுவிலே யிருக்கிற நெஞ்சோவென்றால் முழுது மாங்கிஷங்களினுலே யானுலு முழுது மெலும்புகளினுலே யென்கிலு முண்டாக்கப்படாம லதுகளினுலேயுமிதுகளினுலேயுங் கூட்டப்பட்டதா யிருக்கிறது. நெஞ்சினுடைய பிரதான கிரிகை யேதென்று லிருதயத்தையும் ஈரல்களையும் பத்திரமாய் மூடியதுகளுக்கு மோசம் வராதபடிக் கெங்கு மதுகளைச் சுற்றிக்கொண்டிருக்கின்றது. மாங்கிஷ நரம்புகளின் கீழேயும் பக்கவெலும்புகளின் கீழேயு மொரு தோல் காணப்படும். அந்தச் சருமமானது உள்ளே யுண்டான விருதயத்தையும் நல்லீரலையு மூடுகின்றது. இந்தத் தோலினுடைய உட்பக்கத்தி லுண்டான அங்கிஷங்க ளிருதயத்தினுடைய அசைவுக்கும் நல்லீரலினுடைய அசைவுக்கும் விக்கினமா யிராமல் மகா மிருதுவா யிருக்கும். புறத்திப் பக்கத்திலே சின்ன மேடுகளும் பள்ளங்களு மிருக்கும். இந்தச் சரும முள்ளெலும்புகளோடேயும் பக்கவெலும்புகளை மூடுகிறதோலேடேயுஞ் சேர்ந்திருக்கிறது. அதிலே சில துவாரங்களுண்டு. அந்தத் துவாரங்கள் வழியாகப் போசனதாரையுஞ் சுவாசத்தாரையும் பெரிய தாதும் இரத்தத் தாரையும் போம். இதல்லாம லுள்ளே வேறே தோலுண்டு. அந்தத் தோலானது நெஞ்சுக்குள்ளே யுண்டான தத்துவங்களைச் சரியாக விரண்டாய்ப் பிரிக்கிறது. அந்தத் தோல் நிமித்தமாக வொரு பக்கத்தி லிரத்தமானுலும் ரசமென்கிலும் விழுந்தால் மற்றப்பக்கத்துக்கு பொல்லாப்புச் செய்யாது. இந்தச் சரும மிருதயத்தையு மிருதயத்தினுடைய மாங்கிஷப் பையையுந் தூக்குகிறதற் குதவுகிறது மல்லாமல் வயிற்றையும் நெஞ்சையு மிரண்டு அங்கணமாய்ப் பிரிக்கிற வேறேதோல் கீழே யிருக்கிற தத்துவங்களுடைய கனத்தினுலே விழாதபடிக்குத் தூக்குகிறதற்கு மொத்தாசையா யிருக்கும். நெஞ்சுக்குள்ளே பார்க்கும்போது இருதயத்தைக் காணக்கூடாது. அவ்வண்ணமே யிருதயமானது பெரிய மாங்கிஷப் பைக்குள்ளே மறைந்திருக்கிறது. இந்தப் பையானது மகா கெட்டியாயிருக்கும் இருதயத்தினுடைய ரூபத்துக்குச் சரி

யா யிருக்கும். இந்தப் பையானது நடுவிலே தூக்கப்பட் டிருக்கிறது. இந்தப் பையானது ஐந்து விடங்களில் தி றக்கப்பட் டிருக்கிறதினாலே யந்தத் துவாரங்களின் வழி யாக விருதயத்துக்குப்போகிற விரத்தத் தாரைகளு மிருத யத்திலே நின்று புறப்படுகிற தாதுக்களும்போம். இந்தப் பையினுடைய பிரயோசன மேதென்றால், முந்தமுந்த விரு தயத்தைச் சுற்றிக்கொண் டிருக்கிறபடியினாலே யிருதயந் தனது வாட்டத்தினிமித்தமாகவும் பெருக்கு நிமித்தமாக வுமெத்த வசையும்போது தனது சமீபமா யிருக்கிற அங்கி ஷங்களினாலே மோசம் வராதபடிக்கு ஒன்றிலதுகளுக்குக் கெடுதிவருத்தி வியாதபடிக் கந்த மாங்கிஷப்பை நடுவிலே யி ருக்கும். பின்னேயு மந்த மாங்கிஷப்பையி லிரண்டு மூன்று கறண்டித் தண்ணீ ரிருக்கிறது. அந்தத் தண்ணீரினாலே யிருதயமானது நனைந்துபோ யந்தத் துலையாத அசைவினா லே யுணராதபடிக் குதவியா யிருக்கும். இந்தத் தண்ணீ ரானது சிறு நீர்போலே யிருந்தாலு மதிலே யுப்பில்லை. இதல்லாமலந்தத் தண்ணீரிருக்கிறதினாலே யிருதயமான து அதிக லகுவோடே யசைகிறது. ஆனால் நெஞ்சுக் குள்ள பிரதானகாரிய மேதென்றா லிருதயமானது நரசீ வனுடைய பிண்டத்துக்குள்ளே பிரவேசித்தவுடனே தன து சேஷ்டைகளைப் பண்ணத் துவக்கும். நரசீவன் றிரே கத்தை விட்டவுடனே யசையாம லிருக்கும். நரசீவன் றிரேகத்தை விடாதவரையி லிருதயப் பையானது இப்படி ப்பட்ட அசைவை இடைவிடாம லசைத்துக்கொண்டு இர வும் பகலும் க்ஷணத்துக்கு க்ஷணங் காணப்படும். இருத யத்தினுடைய ரூபமேதென்றால், கோபுரம்போலே யிருக் கும். அஸ்திவாரத்திலே அகலமா யிருந்து நுனியிலே கூர்மையா யிருக்கும். நடுவிலே யுருட்சியா யிருக்கும். முன்னே தாக்குப்போலே யிருக்கும். பிறகே குறையப் பட்டுப் புடைப்புபோலே காண்பிக்கும். இருதயத்தினு டைய அஸ்திவாரம் நெஞ்சினுடைய நடுவிலே யிருக்கும். இருதயத்தினுடைய நுனி யிடது பக்கத்திற் கொஞ்சமாய்ச் சாய்ந்திருக்கும். இது நிமித்தமாக வதினுடைய அசைவைக் கையினாலேதானே யந்த ஸ்தலத்திற் கண்டுபிடிக்கலாம். இடது பக்கத்திலே யிப்படி சாய்ந்திருக்கிறதற்குக் காரண மேதென்றால், வலது பக்கத்திலே யுண்டான பெரிய விரத்

தத் தாரையிலே யிடைவிடாம லிரத்த மோடுகிறதினுலே யிருதயத்தினுடைய அசைவுக்கு விக்கினமா யிருக்கும். ஆனபடியினுலே வில்லங்கமா யிராதபடிக்கு இருதயத்தினுடைய சிகர மிடதுபக்கத்திலே கொஞ்சமாய்ச் சாய்ந்திருக்கிறது. இருதயத்தினுடைய இருப்பிடத்தைப் பார்த்தால் மகா வதிசயமா யிருக்கும். அவ்வண்ணமே தாதுகளைக்கொண்டு சகல அவயவங்களுக் கிரத்தத்தைக் கொடுக்கவேண்டியிருக்கச் செய்தே யிந்தக் கிரிஷிக்குத் தக்கது ஆனஸ்தலத்திலே ஸ்தாபிக்கப் படவேண்டி யிருக்கிறது. இது நிமித்தமாக மட்டில்லாத கிரமத்தோடு காரியங்களென்னப்பட்ட யாவையும் நடத்திக்கொண்டு வருகிற சர்வேஸ்வரனைவ ரந்த விசேஷமான ஸ்தலத்தை யிருதயத்துக்குக் கட்டளையிட்டார். இதெல்லாங் கண்டுபிடிக்கிறதற்கு வயிற்றுக்குள்ளேதானே யிருதயம் ஸ்தாபிக்கப்பட்டதென்று விசாரித்துக்கொள். அப்போது தலையினுடைய வுச்சிமட்டு மிரத்தத்தைத் தள்ளுகிறதற்குப் பலமில்லாமற்போம். பின்னையும் காலுக்கு மிருதயத்துக்கும் வெகுதூரமா யிருந்தாலும் பாதமட்டு மிரத்த மோடுகிறதற்குக் கொஞ்ச பலம்போதும். அதேதென்று லிரத்தந்தானே தனது சுபாவக்கனத்தினுலே விழும். ஆனபடியினுலே சர்வ பிண்டத்தை யிரத்தத்தினுலே பிழைப்பிக்கிறதற்கு மகா யோக்கியமான ஸ்தலத்திலே யிருதயத்தைப் பராபர வஸ்துவானவர் ஸ்தாபித்தார். மனுஷரிருதயத்தின் பருமத்தையு முயரத்தையும் பார்க்கும்போது சகலமான மிருகங்களைப் பார்க்க ஸ்தூலமான விருதயத்தை மனுஷர் கொண்டிருக்கிறார்கள். பெரியவர்களுக்கு ஆறுவிரற்கடை நீளமும்நாலுவிரற்கடை யகலமு முண்டு. பெரிய விருதயமுள்ளவர்களுக்குச் சுபாவமாய்ச் சூரத்தனமுந் தைரியமுமில்லை. அவ்வண்ணமே பெரிய விருதயத்திலே யுஷ்ணமத்தனை யடங்காது. சின்ன விருதய மடக்கமா யிருக்கிறதினுலே சீவாக்கினிக்குக் கட்டாயம் பண்ணுகிறதற்கு மிரத்தத்தைப் பலத்தோடே யசைக்கிறதற்கும் யோக்கிமா யிருக்கும். இருதயம் அஸ்திவாரப் புறத்தியிலே முள்ளெலும்புகளோடு பொருந்தி யிருக்கிறது. அந்த அஸ்திவாரப் பக்கத்திலே தானேநாலு பெரிய தாரைகளுண்டு. அதுகளி லிரண்டு குழல் இரத்தத்தை யிருதயத்திலே விழப்பண்ணும். இருத

யத்திலே நின்று புறப்படுகிற விரத்தம் வேறேயிரண்டு தாரைகள் வழியாகயேறும். இருதயமானது தோலாலே மூடியிருக்கும் ஆனாலந்தத்தோல் இருதயத்தினுடைய மாங்கிஷ அங்கிஷங்களோடு மகா ஸ்திரமாய்ப் பொருந்தி யிருக்கின்றதினாலே பிரிக்கக்கூடாது. இந்த மாங்கிஷ நூல்களஸ்திவாரத்திலே யிருந்து நுனிக்குப்போகிறபோது வளைந்திருக்கிறுப்போலே காண்பிக்கும். இருதயத்தினுடைய அஸ்திவாரத்திலே கொழுப்புண்டு. இந்த நிணம் இருதயத்துக்குள்ளே சுவிகரிக்கப்பட்டு உலராதபடிக் குதவியாயிருக்கும். இருதயத்தினுடைய நுனியிலே யத்தனை கொழுப்பில்லை. அந்தச் சிகர மெத்த அசைந்துக்கொண் டிருந்தாலும் விசேஷமான தண்ணீரினாலே நனையப்படுகிறதினா லவ்விடத்திலே யத்தனை நிணம் வேண்டியதில்லை. இதல்லாமல் நரம்புகள் சரீரத்தினுடைய அவயவங்களை யசைக்கிறதற்கு வேண்டியதா யிருந்தாலு மிருதயத்திலே மகாகொஞ்சமாக விருக்கும் இதற்குக் காரணமேதென்று லிருதய மிரத்தத்தினாலே சுபாவமா யசைகிறதினால் நரம்புகளிருந்தாலும் பிரயோசன மிராது. இனிமேல் நாம் சொல்லப்போகிற விசேஷங்களை நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற்குமுன்னே யறியத்தக்கதாவது. இரத்தத்திலே யிரண்டுவகை யுண்டு. இரத்தத்தாரையிலேயு மிரண்டுவகை யுண்டு. சுபாவமான விரத்தமொன்று சீவாக்கினியைக் கொண்டிருக்கிற விரத்தமொன்று. முந்தின விரத்தமுள்ள தாரையை யிரத்தத்தாரையென்று சொல்லப்படும். இரண்டா மிரத்தத்தைக் கொண்டிருக்கிற தாரை யைத் தாதுவென்று சொல்லப்படும். இந்தத் தாரைகளினாலேயு மதுகளிலே யுண்டான விரத்தங்களினாலேயு மிருதயத்தினுடைய அசைவை வெளிப்படுத்தத்தக் கடவோம். அதைச் சாவதானமாய்க் கேளுங்கள். இருதயத்துக்கிரண் டசைவுண்டு. பெருக்கினாலே வருகிறஅசைவும் வாட்டத்தினாலே வருகிற அசைவுமிரண்டுண்டு. பெருக்கினாலே வருகிற அசைவேதென்றால் இரத்தமானது இருதயத்தினுடைய விரண்டு பெரிய பைகளிலே விழுந்து அங்கிஷங்களை யுப்பப்பண்ணி சிலேஷ்டும நாடிகளையெல்லாம் நீண்டிருக்கச்செய்யும். வாட்டத்தினாலே வருகிற அசைவோவென்று லிருதயத்தினுடைய பைகளிலே விழுந்த விரத்தமதிலே சுபாவமான வுஷ்ணத்தினாலே பால் பொங்கிறுப்

போலே கொதித்துக் குதித்து அத்தியந்த பலத்தோடே தள்ளுண்டுபோ யிருதயம் வாடிப்போம். இருதயத்தி லி ரத்தமானது மகா பலத்தோடே விழுந்தா லிருதய மநிக மாயசையும். அந்த நியாயத்தினாலே யாதாமொருத்த னோ டினதற்குப் பிற்பா டவனுடைய விருதயத்தைத் தொட் டால் மகா பலத்தோடே யசைகிறதென்று காணப்படும். அவ்வண்ணமே யோட்டத்தினாலே யிரத்தத் தாரைகளி லே யுண்டான விரத்த மிகவு மடிபட்டதினாலே சீக்கிரத் தோடேயும் பலத்தோடேயு மிருதயத்தினுடைய பைகளி லே விழுந்ததிகமான வுஷ்ணத்தோடு தாதுகளிலே தள் ளுண்டுபோம். இப்படியே யிரத்தமானது திரேகத்தை யி டைவிடாமற் சுற்றிக்கொண்டு மறுபடி பெரிய விரத்தத் தாரைகளிலே வந்து இருதயத்திலே விழும். இந்தச் சுற் றை நன்றாயக் கிரகிக்கிறதற்கு அறியவேண்டினதாவது இருதயத்திலே யிரண்டு பெரிய பையுண்டு. இந்த விரண் டு அங்கங்கள் மகா ஸ்திரமுள்ளதுமா யடர்த்தியுள்ளதுமா யிருக்கிற மாங்கிஷப் படலாலே பிரிந்திருக்கிறது. ஒரந்த ஸ்திலே யிருக்கிற விரத்தமானது வேறே யந்தஸ்திலேபோ கக் கூடாது. ஒரு துளிமுதலாய்ப் போகாது. நடுவிலே மாங்கிஷ மதிள்போலே யிருக்கிறது. இந்த விரண்டு பை யலல்லாமல் வேறே யிரண்டு சின்னபை யிருதயத்தினுடைய காதுகளென்று சொலலப்படும். முந்தின காது வலதுபு றத்திலுண்டான விருதயத்தின் வாசலில் ஸ்தாபிக்கப்பட்டி ருக்கிறது. இரண்டாங் காது இடதுபுறத்தி லுண்டான பெரிய பையினுடைய வாயிலே யிருக்கிறது. முந்தின கா திலே பெரிய விரத்தத்தாரை முகியும். அந்தக் காதிலே யிரத்தம் விழுந்தவுடனே யிருதயத்தினுடைய வலது பு றத்தின் பெரிய பையிலே விழும். இரண்டாங் காதிலே வெள்ளீரலுடைய விரத்தத்தாரை முகிந்திருக்கிறது. அ திலே யோடுகிற விரத்த மிந்த விரண்டாங் காதிலே விழுந் தவுடனே யந்த விருதயத்தினுடைய இடது புறத்தின் பெ ரிய பையிலே விழுகிறது. இருதயத்தினுடைய விரண்டு பெரிய பைக்குள்ளே பள்ளங்களு மேடுகளுமாய் மாங்கிஷம டிப்புகளுமுண்டு. அதற்குக் காரணமேதென்றா லதிலே வி ழுகிற விரத்த மந்தப் பள்ளங்களிலே அகப்படுகிறபோது மேடுகளிலே யடிபட்டு நுரைபோலே சீவ அக்கினியுள்ள

அங்கிஷங்களினாலே யுப்பி மகாபலத்தோடே தள்ளுண்டுபோம். வலது பக்கத்திலே யிருக்கிற பையானது இடதுபுறத்திலேயுண்டான பையைப் பார்க்க அகலமாயிருக்கிறது. ஆனாலிடது பைபோலே யிருதயத்தினுடைய நுனிமட்டும் போகாது. முந்தின பையினுடைய மாங்கிஷங்களத்தனை ஸ்திரமல்ல. இரண்டாம் பையினுடைய மாங்கிஷங்கள் மகாகெட்டியா யிருக்கும். இதற்குக் காரணமேதென்றால் வலது பையிலேவிழுகிற விரத்தஞ் சுபாவமான விரத்தமாயிருக்கிறது. ஆனபடியினாலே யதைத் தள்ளுகிறதற் கத்தனை பலந் தேவையில்லை. ஆனா லிடதுபையிலே விழுகிற விரத்தமானது எண்ணப்படாத சீவாக்கினிகளினாலே நிறைந்திருக்கிறபடியினாலேயுஞ் சிரசின் மட்டுக்குந் தள்ளப்படுகிறபடியினாலேயு மகா பலம்வேணும். இதற்காக விரண்டாம் பைகளுடைய மாங்கிஷம் ஸ்திரமா யிருக்கிறது. இருதயத்தினுடைய அஸ்திவாரத்திலே யுண்டான நாலு பெரிய தாரைகளுடைய சுபாவத்தையுங் குணங்களையுங் கூட்டப்பட்ட வகையையுஞ் சொல்லிக் காட்டுவோம். வலது பாரிசத்திலே யுண்டான விரண்டு தாரைகளிலே முந்தின தாரை பெரிய விரத்தத் தாரையென்றும், இரண்டாந் தாரை வெள்ளீரலுடைய தாதென்றுஞ் சொல்லப்படும். இந்த இரத்தத்தாரைக்குந் தாதுக்கு முண்டான வேற்றுமையைச் சொன்னபின்பு இடது பாரிசத்திலேமுந்தின தாரைவெள்ளீரலுடைய விரத்தத்தாரையென்றும், இரண்டாந் தாரை பெரிய தாதென்றுஞ் சொல்லப்படும். பெரிய விரத்தத் தாரையிலே தேகத்தினுடைய விரத்தத்தாரைகள் சேர்ந்திருக்கிறதினாலே பெரிய விரத்தத்தாரையிலே யிரத்தமெல்லாம் விழுகிறது. இந்தப் பெரிய விரத்தத் தாரையினுடைய வாசலிலே மூன்று சின்னகதவுகளுண்டு. இரத்தம் விழுகிறபோதந்தக் கதவுகளைத் திறக்கிறது. ஆனாலிருதயம் வாடுகிற சமயத்திலே யந்த மூன்று சின்னக் கதவுகளை யடைக்கிறது. வெள்ளீரலுடைய தாதுகளுக்கோவென்றால் முன் சொல்லப்பட்ட பிரகாரத்துக்கு விரோதமான மூன்று சின்னக் கதவுகளுண்டு. அவ்வண்ணமே வலது பக்கத்திலே விழுகிற விரத்தம் பெரிய வலது பையிலே விழுந்தவுடனே கிளம்பித் தள்ளுண்டுபோகிறபோது பெரிய விரத்தத் தாரையினுடைய மூன்று சின்னக் கதவுகளை ய

டைத்தமாத்திரத்தில் வெள்ளீரலுடைய தாதின் மூன்று சின்னக் கதவுகள் திறக்கப் படுகின்றது. பின்னையு மேறின விரத்தந் திரும்ப தாதிலேவிழுந்தா லிருதயத் தினுடைய வலது பையிலே விழாமல் தாதினுடைய மூன்று கதவுக ளடைபட்டுப்போம். இந்தப் பிரகாரமாகத் திரும்பப் பெரிய விரத்தத் தாரையிலே யுண்டான விரத்த மூன்று கதவுகளைத் திறந்து பெரிய பையிலே விழுகிற போது தள்ளுண்டுபோ யிரத்தத் தாரையினுடைய கதவுகளை யடைத்துத் தாதினுடைய கதவுகளைத் திறந்து மேலேயேறும். இப்படியே யிடைவிடாம லிருதயமானது பெருகிறதும் வற்றுகிறதுமா யிருக்கும். இதலறியே யிந்தப்பெரிய விரத்தத் தாரையினுடைய வகையிலேயும் வெள்ளீரலுடைய தாது வகையிலேயும் யோசித்தாப்போலே வெள்ளீரலுடைய விரத்தத்தாரையிலேயும் பெரியதாதிலேயும் யோசிப்பாயாக. அதேதென்றால், வெள்ளீரலுடைய விரத்தத்தாரையி லுண்டானவிரத்தஞ் சின்னகதவுகளைத் திறந்திடதுபையிலே விழுந்துபொங்கித் தள்ளுண்டுபோயி ரத்தத்தாரையின் கதவுகளை யடைத்துப்போட்டுப் பெரிய தாதினுடைய மூன்று கதவுகளைத்திறந்து மேலே யேறும் — பின்னையுங் கீழே விழுகிறதற் கவகாசமில்லை. அல்லது தாதின் மூன்று கதவுகளையடைக்கும். பெரிய விரத்தத்தாரைக்கும் வெள்ளீரலுடைய விரத்தத்தாரைக்கு மொரு வேற்றுமைமாத்திர முண்டு. அதேதென்றால், முந்தின தாரைக்கு மூன்று கதவுகளுண்டு. இரண்டாந் தாரைக் கிரண்டு கதவுகள் மாத்திரமுண்டு. இதெல்லா மிப்படி யிருக்கையிலே இரத்த மெப்போதுஞ் சுற்றிக்கொண்டு வருகிற வகையை யெளிதாய்க் கண்டுபிடிக்கலாம். அதெப்படி யென்றால், பெரிய தாதிலே யேறுகிற விர்த்தந் தலைக்குங் கைகளுக்குங் கால்களுக்கும் போம். பின்னையு மவ்விடத்தி லிருந்து முன்னிருந்த ஸ்தலத்துக்கு வரு மிந்த வதிசயமான விசேஷத்தை யுற்றுக்கேள். இருதயத்தினுடைய விடதுபையிலே நின்றிரத்தமானது மகா பலத்தோடு புறப்பட்டு இருதயத்தினுடைய அசைவினாலே பெரிய தாதுக்குள்ளே தள்ளுண்டுபோ யதினுடைய சிவாக்கினிகளைக் கொண்டிருக்கிற அங்கிஷங்கள் பெரிய தாதினுயரத்தி லேறுகிற தாரைகளிலே யோடி யொரு பக்கத்திலே

தாது வழியாக் கைகளுக்குள்ளே யோடி வேறே பக்கத்தி லே தலையின் தாதுவழியா யேறி மூளையினுடைய தத்து வங்களுக்குட் பிரவேசிக்கும். இப்படிப்பட்ட விரத்தத்தி னுடைய கனமுள்ள அங்கிஷங்கள் கீழேபோகிற தாதின் வழியாகப் பற்பல தாதுகளைக்கொண்டு வயிற்றுக்குள்ளே யும், நல்லீரலுக்குள்ளேயும், வாலீரலுக்குள்ளேயு, முடல களுக்குள்ளேயுங், கால்களுக்குள்ளேயும் போம். இப்படிப் பட்ட விரத்தஞ் சரீரத்தைச் சுற்றிக்கொண்டு வருகிறபோ து ஆன சமயத்திலே வடிக்கட்டப்படும். இந்தப்பிரகார மாக மூளையிலே சீவ வணுக்களும், வாயிலே யுமிழ் நீரும், வயிற்றினுடைய கீழ்ப்பக்கத்திலே புளித்திருக்கிறவிரசமும், நல்லீரலிலே வாதமும், மாங்காயிலே சிறு நீரும், ஸ்திரீகளு டைய மார்பிலே பாலும், வடிக்கட்டப்படும். இந்தவிதமாக மேலேயுங் கீழேயும் பெரிய தாதினுடைய தாரைகளிலே சீவாக்கினியைக் கொண்டிருக்கிற விரத்த மெங்குஞ் சித றிப்போனதற்குப் பிற்பாடு மாங்கிஷங்களுக்குந் தத்துவங் களுக்கும் பொசிப்பா யிருக்கிறது மிஞ்சின விரத்த மயிர் போலே யிருக்கிற சின்ன விரத்தத்தாரைகளுக்குள்ளே பிர வேசித்துப் புதிதாய் வருகிற வேறே யங்கிஷங்களினாலே தள்ளுண்டுபோய் வாய்க்காலும் சின்ன ஆறுகளும் பெரிய நதிகளிலே விழுந்து சமுத்திரத்தி லோடுகிறாப்போலே யந் தச் சின்ன விரத்தத்தாரைகளிலே யுண்டான விரத்தம் பற் பல தாரைகளிலே யோடினதற்குப் பிற்பாடு கடைசியி லே பெரிய விரத்தத்தாரையிலேயும் விழுந் திருதயத்துக் குத் திரும்ப வரும். இந்தப் பிரகாரமாகத் தலையிலேயும் நெஞ்சிலேயும் வயிற்றிலேயுஞ் சாணகராதிலேயு மிஞ்சின விரத்த மிரத்தத் தாரைகளுடைய வழியாகவோடிப் பெரிய விரத்தத்தாரையிலே பிரவேசித் தெப்போதும்போலே யிரு தயத்தினுடைய வலதுபையிலே விழுந்ததிலே யுண்டான சுபாவமான வுஷ்டணத்தினாலே பொங்கி மேலேயேறி வெள்ளீரலுக்குள்ளே தாது வழியாக்ப் பிரவேசித் தங்கே சுவாசத்தி னிமித்தமாக ஆகாயத்தினுடைய மெல்லீசான அங்கிஷங்களோடே கலந்துபோய் வெள்ளீரலுக்குள்ளே யுண்டான விரத்தத்தாரையிலே யோடி யிருதயத்தினுடை ய இடதுபக்கத்திலே விழுந்து மறுபடி பெரிய தாதிலே தள்ளுண்டுபோ யிப்படிப் போகவர இடைவிடாமற் சுற்றிக்

கொண்டிருக்கும். இருதயத்திலே விழுந்த விரத்த மகா பலத்தோடே தாதுகளுக்குள்ளே தள்ளுண்டுபோகிற நேர மெல்லாம் நாடி யடிக்கிறது. இது நிமித்தமாக வயித்தியர் நாடியைப் பார்க்கிறபோ தெத்தனைவிசை தாதுகளுக்குள் ளே யிரத்தந் தள்ளுண்டுபோயிற்றோ அத்தனைவிசை நாடி மேலே வைத்திருக்கிற விரலிலே காண்பிக்கும். பின்னையு மிரத்தத்தினுடைய பற்பல குணங்கள் நிமித்தமாக வெவ் வேறே விதமாக நடக்கும். இப்படியே யிரத்த மசையப்பட் டதினாலேயும் வழியிலே பற்பல அவயவங்களுக்குவேண்டி ய பொசிப்பைக் கொடுத்ததினாலேயுங் குறைந்துபோமென் பதற்குச் சந்தேகமில்லை. ஆனாலாகாரமான நிமித்தமாகவிந் தக்குறைவு தீர்க்கப்படும். இந்த விசேஷத்தை வருகிற அதிகாரத்திலே விஸ்திரணமாய்ச் சொல்லிக் காட்டுவோம். கடைசியிலே யிரத்த மிருதயத்தி லெம்மாத்திரம் விழுமெ னறு கேட்டா லேறக்குறைய பெரியதாதிலே யொவ்வொரு விசைக்கு ஒவ்வொரு பலந் தள்ளுண்டுபோம் ஆனபடி யினாலே யொரு தாசுக்குள்ளே பெரிய மனுஷருக்கு நாடி யேறக்குறைய 64 விசை யடிக்கிறதினாலே யொரு தாசுக குள்ளே 3,840 பலம் இரத்தந் தாதுவழியாக வேணும். பின்- னையு மிரவும்பகலும் 24 தாசுக்குள்ளே 92,160 பலம் பெ ரிய தாதுக்குள்ளே யோடும். சரீரத்திலே யிம்மாத்திர மி ரத்த முண்டானா லொருவிசை மாத்திரம் இராப்பகலுக் குள்ளே சரீரத்தைச் சுற்றிக்கொண்டு வரும். ஆனால் பெரிய சரீரத்துக்குள்ளே யேறக்குறைய 1,440 பலமாத்திர முண் டாயிருக்கிறதினாலே யொரு தாசுக்குள்ளே மூன்றுவிசை யதிகமாய்ச் சுற்றிக்கொண்டு வரும். ஆனபடியினாலே யவ் வியமா யிரத்த மொருநாளையிலே யநேகம்விசை சுற்றிக்கொ ண்டு வருகிறது. இல்லாமற்போனால் மனுஷன் செத்துப் போவான். இப்படிப்பட்ட விசேஷத்தைப் பிரத்தியக்ஷமா யொப்புவிக்கிறதற்குச் சொல்லத்தக்க வேறே நியாயங்களை யிவ்விடத்திலே வெளிப்படுத்தச் சமயமல்ல. இருதயத்தி னுடைய பிரதான விசேஷத்தைச் சொல்லிக் காட்டினதற் குப் பிற்பாடு வெள்ளீரலுக்கடுத்த வநேகங் காரியங்களை வெளிப்படுத்தவேணும். அதெப்படியென்றால்: வெள்ளீர லைப் பத்தும்பத்தாய் விசாரித்தால் எண்ணப்படாத சின்ன வைகளினாலே கூட்டப்பட்டதா யிருக்கிறதென்று காணப்ப

டுகின்றது. இப்படிப்பட்ட நுரையீரலோ டநேக மிரத்தத் தாரைகளுந் தாதுகளுங் கலந்திருக்கின்றது. இது இருதயத் தின்பிறகே கட்டியிருக்கிறது. சுவாசம் வாங்குகிறபோ தந் தச் சின்னபைகளெல்லா மாகாயத்தினாலே நிறைந்திருக்கிற தைப்பற்றி யிருதயத்தை மூடி யுப்பும். பிற்பாடு மூர்ச்சை விடுகிறபோது சுருங்கி விரியும். நுரையீரலுடைய ரூபமே தென்றால், மாட்டின் குளம்புக்குச் சமானமாய்த் தாக்கின் பிரகாரமாய் வளர்ந்திருக்கும். அதினுடைய நிறமேதென் றால் மிகுதியும் பஞ்சவர்னமா யிருக்கும். சில சமையங்களி லே பற்பல வர்னங்களு மதிலே காண்பிக்கும். அநேகவரு ஷம் வியாதியா யிருந்தவர்களுக்குக் கறுத்தாற்போற் காண் பிக்கும். நுரையீரலுடைய பிரயோசனத்தைக் கண்டுபிடிக் கிறதற்கு முன்னே சுவாசத் தாரையை யறியவேணும். இப் படிப்பட்ட தாரையானது வாயிலே துவக்கி நுரையீரல்மட் டும்போம். இது போசனதாரைக்கு மேலே வைத்திருக்கிற து அதனோடேகூட நெஞ்சினுடைய நாலா முள்ளெலும்பு மட்டும் நுரையீரலுக்குள்ளே யிரண்டு வழியாகப்போம். அ தின் பிறகு எண்ணப்படாத சில குழிகளுக்குள்ளே போயச் சின்ன பைகளையெல்லாம் பெருக்கிப் பிரிக்கும் அப்படிப் பட்டபைகள் முந்திரிகைப் பழம்போலே யிருக்கும். ஆகாய மந்தமூச்சுத் தாரைகளுக்குள்ளே விக்கினமில்லாமற்போக வ ரஅசைகிறதற் கிந்தத்தாரை யெப்போதுந் திறந்திருக்கிறது. அநேக மாங்கிஷம் மோதிரங்களைப்போலே பற்பல கட்டுக ளினாலே விரித்திருக்கிறது. போசனதாரையின் பக்கத்திலே **மாத்திர** மோதிரமுழுது முகியாது. போசனதாரையைச் **சுவாசத்**தாரை முழுதும் விட்டுப்பிரிந்ததற்குப் பிற்பா ட **தினுடைய கட்டு**கள்முழுதும் வளையமாயிருக்**கும்**. கொல லனுடைய துருத்தியை யுயர்த்துகிறபோ **தாகாயத்**தைச் சுவிகரிக்கும். பின்னையு மதை யமுத்துகிறபோ **தாகாயத்**தை விடுகிறாப்போலே நுரையீரல் வாடுகிறபோது **சுவாசம்** வி டும். சுவாசம் வாங்குகிறதினாலே யிரண்டு பிரயோசன முண்டு. முந்தமுந்த மூச்சு வாங்குகிறபோது நுரையீர லெல்லா முப்பிப்போகிறதினாலே யதிலே யுண்டான பிர தான தாதிலே யோடுகிற விரத்த மிரத்தத்தாரைகளுக்குள் ளே பிரவேசிக்கிறதற் குதவும். அந்த விரத்தம் பிறகு இரு தயத்தி னிரண்டாம் பையிலே விழும். இரண்டாவது வல

திருதயத்தின் பையிலே யிருந்து புறப்பட்ட விரத்த மனே கஞ் சீவாக்கினி யங்கிஷங்களோடு கலந்துபோய் நுரையீர லுக்குள்ளே வருகிறதினாலே யந்தப் புகையானது சிதறிப் போகாதபடிக்குக் குளிர்ந்த வாகாயத்தின் சயித்தியத்தினா லே தள்ளுண்டுபோய்ப் பிரியாம விரத்தத்தோடுகூட வோ டும். சுவாசம் விடுகிறதினாலே பிரயோசன மேதென்றால், முந்தமுந்த விரத்தத்தினுடைய அசுத்தமானதுமாய்க் க றுப்புள்ளதுமா யொட்டடையுமா யிருக்கிற அங்கிஷங்களா காயத்தோடு கூடப்புறப்படும். இந்த விசேஷத்தை யொ ப்புவிக்கத் தக்கதாக வொரு நியாயத்தைச்சொல்லுவோம். சுவாசம் விடுகிறதிலே புறப்பட்ட ஆகாயமொரு வெள்ளைக் கடுதாசியின் மேலே விழுந்தால் நாள்வட்டத்திலே கறுப் பாய்ப்போ யொட்டடைபோலே யிருக்கும். ஆனபடியினா லே நுரையீரலிலே நின்றுபுறப்படுகிற ஆகாய மகாவசுத்த மாயிருக்கும். இரண்டாவது. ஆகாயஞ் சுவாசத்தாரையிலே யேறுகிறபோது கூப்பிடுகிறதற்கும், பேசுகிறதற்கும், பாடு கிறதற்கு முதவும். இன்னமும் போசனதாரை சுவாசத் தாரைக்குக் கிட்டவிருக்கிறது. ஆனாலதையும் போசனத் துக்குஞ் சீரணத்துக்கும் வயிற்றுக்கும் ஈல்லீரலுக்கும் இது முதலான தத்துவங்களுக்குஞ் சம்பந்தமா யிருக்கிற விசே ஷங்களை வருகிற அதிகாரத்திலே வெளிப்படுத்துவோம்.

## கஎ-ம். அதிகாரம்.

### குக்ஷியினுடைய விவரம்.

இதுவரைக்குந் திரேகத்தை யெங்குஞ் சுற்றிக்கொண் டிருக்கிற சருமத்தையு மதற்கடுத்த சில விசேஷங்களையும் வெளிப்படுத்தாம லிருந்ததினாலே இப்போது குக்ஷியின் வி வரத்தைச் சொல்லிக்காட்டுகையி லதிலே அஸ்தியில்லாமற் பற்பல மாங்கிஷங்கள் மாத்திரங் காணப்படுகிறதினாலே தோலினுடைய வர்த்தமானங்களையெல்லாம் முன்னாடி தெ ரியப்பண்ணவேண்டியது ஞாயமா யிருக்கின்றது. சற் றுப்பருமமுள்ள சருமத்தைக் காண்கிறதற்கு முன்னே யிந்தச் சருமத்தின்மேலே மகா மெல்லிசான தோலிருக்

கின்றது. அது பெரிய சருமத்தோ டொன்றித் திருக்கு மாப்போற் காண்பிக்கிறது. ஆனாலது உஷ்டணத்தி னுக்கிரத்தினாலேயும் வெவ்வேறே காரணங்களினாலேயும் பிரிந்து போம் இந்த மெல்லீசானதோலின் விஷயத்திற் பிண்டசாஸ்திரிகளுக்குள்ளே தர்க்கமுண்டு. சிலபேர்களந்த மெலலீசான சருமமாகாயத்தினாலேயுங் குளிரினாலேயும் ஆகாச அசைவாகிற காற்றுமுதலான விகாரங்களினாலேயும் வருகிறதென்று சொல்லுகிறார்கள். அதெப்படியென்றால், சரீரத்திலே நின்றிடைவிடாமற் கொழுப்புள்ள புகையானது புறப்படுகின்றது. அது புறப்படுகிறபோ தாகாயத்தினாலேயுங் குளிரினாலேயுஞ் சரீரத்திற்றானே தடைப்பட்டுக் கெட்டியாய்ப் போகும். இதெல்லா மோருவமையினாலே வெளிப்படுத்துகிறார்கள். பால் காய்ச்சினதற்குப் பிற்பாடு நெய்யுள்ள அங்கிஷங்கள் அசைவினாலே புறப்படுகிறபோது குளிரினாலேயு மாகாயத்தினாலேயுங் காற்றினாலேயுந் தடைபட்டுப் பால்மேலே மெல்லீசான ஆடைகள் படருகிறாப்போலே சரீரத்திலே நின்று புறப்படுகிற நெய்யுள்ள அங்கிஷங்க ளாகாயத்தினாலேயும் வேறே காரணங்களினாலேயும் அமிழ்க்கப்பட்டு மெல்லீசான தோலாய்ப் போம். இரண்டாவது, அந்த மெல்லீசான சரும மெய்யான தோலானு லதிலே யநேக மிரத்தத் தாரைகளுந் தாதுக்களுங் காணப்படும். இந்தப் பின்றோலிலே பரிச்சேதமா யொன்றுங் காணக்கூடாதென்கிறார்கள். வேறே சாஸ்திரிகளோவென்று லிந்த மெல்லீசானதோல குழந்தைபிறந்தவுடனே யதுகள் சரீரத்தின்மேலே காண்பிக்கிறதினாலே முந்தின சாஸ்திரிகளுடைய பக்ஷ மனுபவசித்திக்கு விரோதமா யிருக்கிறதென்றும் ஆகையாலது மெய்யாயிருக்கக்கூடாதென்றுஞ் சொல்லுகிறார்கள். இந்த மெல்லீசான தோலானது அலங்காரத்துக்குக் காரணமா யிருந்து பற்பல சீமையிலே பிறந்தவர்களுக்கு வெவ்வேறே வர்ணமா யிருக்கும். இந்த மெல்லீசான தோலினுடைய பிரயோசனமேதென்றால், முந்தமுந்த பெரிய சருமத்துக்குள்ளே காண்பிக்கிற வனேகந் தாரைகளுடைய முகிலிலே யுண்டான சாரமப்பாலே போகாதபடிக்கு மூடும். இரண்டாவது.. பிரதான தோலிலே யுண்டான நரம்புகள் மேலே கண்டிப்புள்ள பொருள்கள் அழுந்தப்பட்டால் ம

கா நோவு பிறக்குமென்கிறதினாலே நோவு கடினங் காண் பொதபடிக்கு மிந்த மெல்லீசான தோல் மேலே ஆதாரமா யிருக்கும். இந்த மெல்லீசான தோலின்கீழே பெரியசரு மங் காணப்படும். இந்தச் சருமமானது புறத்திப்பட்ட சகல அவயவங்களைமூடித் திரேகத்தை யெங்குஞ் சுற்றிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய தோலானது கைகளிலேயுங் கால்களிலேயு மரையிலேயு மிடுப்பிலேயு ம கா கெட்டியா யிருக்கிறது. முகத்திலே மகா மிருதுவாயி ருக்கிறது. உதடுகளிலே மகா மெல்லீசா யிருக்கிறது. இந்தச் சருமமானது மிருகங்களிலே யதிகமான பலத்தை யும் பருமத்தையுங் கொண்டிருக்கிறது. அவ்வண்ணமே மிருகங்களெல்லாம் வெய்யலுக்குங் காற்றுக்கும் பயப்படா ம லிரவும்பகலு மெங்குந் திரிகிறதினாலே யிந்த விகாரங்க ளினாலே மோசம் வாராதபடிக் கதுகளுடைய தோலானது மகா கெட்டியா யிருக்கும். இப்படிப்பட்ட சருமத்திலே பெரிய துவாரங்களுண்டா யிருக்கிறதுமல்லாம லெண்ணப் படாத சின்ன துவாரங்களுங் காணப்படும். ஒவ்வொரு சின் ன துவாரத்திலே சின்ன ரோமமுண்டு. அந்த உரோமத்து வாரங்கள் வழியாகச் சரீரத்திலே மிஞ்சின ஈரங்களுஞ் சல ங்களு மற்ற ஆவிகளும் புகைகளும் புறப்படுகிறது. சலந் திரளாய்ப் புறப்பட்டால் வெயர்வையாகும். கொஞ்சமா னால் திரேகத்தின்மேலேதானே காய்ந்துபோ யசுத்தமா ய ழுக்காய்ப்போகும். இத்தொகைப்பட்ட ஆவிகளும் புகை களுஞ் சரீரத்திலே நின்றிடைவிடாமல் வீசப்படுகிறதினா லே வேட்டைநாய்க ளதுகளை முகர்ந்து பார்க்கிறபோது முயலும் மானுமெங்கே யொளித்திருக்கிறதென்று பார்க்கிற துமல்லாமல் தங்களுடைய ஆண்டவமா ரிருக்கிற ஸ்தலத் தைக் கண்டுபிடித்துஅவர்கள்கிட்டத் தீவரமாய்ப்போகும் இதல்லாமற் சரீரத்திலே நின்று புறப்படுகிற ஈரங்களினா லேயு மாவிகளினாலேயு மொரு விசேஷமான நன்மையுண்டு. அவ்வண்ணமே யதுகளினாலே சருமமெல்லாம் நனைந்திருக் கும். இல்லாமற்போனா லுலர்ந்து கெட்டுப்போகும். தி ரேகத்தினுடைய குணங்களுக்குத் தக்கது ஒன்றில் சரும முப்பும். ஒன்றில் வாடும். இந்தப் பிரகாரமாக மகோதர வியாதியிலே யுப்பும். க்ஷயவியாதியிலே வாடும். சரும மானது சரீரத்தினுடைய அவயவங்களோடு வெகு ஐக்கிய

மா யிருந்தாலு முள்ளங்கையிலேயு முள்ளங்காலிலேயும் விசேஷ்மா யொன்றித்திருக்கிறது. ஆனால் வயிற்றிலேயும் நெற்றியிலேயு மந்தனை வ திரமாய்ச் சேர்ந்ததல்ல. சருமத்துக்குக்கீழே கொழுப்பு காண்பிக்கும். இந்த நிணஞ் சரீரத்தைச் சுற்றிக்கொண் டிருக்கிறது. கொழுப்பானது வெள்ளையா யிருக்கிறது. இரத்தத்திலே யுண்டான நெயயுள்ள அங்கிஷங்களினாலே கூட்டப்படும். அதனாலே தேகமெல்லாம் வெதும்புகிற சுபாவவுஷ்ணத்தை யணைக்கிறது. ஆகாரபான மில்லாதவர்களுக்குச் சிலநாளுதவும் அநேகந் தாணைகள் மாங்கிஷங்களுக்குஞ் சருமத்துக்கும் விக்கினமில்லாமற் போகிறதற் கொத்தாசையா யிருக்கும். சந்துகளிலே யவயவங்களுடைய அசைவுக் குதவுகிறது. இப்படிப்பட்ட விசேஷங்களைச் சொல்லிக் காட்டினதற்கு பிற்பாடு வயிற்றுக் குண்டாகிய சொந்த வர்த்தமானத்தை வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால், வயிறானது ஆகாரத்தையும் பானத்தையுங் கொள்ளுகிற பாத்திரமுஞ் சீரணத்துக் கெத்தனமுமா யிருக்கும். குக்ஷியையும் நெஞ்சையும் பிரிப்பிக்கிற வொரு சரும முண்டென்று சொன்னோமே. அந்தத் தோலின் கீழாக வயிறிருக்கும். நல்லீரலுக்கும் வாலீரலுக்கும் நடுவிலே குக்ஷி காணப்படும். ஆனால் நல்லீரலானது வாலீரலைப் பார்க்கப் பெரியதுமாய்ப் பலமுள்ளதுமா யிருக்கிறதினாலே வயிற்றை யிடதுபக்கத்திலே வாலீரலிடமாய்த் தள்ளும். கொஞ்சமாய்ச் சாப்பிடுகிறவர்களுக்கு வயிறு சிறிதாயிருக்கும். போசனப் பிரியருக்குப் பெரிதாயிருக்கும் இந்த நியாயத்தினாலே ஸ்திரீசனங்களுக்கு வயிறு சிறிதாயிருக்கும். புருஷர்களுக்கு விஸ்தீரண வயிறாயிருக்கும். உப்புகிறதற்கும் வாடுகிறதற்கும் வயிற்றுக்குச் சுபாவ பலமுண்டு. வயிறு நீளமாயிருந்தாலு முருட்சியாயிருக்கும் புறத்திப்பக்கமிருதுவுமாய் வெள்ளையுமா யிருக்கும். உட்பக்க மெழுகப்பட்ட நிலம்போலே யிருக்கும். பள்ளங்களையு மேடுகளையுங் கொண்டிருந்து செகப்பாயிருக்கும். மூன்று தோலாலே மூடியிருக்கும். அதிலே யெண்ணப்படாத சில நரம்புகளுண்டு. போசனத்தின் சீரணமானதற்குப் பிற்பாடு பள்ளங்களிலே மிஞ்சி அசனத்தி னங்கிஷங்கள் புளித்துப்போ யந்த நரம்புகளைக் கடித்துப் பசியெடுக்கும் அந்த நரம்புகளுலர்ந்து

போனால் தாகமெடுக்கும். மேற்பக்கத்திலே யொரு துவாரமுண்டு. அதிலே போசனதாரை முகியும். அநேக நரம்புகளினாலே மூடியிருக்கும். இந்தப் போசனதாரையிலே யாகாரமும் பானமும் விழுகிறபோது முன் சொல்லப்பட்ட துவாரந் திறந்திருக்கும். வயிற்றிலே விழுந்தவுடனே யந்தவாசல் மூடிப்போம். இதற்குக் காரண மேதென்றால், முந்தமுந்த அந்தத்துவார மடைபட்டிருக்கிறதினாலே வயிற்றிலே யுண்டான வுஷ்டண மப்பாலே போகாமலுஞ் சிதறாமலுஞ் சேமிக்கிறதற் கதிகமான பலமாயிருக்கும். இரண்டாவது: வயிற்றிலே விழுந்த அசனமுஞ் சாறு மசைவினாலே கொதிக்கிறபோது மேலே யேறாதபடிக்கு விலக்கிறது. வலதுபக்கத்திலே வேறே துவாரமிருக்கிறது. வயிற்றினுடைய விரண்டாம் வாசலென்று சொல்லப்படும். அந்த வாசல் வழியாக வயிற்றிலே கொதித்த ஆகாரபானங்கள் கூழாய்ப் போன்பிற்பாடு குடல்களுக்குள்ளே சுற்றிக்கொண்டுபோம். இப்படிப்பட்ட வாசல் சின்னதாயிருக்கும். அதைத் திறக்கிறதற்கு மடைக்கிறதற்கும் நம்முடைய மனதின்படியே வராமல தனது சுபாவமான அசைவினாலே மாத்திரம் வரும். குக்ஷியினுடைய பிரதான பிரயோசனமேதென்றால், வயிற்றிலே விழுந்த அசனமும் பானமுங் கலந்திருந்ததற்குப் பிற்பாடான வகையோடு கூழாய்ப் போய்ச் சீரணமாகிறதற்கு வயிறு பிரதான எத்தனமாயிருக்கும். ஆனாலிதெல்லாம் நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற்கடியிலே துவக்கி யிந்த வாச்சரிய விசேஷத்தை வெளிப்படுத்தக் கடவோம். அதெப்படியென்றால்: போசனத்தாரை வாயிலே துவக்கி வயிற்றினுடைய துவாரமட்டும் போமென்று சொன்னோமே, அசனத்தை வாயிலே போட்டதற்குப் பிற்பாடு முன்வாய்ப் பல்லுகளினாலேயுங் கடைவாய்ப் பல்லுகளினாலேயு மதைக்கடித்து மெல்லுகிறபோது மேல்வாயாகிற அண்ணத்திலேயும் நாக்கிலேயு முண்டான வுமிழ்நீர்களோடு கலந்து செரிக்கத் துவக்கினதற்குப் பிற்பாடு விழுங்குகிற சமையத்திலே முன் சொல்லப்பட்ட போசனத்தாரையின் வாயைத் திறந்து சுவாசத்தாரையை யடைத்து உள்நாக்கு பாலம்போலே யிருந்து நரம்புகளுடைய பலத்தினாலே மென்ற அசனத்தைப் போசனத்தாரையிலே தள்ளி விழுங்கின போசனம் வயிற்றிலே விழும்.

இந்தப் பிரகாரமாகப் பானமும் வயிற்றிலே விழுந்ததற்குப் பிற்பாடு போசனத்தைச் சமைக்கிறதற்குக் குக்ஷி சட்டிபோலே யிருக்கும். சமீபமாயிருக்கிற அவயவங்களுடைய உஷ்ணமுங் கொளுத்தின கொள்ளிபோலே யிருக்கும். இதல்லாமல் வயிற்றிலேதானே யநேகஞ் சின்ன பைகளுண்டு, புளிக்கப்பட்ட ரசங்களிலே நிறைந்திருக்கும். அந்தப் போசனத்தினுடைய கனத்தினாலே பையிலேயுண்டான மகா பலமுள்ள ரசம் புறப்பட்டதினுடைய வுக்கிரத்தினாலேயுங் காற்றினாலேயும் அங்கிஷங்களெல்லாம் பிரிந்து கொதித்து அசனமும் பானமுங் கலந்து கூழாய்ப் போம். கூழாய்ப்போன போசனஞ் சாம்பல் நிறமாயிருக்கும். அதின்பின்பு வயிற்றிலே சீரணமான அங்கிஷங்கள் வலதுபக்கத்திலே யுண்டான வாசல் வழியாகப் புறப்பட்டுக் குடல்களுக்குள்ளே போம். குடலுடைய சுபாவமேதென்றால், தோலாலே யுண்டாக்கப்பட்ட குழல். அந்தக் குழல்வட்டமாயிருக்கும். வயிற்றினுடைய வாசலிலே துவக்கிப்பவனிவாய் மட்டும் போம். குடலினுடைய நீளம் பெரியவர்களுக்கு 28 முழ மிருக்கும். சில விடங்களிலே பருமஞ் சிறிதாயிருக்கும். சில விடங்களிலே பெரிதாயிருக்கும். அந்தக் குடலெல்லா மெல்லீசான தத்துவத்தைச் சுற்றிக்கொண் டிருக்கும். இந்தத் தத்துவமானது மெல்லீசான மாங்கிஷச் சீலைபோலே யிருக்கும். சவுக்கம்போலே யிருக்கிற விந்த மெல்லீசான மாங்கிஷ முள்ளேயும் போட்ட கட்டியிருக்கும். குடல்களோவென்றால், சுற்றிக்கொண்டு போகாமற் செவ்வேபோனா லவயவங்கள் வேண்டிய சாரத்தைச் சுவிகரிக்கிறதற் கவகாச மில்லாமலிருக்கிறதுந்தவிர மனுஷர்சாப்பிட்டுச் சற்றுநேரத்துக்குள்ளே தானே சலபானத்துக்குப் போகவேண்டி யிருக்கும். ஆனபடியினாலே யித்தனை விக்கினம் வராதபடிக்குக் குடலிலே யிருக்கிற சீரணமான சார மநேகம்விசை சுற்றிக்கொண்டு வரும். இதுவும் பதறாமல் மெள்ளமெள்ளப் போகிறபோதந்தச் சாரம் வெண்மை பொருந்தின ரசம்போலே யிருக்கும். அந்த வெள்ளை ரசமுழுதும் பாலுக்குச் சமானமாயிருக்கும். இப்படிப்பட்ட வெள்ளைரசத்தைக் குடலுக்குள்ளே தள்ளுகிறதற் கிரண்டு சூக்ஷமுண்டு. முந்தமுந்த குடல்களிலே யுண்டான மாங்கிஷ நூற்களுடைய விசேஷ

டான் அசைவினாலே வெள்ளைசாரந் தள்ளுண்டுபோம். இரண்டாவது: வெள்ளை ரசமானது வயிற்றினுடைய வாசலைக் கடந்தவுடனே யிரண்டு தாரையிலே நின்று மகா பலமுள்ள விசேஷமான ரசமும் பித்தமு மந்தக்குடலிலே விழுந்துஅந்த ரசங்களுடைய அங்கிஷங்கள் அக்கினி யணுக்கள்போலே யிருந் தந்த வெள்ளை சாரத்தோடே கலந்து அதை யசைத்தப்பாலே யிழுக்கும். இந்தக்குடல் மெல்லிசான மாங்கிஷச் சீலையைச் சுற்றிக்கொண்டிருக்கிறதென்று சொன்னோமே. யதினுடைய நடுவிலே சின்னக் குளம்போலே யிருக்கிறது. அதிலே யெண்ணப்படாத பால்த்தாரைகள் புறப்பட்டுக் குடலுக்குள்ளே போம். அந்தச் சின்ன பால்த்தாரைகளுடைய வாயானது குடலுக்குள்ளே புகுந்து வெள்ளை ரசத்தினுடைய மெல்லிசான அங்கிஷங்களைக் குடிக்கும். குடித்ததற்குப் பிற்பா டந்தத் தாரைகளிலே யோடி முன் சொல்லப்பட்ட குளத்திலே பால்போலே யிருக்கிற வெள்ளை ரசம் விழும். இப்படியே வெண்மையான சாரத்தினுடைய நல்ல அங்கிஷங்களைப் பால்த்தாரைகள் சுவிகரித்ததற்குப் பிற்பாடொன் றுக்கு மாகாத மலத்தி னங்கிஷங்கள்மாத்திரம் நிற்கும். அதுகளுங் கடைசியிலே பவனிவாயிலே நின்று புறப்படும். இதெல்லா மெவ்வளவாகிலுங் கண்டுபிடிக்கிறதற்கோ ருவமையினாலே தெரியப்பண்ணுவோம். அதெப்படியென்றால், வட்ட ரூபமாயிருக்கிற வொரு பெரிய வலையுண்டென்று விசாரித்துக்கொள். அந்த வலையைச் சுற்றி பெரியகயிறு கோத்திருக்கிறது. அநத வலையின் மையத்திலே யொரு பாத்திர முண்டு. அந்த மையத்திலே யிருந் தநேகஞ் சின்னக் குழல்கள் கயிற்றின் மட்டு மேறுகிறதென்று நினைத்துக்கொள். முன் சொலலப்பட்ட பெரிய கயிறு குழல் மேனையாக விருநததற் குள்ளாகத் தண்ணீரானாலும் பாலென்கிலும் வேறே ரசமாகிலு மோடினா லிப்படிப்பட்ட ரசஞ் சின்னக் குழலகளுக்குள்ளே புகுந்து அதுகளுடைய வழியிலே மையத்திலிருக்கிற பாத்திரத்திலே செவ்வே விழுகிறுப்போலே யிந்தப் பிரகாரமாகக் குடல்களி லுண்டான வெள்ளை ரசஞ் சுற்றிக்கொண்டு வருகிறபோது சின்ன பாலத்தாரைகளிலே பிரவேசித் தந்தத் தாரைகளுடைய வழியாக மெல்லிசான மாங்கிஷ சீலையினுடைய சின்னக் குளத்திலே விழுகிறதென்று யோசிப்பாயாக. இந்தக் குளத்

திலே யொரு தாரையுண்டு. அந்தத் தாரையின் வழியா கக் குளத்திலே விழுந்த வெள்ளை ரசமேறிப் பெரிய விரத் தத்தாரையிலே விழுந் திரத்தத்தோடு கலந் திருதயத்தில் விழுந்து இருதயத்திலிருந்து இரண்டு தாதுகள் வழியாகச் சரீரத்தினுடைய சகல அவயவங்களுக்குந் தத்துவங்களுக் கும் வேண்டிய சாரத்தைக் கொடுக்கும். இப்படிப்பட்ட வதிசயமான விசேஷங்களை யாதாமொருத்தன் முழுதுந் தீ ர விசாரித்தா லவசியமா யந்தத் தத்துவங்களை யுண்டாக் கினவருமாய் மட்டில்லாத கிரமத்தோடு நடத்திக்கொண்டு வருகிறவருமாகிய சர்வேஸ்வரன்பேரிலே தோத்திரம் பண் ணுவாரொழிய மற்றப்படியல்ல.

வயிறு நல்லீரலுக்குள்ளேயும் வாலீரலுக் குள்ளேயும் ஸ்தாபிக்கப்பட்டதா யிருக்கிறதென்று சொன்னோமே. இப்போது இந்த நல்லீரலினுடைய வர்த்தமானத்தைத் தெரியப்பண்ணுவோம். முநதமுந்த நல்லீரலானது வலது பக்கத்திலிருக்கிறது. இது மாட்டினுடைய குளம்புபோ லிரண்டாய்ப் பிரிந்துபோம். குக்ஷியையும் நெஞ்சையு மி ரண்டு அங்கணமாகப் பிரித்திருக்கிற சருமத்தோடு ஒட்டி யிருக்கும். மேலும் அது உறைந்த விரத்தம்போலிருக்கும். ஏறக்குறைய வெப்போதுஞ் சிகப்பாயிருக்கும். அநேக மி ரத்தத்தாரைகளுந் தாதுகளு மதனோடு கலந்திருக்கிறது. அதில் விசேஷமான பித்தத்தினுடைய தாரைகள் காணப் படும். நல்லீரலுடைய பிரயோசன மேதென்று, விரத்தத் தைச் சுத்திகரிக்கிறதற் குதவும். அவ்வண்ணமே பித்தத் தைக் கொண்டிருக்கிற விரத்தமானது நல்லீரலுக்குள்ளே யோடுகிறபோது வடிக்கட்டப்பட்டுப் புறப்பட்ட பித்த மங்கேயிருக்கிற பித்தத்தாரைக்குள்ளே போம். அதற்குப் பிற்பா டிந்தப் பித்தத்தாரை ஒன்றில் குடலுக்குள்ளே போம். ஒன்றில் பிச்சியினுடைய பையிலே விழும். நல்லீ ரலை யுயர்த்தினால் கீழே பிச்சினுடையபை காணப்படும். அந்தப் பிச்சுப்பை கோழிமுட்டைரூபமாயிருக்கும். நாலு சருமத்தினாலே கூட்டப்பட்டதா யிருக்கும். கல்லீரலுக் குள்ளே பதிந்திருக்குமாப்போலே யிருக்கும். ஒன்றுமாத் திர மிருக்கு மிரண்டு காண்கிறது அபரூபம். அதினுடைய தாரை குடலுக்குப்போம். புறுவுக்குப் பிச்சினுடைய பை யில்லை.

வாலீரலினுடைய வகை யேதென்றால்: இது குட்சியி னுடைய இடதுபக்கத்திலே காணப்படும். நல்லீரலைப் பார்க் கச் சின்னதாயிருக்கும். அதினுடைய நீளம் எட்டு விரற் கடை. அதினுடைய அகல மூன்று விரற்கடை யிருக்கும். ஒரு பெருவிரற்கடை மாட்டினுடைய நாக்குப்போ லிருக் கும். நடுவிலே வெள்ளை நூல்போலே யிருக்கும். குழந் தைகளுக்கு வாலீரல் செகப்பாயிருக்கும். பெரியவர்களுக்குக் கறுத்தாற்போ லிருக்கும். இதற்குக் காரண மேதென்றால்: சிலேஷ்டுமசார மதிலே கலந்திருக்கிறபடியினாலே யப்படி யிருக்கும். வயதுள்ளவர்களுக்குக் கெட்டுப்போன பச்சை போலிருக்கும். அதிலே யநேகந் தாரைகளுண்டு. இப்ப டிப்பட்ட வாலீரலிலே யிரத்த மோடுகிறபோது மிஞ்சின சிலேஷ்டும ரசம் வடிக்கட்டப்படும். இதல்லாமல் வாலீரல் கிட்ட வநேகஞ் சிறு மாங்காய்க் குலைபோலே யிருக்கிற ஒரு தத்துவ முண்டு. அது வயிற்றினுடைய கீழ்ப்பக்கத் திலே யிருக்கும். இடதுபக்கத்திலே விசேஷமாய்ச் சாய்ந் திருக்கும். அதிலே யிரத்தம் வடிக்கட்டப்படுகிறபோது புளித்த ரசம் புறப்படும். மஞ்சள்வர்னமா யிருக்கும். இப் படிப்பட்ட சாரம் விசேஷமான தாரைவழியாகக் குடலுக் குப் போம். இந்தப் புளிக்கிற ரசமும் பித்தமும் குட்சி லே யுண்டான வெள்ளை ரசத்தை யப்பாலேதள்ளும். கட்சி சியிலே யிரண்டு மாங்காய் காணப்படும். ஒன்று நல்லீர லுக்குக் கீழேயிருக்கும். ஒன்று வாலீரலுக்குக் கீழேயிருக் கும். இடதுபக்கத்திலே மாங்காய் மேலந்தஸ்திலே யிருக் கும். வலதுபக்கத்திலே யிருக்கிற மாங்காய் கீழந்தஸ்திலே யிருக்கும். அந்த மாங்கா யொன்றுக்கொன்று நாலு விரற் கடை தூரமுண்டு. பெரிய விரத்தத்தாரையோடு கலந்தி ருக்கும். நீளம் நாலைந்து விரற்கடை, யகல மூன்று விரற் கடை, பருமம் இரண்டு விரற்கடை. மேற்பக்கஞ் சமனு யிருக்கும். ஒருவகை செகப்புவர்னமாயிருக்கும். ஒவ்வொரு மாங்காய் வழியாய் பெரியதாது ஓடுகிறது. அதிலே யுண் டான விரத்த மாங்காயிலே வடிக்கட்டுண்டுபோய்ச் சிறுநீர் புறப்படும். ஒவ்வொரு மாங்காய்க்குள்ளே யொரு கெபி போலே யிருக்கும். அதிலே விழுந்த சிறுநீ ரிரண்டு தா ரையாக மூத்திரப்பையிலே விழும். இந்த விஷயத்திலே கனமான வதிசய முண்டு. அவ்வண்ணமே ஆட்டினுடைய

மூத்திரப்பையைப் பார்க்கும்போ ததிலே யெத்தனே தண்ணீர் வார்த்தாலு முள்ளே விழாது. இதெல்லா மிப்படியிருக்கையிலே யெந்தவிதமாகச் சிறுநீர் மூத்திரப்பையிலே பிரவேசித்தது. இப்படிப்பட்ட விசேஷத்தைக் கண்டுபிடிக்கிறதற் கறியவேண்டியதாவது: மூத்திரப்பையானது இரண்டு தோலாலே கூட்டப்பட்டதாயிருக்கும். மூத்திரத்தாரை யொருபக்கத்திலே முன்தோலிலே பிரவேசித்து இரண்டாந் தோலுக்குள்ளே சற்றுநேரமோடி யதற்கப்பாலே போயிருக்கிற விரண்டாந் தோலினுடைய சின்ன துவாரத்துக்குள்ளே புகுகிறது. ஆனபடியினலே போனவழியிலே திரும்ப வருகிறதற் கவகாசமில்லே. இந்த விரண்டு மாங்காய்கிட்ட புளித்திருக்கிற ரசத்தினுடைய விரண்டு பைகளுண்டு; இப்படிப்பட்ட காரியங்களிலே யிரண்டுமூன்று ஆச்சரியமான விசேஷங்களே யுற்று விசாரிக்கவேணும் முந்தமுந்தப் போசனங் குடல்களிலே வெள்ளே ரசமாயிருந்து பிறகு இரத்தமாய்ப்போ யெங்குஞ் சிதறியிருக்கிறபோ தந்தத் தத்துவங்கள் தனது சுபாவத்துக் கொத்திருக்கிற அங்கிஷங்களே மாத்திரஞ் சுவிகரிக்கும். மற்ற அங்கிஷங்களே விட்டுவிடும். இரண்டாவது: எந்த தத்துவமானலும் நன்றாயிருக்கிறதற்கு வேண்டிய சாரத்தைமாத்திரஞ் சுவிகரிக்கு மலலாம லதிகமாய் வாங்காது. மூன்றாவது வயிறானது சுயம்பாகிபோலே யிருக்கிறது. தன்னிடத்திலே விழுந்ததெல்லாஞ் சமைத்துச் சீரணமாக்கிச் சகல அவயவங்களுக்கும் வேண்டிய சாரங்களேக் கொடுத்துத் தனதிரத்தத்தாரைகளுடைய வழியாக வருகிற பங்கைமாத்திரஞ் சுவிகரிக்கும். இதெல்லாந் தியானிக்கிற மனுஷனைவன் றன்னுடைய சுபாவ மகிமைக்குப் பொருந்தினதை மாத்திர மபேட்சிக்க வேணும்ல்லாமல் மற்றுமுண்டான லவுகீகக் காரியங்களேச் சட்டைபண்ணும விருப்பதுந்தவிர அவசரமான லவுகிக காரியங்களே யநுபவிக்கிறபோது மட்டோடேயு மேனை மரியாதையோடேயு மதுகளே யடையவேணுமொழிய மற்றப்படியல்ல. கடைசியிலே தனக் கவசியமாயிருக்கிற காரியங்களில் வேண்டியதைமாத்திரம் வாங்கி மற்றதுகளே யெல்லாம் வேறேபேர்களுக் குதாரமாய்க் கொடுக்கக் கடவான்.

## ௧௮-ம். அதிகாரம்.

### சாணகராதி விவரம்.

அடிப்பிண்டத்துக்கடுத்த சுபாவத்தையு மதிசயமான குணங்களையுஞ் சொன்னதற்குப் பிற்பாடு அடிப்பிண்டத்தோடு கட்டப்பட்டிருக்கிற சாணகராதியின் விவரத்தை வெளிப்படுத்தவேணும் காலும், பாதமும், பிண்டத்துக்கஸ்திவாரமா யிருக்கிறது. கையோவென்றால், சகல காரியங்களுக்கும் பிரதான வெத்தனமா யிருக்கிறதென் றனுபவசித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். அதெப்படியென்றால், மிருகங்களுக்குச் சுபாவமா யுண்டான ஆயுதங்கள் மனுஷருக்கில்லாமற் போனாலுஞ் சகலமான ஆயுதங்களைப் பண்ணுகிறதற்கான கைகளுண்டா யிருக்கிறதினாலே அநேக ஆயுதங்களைச் செய்து மிருகசாதிகளை யெல்லாந் தனக்குக் கீழ்ப்படியக் கட்டாயஞ் செய்வான். தப்பில்லாத கிரமத்தோடு காரியங்கள் யாவையும் நடத்துகிற பராபரவஸ்துவானவர் மனுஷருக்குப் புத்தியைக் கட்டளையிட்டிருக்கிறபோது அந்த நரசீவன் யோசிக்கிற விசேஷங்களைச் சொல்லுகிறதற்குக் கையானது எத்தனமா யிருக்கும். இந்தக் கையினாலே சகலமான தொழில்களெல்லாம் வரும். ஆத்துமத்துக்குண்டான விசாரங்களும், ஆலோசனைகளும், ஆசைகளும், எண்ணங்களும், கையினாலே யறியலாம். கையினாலே தேவாலயங்கள், அரண்மனைகள், உப்பரிகைகள் கட்டப்படும். குளங்கள், ஏரிகள் வெட்டப்படும். கையானது உழுகிறதற்கும், விதைக்கிறதற்கும், அறுக்கிறதற்கும், நாட்டுகிறதற்கும், இறைக்கிறதற்கும், சமைக்கிறதற்கும், வஸ்திரங்களைப் பண்ணுகிறதற்கும், எழுதுகிறதற்குஞ், சரீரத்தைப் பராமரிக்கிறதற்குங் கூடுமா யிருக்கின்றது. கையினாலே வார்த்தைப்பாடு கொடுக்கலாம், அழைப்பிக்கலாம், அனுப்பலாம், தட்டலாம், மன்றாட்டுவரங் கேட்கலாம், கொடுக்கலாம், அடிக்கலாம், பாஷையறியாதவனோடு பேசலாம். கையானது காரியங்களெல்லாஞ் சோதிக்கிறது. ஸ்பரிசத்தினாலே குளிர் உஷ்ணம், உலர்தல், ஈரம் ஆக நாலு குணங்கள் தெரியும். கண்டிப்புள்ள வஸ்து கடினமோ, மிருதுவா யிருக்கிறதோவென்று தெரியும். கண்டிப்புள்ள

வஸ்துக்களி லெந்தெந்த வஸ்துவைப் பிடுங்க, எடுக்க, சுமக்க, தள்ள, எறிய, பிடிக்கவேணுமோ அதெல்லாத்துக்குங் கரமானது தவும். கையினாலே நோவுகளை யமத்தலாம், மருந்துகளை வாங்கலாம், அவுஷ்தங்களை விசாரிக்கலாம், தயிலங்களைப் பூசலாம், சரீரங்களை யிரக்ஷிக்கலாம். கடைசியிலே மகாபேர்போன சாஸ்திரி திருவுளம்பற்றினாப்போலே, "கரமானது எத்தனங்களுக்கும் எத்தன காரணங்களுக்குங் காரணமா யிருக்கிறதென்று நிச்சயமாகும்." இப்படிப்பட்ட கையானது தோள்துவக்கி விரல் நகமட்டு மடங்கி யிருக்கிறது. அதிலே 31அஸ்திகளுண்டென்று சொன்னோமே. இப்போதைக் கதுகளுடைய விபரத்தைத் தெரியப்பண்ணுவோம். முந்தமுந்த தோளஸ்தியானது அகலமா யிருந்தாலு மதற்குயரமில்லை. பிறகே பரிசைபோலே யொன்றித்திருக்கும். முக்கோணரூபமாயும் படிமானமாயுங் கொஞ்சங் கவிந்ததாகவு மிருக்கும். கைப்பட்டையைச் சரீரத்தோடு கட்டுகிறதற் கத்திவாரம்போலே யிருக்கும் இது கையினுடைய அசைவுகளுக்குதவும். இந்தக் கைப்பட்டையோவென்றால், பெரியதா யிருக்கும். சற்று நடுவிலே குவிந்திருக்கும். அதினுடைய தலை பெரியதா யிருக்கும். மூளையினாலே நிறைந்திருக்கும். தலைகிட்ட வொரு சின்ன வாயக்கால்போலே யிருக்கிறது. அதிலே யொரு நரம்பு பதிந்திருக்குமாப்போலே காண்பிக்கும். முகிவிலே யகலமாயிருக்கும். அவ்வண்ணமே முன்கையினுடைய விரண்டு அஸ்திகளோடு கட்டியிருக்கிறது. இந்த முன்கையின் பெரிய அஸ்தியானது வளைந்திருக்கிறபோ ததினுடைய தலைப்பாகிற முழங்கை கூர்மையுள்ள கோணல் காண்பிக்கும். அந்தத் தலைமேலே துவக்கி முழம் அளந்து பார்க்க நிர்ணயித்திருக்கிறது. முன கையின் கதிரொன்கிற விரண்டாமஸ்தி மணிக்கட்டின்கிட்ட பருமமாயிருக்கும் இந்த விரண்டஸ்திகளுக்குப் பிற்பாடு நாடி பார்க்கிற விடத்திலே யெட்டு சின்ன அஸ்திகளுண்டு. அவைகள் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கிறது. இந்த வெட்டெலும்புகளு முண்டைபோ லிருக்கும். உள்ளே தோன்றியிருக்கிறது. உள்ளங்கையிலே நாலு நிகளமான அஸ்திகள் விரல்கள் மட்டும்போம்; பெருவிரல் கிட்டவிருக்கிற அஸ்தி சற்றுப் பருமமாயிருக்கும். போகப்போகவேறே மூனாறு அஸ்திகளும்

பருமத்திலே குறைந்துபோம். விரல்களிலே பதினைந்து அஸ்திகளுண்டு. ஒவ்வொரு விரல்களிலே மூன்றஸ்திக ளுண்டு. அந்த அஸ்திக ளெளிதா யசைகிறதற்கு உட் பக்கத்திலே பள்ளமும் புறத்தியிலே மேடுமாயிருக்கும்.

இப்போது கால்களின் வகைகளை யோசிக்கக் கட வோம். கைப்பட்டையிலே யொரு அஸ்தியிருக்குமாப் போலே துடையிலே யொரு அஸ்திமாத்திரமுண்டு. அ தினுடைய தலைப்பிலொரு சின்னவாய்க்கால்போலே யிரு க்கும். அதற்குள்ளே யொரு நரம்பு மறைந்திருக்கும். இந்த அஸ்தி சற்று கவிந்திருக்கிறது. துடையினுடைய அஸ்திமுகிவிலேயுங் குதிரைமுக அஸ்தியின் றுவக்கத்தி லேயு மொரு சிறுவளையமுண்டு. அதற்கு முழங்காற் சில் லென்று பெயருண்டாச்சுது. குழந்தைகளிலே யந்த அ ஸ்தி கெட்டியுள்ள மாங்கிஷமாயிருக்கும். நாள்வட்டத்தி லே யெலும்பாய்ப்போம். காலிலே யிரண்டு அஸ்திக ளுண்டு. குதிரைமுகமுங் கெண்டைக்கால அஸ்தியு மது களுடைய முகிவிலே கரடு காணப்படும். அதற்குப் பிற் பாடு பாதத்திலே பன்னிரண்டு சின்ன அஸ்திகளுண்டு அதுகளிற் குதிகால் விசேஷமாயுதவும். அவ்வண்ணமே சரீர மல்லார்க்காய் விழாதபடிக் கந்தை நிறுத்துகிறது. வி ரல்களிலே பதினாலு அஸ்திகள்மாத்திரமுண்டு. அவ்வண் ணமே பாதத்தினுடைய பெருவிரலிலே யிரண்டு அஸ்தி கள்மாத்திரமுண்டு.

இவைகளை யெல்லா மறிந்தபிற்பாடு இன்னமுங் கை கால் முதலான அவயவங்க ளசைகிற வகையைக் கண்டு பி டிக்கிறதற் கறியவேண்டிய வநேக மதிசயமான காரியங்க ளுண்டு. முந்தமுந்த தலையிலே யுண்டான மூளையிலே நின்று நரம்புகளுடைய பத்துசோடு புறப்படுகிறதென்றும் முள்ளெலும்புகளுக்குள்ளே யுண்டான மூளையிலே நின்று வேறே நரம்புகளுடைய முப்பத்திரண்டுசோடு புறப்படுகி றதென்றுஞ் சொன்னோமே. அந்த நரம்புகளைக்கொண்டு சரீரத்துக்கு நோயு மகிழ்ச்சியும் வருகிறதுமல்லாமல் முன் சொல்லப்பட்ட நரம்புகள்தானே சகலமான அசைவுக் குங் காரணமா யிருக்கிறது. அதெப்படியென்றால், மூளை யிலே நின்று நரம்புகள் புறப்படுகிறபோது வேறே கலப்

யில்லாதிருந்தா லதுகளுக்கு மூளை நரம்பென்கிற பேர் செல்லும். ஆனாலிந்த மூளையி னரம்புக ளப்பாலே போகிறபோது சகலமான தத்துவங்களுக்குள்ளே பிரவேசித்து நரம்புகளுடைய நூல்கள் பிரிந்துபோய் மாங்கிஷங்களோடேயு மிரத்தத் தாரைகளோடேயுந் தாதுகளோடேயுங் கலந்திருக்கும்போது அப்பொழுதந்தக் கூட்டத்துக்கு மாங்கிஷ நரம்புகளென்கிற பேர்செல்லும். அதின்பிறகு மறுபடி நரம்புகளோடு சில மாங்கிஷங்கள்கூடி யெலும்புகளோடயிக்கமா யிருக்கும்போ ததுகளுக்கு மாங்கிஷக்கற்றை நரம்புகளென்கிற பேர்செல்லும். இதல்லாம லொருகாரியத்தை ஸ்திரமாய் ஸ்தாபிக்கவேணும். அதென்னவென்றால், முன்சொல்லப்பட்ட நரம்புகளுடைய நூல்களுள்ளே நுழைந்திருக்கிறதினாலே யந்த நூல்களுக்குள்ளே வெகு சீவவணுக்கள் பிரவேசிக்கும்போது மூளையினரம்புகளு மாங்கிஷ நரம்புகளு மாங்கிஷக்கற்றை நரம்புகளுங் குறைந்துபோனதினாலே யதுகளோ டயிக்கமாய்க் கட்டியிருக்கிற வெலும்புகளும் அவயவங்களு மசைந்து ஒன்றில் நீட்டுகிறது, ஒன்றில் முடக்கிறது. ஆனபடியினாலே கையசைக்கவுங், கால் நடக்கவும், என்னவேண்டி யிருக்கிறதோ மனது கட்டளையிட்டதின்படியே சிரசிலே சீவவணுக்கள் நரம்புகளுடைய குழலுக்குள்ளே பிரவேசித்தந்த நரம்புகளோடு கட்டியிருக்கிற கையுங் காலு மசையும். ஆகையால் நீட்டுகிறது முடக்கிற தென்கிற விரண்டசைவுகளுடைய வகையிலே சகல அவயவங்களுடைய அசைவுக ளடங்கி யிருக்கிறது. அவ்வண்ணமே பற்பல நரம்புகளினாலே சீவ அவயவங்கள் ளளைந்துபோகும். சிலதுக ளுயர்த்தப்படும். சில நரம்புகள் பிடிக்கிறதற்கும், அமிழ்க்கிறதற்கும், திறக்கிறதற்கும், மடக்கிறதற்குந், தாழ்த்துகிறதற்கு, முயர்த்துகிறதற்கும் இது முதலான வெண்ணப்படாத வகைகளுக்கும் பிரதான காரணமா யிருக்கும். ஆனால் கடினமான அசைவு வேண்டியிருந்தால் மூன்று நாலு நரம்புகள் கூடும். இதற்கப்பா லறியவேண்டியதாவது. மனுஷனெந்த நேரத்திலே தேகத்தை யசைக்க மனதாயிருக்கிறானோ அந்த க்ஷணத்திலேதானே யசையும். ஆனால் சிரசின் மூளையிலே. யுண்டான சீவ வணுக்கள் பாதத்துக்குத் தீவரமாய்ப்போனாலும் நாலைந்து க்ஷணம் வேண்டாமோ? இதற்

குப் பிரத்தியுத்தர மேதென்றால, நரம்புகளெல்லா மெப் போதுஞ் சீவ வணுக்களினாலே நிறைந்திருக்கும். ஆனப டியினாலே புதுசாய் நரம்புகளுடைய தலைப்பிலே மனது கட்டளையிட்டதின்படி சில சீவ வணுக்கள் பிரவேசிக்கிற போ தந்த க்ஷணத்திலேதானே பாதத்துக்குப் போகிற ந ரம்புகள் சுருங்கிப்போய்ப் பாதத்தை யசைக்கும். இதெல லா மொருவமையினாலே வெளிப்படுத்துவோம். அதெப் படியெனறால், பெரிய துரைகளுடைய சிங்காரத்தோப்புக ளிலேயு மரண்மனைகளுடைய விசேஷமான அங்கணங்களி லேயுந் தண்ணீரினாலே நிறைந்திருக்கின்ற குளங்களுண்டு. அந்தக்குளத்திலே யிருந் தனேகஞ் சலதாரைகள் பற்பல சல சூத்திரங்களாகப்போம். இந்தத் தாரைகளெல்லாந் தண்ணீரினாலே நிறைந்திருந்தா லு மொரு திருகாணி நிமித் தமாகத் தண்ணீர் வராது. இதிப்படி யிருக்கையிலே கு ளத்துக்குந் தண்ணீர் கிளம்புகிற ஸதலத்துக்கு மெத்தனை தூரமா யிருந்தாலு மெந்த க்ஷணத்திலே தோட்டக்காரன் திரு காணியைத் திருப்பினனோ அந்த க்ஷணத்திலேதானே தண்ணீ ராகாயத்திலே கிளமபியேறும். அத்தன்மைபோ லச் சீவ வணுக்களினாலே நிறைந்திருக்கிற சிரசின் மூளையா னது குளத்துக்குச் சமானம். தண்ணீரினாலே நிறைந்திருக் கிற சலதாரைக்குச் சீவ வணுக்களினாலே நிரம்பியிருக்கிற நரம்புகள் சமானமாகும். மனதானது தோட்டக்காரனுக் குச் சமானமாகும். ஆனபடியினாலே யெந்த க்ஷணத்தி லே மனதின்படியே சீவ வணுக்கள் நரம்புக ளுடைய வாயிலே பிரவேசிக்கிறதோ பாதத்தின நரம்புக ளுடைய முகிவிலே யுண்டான சீவ வணுக்கள் நரம்புகளைச் சுருக்கு கிறதினாலே நரம்புகளாற் கோர்க்கப்பட்ட பாத மசை யும் ஆனலிந்த அசைவுக ளால சீவ வணுக்கள் மெத் த சிதறிப்போனதினாலேயுஞ், சரீரத்திலே நின்று ரோமத் துவாரஙகள் வழியாகச் சிலது தப்பிப்போகிறதினாலேயும், தலையிலுண்டான சீவவணுக்க ளித்தனை யசைவுகளுக்குப் போருமென்று விசாரிக்கவேண்டாம். இது நிமித்தமாக அஙகங்கே சிதறி சீவ வணுக்களிரத்தத் தாரைகளுக்குள் ளே யகப்பட்டோடுகிற விரத்தத்தோடு சுற்றிக்கொண்டு போய்த் திரும்பத்தலையிலே வருகிறதினாலேயும் ஆகார பா னத்தி னிமித்தமாக வெவ்வேறே சீவ வணுக்கள் சிரசின்

மூளையிலே வடிகட்டுண்டு போமென்கிறதினாலேயுந் தப்பிப்போன சில வணுக்களுக்கு வேறே சில அணுக்க ளடிக் கடி தலையிலே யேறும். இந்தப் பிரகாரமாக விராத்திரி யெல்லா மொரு கொல்லன்கையை யசைத்தாலும் வழிப் போக்கன் பகலெல்லாங் கால்நடை நடந்தாலுங் கைகளுக் குங் கால்களுக்கும் வேண்டிய சீவ வணுக்க ளுண்டாயிருக் கும். இப்படியே சீவ வணுக்களினாலே நரம்புகள் நிரம்பி யிருக்கும்போது அவயவங்க ளசையுமென றநுபவ சித்தி யினாலே யொப்பிவிக்கலாம். அதெப்படி யெனறால், யா தாமொருத்தன் பாதத்தின்மேலே யென்கிலும் கைமேலே யென்கிலு முட்கார்ந் திருந்து மூனறு நாழிகை யளவாய்த் தாங்கி யிருந்தா லப்போது பாதத்தையுங் கையையு மசைக் கமாட்டான். அவ்வண்ணமே சாணகராதியி னரம்புகள் சரீத்தினுடைய கனத்தினாலே யமுழ்ந்தி யிருக்கிறபடியினா லே நரம்புகளுக்குள்ளே சீவ வணுக்க ளோடுகிறதற் கவகா ச மில்லை. ஆனபடியினாலே யசைக்கமாட்டாது. கடை சியிலே யெந்த நியாயத்தினாலே நரம்புகள் மூடியிருக்கிற தோ அதிலே சீவ வணுக்களோடக் கூடாததினாலே தப்பா ம லவயவஞ் சும்மாய் நிற்கும். அந்தக் காரணத்தினாலே திமிர் வாதக்கார அவயவங்க ளசையாது. ஆனா லிதி லே யொருசந்தேகத்தைக் கேட்கலாம் திமிர் கொஞ்சமா யிருக்கும்போது ஊசியினாலே குத்துகிறாப்போலே சுறுக் கு சுறுக்கென்று குத்துகிறதற்குக் காரணமென்ன? பிறத் யுத்தரத்தைக்கேள். நரம்புக ளமுந்தி யிருந்தபடியினா லே சீவ வணுக்களுள்ளே யோடுகிறதற்கு விக்கினமா யிருந்தது. ஆனா லந்த விக்கினம் வாங்கினவுடனே யப் போது மகா தீவரத்தோடே தாறுமாறு யோடுகிற சீவ வ ணுக்களெங்கும் பாவுகிறதினாலே தைக்கிறாப்போலேயுங், குத்துகிறாப்போலேயு,முறுத்துகிறாப்போலேயுங் காண்பிக் கும் இதன்றியே கைநடுங்குகிறதற்கும், கால் பதைக்கிற தற்குங் காரணமேதென்று லிந்த அவயவங்களிலே யோடு கிற சீவ வணுக்க ளதுகளை நிறுத்துகிறதற்குப் பலனில்லா ததினாலே அப்படி வருமென் றறிவாயாக. இந்த நியாயத் தினாலே வயதுள்ளவர்களுடைய நரம்புகளிலே யுண்டா ன சீவ • வணுக்கள் திரளாயில்லாததினாலேயும் பலன்

லேயும் அவயவங்களைச் செவ்வே

நிறுத்துகிறதற்குச் சத்துவமில்லாததினலேயு மநேக மவயவங்கள் நடுங்குகிறது.

இப்போதைக்கு மனுஷ னடக்கிறவகையிலே யறிய வேண்டிய சில ஆச்சரிய விசேஷங்களைச் சொல்லிக்காட்டுவோம். முந்தமுந்தக் கண்டிப்புள்ள வஸ்துவினுடைய கனத்தின்மையமானது சுமக்கிற அஸ்திவாரத்தின்மேலே நின்றால் விழாது. சுமக்கிற அஸ்திவாரத்தின்மேலே தாங்காமற்போனால் தப்பாமல் விழும். இந்தப் பிரகாரமாகத் தூணுடைய கனத்தின் மையங் குறட்டின்மேலே தாங்கி யிருந்தாற் செவ்வே நிற்கும். நில்லாமற்போன லவசியமாய் விழும். இதெல்லா மனுஷர் நடக்கிறவகையிலே பிரசித்தமாய்க் காண்பிக்கும். அவ்வண்ணமே மனுஷர் செவ்வே நிற்கும்போது சரீரத்தினுடைய கனத்தின் மைய மிரண்டு கால்மேலே நிற்கும். வலதுகாலை நீட்டுகிறபோது முன்னே சற்றுநேர மிடதுகாலிலே சரீர கனத்தின் மையமிருக்கும். வலதுகாலை நீட்டுகிறபோது சரீரமு மதைப்பின் சென்றுபோனலு மெப்போதுந் திரேகத்தினுடைய கனத்தின் மையமிரண்டு காலுக்குள்ளே யிருக்கும். ஆனபடியினலே மனுஷன் விழக்கூடாது. அதின்பிறகு வலதுகால்மேலே கனத்தின் மையம் நிற்கும்போது இடதுகாலை புயர்த்தி யதை முன்னேவைக்கலாம். இப்படிப் போகப் போகக் கனத்தின் மையமொன்றிலிரண்டு காலுக்குள்ளே யிருக்கும். ஒன்றி லொருகாலின்மேலே யிருக்கும். ஆனபடியினலே கனத்தின் மையம் அஸ்திவாரத்துக்குள்ளே யடங்காமற்போனல் தப்பாமல் மனுஷன் விழுவான். அந்த நியாயத்தினலே யாதாமொருத்தன் கனமுள்ள சுமையைத் தோள்மேலே சுமந்தால் தலைகுனிந்துபோவான். அல்லது கனத்தின் மைய மிரண்டுகாலுக்குள்ளே யடங்காததினலே விழுவான். அந்த நியாயத்தினலே கயிற்றின்மேலே கூத்தாடுகிறது மகா வருமையா யிருக்கும். அவ்வண்ணமே கனத்தின் மைய மசைகிறபோ திரண்டு காலுக்குள்ளே யிராமற்போனல் கூத்தாடிகள் விழுவார்கள். ஒருகையிலே வெகு கனமுள்ள பொருளை யெடுத்தா லெதிரான பக்கத்திலே வேறே கைசாய்ந்திருக்க வேண்டியிருக்கும். இந்தப்பிரகாரமாக யாதாமொருத்த ஞற்காலிமேலே யிருக்கும்போ தெழுந்திருக்க மனதுண்டானுற் சுபாவமா யிரண்

டு காலேயும் நாற்காலியின் கிட்ட வைத்துத் தலையையும் நெஞ்சையுங் குனிந்தெழுந் திருப்பான். இப்படியே சரீர மெத்தக் குனிந்திருந்தால் தலை முன்னாகவு மிருப்பிடம் பின்னாகவும் நீண்டிருக்கும். இந்த விதமாகச் சுவரின்கிட்ட நிற்கிறவன்கால் சுவரிற் படவிருந்தால் முன்னாகமெத்தக் குனியமாட்டான். அவ்வண்ணமே யந்தச்சமயத்திலே தலேயும் நெஞ்சுங் குனிகிறபோது இருப்பிடமு மெதிராகக் குனியாததினாலே விழுவான்.

இங்கே மிருகங்களுடைய நடையை யெவ்வளவாகிலும் வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால், நடப்பனவுக்குக் கனத்தின் மையம் நாலு கால்களி லிருக்கும். ஆனபடியினாலே அவைகள் விழுகிறது அருமை நடப்பனவுடைய நடையைக் குதிரையிலே பார்ப்போம். அதெப்படியென்றால், குதிரையானது மெள்ள நடக்கிறபோது முந்த முந்தப் பின்காலுக்குள்ளே யொருகாலே யசைக்கும். அது வலது பின்கா லென்று விசாரித்துக்கொள். அந்தக்காலே முன்னே வைக்கும்போது வேறே மூன்று கால்களுக்குள்ளே கனத்தினமைய மிருக்கிறது. அதின்பின் வலது முன்காலே யுயர்த்தி யதை முன்னே வைக்கும். அதற்குப்பிறகு இடது பின்னங்காலே யுயர்த்தி முன்னேவைத்துக் கடைசியிலே யிடது முன்னங்காலே யசைக்கும். இந்தப்பிரகாரமாக வெப்போதுங் கனத்தின் மையம் புறத்தியிலே விழாது. இதெல்லாம் விசாரியாமற் சிலபேர்கள் வலது முன்னங்காலு மிடது பின்னங்காலுந் தறையிலே வைத்திருக்கும்போது இடது முன்னங்காலும் வலது முன்னங்காலு மாகாயத்திலே யிருக்கிறதென்று விசாரிக்கிறார்கள். ஆனாலந்த வியாக்கியானம் நிச்சயமா யிருக்கக்கூடாது. அதேதென்றாலந்த சமயத்திலே கனத்தின் மையம் நடுவிலே யிருக்கிற தருமையாயிருக்கும். ஆனால் குதிரை யோடுகிறபோ திரண்டு முன்னங்காலே யாகாயத்திலே யுயர்த்துகிறது. அப்போது கனமான அசைவு நிமித்தமாகவு மிப்படியே சற்றுநேரமாத்திர மிருக்கிறதினாலேயு முயர்த்தின கால்களைத் தறையிலே தீவரமாய் வைக்கிறதினாலேயுங் கனத்தின் மையத்துக்குக் கனமான வேற்றுமையில்லாததினாலேயும் குதிரை விழாது. இந்தப்பிரகாரமாக நட்டுவன் குதிக்கிறபோது குதித்துக் கிளம்பி கனமான

அசைவு நிமித்தமாகச் சற்றுநேர மாகாயத்திலே நிற்பான். இதற்கப்பா லறியவேண்டினதாவது: பக்ஷிகள் நடக்கும் போது குதிகாலினலே நிற்கிறதில்லை. பின்விர லுண்டா யிருந்தாலும் நடக்கிறதற் கத்தனை யுதவாது. ஆனல் கொம் பின்மேலே நிற்கிறபோ ததைக் கெட்டியாகப் பிடிக்கிறதற் குதவும். இதல்லாமற் பக்ஷியானது ஒரு காலின்மே லெளி தாய் நிற்கலாம். அவ்வண்ணமே பக்ஷிகளுடைய விரல்கள் திரேகத்துக்குத் தக்கது பெரிதாயிருக்கிறதினலேயும், இறகு நிமித்தமாகச் சரீரம் லகுவா யிருக்கிறதினலேயுந், தலையும் வாலு மெதிரான பக்கங்களிலே யிருக்கிறதினலேயும் நடு விலே யுண்டான கனத்தின் மையங் கடினங் காண்பியாது. அந்தநியாயத்தினலே யொருசட்டியை செவ்வையாய்நிறுத் துகிறது அருமையா யிருந்தாலும் நடுவிலே யிருக்கிற கன த்தின் மைய மெந்த வஸ்துவின்மேலே தாங்கியிருந்தாலும் எளிதா யங்கங்கே சாயாமலிருக்கலாம். பாம்புகள் நாகப்பாம் பு முதலான வூர்வனவைகள் நடக்கிறவகை யேதென்றல், ஒ ருபக்கத்திலே தரையிலே தன்னை யழுத்தி வேறே பக்கத்தி லே தன்னை நீட்டிப் பிறகு பின்பங்கை யிழுக்கும். ஒன்றில பின்பக்கத்தைச் சுருக்கினதற்குப் பிற்பா டதைத் தரையி லே யழுத்தி முன்னே யிருக்கிறஅவையவங்களைநீட்டி யெக் கிவிழும். பின்னையும் ஆகாயத்திலே பக்ஷிக ளெப்படி பறக் குதென்றல், ஓடத்திலிருக்கிறவர்கள் தண்டு மரத்தாலே தண்ணீரைத் தள்ளிவிட்டு ஓடத்தை நடத்துகிறப்போ லே பக்ஷிகள் தண்டுமரங்களாகிற விரண்டிறகுகளினலே யாகாயத்தைத் தள்ளிவிட்டுப் பறக்கும். பின்னையுஞ் சரீ ரத்தினுடைய கனத்தின்மையம் நடுவிலே யிருந்தால் மகா வெளிதாய்ப் பறக்கிறதற் குதவுகிறதினலே பக்ஷிகள் முன் னே தலையிருக்கப் பின்னலே கால் நீட்டிச் சரீரம் நடுவி லே யுயர்த்தியா யிருக்கும். மச்சங்களோவென்றல், நீந்துகிற போது பக்ஷிக ளாகாயத்தை யிறகுகளினலே தள்ளுகிறப் போலே செப்பட்டைகளினலே தண்ணீரைத் தள்ளும். இதன்றியே ஓடங்களிலேயுங் கப்பல்களிலேயுஞ் சுக்கான் மரத்தைக்கொண் டெந்தெந்தத் திக்குக்குஞ் சுக்கானி கப்ப லையு மோடத்தையுந திருப்புகிறப்போலே மச்சங்கள் தன து வாயினுடைய பற்பல அசைவினலே சகல திக்குகளுக் கும் நீந்திப்போம்.

கடைசியிலே கைகளுக்குங் கால்களுக்கும் நகங்கள் காணப்படுகிறதினாலே யதுகளுடைய சுபாவத்தையுங் குணங்களையுஞ் சங்க்ஷேபமாய்ச் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால், புறத்தியிலே பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிற நகத்தினுடைய ரூபத்தைச் சொல்லத் தேவையில்லை. காண்பியாத நகத்தினுடைய வேரோவென்றால், மாங்கிஷத்தோடு மகா அயிக்கமாயிருக்கிறது. இப்படிப்பட்ட வேரானது வெள்ளையாயிருக்கும். புறத்திலே காணப்படுகிற நகமானது எப்போதும் வர்த்திக்கிறது. இந்தப்பிரகாரமாக நகத்திலே யொரு மாசுண்டானால் தினந்தின மதிகமதிகமா யேறும். நகத்தினுடைய பிரயோசன மேதென்றால்: சின்னதுமாய்க் கெட்டியானதுமா யிருக்கிற அங்கிஷங்களைப் பிடிக்கிறதற் குதவும். விரல்களுடைய முகிவிலே மோசம் வராதபடிக்குப் பரிசைபோலே யிருக்கும். கையினுடைய அலங்காரத்துக் கொரு காரணமாயுமிருக்கும். வியாதியினுடைய குணங்களைக் காண்பிக்கும். கடைசியிலே சாணகராதி விஷயத்திலே நாமுனக்குச் சொல்லப்போகிற புத்தியை மனதிலே தரித்துக்கொள்வாயாக. அவ்வண்ணமே சாணகராதிகள் அதுகளுக்குக் கர்த்தனாயிருக்கிற நரசீவனுடைய ஆசைகளுக்குத் தக்கபடி சாங்கோபாங்கமாகக் கீழ்ப்படிந்திருப்பதுபோல் நரசீவனாகிற நம்மை உண்டாக்கினவருமாயிர க்ஷிக்கிறவருமாய் நமதுபேரிலே யளவில்லாத சுதந்தரமுள்ளவருமாயத் திவ்விய கர்த்தாவுமா யிருக்கிற பராபரவஸ்துவான ஆண்டவருக்கு நாமெப்படி கீழ்ப்படிந்து நடக்கவேணுமென்று நினைக்கக்கடவோமாக.

## கக-ம். அதிகாரம்.

### நரசீவனுடைய விவரம்.

இதுவரைக்கும் அண்டபிண்ட வியாக்கியானத்தை விவரித்ததினாலே பராபரவஸ்துவினுடைய கற்பனைப்படியே யுண்டாக்கப்பட்ட சகல வஸ்துகளுக்கு மிராசாவாயிருக்கிற மனுஷனுடைய விராச்சியங்களையு மரண்மனைகளையு மற்றுமுண்டான சகல பொருட்களையும் வர்ணித்தாப்போ லா

யிற்று. இந்தக் கடைசி அதிகாரத்திலே நர திரேக மென்கிற அரண்மனையிலே யிராச்சியபாரம் பண்ணுகி ற நரசீவனுடைய சுபாவத்தையுங் குணங்களையும் வெளிப் படுத்தத் தாற்பரியமா யிருக்கிறோம். அதெப்படியென் றால், நரசீவனானது மனுஷரிடத்திலுள்ள யெல்லாவற்றை யும்பார்க்க பிரதானமான காரியமா யிருக்கிறதினாலே மனு ஷர்கள் அசரீரியாயிருக்கிற பரமதூர்தர்களுக்குச் சமானமா யிருக்கிறார்களென்றும் அப்படிப்பட்ட வாத்துமத்திலே ம னுஷன் சர்வேஸ்வரனுடைய சாயலாக வுண்டாக்கப்பட்ட வனா யிருக்கிறானென்றும் ஞானசாஸ்திரிகள் சங்கேதம் பண் ணினார்கள். அவ்வண்ணமே பராபர வஸ்துவைப்போலே நரசீவனானது அரூபியாயிருக்கிறதென்று அர்ச். அகுஸ்தீ னுவென்கிறவர் திருவுளம் பற்றினார். இப்படியே நரசீவனா னது சர்வேஸ்வரனைப்போலே அக்ஷயமுமா யினிமேல் நித் தியமுமாயிருக்கிறதென்று மகா பேர்போன சாஸ்திரியா ன செனேசென்கிறவ ரருளிச்செய்தார். இதன்றியே மனு ஷாத்துமமானது புத்தியினிமித்தமாகவுங் கடவுளுடைய பாவனையாயிருக்கிறதென்று அர்ச். தமசேனு அருளப்ப ரெழுதிவைத்தார். இதல்லாமல் பரமாத்துமாவைப்போலே நரசீவனானது வேணும் வேண்டாமென்கிற பலத்தைக்கொ ண்டிருக்கிற சுதந்தர மனதுள்ளதா யிருக்கிறதென்று அர்ச். அம்புரோசியு வென்கிறவ ரருளிச்செய்தார். இந்தடவாக மெய்யான தேவனாகிறவரைப் பிரத்தியக்ஷமாய்த் தெரிசித் ததினாலே யளவில்லாத பாக்கியத்தை யநுபவிக்கிறாப்போ லே யந்த மோக்ஷபாக்கியத்திலே பங்காளியா யிருக்கிறதற் கு நர ஆத்துமமானது பாத்திரமா யிருக்கிறதென்று அர்ச். கிரகோரியு வென்கிறவ ரறிவித்தார். இந்த விதமாகச் சர்வ லோகத்துக்கு மிராசாதிராசனும் பரஞ்சோதியுமாயிருக்கிற வாண்டவர் தம்முடைய சித்தத்தின்படியே யெல்லாத்தை யும் நடத்திக்கொண்டு வருகிறாப்போலே மனுஷனானவன் றனது நரசீவனைக்கொண்டு பராபர வஸ்துவினுடைய கிரு பையினாலே யொரு பிரகாரமாய் லோகத்திலே மகா ராசா வாயிருக்கிறானென்று அர்ச். பசீலியூசென்கிறவர் சொல் லிக்காட்டினார். ஆனால் நரசீவன்மேலே யெத்தனை தோத் திரம் பண்ணினாலு மதற்கும் பராபரவஸ்துவுக்கும் மட்டில் லாத தூரமுண்டென் றறிவாயாக. இப்போதைக்கு மன

திலே தரிக்கத்தக்க விசேஷமாவது, இத்தனை மகிமையைக் கொண்டிருக்கிற வாத்துமத்தை யறியத்தக்கதாகவு மதற்கு மோசம்வராதபடிக்கு வுபாயமெல்லாஞ் செய்யத்தக்கதாகவு மிப்படிப்பட்ட ஆத்துமந் தன்னை யுண்டாக்கினவருமா யிரட்சிக்கிறவருமாயிருக்கிற கடவுளுக்குக் கீழ்ப்படிந்து கர்த்தருடைய சித்தத்தின்படியே நடந்து மோக்ஷராச்சியத்தை யநுபவிக்கத்தக்கதாகவும் வேண்டிய பிரயாசமெல லாம் படுகிறதற்கு அவனவன்பேரிலே கடன் சுமந்திருக்கிறதென் றறியப்பெற்ற விசேஷமாகும்.

இனி நரசீவனுடைய சுபாவத்தைக் கண்டுபிடிக்கிறதற் கதினுடைய விர்த்திகளைத் தீரவிசாரிக்கக் கடவோம் அதெப்படியென்றால்: மனுஷனானவன் விருக்ஷங்களைப் போலே வளருகிறதும், மிருகங்களைப்போலே பஞ்சேந்திரியங்களுக்கடுத்த சேஷ்டைகளைப் பண்ணுகிறதும், அலலாமல மனுஷனானவன் தன்னுடைய சரீர ஆதாரமில்லாமலெநேகம் விர்த்திகளைப் புத்தியினாலே செய்வான். இப்படிப் பட்ட கிரியைகளேதென்றால் பஞ்சேந்திரியங்களைக்கொண்டு வஸ்துக்களுடைய பிரதிபிம்பங்கள் பொது இந்திரியத்திலே வந்ததற்குப் பிற்பாடு நரசீவனானது அதுகளைப்பார்த்துத் தன்னிடத்திலே அரூபியான வடையாளங்களைச் செய்யும். இப்படிப்பட்ட வடையாளங்களைப் பார்க்கும்போது நல்லதென்று மாகாதென்றுந் தீர்வை சொல்லாமற் சும்மா யிருந்தா லிப்படிப்பட்ட புத்தியினவிர்த்திக்குக் கேவலம்—கிரகணமென்கிற பேர் செல்லும். அதின் பிறகந்த வஸ்துக்களுடைய சுபாவத்தையுங் குணங்களையும் பார்த்துக் கிரகிக்கப்பட்ட பொருளானது நல்லதென்று மாகாதென்றும் விசாரித் துள்ளே தீர்வை சொன்னா லிந்த விர்த்திக்குப் பரிச்சேதமும்—தீர்வையுமென்கிற நாமஞ்செல்லும். கடைசியிலே பிரிக்கப்பட்ட பொருளின்பேரிலே பரிச்சேதம் பண்ணினதற்குப் பிற்பாடந்தத் தீர்வையானது வேறே தீர்வைக்குக் காரணமாயிருந்தா லிப்படிப்பட்ட புத்தியின் விர்த்தி யோசிப்பென்றும்—புத்தியென்றுஞ் சொல்பபடும். இந்தப் பிரகாரமாக வொரு பழத்தைப்பார்த்தா லதினுடைய ரூபமானது கண்களுடைய நரம்புவழியாகப் பொது இந்திரியத்துக்கு வரும். ஆத்துமமானது இதைப் பார்க்

கும்போது தன் சுபாவ பலத்தினாலே யதற்குத் தக்கது தன்னிடத்திலே யரூபியான வொரு விலக்ஷணத்தை யுண்டாக்கிறது; அந்தச் சமையத்திலே பழத்தினுடைய அடையாளத்தை மாத்திரம் பார்க்கிறதல்லாமல் வேறே யொன்றுஞ் சொல்லாமற்போனால் கேவலம்—கிரகணமாச்சுது அதற்குப்பிற்பா டிந்தப் பழத்தினுடைய குணங்களை விசாரிக்கும்போது மகா ருசிகரமா யிருக்கிறதென்று புத்தியானது சொன்னால் தீர்வையும்—பரிச்சேதமுமாச்சுது. கடைசியிலே யிந்தத் தீர்வையிலே நின்று வேறே தீர்வை பிறந்து இந்தப் பழம் ருசிகரமாயிருக்கின்றதே—ஆனபடியினாலே இதை யெடுத்துப் பக்ஷிக்க வேணுமென்று நினைத்தால் அப்போது யோசிப்பும்—புத்தியுமாச்சுது. இதெல்லா மவனவன்றன்னுடைய வாத்துமத்திலே யெளிதாய்க் கண்டுபிடிப்பான்

இதல்லாமல் நரசீவனிடத்லலே புத்தியுண்டாயிருக்கிறதுந் தவிர இன்னமும் வேறே யதிசயமான பலமுண்டு. அதற்குப் பேரேதென்றால், மனது. அதற்கர்த்தமேதென்றால, ஒரு வஸ்துவின்பேரிலே பற்றுதலா யிருக்கத் தக்கதாகவு மொன்றி லருவருப்பா யிருக்கத்தக்கதாகவு மிருக்கிற பலம். இப்படிப்பட்ட மனதானது வேணும் வேண்டா மென்கிற சுதந்தரத்தைக் கொண்டிருக்கும். உண்டாக்கப்பட்ட எந்த வஸ்துவானாலும் அந்த மனதுக்குக் கட்டாயம் பண்ணமாட்டாது. அந்தச் சுதந்தரமுள்ள மனதினுடைய பலத்தைக்கொண்டு இரண்டு விரோதமான வஸ்துகளுக்குள்ளே மனது ஒன்றைத் தெரிந்துகொள்ளுகிறது. இது நிமித்தாக மனதானது; சில சமயங்களிலே பாவத்தின்மே லாசையா யிருக்கும், வேறே சமயத்திலே தருமத்தைச்செய்யத் தெரிந்துகொள்ளும். இப்படிப்பட்ட சுதந்தரமுள்ள மனது நமக்குண்டென்று அநுபவசித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். இப்படியே யில்லாமற்போனால் பாவமும், புண்ணியமுமில்லை. மோக்ஷமும், நரகமுமில்லை சம்பாவனையும், ஆக்கினையுமில்லை. எவ்லாங் கட்டாயத்தினாலே வந்ததானாற் பாரபத்தியம் பண்ணுகிறதுஅநியாயமாயிருக்கும். சங்கிலியினாலே கட்டுண்டிருக்கிறவ ஞொருததினாலே யடிபட்டால் மகா அக்கிரமமா யிருக்குமாப்போலே

சுதந்தரமனதில்லாதவ னெத்தனை யபத்தங்களைப் பண் ணினாலு மவன்பேரிலே தோஷமில்லை. ஆனபடியினாலே புத்திக்கொவ்வாத வநேகங் காரியங்களைச் சொல்லாதபடிக் கவனவன் வேணும் வேண்டாமென்கிற சுதந்தரத்தைக் கொண்டிருக்கிறானென் றங்கீகரிக்கக் கடவோம். இதிலே யறியவேண்டினதாவது: இரண்டுவகை மனதுண்டென்று விசாரிப்பாயாக. முந்தின மனது சுபாவமான மனதென் றும்—கீழாங்கிஷத்தினாலே பிறக்கிற ஆசையென்றுஞ் சொ ல்லப்படும் வேறே மனது பிரதான சித்தமென்றும்—ஞா னமுள்ள மனதென்றும்—மேலாங்கிஷத்தினாலே பிறக்கிற ஆசையென்றுஞ் சொல்லப்படும். இந்த விரண்டா மனது பாவத்துக்குச் சம்பந்த மில்லாமற்போனால பாவம் வராது இந்த விரண்டுவகை மனதினுடைய பிரகாரத்தை யொருவ மையினாலே வெளிப்படுத்துவோம். அதெப்படியென்றால், யாதாமொருத்தன் பிழைக்கிறதற் கவனுடைய கையையா னாலுங் காலையென்கிலு மறுக்கவேண்டி யிருந்தால் சுபாவ மான மனதும்—கீழாங்கிஷத்திலே பிறக்கிற ஆசையு மதற் குச் சம்மதிக்கமாட்டாது. ஆனால் மேலாங்கிஷமும்—பிரதா ன சித்தமும் இதெல்லாஞ் சட்டைப்பண்ணாமற் பிழைக்கி றதற்கொரு அவயவம்போனாலும் போகட்டுமென்று சொல லி யதற்குச் சம்மதிக்கும். ஆகையால் நரசீவனிடத்திலே புத்தியு மனதுமுண்டா யிருக்கிறதுந்தவிர இன்னமும் நி னைவு என்கிற பலம் ஒன்று விளங்கப்படும். அந்தப் பலத் தினாலே போன காரியங்களுடைய பிரதிபிம்பங்கள் புத்திக் குக் காண்பிக்கும். ஆத்துமமானது இந்த நியாயமுள்ள விர்த்திகளைப் பண்ணுகிறதுமல்லாமற் பஞ்சேந்திரியங்களி னாலே வருகிற கிரியைகளுக்குக் காரணமாயிருக்கும். ஆன படியினாலே நரசீவனுடைய நிரூபணத்தை யறிய மனதுண் டானா லிப்படிப்பட்ட நரசீவனானது பற்பல சேஷ்டை களைப் பண்ணுகிறதற் கெத்தனமா யிருக்கிற அவயவங்களு ள்ள சரீரத்துக்கு மாத்திரிகையா யிருக்கிறதுமல்லாமல ஞா னவிர்த்திகளைப் பண்ணுகிறதற்கு ஆதியாயிருக்கிறதென் றும்அறிவாயாக. இந்த நிரூபணத்திலே மாத்திரிகை யென்கி ற வார்த்தைக்குண்டான அர்த்தயேதென்றால், எந்த வஸ்து ஒரு பொருளுக்கு நாமமாயிருக்கிறதற்குக் காரணமா யிருக் கின்றதோ அந்தவஸ்து பிரதான காரியமென்றும் மாத்திரி

கையென்றுஞ் சொல்லப்படும். இந்தப் பிரகாரமாக வொரு விக்கிரகத்தினுடைய ரூபமானது விக்கிரகமென்கிற பேரிடு கிறதற்கு நிமித்தமா யிருக்கிறதினாலே யந்தரூபமானது விக்கிரகத்தினுடைய மாத்திரிகையெனறு சொல்லப்படும். இந்த விதமாக மனுஷனிடத்திலுண்டான நரசீவனானது மனுஷனென்கிற பேரிடுகிறதற்குப் பிரதான காரணமா யிருக்கிறதினாலே நரசீவனானது மாத்திரிகையா யிருக்கிறதென் றறிவாயாக. நரசீவனுடைய நிரூபணத்தின் மற்ற வார்த்தைகளெல்லாங் கண்டுபிடிக்கிறது எளிதா யிருக்கிறதினாலே யிம்மாத்திரஞ் சொல்லிக்காட்டினது போதும்.

இப்போதைக்கு நரசீவனானது அரூபியா யிருக்கிறதென்று ஆன நியாயங்களினாலே ஸ்தாபிக்கவேணும். அதெப்படியென்றால்.

முதலாவது.—நாமுன் சொன்னப்போலே யொரு வஸ்துவினுடைய சுபாவங்களையுங் குணகுணங்களையுஞ் சரியா யறிகிறதற்கு அதற்குண்டான விசேஷங்களை யாராய்ந்து பார்க்கவேணும். அவ்வண்ணமே விர்த்தியானது தன்னை யுண்டுபண்ணின காரணத்தினுடைய சுபாவத்தை வெளிப்படுத்துமென்று சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனால் சரீர சம்பந்தமில்லாத கிரியைகளை யாத்துமம் பண்ணுகிறதென்று பிரத்தியட்சமா யிருக்கிறது. இந்தப் பிரகாரமாகப் புத்தியானது வஸ்துக்களுக்குச் சாதாரண காரணங்களைக் கண்டுபிடிக்கிறதுமல்லாமற் கண்டிப்புள்ள அடையாளங்களைத் தள்ளி யரூப விதமாகவுந் தியானிக்கின்றது. பிரமாணத்தோடே கூடின பலமெல்லாமோ வென்றால் விசேஷமான காரியத்தையுங் கண்டிப்புள்ள பதார்த்தத்தையு மாத்திரம் நடத்துகிறது ஆனபடியினாலே நரசீவனானது அவசியமா யரூபியா யிருக்கிறதென்று சொலலவேண்டி யிருக்கிறது.

2-வது.—சகலமான சாஸ்திரங்களுக்குஞ் சாதாரண வாக்கியங்களைப் புத்தியானது அளவறுத்துக்கொண் டிருக்கின்றது. இந்தப் பிரகாரமாகப் பற்பல அங்கிஷங்களினாலே கூட்டப்படுகிற பொருளானது தன்னிடத்திலே யடங்கப்பட்ட விசேஷமான அங்கிஷத்தைப் பார்க்கப் பெரிதா யிருக்கும். இந்தடவாக முழுதுஞ் சமனுயி

ருக்கிற பொருட்களிலே நின்று சரியாக அங்கிஷங்களை யெடுத்தால் மிஞ்சின பொருட்கள் சரியா யிருக்கும். இதல்லாமற் பிரத்தியட்சமான தாற்பரியங்களைப் புத்திபண்ணுகிறது. அவ்வண்ணமே தப்பில்லாத கிரமத்தோடே பிரதான வாக்கியத்தையு மிரண்டாம் வாக்கியத்தையும் வைத்ததுகளிலே நின் றவசியமான அனுமதியென்கிற கடைசியான தீர்வையை யெடுக்கும். இந்தப் பிரகாரமாக மெய்யான தேவனை யறியாதவர்கள் மோக்ஷத்தை யனுபவிக்க மாட்டார்கள். ஆறு லக்கியானிகள் மெய்யான தேவனை யறியார்கள். ஆகையினாலே மோட்சத்தை யனுபவிக்கமாட்டார்கள். சொல்லப்பட்ட இந்த மூன்று வாக்கியங்கள் சாஸ்திரத்தின்படியே வைக்கப்பட் டிருக்கிறதினாலேயும் முந்தின விரண்டு வாக்கியங்களு மெய்யா யிருக்கிறதினாலேயு மூனாறும் வாக்கியத்திலே யடங்கியிருக்கிற அனுமதியென்கிற கடைசியான தீர்வையானது அவசியமாய் சாஸ்திரப் பிரகாரமாக நிச்சயமாயிருக்கும். இதெல்லா மிப்படி யிருக்கையிலே கண்டிப்புள்ள வஸ்துக்களுக் கிப்படிப்பட்ட புத்தியும் யோசினையு மில்லாதபடியினாலே புத்தியானது அரூபியா யிருக்கிறதென்று சொல்லவேணும்.

3-வது.—புத்தியானது நிதானமுள்ள பரிச்சேதங்களைப் பண்ணுகிறது. இந்தப் பிரகாரமாகச் சில காரியங்களவசியமாய் மெய்யா யிருக்குமென்றுஞ் சிலதுகள் பொய்யா யிருக்குமென்றுங் கண்டுபிடிக்கிறது மல்லாமல் தன்னிடத்திலே ஸ்திரமாய் ஸ்தாபிக்கிறது. இப்படிப்பட்ட சத்தியங்களு மரூபமா யிருக்கிறதினாலே யதுகளின்பேரிலே பரிச்சேதம் பண்ணுகிற பலமானது அரூபியா யிருக்கும். பஞ்சேந்திரியங்களுடைய பலம் அதற்கு மகா கீழ்த்தரமா யிருக்கும். வர்னஞ், சத்தம், வாசனை, ருசி, கண்டிப்பென் னுங்களை மாத்திரங் கிரகிக்கிறது.

4-வது.—புத்தியான சகல வஸ்துக்களை யொழுங்காக வைக்கின்றது கண்டிப்புள்ள பொருட்களை யான கிரமத்தோடு நடத்துகின்றது. ஆனபடியினாலே சகலமான கண்டிப்புள்ள பதார்த்தங்களைப் பார்க்க மேலான வஸ்துவாயிருந்து பிரமாணத்துக்குள்ளே யடங்காம லரூபியாயிருக்கும்.

5-வது.—நரசீவனுடைய புத்தியின் கிரியைகளினு லே யாத்தும மரூபியா யிருக்கிறதென் றொப்புவித்த பிற் பாடதைத்தானே மனதினுடைய விர்த்திகளினுலேயு மொ ப்புவிக்கலாம். அதெப்படியென்றால், யாதாமொருத்தன் புண்ணியவான்மேலே பட்சமா யிருக்கும்போ தென்ன பார்க்கிறான். சில சமயங்களிலே சரீர மவலட்சணமா யி ருந்தாலு மரூபியா யிருக்கிற தருமத்தை மாத்திரம் விசா ரிக்கிறான். அவன் தேவபத்தியா யிருக்கிறானென்றுந் தாழ்ச்சியா யிருக்கிறானென்று முகத்தைப்பாராமல் நீதி நியாயத்தோடு காரியமெல்லாம் நடத்துகிறானென்று மறிந் திருக்கிறதினுலே யவன்மேலே பிரியமுஞ் சந்தோஷமுமா யிருககிறான். இந்தடவாக யாதாமொருதுரோகியான பா விமேலே யருவருப்பா யிருக்கும்போ தவனுடைய சரீரத் தைப் பாராம லவனுடைய திருட்டுகளேயுந் தாறுமாறுக ளேயு மகங்காரத்தையுந் துற்குணங்களேயும் பார்த்து அவன் மேலே யரோசகமா யிருக்கிறான். ஆனபடியினுலே மன தானது புண்ணியத்தின் மேலே சந்தோஷமும் பாவத்தின் மேலே யருவருப்புமா யிருக்கச் செய்தே யவசியமா யரூபி யா யிருக்கவேணும். அவ்வண்ணமே, கண்டிப்புள்ள வ ஸ்து பிரமாணத்தோடு கூடின காரியங்களோடு மாத்தி ரஞ் சேரலாம். இதெல்லா மிப்படி யிருக்கையிலே நரசீவ னுைது அரூபியா யிருந்தாலும் அகண்டமா யிருக்கும். அவ் வண்ணமே யசரீரியு மரூபியுமா யிருக்கிற வஸ்துவானது அங்கிஷங்க ளில்லாம லகண்டவிதமா யிருக்குமென்று சாஸ்திரிகள் சங்கேதம் பண்ணினுர்கள். ஆனுலிப்படிப்பட் ட நரசீவனுைது அரூபியுமா யகண்டமுமா யிருந்தாலும் அக்ஷயமா யிருக்கிறதென்று தப்பில்லாத சத்தியமாகும் அவ்வண்ணமே கண்டிப்புள்ள காரியமாத்திரம் லயமாய்ப் போகலாம் இதற்குக் காரணமேதென்றால், கண்டிப்புள் ள வஸ்து பற்பல அங்கிஷங்களினுற் கூட்டப்பட்டதா யி ருக்கிறதினுலே யந்த அங்கிஷங்களேப் பிரியப்பண்ணலாம் ஆனுலங்கிஷமில்லாத பொருளேப் பிரிக்கிறதற் கவகாசமில் லாததினுலே யெப்போதும் நிற்கும். இப்படியே நித்திய மாய் நிற்கிறதற்குச் சர்வேஸ்வரனுடைய ஒத்தாசை மாத்தி ரம வேணும். அவ்வண்ணமே, யகண்டபொரு ளக்ஷயமாய்ப் போகிறதற்குத் தன்னிடத்திலே யாதியுங் காரணமு மில்

லாததினுலே முகிவில்லாத கால மிருக்கும். ஆனபடி யினுலே யாத்துமமானது அரூபியாயும் யாதொன்றுற் கூட் டப்படாததாயும் அதினுடைய சுபாவத்திலே யங்கிஷங் களில்லாத படியினுலேயும் அது நிர்மூலமாய்ப் போகிற தற்குக் கூடாது. ஆத்துமஞ் சரீரத்தோடு அயிக்கியமா யிருக்கிறதினுலே யாத்துமஞ் சரீரத்தைவிட்டுப் பிரிகிறதற் குபாயம் பண்ணலாம். ஆனு லாத்துமத்திலே யங்கிஷங்க ளில்லாததினுலே யதைப் பிரிக்கிறதற்கும் நிர்மூலம் பண் ணுகிறதற்கு மவகாசமில்லை. ஆனு லிதெல்லா மதிகமநிக மாய் விளங்கத்தக்கதாக ஆத்துமத்திலே யங்கிஷமில்லாமற் போனுலு முண்டென்று விசாரித்துக்கொள் அப்போ தெண்ணப்படாத அபத்தங்களைச் சொல்லவேண்டி யிருக் கும். அதெப்படியென்றுல், புத்திக்கு மங்கிஷங்களுண்டா னுல் பிரமாணத்தோடே யிருக்கும். பிரமாணத்தோடிருக் கிற புத்தி கண்டிப்புள்ள புத்தியாயிருக்கிறதினுலே பற்பல வர்னங்களைக் கொண்டிருக்கலாம். புத்தி வெண்மையாயி ருக்கிறதென்றும், கறுப்பா யிருக்கிறதென்றும், செகப்பா யிருக்கிறதென்றும், பச்சையா யிருக்கிற தென்றுஞ் சொல லலாம். இதன்றியே யந்தப் புத்திதானே கனமுமாயிருக்க லாம். ஆனபடியினுலே புத்திக்குப் பத்து பல முண்டெ ன்று மிரண்டு துலா முண்டென்றுஞ் சொல்லலாம். இந் தடவாகப் புத்தியை யளந்து பார்க்கலாம். புத்திக்கு மூன் று விரலுண்டென்று மிரண்டு சாணென்று மூன்றுமுழ மென்றுஞ் சொல்லலாம். பின்னையும் புத்தியின் விஷயத் திலே யோசித்தாப்போலே மனதின் வகையிலேயிலேயும் யோசிக்கலாம். அவ்வண்ணமே மனதானது கண்டிப்பானு லப்போது பக்ஷமானது பச்சையாயிருக்கிறதென்றுஞ் சிகப் பாயிருக்கிறதென்றும் அந்தப் பக்ஷத்தினுடைய நீளத்தையு முயரத்தையுங் கனத்தையும் பார்க்கலாம். இப்படிப்பட்ட பொய்யான விசேஷங்கள் முதிர்ந்த பயித்தியத்தோடே கலந்திருக்கிறபடியினுலே யிந்த அபத்தங்களைச் சொல்லா தபடிக்கு ஆத்துமமானது கண்டிப்பில்லாமலும் அங்கிஷ மில்லாமலும் வர்னமில்லாமலு மரூபியுமாய் அக்ஷயமுமா யிருக்கிறதென்று சொலலவேண்டி யிருக்கிறது. ஆனபடி யினுலே மெய்யான வேதமானது நரசிவன்—அக்ஷயமாயி ருக்கிறதென்று படிப்பியாமற் போனுலுங் கெட்டியுள்ள

நியாயங்களினாலே யொப்பிவிக்கலாம். இதெல்லா மிப்படி யிருக்கையிலே மனுஷரெல்லாரும் அக்ஷயமாயிருக்கிற தங் களுடைய ஆத்துமத்துக்கு மோசம் வராதபடிக்குப் பிரயா சமெல்லாம் படவேணும். யாதாமொருத்தன் சிப்பியைப் பதனமாக வைத்து விலைமதியாத முத்தை யெறிந்துபோட் டா லென்ன சொல்லுவார்கள். அத்தன்மைபோலே ய ழிந்துபோகிற சரீரத்தைப் பூச்சியமாய்ப் பராமரித்துக் கொண்டு அழியாத வாத்துமத்தை விசாரியாமற்போனு லி தற்குச் சரியான வேறே குருட்டாட்டமுண்டோ? இதிலே திவ்விய குருவானவர் திருவுளம்பற்றினதாவது: லோக மெலலா முனக்கு லாபமாய் வந்தாலு முன்னுடைய ஆத் துமத்துக்குச் சேதம் வந்ததானு லுனக்குப் பிரயோசன மென்ன? ஆனபடியினாலே யுன்னை யறிந்ததற்குப் பிற்பா டுன்னை யுண்டாக்கினவரு மிரக்ஷிக்கிறவருமா யிருக்கிற த லைவனாகிற பராபர வஸ்துவினுடைய அளவில்லாத மகி மைகளை யறிந்து நன்றியறிந்த மனதோ டவர் பேரிலே தோத்திரம்பண்ணி யவருக்கேராத பாவங்களைத் தள்ளிவிட் டு உன்னுடைய ஆத்துமத்துக் கலங்காரமா யிருக்கிற தரு ம நடக்கைகளைச் செய்துக்கொண்டு தங்களுடைய பிரயோ சனத்தைப் பாராமற் சீஷர்களுடைய நன்மைகளை மாத்தி ரம் விசாரிக்கிற காரணக்குருக்கள் கிட்டபோ யவர்க ளண்டையிலே சென்று மோக்ஷத்துக்குப்போகிற பாதை யைக்கேட்டு அதிலே மரணபரியந்தம் நடக்கக்கடவாய்.

## உ0-ம். அதிகாரம்.

அண்டபிண்ட அறிக்கையினாலே கடவுளைக்கண்டுபிடிக்கிற வகையாவது.

இந்த அண்டபிண்ட வியாக்கியானத்தை தியானம் பண்ணுகிறபோது சோதிமண்டலங்களிலேயும் பிரபஞ்சத் துக் குள்ளேயும் அடங்கி யிருக்கிற வஸ்துவென்னப்பட்ட யாவையும் மிகுந்த தெளிவோடு பரிக்ஷித்ததினாலே சமஸ் தானத்திற் கடவுளானவர் தமதொப்பில்லாத ஞானத்தை யு மளவறுக்கப்படாத பலத்தையுங் கனைகாணுத கிருபை யையு மநோவாக்குக் கெட்டாத விமரிசையையும் பிரத்திய

க்ஷமாய் விளங்கப் பண்ணினானென்று கண்ணாற் கண்டாற் போலாயிற்று. ஆகையால் யாதாமொருத்த னக்ஷத்திரங்களுடைய அக்ஷயத்தையுங் கிரகங்களுடைய உத்தர தெக்ஷணாயனத்தையும் ஆன சமயத்திலே சந்திரசூரிய கிராணங்களையும் அமாவாசி பவுர்ணமி அபரபூர்வபக்ஷத்தையும், பிரதிவு, அப்பு, தேயு, ஆகாயமென்னும் நான்கு பூதியங்களா லுண்டாகின்ற விபரீதங்களினாலே சமஸ்தானத்தி னிதானத்தையும், இராப்பகலின் சரியானபிரிவையும், காலங்களுடைய தப்பில்லாத கிரமத்தையும் தீர விசாரித்தா லதுகளெல்லாத்தையு முண்டாக்கினவருமாய், நடத்திக்கொண்டு வருகிறவருமாயிருக்கிற பராபர வஸ்துவுடைய மேலான வல்லமையை யறிவானொழிய மற்றப்படியல்ல. அதேதென்றால்: அண்டத்தையும் பிண்டத்தையும் பொதுவிலே பார்த்தாலும் தனித்தனியேவஸ்துக்களைப் பராமரித்தாலுஞ் சர்வலோகத்திலெங்குங்கடவுளுடைய அடையாளங்களையு மிலக்ஷணங்களையு முத்தம பிரகாரமாகக் காணலாயிருக்கிறதென் றநுபவ சித்தியினாலே கண்டுபிடிக்கிறோம். சர்வலோகத்துக்கு மலங்காரமாயிருக்கிற பிரகாசத்தைப் பார்த்தா லதைக் கொண்டிருக்கிற சூரியனானது பூமிக்கிச்சமீபமாயிருந்தா லுக்கிரத்தின் மிகுதியினாலே யெல்லாஞ் சாம்பலாய்ப்போம். மெத்த தூரமானால கண்டிப்புள்ள வஸ்துக்கள் நன்றாயிருக்கிறதற்குப் பலமா போதாமற்போம். ஆகாயம் நடுவிலே யில்லாமற்போனாற் சூரியனாலே பூலோகத்துக்குப் பிரயோசன மென்ன? ஆகாயத்தினுடைய வழியாகவல்லோ பிரகாசமெல்லாம் வரவேணும். இதனாலே வர்ணங்களெல்லாந் தெரியும். ஆனால மனுஷருக்குக் கண்களில்லாமற் போனால் வர்ணங்களினாலேயும் பிரகாசத்தினாலேயும் பிரயோசன மென்ன? பிரகாசமில்லாத சமயத்திலே கண்களிருந்ததினாலே பிரயோசன மென்ன? திஷ்டி விஷயத்திலே யோசித்தாப்போலே மற்றப் பஞ்சேந்திரியங்களுடைய விஷயத்தில் யோசிக்கக்கடவாய். இதெல்லாத்தையும் ஆன வகையோடே நடத்துகிறதற்கு அவசியமாய் மேலானகருத்தைக்கொண்டிருக்கிற ஓராதிகாரணமிருக்க வேண்டியிருக்கிறது. இத்தனை வித்தியாசமுள்ள வஸ்துக்களுக்குள்ளே யிவ்வளவு சம்பந்தமு மயிக்கமுமாயிருக்கிறதற்கு அண்டத்தையும் பிண்டத்தையு மாளுகிற ப

ரஞ் சோதியாகிற கடவுளானவ ரவசியமா யிருக்கிறுரென்று பிரத்தியக்ஷமான சத்தியமாகும். இதன்றியே யெங்கு மழை வருஷிக்கிறதற்குஞ் சர்வலோகத்திலே மேகங்களைச் சிதறப் பண்ணுகிறதற்கும் புத்தியில்லாத காற்றுக்குப் படிப்பித்த வனுர்? அந்த மழையி னிமித்தமாக வுயிருள்ள வஸ்துவென னப்பட்ட யாவும் பிழைக்கிறதற்கு வேண்டியதெல்லாங் கொடுக்கத்தக்கதாகப் பூமிக்குப் போதித்தவனுர்? பூமியி லே தானியங்களும் பழங்களும் உண்டாகாமற்போனுல் பக்ஷிகளு மிருகங்களு மனுஷரு மென்னசெய்வார்கள்? சீவ னுள்ள வஸ்துக ளில்லாமற்போனுல் பழங்களினுலேயுந் தா னியங்களினுலேயும் ஆகிற பிரயோசனமென்ன? ஆனபடி யினுலே யெல்லாவற்றையுஞ் சிருஷ்டிக்கிறவருமாய் நடத்தி க்கொண்டு வருகிறவருமா யிருக்கிற ஒரு பராபர வஸ்துவா னவ ரிருக்கிறுரென்றும், அவரண்டைக் கேறுகிறதற்குச் சர் வலோகத்திலு முண்டான வஸ்துக்களுக்குச் சோபனம்போ லே யிருக்கிறதென்றும் ஞானத்திலே தெளிவுள்ளவர்கள் சங்கேதம் பண்ணினுர்கள். ஆனுல் நீசமான பொருட்களை மு தலா யுற்றுப்பார்த்தா லவைகளிலேதானே கடவுளுடைய மட்டில்லாத நன்மைகளின் பிரத்தியக்ஷமான அடையாளங் களைக் காணலாம். ஒரு புல்லைமுதலா யுற்று விசாரித்தா லதினுடைய அங்கிஷங்களுடைய கிரமத்தையும், வர்னத்தை யு, மீட்டிபோலே யிருக்கிற கூர்மையையு, மிருபுறத்திலே கத்திபோலிருக்கிற விதத்தையும், பூமிக்குள்ளே மறைந்தி ருக்கிற வேரையு, மதினுடைய சுபாவத்துக்குத் தக்கது அந் த வேர்வழியாக யேறுகிற சாரத்தையு, மிதுமுதலான வெ ண்ணப்படாத விசேஷங்களையு மாராய்ந்துபார்த்தால்அவசி யமாய்ப் பராபர வஸ்துவினுலே வந்ததென்றும், வேறெ்கா ரணத்தினுலே வரக்கூடாதென்றுங் கண்டுபிடிப்பான். அ தெப்படியெனுறுல், பூலோகத்தி லுண்டான துரைமக்க ளுமு, பிரபுக்களு, மிராசாக்களும்,சாஸ்திரிகளும், விவேகமுள் ளவர்களும்,சகல வித்தியாபாரகர் முதலிய வெல்லாருங்கூடி யொரு புல்லை யுண்டாக்கிறதற் காலோசனை பண்ணினுலு மவர்களுடைய பிரயாசமெல்லாம் வியர்த்தமாய்ப் போமென் பதற்குச் சந்தேகமில்லை. இந்த நீசமான புல்லிலே யோ சித்தாற்போலே மற்ற வஸ்துக்களிலேயும் யோசிக்கக்கட வாய். பிண்டத்தையு மதிலே யுண்டான தத்துவங்களையும் ப

ரிகூறித்தாயானால் அதிலேதானே கடவுளுடைய விலக்ஷணங்களைப் பிரசித்தமாய்க் காணலாம். அவ்வண்ணமே சாணசராதியி னதிசயமான கிரமத்தையு, மஸ்திகளுடைய அஸ்திவாரத்தையுஞ், சந்துகளையுங், கபால அஸ்திகளையும், பஞ்சேந்திரியங்களுக்கடுத்த வாச்சரிய விசேஷங்களையுஞ், சீவவணுக்கள் நரம்பிலே யோடுகிற பிரகாரத்தையுஞ், சீவவக்கினியோ டிரத்தங் கலந்திருந்து திரேகமெல்லாம் பாய்கிறதையும், சரீரத்துக்குள்ளே யிரத்தத்தாரைகளுந், தாதுகளுமாறுகள்போலே யிருக்கிறதையும், எலும்புகள் மலைபோலே யிருக்கிறதையுங், கண்க ளுயர்ந்த ஸ்தலத்திலே யிருந்து வேவுகாரர்போலே திரேகத்துக்கு மோசம்வராதபடிக்குப்பார்த்திருக்கிறதையும், வயிறு சுயம்பாகியைப்போலே யாகார பானங்களைச் சேமித்து அவயவங்களெல்லாத்துக்கும் வேண்டியவைகளைக் கொடுக்கிறதையும் இந்தப் பிண்டத்துக்குள்ளே நரசீவனுனது இராச்சியபாரம் பண்ணிக்கொண்டு மனதின்படியே யவயவங்களையெல்லா மசைத்துக்கொண்டு வருகிறதையும், இதுமுதலான வெண்ணிக்கைக்குள்ளே யடங்காத அநேக வற்புதமான விசேஷங்களையும் பராமரித்தால் பிண்டமென்கிற சின்ன லோகத்தைக் கடவுளுண்டாக்கினுரொன்றும் இந்த சின்ன லோகத்திலே யொரு ஆத்துமமாத்திர மிராச்சியபாரம் பண்ணுகிறுப்போலே பரமாத்துமாவாகிற பராபர வஸ்துவானவர் பெரிய லோகத்தைத் தம்முடைய சித்தத்தின்படியே நடத்திக்கொண்டு வருகிறுரென்றும் எளிதாய்க் கண்டுபிடிக்கலாம். ஆனபடியினுலே அண்டமும் பிண்டமும் பராபர வஸ்துவினுலே வந்ததென்றும்,மனுஷருக்காகப் பெரியலோகத்தை யுண்டாக்குகிறபோது இவர்களுக்கு விசேஷமான பிதாவாயிருக்கிறுரொன்றும் மனதிலே கெட்டியாக ஸ்தாபிக்கவேணும். ஆனுல் மனுஷரானவர்கள் தங்களுக்குள்ள மகிமையை யறியாமல் தங்களுக்குப் பிதாவாயிருக்கிற கடவுள்மேலே பத்தியில்லாமலும், அவரை யடிக்கடி நினையாமலும், அழிந்துபோகிற பொருட்களின்மேலே பற்றுதலாயிருக்கிறுர்கள். இதற் கடையாளமாகவொரு உச்சிதமான சரித்திரத்தைச் சொல்லிக்காட்டுவோம். அதெப்படியென்றுல், பூர்வகாலத்திலே மகா பேர்போன விராய னொருத்தன் றன்னுடைய விராசதானிப் பட்டணத்திலே மகா பிரஸ்தாபத்தோ டிராச்சியபாரம் பண்

ணிக்கொண்டிருந்தான். அவன் தன்னுடைய நெற்றியிலேயுங், கையிலேயும், நெஞ்சிலேயு மகா வலங்காரமும் விசேஷமுமானவொரு அடையாளந் தரித்திருந்தான். இவ்வித வடையாளங்களை யவனுடைய பட்டத்துப் பிள்ளையுந் தரித்திருந்தது. இப்படிப்பட்ட விராயனுக் கெதிராளியான வேறேயொரு துரையானவன் காய்மகாரத்தினாலே படைகூட்டி யிராயனுடைய சிமைகளிலே யிறங்கி யவனுடைய கோட்டைகளைக் கட்டிக்கொண்டு இராசதானி பட்டணத்துக்கு முத்திக்கையிட்டான். கடைசியிலே யநேகநாளைக்குப் பிறபாடு பலவந்தத்தின்மேல் பட்டணத்தைவாங்கி யிராயனுடைய அரண்மனைக்குள்ளே பிரவேசிக்கிறபோ தெல்லாரும் பயந் தோடிப்போகிற சமையத்திலே பட்டத்துக் கிருக்கப்போகிற மூன்று வயதுள்ள பிள்ளை யொரு சேவகன்கையிலே யகப்பட்டு அந்தக் குழந்தையினுடைய மகிமையை யறியாமல் நீசர்சாதியி லுட்பட்ட பேர்களுக் கந்தச் சேவகன் விற்றுப்போட்டான். இப்படியே யநேக வருஷம் நீசருக்குள்ளே வளர்ந்து அவர்களோடு பழகிப்போய்த் தன்னை யின்னானென் றறியாமலிருந்தான். அதற்குள்ளே யிராயனானவன் அநேகஞ்சேவகரையும் இராணுவங்களையும் கூட்டிச் சத்துருவின்மேலே விழுந்தவனைத் துரத்தி யெப்போதும்போலே யிராச்சியபாரம் பண்ணினான். அப்போது தன்னுடைய குமாரனைத் தேடத்தக்கதாக நாலுதிக்கிலுமநேகம் பேர்களை யனுப்பி விசாரிக்குமிடத்தி லிராசகுமாரனிருக்கிற வூரிலே யவர்களி லொருத்தன் சென்று பார்க்கும்போது பட்டத்துப் பிள்ளையைத் தெருவீதியிலே கண்டு அதினுடைய வடையாளங்களை யுற்றுப்பார்த்து சந்தோஷப்பட்டு அவன் கிட்டேபோய் நீ யாரென்று கேட்குமிடத்தி லவ னீசனுடைய பிள்ளையென்று சொன்னான். அத்தூது வாயிலே யூழியக்காரன் தேவரீரிப்படி சொல்லவேண்டாம். மகா பெரியவராயிருக்கிறீர். இராயனுடைய குமாரனுக்கும். நீ யென்னோடேகூடவந்தா லும்முடைய தகப்பனாகிற விராயனோடு இராச்சியபாரம் பண்ணுவீரென்கிறதற்குச் சந்தேகமில்லை யென்றான். அந்த இராசகுமார னித்தொகைப்பட்ட விசேஷங்களைச் சேவகனானவன மகா வணக்கத்தோடு நிதானமாய்ப் பரியாச மில்லாமல் விண்ணப்பமிட்டானென்று கண்டு அவனைப் பின்சென்று அரண்மனைக்

குப்போனான். அவனுடைய தகப்பனானவனரண்மனையிலே வந்த தன்பிள்ளையினுடைய அடையாளங்களைக் கண்டவனை யுந்தியந்த பட்டத்தோடு கட்டிக்கொண்டு தம்போடிருந்த இராச்சியபாரம்பண்ணக் கட்டளையிட்டான். அத்தன்மைபோலே இவ்வுலகத்திலே நிற்கிற மனுஷருக்குள்ளே பலகோடிப்பேர்கள் தங்களுக்குச் சீவாதாரபூதனாயிருக்கிற பராபரவஸ்துவானவர் பிதாவாயிருக்கிறதென்றறியாமலும் நீசமான தங்கள் தாயகப்பனாரிலே மாத்திரம் வருகார்களென்றும் விசாரித்துக்கொண்டு அழிந்துபோகிற வஸ்துக்களைமாத்திரந் தேடிக்கொண்டு வருகிறார்கள். ஆனாலிந்த அண்ட பிண்ட வியாக்கியானத்தை வாசித்தபிற்பாடு கடவுளானவர் தங்களுக்குப் பிதாவாயிருக்கிறாரென்றும் அவருடைய அடையாளங்கள் தங்களிடத்திலே மிகவும் பிரகாசிக்கிறதென்றும் கண்டுபிடித்து அநித்திய தன்மைகளையகற்றித் தன்னை சதா ஆதிபிதாவாகிய ஆதாமெனபவனைப்போல புத்திமானாகிக்கொண்டு பெருமோசத்திற் குட்படாமலும், பிசாசினுடைய தந்திரமான வெளவுதல்களின் சனங்கள் மோகத்தால் காமமான பிரபாவ மோகத்தை விரும்பி நிற்ப வாக்கினைக்கு ஆளாகாமலும், அநித்திய பொருட்களின் நிலையற்ற சகத்திரஷங்களை விரும்பி சலப்பிரவாகத்தால் நாசமான சனங்களைப்போல பரிதரிக்கக்கூடாத பொலைமையை யடையாமலும், நானென்கிற கர்வத்தால் கெட்டு நித்திய வக்கினிச் சமுத்திரத்திற் படிந்த தூதர்களைப்போ லகங்காரித்து புத்திகெட்டு நரகவாக்கினைக் காளாகாமலும் நா மிக்கலையில் நம்மை விட்டு நீங்குகிறதுமாய் தற்கால மாய்கைகொண்ட நமது கண்களுக்குக் காணப்படுகின்றதுமான உலக பொருட்களை விரும்பாமலும் நம்மை யுண்டுபண்ணி யிவ்வுலகில் கொஞ்சநாளைக்கு வைத்து நமது கிரிகைகளுக்குந் தகுந்த நித்தியானந்த பாக்கியங் கொடுக்கச் சித்தமாயிருக்கிற நமது மெய்யான தகப்பனுகிற சர்வேசுவரனை நமது பஞ்சேந்திரியங்கள் உள்ளிந்திரியங்கள் கொணடமட்டுங் கட்டிபபிடித்துக்கொண்டிருப்போமாக. மேலுமுலகத்திலிருக்கப்பட்ட சகலருமொரே தகப்பனுகிய பராபர வஸ்துவினுடைய பிள்ளைகளா யிருப்பதால் சாதிபேதகமின்றியொருவ ரொருவரைச் சினேகித்துக்கொண்டு தானஞ், செபம், தபசு, ஒறுப்பு, உபவா

சம்பண்ணி மாய்கையா லிழுக்கப்படு நம்து பாசங்களின் கொடுமைகளை மேற்கதிதரூந் தியானங்களால் யோசித்து அவைகளைவென்று நமக்கு நித்திய வாஸ்தியா யிருக்கிற தேவனைமுழுமனதோடு சிநேகிப்போமாக. இப்படிச் செய்வோனல் அற்பநாளைக் கிருக்கப்போகிற விந்தச் சரீரம் நம்மை விட்டு நீங்கினவுடனே முடிவில்லாத காலந் தேவனோடு மோட்ச விராச்சியபாரம்பண்ணுவோம்.

அண்டபிண்ட வியாக்கியான முற்றிற்று.

# உலகப்பிரமாண சாஸ்திரம்.

## விவேகம்.

சர்வலோகங்களுக்கும் அதிபதி கர்த்தரா யிருக்கிற பராபர வஸ்துவினுடைய அளவில்லாத மகிமையையும், மட்டில்லாத வல்லபத்தையு, மளவறுக்கப்படாத மேலான கிரமமுள்ள விமரிசையையுங், கனாகாருணைக கிருபா கடாக்ஷத்தையு மெவ்வளவாகிலுங் கண்டுபிடிக்கிறதற்கு இந்த லோகப்பிரமாண சாஸ்திரத்தை வெளிப்படுத்துவதினாலே சகல நன்மைச் சுரூபியா யிருக்கிற சர்வேஸ்வரனாலே யுண்டாக்கப்பட்ட மேலான மண்டலங்களிலே பதிந்திருக்கிற நக்ஷத்திரங்களையும், கீழ்த்தரமான மண்டலங்களிலே தக்ஷணாயநம், உத்தராயணம் நிமித்தமாக அங்கங்கே திரிகிற கிரகங்களையு மிந்தப் பிரபஞ்சத்திலுண்டான பூதியங்களையுந் திராசிலே தூக்கிப்பார்க்கிறாப்போலே யதுகளுடைய பிரமாணத்தையுஞ், சுபாவத்தையு மிந்தத் தேசத்திலுண்டான யாவருந் தெளிவாய்க் கண்டுகொள்ளும்படிக்குத் தாற்பரியமா யிருக்கின்றோம். ஆனாலிந்த லோகப்பிரமாண சாஸ்திரமானது இத்தேசத்திலுள்ள பூர்வீகசாஸ்திரிகள் வீணிலே விதித்தவைகளிலிதுவு மொன்றென் றெண்ணவேண்டாம். அவைகளிலுள்ள பிரத்தியக்ஷமான தப்பறைகளையு மபத்தமான விசேஷங்களையும் புத்திமான்கள் கேட்கும்போ ததுகளெல்லாம் நகைக்கிறதற்கும், பரியாசம் பண்ணுகிறதற்குங் கூடுமா யிருக்குமொழிய மற்றப்படியல்ல. ஆனபடியினாலே நாமிந்தப் புஸ்தகத்தைக்கொண்டு படிப்பிக்கிற வாச்சரியமான விசேஷங்களெல்லாம் மெய்யான சாஸ்திரத்தினுடைய கெட்டியுள்ள நியாயங்களினால் ஸ்தாபிக்கப்பட்டதா யிருக்கிறதினாலே பெரியோர்களுஞ், சிறியோர்களுஞ், சாஸ்திரமறிந்தவர்களும், அறியாதவர்களும் இந்த வற்புதமான விசேஷங்களை மிகுந்த சந்தோஷத்தோடு வாசித்து, சர்வலோகத்தையும் படைத்த சர்வேஸ்வரனுடைய மட்டில்லாத பிரதாபத்தை யுணர்ந்து, எல்லாத்துக்கு மாதிகாரணரா யிருக்கிற அந்தச் சர்வேஸ்வரனுடைய சித்தத்தின்படியே மர

ணபரியந்தந் தருமவழியிலே நடந்து கடைசியிலே மேலா
ன லோகத்திலே மனதுக்குப் பரிபூரண திருப்தியைக்
கொடுக்கிற பரமானந்தமாகிற மோக்ஷபாக்கியத்தை யனுப
விக்கப் பாத்திரமானவர்களாவோமென்று மிகுந்த நம்பிக்
கைகொண் டிருக்கிறோம். ஆனாலிந்த லோகப்பிரமாண
சாஸ்திரத்தி லெழுதி யிருக்கிற ஆச்சரியமான விசேஷங்க
ளுக்குக் காரணத்தை வெளிப்படுத்தத் தகுந்த வார்த்தைக
ளிந்தச் சீமைகளில் வழங்கியில்லாததினாலேயும் இருந்தா
லும் யாவரும் எளிதிற் கண்டுபிடிக்கக் கூடாத பதங்களைக்
கூட்டி யிருப்பதினாலேயும் இப்படிப்பட்ட காரணங்களைச்
சகலரும் எளிதிற் கண்டுபிடிக்கிறதற்கு ஆன நாமங்களை
யறியும்பொருட்டு வேறே யநேகஞ் சாஸ்திரிகளைத் தேடி
வெவ்வேறு புராணங்களை கற்கவேண்டி யிருக்கிறபடியினா
லேயு முன் சொல்லப்பட்ட விசேஷங்களுக் கடுத்த நியாய
ங்களுக்குப் பொருந்தும்படியான வார்த்தைகளைச் சிலவி
டங்களி லுபயோகித் திராமலுந் தகுந்த ஞாயங்களைச்
சொல்லிக் காண்பியாமலும் இருந்தாலும் இந்த சாஸ்திரமா
னது விபரீதமாய் விதித்திருக்கிறதென் றெண்ண
வேண்டாம். ஆகையால் மிகவும் புத்தி கூர்மையுள்ளவனு
மாய்ச் சாஸ்திரங்களிலே யுண்டான பரம விரகசியங்களை ய
ளவறுக்கத்தக்க சக்தியுள்ளவனுமா யிருக்கிற யாதாமொரு
வன் லோகப்பிரமாண சாஸ்திரத்தினுடைய வாச்சரியமான
விசேஷங்களுக்குக் காரணங்களை யறிய மனதிருந்து இந்தப்
புஸ்தகத்தை நன்றாய் வாசித்துணர்ந்தால் சில நாளைக்குள்
ளே இதிலுள்ள நியாயங்களை யெவ்வளவாகிலுங் கண்டுபிடிப்
பான். மற்றவர்களத்தனை விசேஷமாய் நினையார்கள். க
டைசியிலே யறியவேண்டினதாவது. இந்தச் சீமையார்
ஆறுசாஸ்திர முண்டென்று சொல்லுகிறார்கள். ஆறுமாத்
திரமல்ல, இன்னம் வேறே அநேக மாச்சரியமான சாஸ்தி
ரங்களுமுண்டென்று கெட்டியுள்ள நியாயங்களினாலே வெவ்
வேறே புஸ்தகங்களைக்கொண்டு மெய்ப்பிக்கலாம். ஆகை
யால் இப்போதைக்குச் சாஸ்திரத்துக்குத் தெளிவையும்
பிரகாசத்தையுந் தந்தருளுகிற பராபர வஸ்துவினுடைய கி
ருபையினாலே சங்க்ஷேபமாக லோகப் பிரமாண சாஸ்திரத்
தை வெளிப்படுத்துவோம்.

## லோகப்பிரமாண அஸ்திவாரம்.

லோகப் பிரமாணத்தின் சாஸ்திரங்களைக் கண்டுபிடிக்கிறதற்குமுன்னே யறிய வேண்டியதாவது: 16 கீற்றுக் கொண்டது ஒரு விரல், 16 விரற்கொண்டது ஒருபாதம். 5 பாதங்கொண்டது ஒரு பாகம். 750 பாகங்கொண்டது காற்காதம். 1,500 பாகங்கொண்டது அரைக்காதம் 3,000 பாகங்கொண்டது ஒரு காதம். இப்படிப்பட்ட காதங்கள் இன்னமு மதிகமாய் விளங்கத்தக்கதாக வொரு காதத்திலே 15,000 பாதங்கள், அல்லது 24,000 விரற்கடைகள், அல்லது 38,40,000 கீற்றுக்கள் உண்டென்றறியவும் இப்படிப் பட்ட கீற்றுக்களும் விரற்கடைகளுமாவன.



இந்தக் கோடுகள் முழுமையும் ஒரு பாதத்தினுடைய நாலிலொருபங்கு, அல்லது 4 விரற்கடைகொண்டது. இதில் 64 கீற்றுக்களுண்டு இப்படிப்பட்ட கீற்றுக்கள் இந்தக் கோட்டி லடங்கி யிருக்கின்றன.

இதற்கப்பா லறியவேண்டினதாவது: இரவையும் பகலையுங் கூட்டி ஒரு நாளைக்குள் 24 பெரிய நாழிகையாகச் சாஸ்திரிகள் பிரித்தார்கள். இப்படிப்பட்ட நாழிகை யிந்தச் சீமையிலே நடக்கிற நாழிகைக்கு இரண்டரை நாழிகையாகும் இதெல்லா மிப்படி யிருக்கையிலே யொரு பெரிய நாழிகையில் நடக்கிற வழி சாஸ்திரகாதமா யிருக்கிற படியினாலே யிந்தச் சீமையிலே வழங்குகிற ஒரு காதத்திலே மூன்று சாஸ்திரகாத மடங்கியிருக்கும். அவ்வண்ணமே கெட்டிக்காரன் மூவாயிரம் பாகவழி யொரு பெரிய நாழிகைக்குள்ளே நடக்கிறானென்று அநேகம்விசை சோதனை பார்த்திருப்பதினாலே யிந்தச் சீமையிலே நடக்கிற காதம் ஒன்றுக்கு 9,000 பாக வழியா யிருக்கிறதென்று சொல்லவேணும். இந்தப் பிரகாரமாக விந்தச் சீமையிலே நடக்கிற காதத்திலே 45,000 பாதமுண்டென் றறிவாயாக. பின்னையு முன் சொல்லப்பட்ட காதத்திலே 7,25,000 வி

ரற்கடைகளு முண்டாயிருக்கிறது. கடைசியிலே யிந்தச் சீமையிலே நடக்கிற காதத்திலே 1,15 20,000 கீற்றுக்களு முண்டென் றறிவீர்களாக.

---

## பூமியானது சர்வலோகங்களுக்கும் மையமா யிருக்கின்றது.

பரமண்டலங்களி னுடைய பிரமாணத்தைச் சொல்லிக்காட்டுகிறதற்கு விசேஷமாய்ப் பூமியை யறியவேண்டி யிருக்கின்றது. ஆகையால் பூமியானது சர்வலோகத்தினுடைய நடுவிலே யிருக்கிறதென்றும், வட்டரூபமாக வுண்டைபோலே யிருக்கிறதென்றுஞ் சாஸ்திரத்தின்படியே யொப்புவிக்கவேண்டியது அவசியமா யிருக்கின்றது. அதெப்படியென்றால்:—

முதலாவது —பூமிமேலே யெங்கெந்த ஸ்தலத்திலே யிருந்தாலும் பரமண்டலங்களுடைய பார்வை யெப்போதுங் காணலாம்.

2-வது.—பனிமேகங்க ளிடைவிடாம லசைந்தாலுந் தெரிசன சக்கரத்தின்மேலே சமசக்கரத்திற் பன்னிரண்டு இராசிகளிருக்கின்றன.

3-வது.—ஒரு நட்சத்திர மஸ்தமிக்கிறபோது அந்த நட்சத்திரத்துக் கெதிரா யிருக்கிற வேறே நட்சத்திர முதயம் பண்ணுகின்றது.

4-வது.—தெரிசன சக்கரத்திலே சந்திர கிராணம் வருகிறபோது சந்திரனுஞ் சூரியனு மெதிராகத் தெரிசன சக்கரத்திலே நிற்கின்றது.

5-வது —சமசக்கரத்தின் கீழேயிருக்கிற சனங்களுக்கிரவும் பகலுஞ் சரியா யிருக்கிறதினாலே பூமி சர்வலோகத்தினுடைய மையமல்லாமற்போனால் முன்சொல்லப்பட்டவர்களுக்கு இராப்பகற் சரியாயிருக்கப் போகிறதில்லை.

6-வது.—சந்திரகிராணஞ் சூரியனெதிராக நிற்கிறதினாலேயும் பூமியினுடைய நிழலினாலேயும் வருகின்றது. ஆகையால் வெவ்வேறே வியர்த்தமான வபத்தங்களை யெல்

லாஞ் சொல்லாமற் பூமியானது சர்வலோகத்தினுடைய மையத்தி லிருக்குதென்றே சொல்லவேணும்.

## பூமியானது வட்டரூபமா யிருக்கின்றது.

பூமியானது உண்டைபோலே வட்டரூபமா யிருக்கி றதென்று கெட்டியுள்ள நியாயங்களினாலே யொப்புவிப் போம்.

முதலாவது.—சந்திர கிராணங்கள் வரும்போது பற் பல ஸ்தலங்களிலே வாசமா யிருக்கிற வநேகஞ் சனங்க ளிப்படிப்பட்ட கிராணங்களை யொருமிக்கக் கண்டாலு மப் படிப்பட்ட பற்பல ஸ்தலங்களிலே வெவ்வேறே காலமாயி ருக்கின்றது. அதெப்படியென்றாற் சிலபேர்களுக்குச் சூரி யனஸ்தமிக்கிறது. சிலபேர்களுக்குச் சூரியனஸ்தமித்து ஒருசாமம். வேறே சிலபேர்களுக்கு நடுச்சாமம். பின் னையும் வேறே பேர்களுக்கு மூன்றுஞ்சாமம். கடைசியி லே சிலபேர்களுக்கு விடியற்காலம். ஆனால் பூமி வட்ட ரூபமில்லாதிருந்தா லிப்படிப்பட்ட கால வேற்றுமை காண் பிக்க மாட்டாது.

2-வது.—வடக்கே யிருந்து தெற்கே நேராய்ப்போ னால் மகமென்கிற நட்சத்திரங் கீழே காணபிக்கும். பின் னையுந் தென்பக்கத்திலே மறைந்திருக்கிற சிலபேர்களுக்கு நட்சத்திரங்கள் புதுசா யுதயம் பண்ணுகிறது. கடைசியி லே தெற்கே யிருந்து வடக்கேபோனால துற்கையென்கிற நட்சத்திரம் புதுசாய்க் காண்பிக்கின்றது. ஆனபடியினா லே லோகமுண்டைபோலே வட்டரூப மல்லாமற்போனா லிந்த விசேஷங்களை யொருக்காலும் காணப்போகிறதில்லை.

3-வது.—சமுத்திரத்தி லோடுகிற கப்பல் மேலேயி ருக்கிற சனங்கள் முந்தமுந்தப் பருவதங்களுடைய நுனி யைக் காண்பார்கள். பின்னையும் போகப்போகப் பருவ தத்தினுடைய அடிவாரத்தைக் காண்பார்கள்.• இந்தப் பி ரகாரமாகத் தூர வெதிராக வருகிற வேறே கப்பலின் பாய்மரத்தினுடைய நுனியை முந்தமுந்தக் கண்டதற்குப் பிற்பாடு முழுக் கப்பலையுங் காண்பார்கள். ஆனபடியினா லே சமுத்திரமும் பூமியோடேகூட வட்டரூபமா யிருக்கிற

ரா. பின்னையும் ஆறுகளெல்லா மிடைவிடாமற் சமுத்திரத் திலே விழுகிறபடியினாலே சமுத்திரத்துக்கும் பூமிக்கு மொரு மையக்கம்பி யுண்டாயிருக்கும்.

4-வது.—பூமி வட்டரூபமல்லாமற்போனா லநேக ம பத்தங்களை யெல்லாஞ் சொல்லவேண்டி யிருக்கிறது. அ தெப்படியென்றால், பூமிமேலே யிருக்கிற சனங்க ளெல்லா ருக்குஞ் சந்திரனும் சூரியனு மொருமிக்க வொரு க்ஷிணத் திலே காண்பிக்கும் இதனறியே சில பெயர்களுக்குச் சூ ரிய னுதயம்பண்ணி மத்தியானமட்டு மிரண்டு சின்ன நாழி கைமாத்திரஞ் செல்லும் மத்தியானந் துவக்கி யஸ்தமிக் குமட்டு மிருபத்தெட்டு நாழிகைசெல்லும். வேறே பெ யர்களுக்கு இதற்கு விரோதமான காலம்வரும். ஆனபடி யினாலே யிப்படிப்பட்ட வபத்தங்களைச் சொல்லாதபடிக் குப் பூலோகம் உண்மைபோலே வட்டரூபமா யிருக்கிற தென்றே சொல்லவேண்டி யிருக்கின்றது.

## பூமியின் பிரமாணம்.

பூமியானது வட்டரூபமா யிருக்கும்போ ததினுடைய அளவு பிரமாணத்தை நன்றாய்க் கண்டுபிடிக்கிறதுக்கு முந் தமுந்த பூமியினுடைய வளையத்தை யறியவேணும். அதெப் படியென்றால், பூமியினுடைய வளையம் 7,920 காதவழி. இப் படிப்பட்ட வளையத்தினுடைய மையக்கம்பி 2,520 கா தம். இந்த மையக் கம்பியினுடைய பாதி 1,260 காத வழி. இப்படிப்பட்ட மையக்கம்பினுடைய பாதியை பூமி யின் வளையக் கதிரொன்று சொல்லுவார்கள். பின்னையும்பூமி யின தாக்கு ரூபமானதுகள் பக்கமெங்கும் 1,99,58,400 கோடியே தொண்ணூற்றொன்பது லட்சத்தன்பத் தெண் ணாயிரத்துநாநூறு காதவழி. இப்படிப்பட்ட பூமியை யி ரண்டாய்ப் பிளந்தால் மேற் *பவனியிலே 49,89,600 நாற் பத்தொன்பது லட்சத் தெணபந் தொனபதினாயிரத் தறு நூறு காதவழி. கடைசியிலே பூமியெல்லாங்கூட வுள்ளே யும் புறத்தியிலேயு மெலலா அளவும் 838,25,28,000 எண் ணூற்றுமுப்பத்தெட்டு கோடியே யிருபத்தைந்து லட்சத்

* உலாவுதல், சாரிவரல்.

திருபத்தெண்ணூயிரங் காதவழி. ஆனபடியினாலே யிந்த அளவைப்பார்த்துப் பூமிக்குள்ளே யெத்தனை மணலிருக்கலாமென்று சுமுத்திரையாகச் சொல்லலாம்.

## பூமியினளவை யொப்பித்தல்.

யாதாமொருத்த னம்மாற் சொல்லப்பட்ட பூமியினுடைய அளவைக் கேட்கும்போ ததுகளெல்லாம் வியர்த்தமாய் விதித்தோமென்று சொல்லாதபடிக்குக் கெட்டியுள்ள நியாயங்களினாலே யொப்புவிப்போம். ஆனா லிப்படிப்பட்ட நியாயங்களைக் கண்டுபிடிக்கிறதற்கு முந்தமுந்த அறிய வேண்டியதாவது: ஒருவளையம் பெரியதா யிருந்தாலுஞ் சரி, சிறியதா யிருந்தாலுஞ்சரி, 360 பங்காய்ச் சாஸ்திரிகள் பிரித்தார்கள். 2-வது.—ஒவ்வொரு பங்கை யறுபது பங்காய்ப் பிரித்தார்கள். 3-வது.—இந்த வறுபதுபங்கி லொருபங்கை வேறே யறுபது பங்கா யிப்படிப் போகப்போக வெப்போது மறுபது பங்காகப் பிரித்துப்போட்டதினாலே யளவில்லாத கணக்குப் பிறக்கும். ஆனபடியினாலே பரமண்டலங்களுடைய வளைய மெத்தனை விஸ்தாரமா யிருந்தாலு மிந்த இலக்கத்திலே யெளிதா யடங்கியிருக்கும். இதெல்லாங் கண்டுபிடிக்கிறதற்குச் சுருக்கத்திலே யொப்புவிப்போம். அதெப்படியென்றா லுன்னுடைய மனதின்படியே யொரு வளையத்தை விதித்துக்கொள். உடனேதானே யந்த வளையத்தை 360 பங்காய்ப் பிரித்துப்போட்டு அதின் பிறகொவ்வொரு பங்கை 60 பங்காய்ப் பிரித்துவிட்டு இப்படிப்போகப்போகச் சற்றுநேரத்துக்குள்ளே யத்தனை விஸ்தீரணமான வளையத்திலே யெத்தனைமயிர் எத்தனை யணுவிருக்கிறதென்று கண்டுபிடிக்கலாம். இந்தப்பிரகாரமாக வொரு வளையத்திலே 360 பங்கு. 2-ம் பிரிவிலே 21,600 பங்கு. 3-ம். பிரிவிலே 12,96,000 பன்னிரண்டு நூறுயிரத்துத் தொண்ணூற் றூராயிரம் பங்கு. 4-ம். பிரிவுலே 7,77,60,000 ஏழு கோடியே யெழுபத்தேழு லட்சத் தறுபதினாயிரம் பங்கு. 5-ம். பிரிவிலே 466,56,00,000 நானூற்றறுபத்தாறு கோடியே ஐம்பத்தாறு நூறுயிரம் பங்கு. இப்படிப் போகப்போக வூழியுள்ள காலங் கணக்கேற்றலாம். கடைசியிலே யொ

ரு வளையத்திலே யோசித்தாப்போலே யொவ்வொரு பங்கி னுடைய இலக்கத்திலேயும் யோசிக்கலாம். இந்த வஸ்திவா ரத்தை வைத்ததற்குப் பிற்பாடு பூமியினுடைய அளவுபி ரமாணத்தை யொப்புவிக்கலாம். ஒரு மையத்துக்குள் ளே இரண்டு வளைய முண்டென்று விசாரித்துக்கொள். பெரிய வளையம் நட்சத்திரங்களுடைய வளையத்தி னடை யாளம். சின்னவளையம் பூலோகத்தினுடைய வடையாளம். இந்த வளையங்கள் வடக்கே துவக்கித் தெற்கின் வழியா கப் போமென்று விசாரித்துக்கொள். இப்படிப்பட்ட வ ளையங்களைச் சாஸ்திரத்தின்படியே 360 பங்காய்ப்பிரித் துப்போட்டால் இப்படிப்பட்ட பூமிவளையத்தின் 360 பங்குகளுக்குள்ளே யொருபங்கி லெத்தனை காதவழி யுண் டென் றறிந்தால் அந்த வளைய முழுது மெத்தனை காதவழி யுண்டென்றும் அறியலாம். ஆனபடியினாலே சந்திர சூரியன் முதலான நட்சத்திரங்களுடைய வுயரத் தைக் கண்டுபிடிக்கிறதற்குச் சோதி சாஸ்திரிகள் பண்ணி வித்த எத்தனங்களுக்குள்ளே யோரெத்தனத்தைக் கொண் டு வடக்கேயுண்டான நட்சத்திரங்களுக்கு மத்தியான சக்க ரவளையத்தி னட்சத்திரத்தினுடைய வுயரத்தை நன்று யா ராய்ந்து பார்த்ததற்குப் பிற்பாடு மத்தியான வளையத்திலே 45-ம். பங்கிலேமுன் சொல்லப்பட்ட நட்சத்திர முயரமா யிருக்கிறதென்று விசாரித்துக்கொள். அதின்பிறகு நீ யி ருந்த ஸ்தலத்திலே செவ்வையாய்த் தெற்கேபோ யிரண்டு மூன்று நாள் பயணமாயிருக்கும்போது முன்சொல்லப்பட் ட நட்சத்திர மத்தியான வளையத்திலே யெத்தனையுயரமா யி ருக்கிறதென்று நன்றாய்ப்பார்த்து முன்சொல்லப்பட்ட நட் சத்திரம் 44-ம். பங்கிலே யுயர்ந்திருக்கிறபோது அங்கே நிற் கவேணும். அதின்பிறகு மனதிலே யோசிக்கத் தக்கதாவ து. முந்தமுந்த விந்த நட்சத்திரத்தினுடைய வுயரத்தைப் பார்க்கும்போது 45-ம். பங்கிலே யுயரமா யிருந்ததென்று கண்டோமே. இப்போது 44-ம். பங்கிலே யிந்த நட்சத் திர மிருக்கிறப்போலே யாச்சுதே. ஆனபடியினாலே முன் னிருந்த ஸ்தலத்துக்கு மிப்போதிருக்கிற ஸ்தலத்துக்கும் 360 பங்கிலே யொருபங்கு குறைந்து போச்சுதே. இதெல் லா மிப்படியிருக்கையிலே யவசியமாய்ப் பூமியின் வளையத் திலே 360 திலொருபங்கு நடந்தேன். ஆனபடியினாலே நா

னிப்போ திருக்கிற ஸ்தலத்துக்கு மிதற்கு முன்னேயிருந்த ஸ்தலத்துக்கு மெத்தனை காதவழியுண்டென்று பார்த்து அதுகளெல்லாம் 360 பங்கைக்கொண்டு பெருக்கிக் கண்டதெல்லாம் பூமியினுடைய வளையத்தி னளவாயிருக்கும். பின்னையு முன்னிருந்த ஸ்தலத்துக்குத் தெற்கேபோகாமல் வடக்கேபோனு லிரண்டு மூன்றுநாள் பயணம் நடந்ததற்குப் பிற்பாடு முன் சொல்லப்பட்ட நக்ஷத்திரம் மத்தியான வளையத்திலே கீழேயிறங்காமல் மேலே யொருபங் கேறும். ஆனபடியினாலே தெற்கேபோக யோசித்தாப்போலே வடக்கே யிருந்த ஸ்தலத்துக்கும் யோசிக்கவேணும். ஆனு லுத்தராதி யிராச்சியத்தி லுண்டான வநேகஞ் சாஸ்திரிகள் துற்கை நக்ஷத்திரத்தினுடைய வுயரத்தைப் பார்த்துப் பூமியினுடைய அளவைப்பார்த்தார்கள். இந்தச் சிமையிலே யோவென்றால், முன் சொல்லப்பட்ட நக்ஷத்திரந் தெரிசன சக்கரத்தின்மேலே பதினைன்றைப் பங்கிலேமாத்திர மிருக்கிறதினாலே மிகவு மெச்சரிக்கை யில்லாதிருந்தால் பூமியினுடைய ஆவிகளினிமித்தமாகப் பூமியினுடைய அளவு பிரமாணங்களிலே மோசம்வரும். இந்த நியாயத்தினாலே மத்தியான வளையத்திலே 45 பங்கி லுயரமாயிருக்கிற நக்ஷத்திரத்தைக்கொண்டு பூமியினுடைய அளவைப் பார்க்கச் சொன்னோம். கடைசியிலே யிந்த விஷயத்தி லறியவேண்டினதாவது: நக்ஷத்திரங்களுடைய வுயரத்தைப் பார்க்கிறதைப்பார்க்கச் சூரியனுடைய வுயரத்தைக்கொண்டு பூமியினுடைய வளையத்தை யளந்துபார்க்கலாம். ஆனு லநேகங் காரியங்க ளறியவேண்டியிருக்கிறது. அதெப்படியென்றால், சமசக்கரத்திலே தினந்தின மெத்தனை தூரமாய்ப் போமென் றறியவேணும். இப்படிப்பட்ட வேற்றுமையைப் பார்த்துச் சூரியனுடைய வுயரத்தைச் செவ்வையாய்ச் சொல்லலாம். கடைசியிலே யறியவேண்டினதாவது: உத்தராதி ராச்சியத்தி லுண்டாயிருக்கிற விராசாக்கள் மெய்யான கீர்த்தி தங்களுக்கு வரத்தக்கதாகச் சாஸ்திரிகள் மேலே பக்ஷமாயிருந்து சோதிசாஸ்திரிகளுக்கடுத்த விலையேறப்பெற்ற வெத்தனங்களைச் சம்பாதித்து இப்படிப்பட்ட வெத்தனங்களைக்கொண் டொருஸ்தலத்திலே யொரு நக்ஷத்திரத்தினுடைய வுயரத்தைப்பார்த் ததின்பிறகு செவ்வையாய் வடக்கே நடந்து 360 பங்கிலே யொருபங்கு வேற்று

மை காணமட்டும் நக்ஷத்திரங்களுடைய வுயரத்தைப் பார்த் தார்கள். அதின்பிறகு முன்னிருந்த ஸ்தலத்திற்கும் பிற கிருந்த ஸ்தலத்துக்கும் நடுவிலேயிருக்கிற பூமியை யளந்து பார்க்கும்போது 28 காதவழி கண்டுது. ஆனபடியினாலே பூமியினுடைய வளையத்தின் 360 பங்குக்குள்ளே யொருபங் கில் 22 காதவழி கண்டுது. ஆனபடியினாலே 360 விசை 22 காதவழி பூமியினுடையய வளையம் ஆனபடியினாலே 7,920 காதவழி பூமியினுடைய வளையத்தி னிதானமாகையால் பூ மியினுடைய வளையத்தி னளவு பிரமாணத்தைச் சுமுத்தி ரையாக வொப்புவித்ததற்குப் பிற்பாடு பூமியினுடைய அளவு பிரமாண சாஸ்திரமென்கிறபேர் நியாயத்தின்படியே யுண்டாச்சுது. இப்போதைக்குப் பூமியினுடைய மையக் கம்பியையுந் தாக்குப்போலே வட்டரூபமாயிருக்கிற பூமியி னுடைய புறத்திப் பக்கங்களையு மதினுடைய விசேஷங்களையு மெளிதா யொப்புவிக்கலாம். அதெப்படியென்றால், பூமியி னுடைய மையக்கம்பி 2,520 காதவழி யுண்டென்று சொன் னோமே. இது சுமுத்திரையாக மெய்யான மையக்கம்பியா யிருக்கிறதென் றொப்புவிக்கத் தக்கதாக வளையசாஸ்திரத் திலே யறியவேண்டினதாவது: மையக்கம்பியை மூந்தமூந் த மூன்றுவிசை பெருக்கவேணும். இரண்டாவது: மையக் கம்பியை யேழாய்ப் பிரித்து ஏழுபங்கி லொருபங்கை யெ டுத்து மூன்றுக்குப் பெருக்கி மையக் கம்பிக்குக் கூட்டினா லிதுகளெல்லாம் வளையஞ் சரியாயிருக்கும். இந்தப்பிரகார மாகப் பூமியினுடைய மையக் கம்பியாகிற 2,520 மூன்றுக் குப் பெருக்கினால் 7,560 காணும். பின்னையு முன் சொல் லப்பட்ட மையக்கம்பியை யேழாய்ப் பிரித்துப்போட் டால் ஒவ்வொரு பங்கு 360 காதமாம். இப்படிப்பட்ட 360 காதம் முன்கண்ட 7,560 காதமுங் கூட்டினால் அப்போது 7,920 காதங்காணும். ஆனபடியினாலே நாமுன் சொன்னாப் போலே பூமியினுடைய மெய்யான மையக்கம்பி 2,520 காத வழி யுண்டானா லிந்த மையக்கம்பிக்குப் பாதியாகிற கதி ருக்கு 1,260 காதவழியிருக்கும். ஆனபடியினாலே பூமியி லிருந்து செவ்வே மையத்துக்கு 1,260 காதவழியானபடியி னாலே பூமிமேலே யிருந்து அடிவாரத்துக்கு 1,260 காதவழி காணும். இதற்கப்பா லறியவேண்டினதாவது: தாக்கு வட் டரூபமாயிருக்கிற பூமியினுடைய மேற் பக்கமெல்லாம்

1,99,58,400 கோடியே தொண்ணூற்றொன்பது லக்ஷத்தி ஐம்பத்தெண்ணுயிரத்தி நானூறு காதவழியென்று சொன்னோமே. பின்னையும் பூமியை யிரண்டாய்ப் பிளந்து மேற்பவனியிலே 49,89,600 நாற்பத் தொன்பதிலக்ஷத்தி யெண்பத்தொன்பதினுயிரத்தி அறுநூறு காதவழியுண்டென்று சொன்னோமே. இதெல்லா மொப்புவிக்கத்தக்கதாக வளையத்தினுடைய சாஸ்திரத்தின்படியே யொன்றை யிரண்டாய்ப் பிளந்து மேற்பவனியிலே யுண்டானதெல்லாம நாலுக்குப் பெருக்கி யதிலே கண்டது வட்டரூபமாயிருக்கிற பூமியினுடைய மேற் பக்கமெல்லாங் காணும். இந்தப் பிரகாரமாகப் பூமியினுடைய பாதியின் மேற்பவனியிலே 49,89,600 நாற்பத்தொன்பதி லக்ஷத்தி யெண்பத்தொன்பதினுயிரத்தி யறுநூறு. நாலுக்குப் பெருக்கி முன் பக்கமெல்லாம் 1,99,58,400 கோடியே. தொண்ணூற்றொன்பதி லக்ஷத்தி அன்பத்தெண்ணுயிரத்தி நானூறு காதவழி காணும். பினனையும் பூமியைப் பிளந்து முன்பவனியிலே யிருக்கிற அளவு சரியாயிருக்கிறதோ வில்லையோவென்றொப்புவிக்கிறதற்குச் சாஸ்திரத்தின்படியே யுண்டையினுடைய மையக்கம்பியின் பாதியைக்கொண்டு உண்டையினுடைய வளையத்தின் பாதியைப் பெருக்கினு லப்போது வுண்டையிரண்டாய்ப் பிளந்து மேற்பவனியிலே யுண்டானதெல்லாங் காண்பிக்கும். ஆனபடியினாலே பூமியினுடைய வளையத்தை யிரண்டாய்ப் பிளக்கவேணும். அப்போது பூமி வளையமாகிற 7,920 காதவழியை யிரண்டாய்ப் பிரித்துப் போட்டா லொருபங்கிலே 3,960 காதவழிகாணும். இப்படிப்பட்ட 3,960 காதவழியைப் பூமியினுடைய மையக்கம்பியின் பாதியாகிற 1,260 காதவழியைக்கொண்டு பெருககினு லப்போது பூமி யிரண்டாய்ப் பிளந்து முன் பவனியிலே 49,89,600 நாற்பத் தொன்பதி லக்ஷத்தி யெண்பத்தொன்பதினுயிரத்தி யறுநூறு காதவழி. கடைசியிலே பூமியெல்லா முன் பக்கமுமுள்ளேயும் புறத்தியிலேயு மெல்லாமாக 838,25,28,000 எண்ணூற்று முப்பத்தெட்டுகோடியே யிருபத்தைந்து லக்ஷத் திருபத்தெண்ணுயிரங் காதவழி யுண்டென்று சொன்னோமே. இப்படிப்பட்ட விசேஷத்தை யொப்புவிக்கத் தக்கதாகச் சாஸ்திரத்தின்படியே யறியவேண்டினதாவது: உண்டையினுடைய மேற்பக்கமெல்லா

மூன்றுகப் பிரித்து இப்படிப்பட்ட மூன்று பங்கி லொரு பங்கை யுண்டையினுடைய மையக் கம்பியைக்கொண்டு பெருக்கினு லப்போது உண்டையின் புறத்தியிலேயு முள்ளேயு முண்டானதெல்லாங் காணும். இந்தப்பிரகாரமாகப் பூமியினுடைய புறத்தியிலே யுண்டானதெல்லாம் 1,99,58,400 கோடியே தொண்ணூற்றென்பது லட்சத்தி அன்பத்தெண்ணாயிரத்தி நானூறு என்று சொன்னேமே. யதுகளையெல்லா மூன்றாய்ப் பிரித்துப்போட்டால் மூன்றிலொருபங்கு 66,52,800 அறுபத்தாறு லட்சத்தி அன்பத்திரண்டாயிரத்தி யெண்ணூறு காதவழி காணும். இப்படிப்பட்ட 66,52,800 அறுபத்தாறு லட்சத்தி அன்பத்திரண்டாயிரத்தி யெண்ணூறு காதவழியைப் பூமியினுடைய மையக்கம்பியின் பாதியாகிற 1,260 காதவழியைக்கொண்டு பெருக்கினு லப்போது பூமியின் புறத்தியிலேயு முள்ளேயு முண்டானதெல்லாம் 838,25,28,000 எண்ணூற்று முப்பத்தெட்டுகோடியே யிருபத்தைந்து லட்சத்தி யிருபத்தெண்ணாயிரங் காதவழி காணும். ஆனபடியினுலே பூமியினளவு பிரமாணத்தைச் சாஸ்திரத்தின்படியே யொப்புவித்தாப்போலேயாச்சுது. இற்றைவரைக்கும் வளையத்தையு முண்டையையு மளந்து பார்க்கிறதற்குச் சொன்ன நிதானத்துக்கு மேலான காரணங்களை யிங்கே சொல்லாதிருந்தாலும் பூமியினுடைய பிரமாணத்திலே நாம் சொன்ன நிதானத்தைச் சகலமான வுண்டைகளிலேயும் வளையங்களிலேயுங் கண்களுக்கு முதலாய்த் திருஷ்டாந்தமாக வொப்புவிக்கலாம்.

இவைகளெல்லா மிப்படியிருக்க இந்தச் சீமைகளிலே யுண்டான புராணங்க ளுலக சக்கரம், கணக்கதிகார முதலான புஸ்தகங்களிலே யநேகந் தப்பறைகளுண்டென் றெளிதா யொப்புவிக்கலாம். அதெப்படியென்றால், போன அதிகாரங்களிலே பூலோகத்தினுடைய அளவு பிரமாணத்தைச் சாஸ்திரத்தின்படியே கெட்டியுள்ள நியாயங்களினுலே யொப்புவித்தாயிற்று. ஆனபடியினுலே நாம் சொனனவைகளுக்கு விரோதமாக யாதாமொருவன் வேறே விசேஷங்களைச்சொல்லுவானுகி லவசியமாயவன் பொய்யனென்பதற்குச் சந்தேகமில்லை. இவைகளெல்லா மிப்படியிருக்க இந்தச் சீமையிலே யுண்டான புராணங்க ளுலக சக்கரங்

க்ள் கணக்கதிகாரங்கள் முதலான புஸ்தகங்களிலே லோகஞ் சதிரமா யிருக்கிறதென்றும், நிகளமா யிருக்கிறதென்றும், இந்தப் பூமிக்குள்ளே கலந்திருக்கிற கடலநேகம் யோசனை யகலமென்றும், சில தீவுக ளநேகம் லக்ஷகாத நிகளமா யிருக்கிறதென்றும், சில கோட்டைகள் முதலா யநேக லக்ஷம் யோசனை யகலமும் நிகளமுமா யிருக்கிறதென்றும், இது முதலான அபத்தமான விசேஷங்களைச் சொல்லியிருக்கின்றமையால் அவைகளை யெல்லாஞ் சொன்னவர்கள் ஒன்றிற் கினவிஞலாவது ஒன்றில் பரியாசத்திஞலேயாவது இவைகளையெல்லாம் விதித்தார்களென்று அவசியமாய்ச் சொல்லவேண்டி யிருக்கின்றது. இதெல்லா மதிகமாய் விளங்கத் தக்கதாகப் பற்பல புஸ்தகங்களிலே சொல்லியிருக்கிற சில விசேஷங்களைச் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால், இது நாவலன் பெருந்தீவு. இனிச் சமுத்திர அளவு வருமாறு. முதற்கடல உப்புச் சமுத்திரம். இதின் நிகளம் 48,00,000 நாற்பத்தெட்டு லக்ஷம் யோசனைதுாரம். இதின் குறுக்கு 1,00,000 லக்ஷம் யோசனை துாரம். இதற்குப்பெயர் சம்புத்தீவு. இதற்கப்புறங் கருப்பஞ்சாற்றுக்கடல. இது 2,00,000 இரண்டுலக்ஷம் யோசனையகலம். இதற்குப்பெயர் சனமலித்தீவு. இதற்கப்புறம்,மதுச் சமுத்திரம். இது 4,00,000 நாலுலக்ஷம் யோசனையகலம். இதற்குப்பெயர் பிலசத்தீவு இதற்கப்புறம், தயிர்சமுத்திரம். இது 8,00,000 எட்டு லக்ஷம் யோசனை யகலம். இதற்குப் பெயர் குழசத்தீவு. இதற்கப்புறம், மகா விஷ்ணு பள்ளிகொண்டிருக்கிற திருப்பாற்கடல். இது 32,00,000 முப்பத்திரண்டு லட்சம் யோசனை யகலம். இதற்குப்பேர் சகரத்தீவு. இதற்கப்புறம், நெய்ச் சமுத்திரம் சுத்தசலம் இது 2,00,000 இரண்டு லட்சம் யோசனை. இதற்கப்புறம், அப்புச் சமுத்திரம். 44,00,000 நாற்பத்துநாலு லட்சம் யோசனை யகலம். இது புட்காச்சுத்தீவு. இந்தச் சமுத்திர மேழுக்கு மப்புறம். சக்கிரவாளகிரிக் கோட்டை. இதற்குக்குக் குறுக்கு விட்டச் சமுத்திரமளவு 2,54 00,000 இரண்டுகோடியே ஐம்பத்துநாலு லட்சம் யோசனை. சமுத்திரவெளி நடுத்தீவளவு 1,57,00.000 கோடியே ஐம்பத்தேழுலட்சம் யோசனை. ஆக கிழக்கு மேற்குக்கண்டது 3,80,00,000 மூன்றுகோடியே எண்பது லட்சம் யோசனை

தூரமென்றுஞ், கோட்டைக்குச் சுத்தளவு 10,00,43,000 பத்து கோடியே நாற்பத்து மூவாயிரம் யோசனை தூர மென்றுஞ் சொல்லுவதுந்தவிர இதற்குமேற்பட்ட விசே ஷங்களு மந்தந்தப் பிரபந்தங்களிலே சொல்லியிருக்கிற து. ஆனபடியினலே அந்தப் பிரபந்தங்கள் முதலான புஸ்தகங்களெல்லாந் தப்பறைகளினலே நிறைந்திருக்கின் றதென்பதற்குச் சந்தேகமில்லை. அதெப்படியென்றால், இப்படிப்பட்ட விசேஷங்களை மெய்யான சாஸ்திரத்தின் படியே யறிவித் திருந்தா லிந்த விசேஷங்களுக் கெல் லாந் தகுந்த காரணங்களையும் நியாயங்களையுஞ் சொல்லிக் காட்டி யிருக்கவேண்டியது. நாமோவெனில், இந்தப் பூ லோகத்தினுடைய அளவு பிரமாணத்தைச் சொல்லும்போ து யாவரும் நம்பத்தக்கன பிரகாரத்துக்குக் கெட்டியுள் ள நியாயங்களையுங் காரணங்களையுந் திருஷ்டாந்தரங்க ளையும் வெளிப்படுத்தினேம். மேலும் நாமெழுதின லோ கத்தினுடைய அளவு பிரமாணத்தை ஸ்திரமான நியாயங்க ளினலே யொப்புவித்ததுமல்லாம லிந்தப் பூலோகத்திலே யங்கங்கே திரிகிற வெண்ணப்படாத சனங்களும் பிரத்திய க்ஷமாய்க் கண்ணலே பார்க்கிறார்கள். ஆன லிந்தச் சீமை யிலுள்ள பிரபந்தங்களிலே யெழுதியிருக்கிற பூலோகத்தி னுடைய பிரமாண விஷயங்களை இதுவரையி லொருவருங் கண்டதுமில்லை. இனி காணப்போகிறதுமில்லை. ஆகை யா லிந்தச் சீமையி லிருக்கிற சனங்கள் வணங்குகிற தே வர்களே முன்சொல்லப்பட்ட விசேஷங்களை வெளிப்படுத் தி யிருக்கவேண்டியதென்று யாதொருவன் சொல்வானு கில் அவன் தன்னையல்ல தனது தேவர்களையே தப்பறைக் காரரென்று காண்பிக்கிறன். அதெப்படியென்றால், மெய் யான சாஸ்திரத்துக்கு விரோதமான காரியங்களை யாதொ ருவன் சொன்ன லவசியமாய்ப் பித்தலாட்டக்காரனென்ப திற் சந்தேகமில்லை. மேலும் முன் சொல்லப்பட்ட வபத்தங் களை யிந்தப் பூலோகத்திலிருக்கிற சனங்கள் தானே சொ ன்னர்களென்று சாதிப்பவனும் கெட்டியுள்ள நியாயங்களி னலே தப்பறைக்காரனு யிருக்கிறனென ருெப்புவிக்கலாம். அதெப்படியென்றல, இத்தனைகோடி காதவழி தூரமா யி ருக்கிற தீவுகளையுஞ் சமுத்திரங்களையும் கோட்டைகளையும் பார்க்கிறதற்கு லட்ச வருஷத்துக் கதிகமாய்ச் செல்லும்ப

டியாயிருக்க இப்படிப்பட்ட வபத்தங்களைச் சொல்லுகிறது பரிபூரண தப்பறையா யிருக்கிறதென்பதற்குச் சந்தேக மென்ன? இதல்லாமல் தயிர்ச் சமுத்திரத்துக்குள்ளே நடக்கிறதெப்படி? இப்படிப்பட்ட விசேஷங்களை வற்னிக்கிறதிலே பரியாசம்பண்ண மனதுண்டானல் பரமண்டலத்துக்கும், பூமிக்கு மொன்ருய்ப் பரியாசம் பண்ணலாமே. இதல்லாம லிந்தச் சீமைகளிலே சமுத்திரத்தினுடைய நிகளத்துக் களவில்லையென்றும், வடசமுத்திரங் காணவில்லையென்றும் எல்லாருஞ் சொல்லுகிறுர்கள். இப்படிப்பட்ட விசேஷத்தை முகிலைக் கேட்டா லிதற்கான பிரத்தியுத்தாரஞ் சொல்லுவார்கள். அவ்வண்ணமே வடக்கேயுண்டான சமுத்திரத்தினுடைய முடிவிலே முகிலொன்கிற சனங்க ளிராச்சியபாரம் பண்ணுகிறுர்கள். இதைக் கண்ணாலே பார்க்க மனதுண்டானல் நல்லகாற்றடிக்கிறபோது கப்பலின்மேலேறி வடக்கேபோனு லொரு மாதத்துக்குள்ளே வட சமுத்திரத்தின் முடிவைப் பிரத்தியட்சமாய்க் காணலாம். இதெல்லா மிப்படி யிருக்கையிலே சமுத்திர வழியி லொருமாத தூரமாயிருக்கிற சீமையைக் காணமாட்டாதவர்களும் இப்படிப்பட்ட சீமை யில்லையென்றுஞ் சமுத்திரத்துக்கு முடிவில்லையென்றுஞ் சொல்லுகிறவர்களும் மேற்கேயிருந்து கிழக்கேபோனலை, பாற்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், மதுக்கடல், சக்கரவாளகிரிக்கோட்டை யென்னும் இது முதலான ஸ்தலங்களுண்டென்றும், அவைகள் அநேகங்கோடி காதவழியென்றும் எப்படி கண்டுபிடித்தார்கள்? இப்படிப்பட்ட வபத்தங்களை யாக்ஷேபிக்கிறதற்கு வேறே யநேகங் கெட்டியுள்ள நியாயங்களுண்டாயிருந்தாலும் இதுவரைக்கும் நாம் சொல்லிக்காட்டினதே போரும்.

இப்போது சந்திர சூரியன் முதலான கிரகங்களுக்குண்டான வாச்சரியமான விசேஷங்களை யிங்கே சொல்லிக்காட்டவேணுமாகில் அதற்காக விஸ்தீரணமான பிரபந்தங்களை யெழுதவேண்டியிருக்கும். ஆனல் நாமிதிலே பூலோகத்தினுடைய அளவு பிரமாணத்தை மாத்திரம் வெளிப்படுத்த தாற்பரியமா யிருந்தமையா லவைகளைச் சரியானபடியே வெளியாக்கினேம். ஆகிலும் சந்திர சூரியன் முத

லான நக்ஷத்திரங்களுடைய அளவு பிரமாணங்களைக் கெட்டியுள்ள சில நியாயங்களினாலே மாத்திரம் ஒப்புவிப்போம். ஆகையால் இந்தச் சீமையிலே வழங்குகிற பூர்விக சாஸ்திர புஸ்தகங்களிலே யுண்டானவைக ளெல்லாம் அபத்தமான விசேஷங்களென்று வெளியாகின்றது. ஆனாலிதெல்லாம் நன்றாய்க் கண்டுபிடிக்கிறதற்குச் சாஸ்திர மறியாதவர்களுக்கு மிகவு மருமையா யிருந்தாலும் புத்திகூர்மையுள்ளவர்க ளெவ்வளவாகிலுங் கிரகிப்பார்களென்று நம்புகிறோம். அதெப்படியென்றால், முக்கோணலைச் சாஸ்திரத்தின்படியே யறியவேண்டினதாவது, செவ்வே கீற்றுள்ள முக்கோணவிட்டத்திலே மூன்றுபக்கமு மூன்றுமூலையுமுண்டென்று பிரசித்தமா யிருக்கிறதே. ஆனாலிப்படிப்

க



பட்ட இம்மூன்று மூலைகளுக் குள்ளேயும் மூன்று பக்கங்களுக்குள்ளேயு மூன்று விசேஷங்களுடைய சாஸ்திரங்களை யறிந்திருந்தால் வேறே விசேஷங்களைச் சொல்லிக் காட்டலாம். அதெப்படியென்றால், முக்கோண விட்டத்திலே யொருபக்கமு மிரண்டுமூலையும் ஒன்றி லிரண்டுபக்கமு மொரு மூலையு மறிந்திருந்தால் வேறே மூலைகளையும் வேறே பக்கங்களையுஞ் சாஸ்திரத்தின்படியே கண்டுபிடிக்கலாம். இந்தப் பிரகாரமாக மூன்றுங்கோட்டிலே - க - இருக்கிற மூலையும் - ங - ச - பக்கமும் - க-ங-பக்கமு மறிந்திருந்தாலிப்படிப்பட்ட முக்கோண விட்டத்திலுண்டான வேறே பக்கத்தையும் வேறே யிரண்டு மூலைகளையு மறியலாம். இந்தப் பிரகாரமாக மற்றப் பக்கங்களிலேயு மற்ற மூலைகளிலேயும் யோசிக்கலாம். இப்படிப்பட்ட மெய்யான விசேஷமானது முக்கோணற் சாஸ்திரத்திலே தப்பில்லாத நியாயத்தினாலே யொப்புவிக்கப்பட்டதா யிருக்கிறதுமல்லாமற் சாஸ்திரமறியாதவர்களுக்கு முதலாய்ச் சகலமான கோணல்களிலே காண்பிக்கலாம். இந்த அஸ்திவாரத்தைக் கண்டறிந்தவர்கள் பரம சூக்ஷாபிப்பிராயத்திலே நாம் வெளிப்படுத்துகிற பரமண்டலங்களுடைய சக்கரங்களை யெவ்வளவாகிலு மறியலாம்.

சந்திரனுடைய அளவுப் பிரமாணத்தை மாத்திரஞ் சொல்லிக் காட்டுவோம். சந்திரனானது வடபக்கத்திலே யா

ஞனுந் தென்பக்கத்திலே யென்கிலுஞ் சாய்ந்திருக்கும்போது மத்தியான சக்கரத்திலே செவ்வே வந்திருக்கிறதென்று விசாரித்துக்கொள். அப்போது சாஸ்திர வெத்தனத்தைக் கொண்டு தெரிசன சக்க்ரத்தின்மேலே யேறின சந்திரனுடைய வுயரத்தைப் பார்த்ததற்குப் பிற்பாடு சந்திரனிருக்கிற ஸ்தலத்துக்குந் தலைமேலே யிருக்கிற வுயரத்துக்கு மெத்தனை படி யுண்டென்றறியலாம். ஆனல் பூமிமேலே யிருக்கிறவன் சந்திரனைப் பார்க்கும்போது சந்திரனிருக்கிற மெய்யான ஸ்தலத்தைப் பாராமற் சந்திரனைத் தாழ்த்தினதினலே யப்போது சந்திரனுடைய அகலத்தி னயநத்திலே சமசக்கரத்துக் கெம்மாத்திர முண்டென் றறியலாம். அப்போது சந்திரன் சுபாவமாயிருக்கிற ஸ்தலத்துக்கும் பூமிமேலே யிருக்கிறவனுக்குக் காண்பிகிற ஸ்தலத்துக்கும் வேற்றுமை காணும். இப்படிப்பட்ட வேற்றுமை முக்கோணவிலே தெரிசன மூலையென்று சொல்லப்படும். இந்தப் பிரகாரமாக முந்தினகோட்டிலே - க - மூலை தெரிசனமூலை. இந்தப்பிரகாரமாக - க - ச - பக்கஞ் சந்திரனுக்கும் பூமிமேலேயிருக்கிறவனுக்குந் தூரத்தைக் காண்பிக்கிறது. க- ஙு- ச-பக்கம் பூமி மையத்துக்குஞ் சந்திரனுக்கு மெத்தனை தூரமென்று காண்பிக்கிறது. ஙு - ச - பக்கம் பூமியினுடைய மையக் கம்பியின் பாதியாகிற கதிரினுடைய வடையாளம். இதற்கப்பா லறியவேண்டினதாவது, சந்திரனனது மத்தியான சக்கரத்துக்கு வந்ததற்குப் பிற்பாடு மேற்கே யிறங்கித் தெரிசன சக்கரத்தின்மேலே வரும்போது தெரிசன சக்கர மெத்த வதிகமாச்சுது. ஆனல் சந்திரனுடைய வளையத்தின் மையம் பூமியினுடைய மையத்துக்கு வேற்றுமையா யிருக்கிறதினலே சில சமயங்களிலே சந்திரனனது பூமியின் கிட்டவிருக்கும். சில சமயங்களிலே தூரமாயிருக்குமென் றறிவாயாக. அப்படிப்பட்ட வேற்றுமை கண்டுபிடிக்கிற வகையேதென்றல், சந்திரனனது தன்னுடைய வளையத்தி னுச்சத்திலே யிருக்கிறதினலே யப்போ ததினுடைய கம்பி கொஞ்சமாய்க் காண்பிக்கும். கீழ்த்தரமான ஸ்தலத்திலே யிருக்கும்போ ததினுடைய கம்பி பெரியதா யிருக்கும். இதெல்லா மிப்படியிருக்கையிலே சந்திரனனது முன்சொல்லப்பட்ட கீழ்த்தரமான ஸ்தலத்திலே வந்திருக்கும்போது தெரிசன சக்கரத்திலே பட்டுதென்று

விசாரித்துக்கொள். அப்போது சாஸ்திரிகள் தெரிசன மூலை யொருபடியும் ஒரு படியினுடைய ஆறுபங்கு மி ருக்கிறதென்றுஞ் சொல்லுகிறார்கள். இதெல்லாம் ஸ்தா பித்ததற்குப் பிற்பா டிரண்டு கோட்டிலே யுண்டான மு க்கோணலை நன்றாய்ப் பார்த்துக்கொள். இப்படிப்பட்ட முக்கோணலிலே முந்த முந்த - க - என்கிற தெரிசனமூ லையை யறிந்திருக்கிறப்போலே யாச்சுதே - ச - மூலை பிரத் தியக்ஷமா யிருக்கிறது. அவ்வண்ணமே தெரிசன சக் கரத்தின் மேலேயிருந்து பூமியினுடைய கம்பி நுனியி லே விழுகிறது. இந்தப் பூமியினுடைய நுனியோடு கூட நூறுபடியுள்ள மூலைபண்ணும். அவ்வண்ணமே யொரு கீற்று மேலே சாயாமற் செவ்வே விழுகிற வேறே கீற்று முந்தின கீற்றோடுகூடத் தொண்ணூறு படியுள்ள மூலைபண்ணும். பின்னையுங்-ந-மூலை யெளிதாயறியலாம். அதெப்படியென்றால், சகலமான முக்கோணலிலே யுண் டான மூன்று மூலைகளெல்லாங்கூட நூற்றெண்பதுபடி யாகும். ஆனபடியினாலே-க-என்கிற தெரிசன மூலை யொ ருபடியும் ஒரு படியினுடைய ஆறுபங்கு மிருக்கையிலேயும் ச-மூலை தொண்ணூறு படியு மிருக்கையிலேயு மவசியமாய் ந-மூலை யெண்பத்தொன்பது படியும் ஒரு படியினுடைய அன்பத்திநாலு பங்கு மிருக்கும். கடைசியிலே - ச - ந-பக் கம் பூமியினுடைய மையக்கம்பியி னடையாளமா யிருக்கிற தினாலே பூமியினுடைய பிரமாணத்தைச் சாஸ்திரப்படியே யறிந்திருக்கிறோம். ஆனபடியினாலே 'யிரண்டாங் கோட் டிலே மூன்று மூலையும் ஒரு பக்கமு மறிந்திருக்கிறப்போ லே யாச்சுதே. இதெல்லா மிப்படி யிருக்கையிலே முக் கோணற் சாஸ்திரத்தின்படியே சந்திரனுக்கும் பூமிமேலே யிருக்கிறவனுக்கு மெத்தனை தூரமுண்டென்று க - ச - பக்கத்தைக் கொண்டறியலாம். அதெப்படி யென்றால், ஒருபடியும் ஒரு படியினுடைய வாறு பங்குமுள்ள தெரி சன மூலையானது பூமியின் மையக் கம்பியினுடைய பாதி யாகிற-ந-ச-பக்கத்துக்குச் சமானமா யிருக்குமாப்போலே யெண்பத்தொன்பது படியும் ஒரு படியினுடைய அன்பத் து நாலு பங்குள்ள-ந-என்கிற மூலையினுடைய கதிரானது சந்திரனுக்கும் பூமிமேலே யிருக்கிறவனுக்கு மெத்தனை தூரமுண்டென்று அடையாளமா யிருக்கிற-க - ச - பக்கத்

துக்குச் சமானமா யிருக்கும். அப்போது க - ச - பக்கத்துக்குப் பூமியினுடைய மையக்கம்பியின் பாதி ஐம்பத்திரண்டு பிறக்கும். ஆனபடியினாலே பூமி மையக்கம்பியின்பாதி 1,260 காதவழி யிருக்கும்போ திப்படிப்பட்ட காதத்தை ஐம்பத்திரண்டைக்கொண்டு பெருக்கினால் 65,520 காதவழிபிறக்கும். ஆகையால் அவ்வளவு தூரமுண்டென்று சொல்லவேண்டி யிருக்கிறது. சந்திரனோவென்றால் வளையத்தினுடைய வுச்சத்தி லிருக்கும்போது தெரிசன சக்கரத்தின்மேலே பட்டாலப்போது தெரிசனமூலை யொருபடியினுடைய ஐம்பத்திரண்டுபங்கு மாத்திர மிருக்கிறபடியினாலேயப்போது சந்திரனுக்கும் பூமியினுடைய மையக்கம்பியின்பாதிக்கும் 66 படிபிறக்கும். ஆனபடியினாலே:—

| | |
|---|---|
| பூமிக்குஞ் சந்திரனுக்கும் … … … … | 83,160 |
| ,, சூரிய சக்க்ரத்தின் மேற்பக்கத்துக்கும் … | 95,60,800 |
| ,, புதன்சக்கரத்தின் மேற்பக்கத்துக்கும் … | 1,36,93,680 |
| ,, வெள்ளிசக்கரத்தின் மேற்பக்கத்துக்கும் … | 1,62,77,940 |
| ,, செவ்வாய் சக்கரத்தின் மேற்பக்கத்துக்கும் | 2,64,66,300 |
| ,, வியாழத்தின் மேற்பக்கத்துக்கும் … … | 5,99,15,520 |
| ,, சனியின் மேற்பக்கத்துக்கும் … … | 11,35,95,300 |
| ,, சூரியனுக்கும் … … … … … | 90,00,000 |
| ,, நக்ஷத்திரமண்டலத்துக்கும் … … | 25,20,00,000 |
| பூமியின் சுற்றளவு … … … … | 7,920 |
| பூமியின் மையக்கம்பி … … … … | 2,520 |
| பூமியின் புறத்திப்பக்கமெல்லாம் … … | 1,99,58,400 |
| பூமியைப் பிளந்தால் மேற்பக்கத்திலே… … | 49,89,600 |
| பூமியுள்ளேயும் புறத்திலேயும் எல்லாஅளவும் | 838,25,28,000 |

உலகப்பிரமாண சாஸ்திரம் முற்றிற்று.

# பரம சூக்ஷாபிப்பிராயம்.

சாஸ்திரத்தின்படியே இதின்கடைசியில் வைத்திருக்கிற விந்தச் சோதி சக்கரங்களுக்குப் பரம சூட்சமென்கிற பேரிடுகிறதற்குக் காரணமேதென்றால், பரமண்டலங்களிலேயும் பூமண்டலத்திலேயு முண்டான பரம ரகசியங்களை முன்சொல்லப்பட்ட சக்கரங்க ளாச்சரியமான வொரு ங்கோடே வெளிப்படுகிறதினாலே சாஸ்திரத்தின்படியே வ்கிக்கப்பட்ட விந்தச் சக்கரங்கள் பரம சூட்சமென்று சொல்லப்படும். பின்னையு மனுஷராலே யுண்டாக்கப்படலான வெத்தனங்களுக்குள்ளே இந்தச்சக்கரங்க ளுத்தமமான வெத்தனமா யிருக்கிறதினாலே நியாயத்தின்படியே பரம சூட்சமென்று சொல்லலாம். ஆனா லிந்தப் பரமசூட்சத்தினுடைய பிரயோசனத்தை வெளிப்படுத்துகிறதற்கு முன்னே யந்தச் சக்கரங்களுடைய பேரையும், இப்படிப் பட்ட பேரிடுகிறதற்குக் காரணத்தையுஞ் சங்க்ஷேபமாகச் சொல்லிக்காட்டுவோம்.

முந்தமுந்த விந்தப் பரம சூட்சத்திலே முந்தின சக்கரமானது தரிசன சக்கரமென்று சொல்லப்படும். இதற்குக் காரணமேதென்றால்: மனுஷனானவன் றன்னைச் சுற்றிக்கொண் டிருக்கிற பரமண்டலங்களைப் பார்க்கிறபோது அந்த மண்டலங்க ளெல்லா முடிவிலே யொரு வட்டத்தைப்போலே கண்களுக்குக் காண்பிக்கிறதினாலே யதுகளுக் கடையாளமாக வைத்திருக்கிறது தரிசன சக்கரமென்று சொல்லவேண்டி யிருக்கிறது. இரண்டாஞ் சக்கரமானது மத்தியான சக்கரமென்று சொல்லப்படும். அதெப்படி யென்றால்: சூரியனானது இந்தச் சக்கரத்துக்கு வந்திருக்கும்போது மத்தியானமா யிருக்கும். பின்னையுஞ் சகலமான நட்சத்திரங்களுடைய அயநத்தின் மத்தியானத்தை இந்தச்சக்கரங் காண்பிக்கிறதினாலே இந்தச் சக்கரத்துக்கு மத்தியான சக்கரமென்று பேருண்டாச்சுது. மூன்றாஞ் சக்கரமாவது சமசக்கரமென்று சொல்லப்படும். இதற்குக் காரணமேதென்றால்: சூரியனானது இந்தச் சக்கரத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறபோது சர்வலோகத்திலே இராவும் பகலுஞ் சரியாயிருக்கிறது. நாலாஞ் சக்கரமாவது இராசி சக்கரமென்று சொல்லப்படும். இதற்கு நியாயமேதென்றால்: இந்தச் சக்கரத்திலே பன்னிரண்டு இராசி சுரூபங்களுமிருக்கிறதினாலே இராசிச் சக்

கரமென்று சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இதிலே யறிய வேண்டியதாவது: இந்த இராசிச் சக்கரத்தி னடுவிலே கிராண சக்கரமுண்டு இதிலே சந்திர சூரிய கிராணங்கள் வருகிறதினாலே கிராண சக்கரமென்று சொல்லவேண்டியிருக்கிறது. ஐந்தாஞ் சக்கரத்துக்குப் பேரேதென்றால்: சம சக்கரத்தைப் பிரிக்கிற சக்கரமென்று சொல்லுவார்கள். ஆறாஞ் சக்கரமோவென்றால் நிறுத்து சக்கரத்தைப் பிரிக்கிற சக்கரமென்று சொல்லப்படும். இந்த வாறு பெரிய சக்கரங்க ளல்லாமல் நாலு சின்ன சக்கரங்களுண்டென்றறிவாயாக. முந்தின விரண்டு சக்கரங்களுக்குப் பேரேதென்றால் நிறுத்து சக்கரமென்றுந் திருப்பு சக்கரமென்றுஞ் சொல்லுவார்கள். இதற்குக் காரணமேதென்றால்: சூரியனானது அங்கே வந்து சேர்ந்திருக்கும்போது தன்னை நிறுத்தி யப்பாலே போகாமல் தன நயநத்தைத் திருப்புகிறதினாலே இந்த விரண்டு சக்கரங்களும் நிறுத்து சக்கரமென்றுந் திருப்பு சக்கரமென்றுஞ் சொல்லப்படும். வேறே இரண்டு சக்கரங்களுக்குப் பேரேதென்றால்: நுனிச் சக்கரங்களென்று சொல்லுவார்கள். இந்த நுனிச் சக்கரங்க ளிரண்டிலே யொன்று வடபக்கத்திலேயு மற்றொன்று தென்பக்கத்திலேயும் ஸ்தாபித்திருக்கிறது. கடைசியிலே இந்தச் சக்கரங்களடங்கிய உண்டையானது பூமியினுடைய வடையாளமாயிருக்கிறது. இந்தப் பூமியையுஞ் சக்கரங்களையுங் கோர்க்கிற கம்பிக்குப் பேரேதென்றால்: சக்கர நுனிக் கம்பியென்று சொல்லலாம். அதெப்படியென்றால்: இந்தக் கம்பியினுடைய விரண்டு முடிவிலே சக்கரங்களெல்லாம் நுனி யசையாம லசைகிறது. இதுவரைக்குஞ் சங்க்ஷேபமாக வெளிப்படுத்தினோம். இப்போதந்தச் சக்கரங்களிலே யுண்டாகிற பிரயோசனத்தைச் சொல்லிக் காண்பிப்போம்.

முதலாவது.—தரிசன சக்கர மென்று சொன்னோமே. அதினால் வருகிற பிரயோசன மேதென்றால: முதலாவது. இந்தச் சக்கரஞ் சர்வலோகத்தையு மிரண்டாய்ப் பிரிக்கிறது. 2-வது.—மேலான லோகத்தையுங் கீழான லோகத்தையுங் காண்பிக்கிறது. அதிலே காலங்களுடையவர்த்தமான மெல்லா மறியலாம். 3-வது.—காற்றுக்

களுடைய வகையைக் காண்பிக்கிறது. 4-வது.—சந்திர சூரிய நட்சத்திரங்களுடைய வுதயத்தையு மஸ்தமிப்பையுங் காண்பிக்கிறது. 5-வது.—பகலினுடைய நாழிகைகளேயு மிராவினுடைய நாழிகைகளேயு மெந்த நட்சத்திர மெப்போது காணப்படுமென்றும் எந்தநட்சத்திர மொருக்காலுங் காணப்படுகிறதில்லையென்று மறியலாம். 6-வது.—சக்கரங்களுடைய வுயரத்தையுஞ் சந்திர சூரிய நட்சத்திரங்களுடைய வுயரத்தையு மறிவிக்கின்றது. 7-வது.—பரம சூக்ஷத்தை ஸ்தாபிக்கிற பற்பல வகைகளேயுங் காண்பிக்கின்றது. 8-வது.—அருணேதயத்தையுஞ் அஸ்தமிப்பையுங் காண்பிக்கின்றது.

மத்தியான சக்கரத்திலே வருகிற பிரயோசன மேதென்றால்: முதலாவது.—பகலுடைய நடுச்சாமத்தையு மெட்டுச் சாமங்களேயுங் காணபிக்கிறது. 2-வது.—சந்திர சூரிய நட்சத்திரங்களுடைய பலத்தையு முயரத்தையும் நிர்க்கமனத்தையு மறியப்பண்ணுகிறது. 3-வது.—அதிலேயுத்தம வுச்சத்துக்குஞ் சகலமான நட்சத்திரங்களுக்கு மெத்தனை தூரமுண்டென்று மறியலாம். 4-வது.—கிழக்கேயு மேற்கேயு மிருக்கிற நட்சத்திரங்களுக் கெத்தனைதூரமென்றறியலாம். 5-வது.—இந்தச் சக்கரத்தின் றுவக்கத்திலே நாட்களை யளந்து பார்க்கிறார்கள். 6-வது.—ஒவ்வொரு ஸ்தலத்துக்குத் துற்கை யென்கிற நட்சத்திர மெத்தனை யுயரமாயிருக்கிறதென் றறியலாம். 7-வது.—இரண்டு பட்டணங்களுக்கு நடுவே யெத்தனை தூரமென் றறிவதுந் தவிர வெநதெந்தப் பட்டணங்கள் கிழக்கே யிருக்கின்றதென்றும் எந்தப்பட்டணங்கள் கிட்ட விருக்கிறதென்று மறியலாம் கடைசியிலே யறியவேண்டியதாவது: எண்ணப்படாத மத்தியான சக்கரங்களுண்டா யிருந்தாலு மதுகளே யெளிதாய்க் கண்டுபிடிக்கிறதற்கு 180 மாத்திர மத்தியான சக்கரங்களென்று சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட மத்தியான சக்கரங்களுக்குள்ளே முந்தின சக்கரத்தை யிருப்புத்தீவிலே யநேகம் பேர்கள் ஸ்தாபித்தார்கள். ஆனபடியினலே யந்தத்தீவுக்குந் திருச்சிராப்பள்ளிக்கு மெத்தனைதூரமுண்டென் றறியலாம் 8-வது.—இந்த மத்தியான சக்கரங்கள் நிமித்தமாகச் சந்திர சூரியக்

கிராணங்க ளெந்தப்பட்டணங்களி லெப்போது துவக்கு மென் றறியலாம்.

இராசி சக்கரத்திலே வருகிற பிரயோசன மேதென்றால்: முந்த முந்த பன்னிரண்டு ராசிகளுடைய ரூபமறியலாம். இப்படிப்பட்ட விராசிகளுக்குப் பேரேதென்றால: மேஷம், ரிஷபம், மிதுனம், கற்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருக்ஷிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம், ஆக விராசி பன்னிரண்டு இதிலாறு முந்தினராசிகள் வடக்கிலுள்ள உத்தரவிராசிகள். வேறேயாறுந் தெக்ஷணவிராசிகள். பின்னையு மதிலே யாறு ஏறுகிற விராசிகள், ஆறு இறங்குகிற விராசிகள். ஏறுகிற விராசிகளுக்குப் பேரேதென்றால: மகரம், கும்பம், மீனம், மேஷம், ரிஷபம், மிதுனம். இறங்குகிற விராசிகளுக்குப்பேரேதென்றால: கற்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருக்ஷிகம், தனுசு, எனறு சொல்லப்படும். அதேதென்றால்: மார்கழி மாத மேறக்குறைய 12 ந்திகதியிற் சூரியன் தெற்கேயிருந்து அயநத்தைத் துவக்கி மகரராசியிலே பிரவேசம் பண்ணி ஆனிமாதம் 12 ந்திகதி மட்டு மேறக்குறைய முன்சொல்லப்பட்ட ஆறு ஏறுகிறவிராசிகளிலே வடக்கு வழியாக வேறுகிறது பின்னையு முன்சொல்லப்பட்ட ஆனிமாதம் 12உ கற்கடக விராசிகளிலே பிரவேசம் பண்ணி மார்கழிமீ 12உ மட்டு மிறங்குகிற விராசிகளிலே யிறங்குகிறது. பின்னையு மப்படிப்பட்ட விராசிகளிலே மெய்யான மிருகங்களுடைய ரூபங்களுண்டென்று விசாரிக்கவேண்டாம். ஆனால் சாஸ்திரிகள் நக்ஷத்திரங்களை நன்றாயறிகிறதற்கு அப்படிப்பட்ட நக்ஷத்திரங்களுடைய வநேகங் கூட்டங்களைத் தொகுத்து ஒவ்வொரு கூட்டத்துக்கு மிருகங்களுடைய பேர்களிட்டு மனதிலே நன்றாய்த் தரிக்கத்தக்கதாக வெவ்வேறு நாமங்களை விதித்தார்கள் அப்படியே ரிஷபமென்கிற விராசியிலே யுண்டான கூட்டத்துக்கு ரிஷபமென்கிற பேரிட்டாப்போலே விருக்ஷமென்றாகிலுந் தேவாலயமென்றாகிலு முப்பரிகையென்றாகிலும் பேரிடலாம் அதேதென்றால் இராசிகளானவைகள் அந்தந்தற் கிடப்பட்ட எந்தரூபத்தையாகிலுங் கொண்டிருக்கவில்லை. இதற்கப்பாலறிய வேண்டினதாவது. அந்தவிராசிகளிலேயும் பற்பலவனேகங் கூட்டங்களிலேயு முச்சிதமான வநேக நக்ஷத்திர முண்டாயிருந்தாலு மிந்தச் சீமையி

லே யிருபத்தேழு நக்ஷத்திரமாத்திரம் பிரதான நக்ஷத்திர மென்று சொல்லுகிறார்கள். அதுகளிலே அசுபதி, பரணி, மேஷ சுருபத்திலே யிருக்கிறது. கார்த்திகை, ரோகணி, மிருகசீரிடம், ரிஷபத்திலே யிருக்கிறது. திருவாதிரை, புநர்பூசம், மிதுனத்திலே யிருக்கிறது. ஆயிலியம், பூசம், கற்கடகத்திலே யிருக்கிறது. மகம், பூரம், உத்திரம், சிங்கத்திலேயிருக்கிறது. அஸ்தம், சித்திரை, கன்னியிலே யிருக்கிறது. சோதி, விசாகம், துலாத்திலே யிருக்கிறது. அனுஷம், கேட்டை, விருச்சிகத்திலே யிருக்கிறது. மூலம், பூராடம், தனுசிலே யிருக்கிறது. உத்திராடம், திருவோணம், அவுட்டம், மகரத்திலே யிருக்கிறது. சதையம், பூரட்டாதி கும்பத்திலே யிருக்கிறது. உத்திரட்டாதி, ரேவதி மீனத்திலே யிருக்கிறது. இதிலே யறிய வேண்டினதாவது ஒவ்வொரு ராசியிலே முப்பதுபடியுண்டென்று சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனாலொவ்வொரு ராசியினுடைய சுருப மந்த முப்பது படிமுழுதும் நிறையாததினாலே கிட்டவிருக்கிற விராசிகளுடைய சில நக்ஷத்திரங்கள் முன்னும் பின்னும் வருகிற தென்று சொல்லுகிறார்கள். இதற்கப்பா லறிய வேண்டினதாவது. இரண்டிராசிச் சக்கரங்களுண்டென்று சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அதிலொன்று காரணப் பரமண்டலத்திலே யிருக்கிறது. ஒன்று நட்சத்திர மண்டலத்திலே யிருக்கிறது. காரணப் பரமண்டலத்திலே யுண்டான விராசிகளுடைய சக்கர மொரு கண்ட சீராயொரு அசைவினாலே கிழக்கேயிருந்து மேற்கேபோய்ச் சுற்றிக்கொண்டு வருகிறது. நட்சத்திர மண்டலத்திலே யுண்டான விராசிகளுடைய சக்கரமோ வென்றால், பற்பல வசைவினாற் சுற்றிக்கொண்டு வருகிறதினாலே வருஷந்தோறு மதிலே வேற்றுமை காண்பிக்கிறது. இது நிமித்தமாகச் சந்திர சூரியன் முதலான கிரகங்களொரு இராசியிலே யிருக்கிறதென்று சொல்லுகிறபோது காரணப் பரமண்டலத்திலே யுண்டான விராசியிலே யிருக்கிறதென்றர்த்தமாகும். பின்னையு மறியவேண்டியதாவது: இந்த விராசிகளுடைய சக்கரம் பன்னிரண்டுபடி யகலமாயிருக்கிறது. இதற்குக் காரணமேதென்றால், ஏழு கிரகங்களிந்தச் சக்கரத்தின்கீழே யசைந்திருக்கிறதினாலே பன்னிரண்டுபடி யப்பாலே போகாமலந்தச் சக்கரத்துக்குப் பன்னி

ரண்டுபடி யகலமாச்சுது. ஆனல் சில சமயங்களிலேசெவ் வாய்க்கிரகமும், வெள்ளிக்கிரகமும் பதினறுபடிமட்டும் போமென்றறிவாயாக. கடைசியிலே இராசிகளுடைய சக் கரத்தி னடுவிலே கிராணங்களுடைய சக்கர முண்டென்று சொன்னேமே. அதெப்படியென்றுற், சூரியனுடைய மத் திய மிந்தச் சக்கரத்திலே யிடைவிடாம லசைந்துக்கொண் டிருக்கிறதினலே யவசியமாய்ப் பூமியினுடைய நிழல் சூரி யனுக் கெதிராகக் காண்பிக்கும் ஆனபடியினலே சந்திர ஞனது இந்தப்பூமி நிழலுக்குள்ளே பிரவேசம் பண்ணும் போது சூரியனலே சந்திரனுக்கு வந்த பிரகாச மறைந்தி ருக்கிறதினலே சந்திர கிராணம்வரும். முழுது மதிலே பிரவேசம் பண்ணினல் முழுக்கிராணமென்று சொல்லப் படும். பாதிமாத்திரம் நிழலிலே யுண்டானல் பாதிக்கிரா ணமென்று சொல்லப்படும். பின்னையும் அமாவாசி கா லத்திலே சந்திரனனது கிராண சக்கரத்திலே யிருக்கிற சூரியனேடு சேர்ந்திருக்கின்றமையாற் சூரியனுடைய பிர காசத்தை மறைக்கிறதினலே சூரியக்கிராணமாம். ஆன ல திலே யறியவேண்டிய பரம விரகசியமாவது: சந்திரனன து தனது அயநத்திலே கிராண சக்கரத்தில் மாதந்தோ றும் பன்னிரண்டுவிசை தொட்டா லப்போது மாதந்தோ றுஞ் சூரிய கிராணமொன்றுஞ் சந்திரக்கிராண மொன்றும் ஆகவிரண்டு கிராண மிருக்கலாம். ஆனல் பற்பல விதமா கச் சந்திரனனது கிராண சக்கரத்தைத் தொடுகிறதினலே சில சமயங்களிலே மாத்திரங் கிராணமுண்டா யிருக்கும். பின்னையுஞ் சந்திர சூரியனுடைய அயநம் பாம்பைப்போ லே யிருக்கிறதினலே இந்தச் சீமையிலே கிராணம் வருகிற சமயத்திலே பாம்புகளினலே வருகிறதென் றறியாமற் சொல்லுகிருர்கள். அப்படிப்பட்ட பாம்புகளுக்கு இராகு, கேது, வென்கிற பெயரையுமிட்டார்கள். வடபக்கத்திலே கிராணம் வந்துதானல் இராகு தொட்டுதென்றும், தெனபக் கத்திலே கிராணம் வந்துதானல் கேது தொட்டுதென்றுஞ் சொல்லுகிருர்கள். இதற்கப்பா லறியவேண்டியதாவது: இ ராசிசக்கரம் பன்னிரண்டு பங்காய்ப் பிரிக்கிறதற்குக் காரண மேதென்றல், சந்திரனனது ஒரு வருஷத்துக்குள்ளே பன் னிரண்டுவிசை சூரியனேடு சேர்ந்திருக்கிறதினலே பன்னி ரண்டு பங்காய்ப் பிரித்தார்கள். பின்னையும் பன்னிரண்


டிராசியிலே யொவ்வொரு புறியத்துக் குண்டான புணைங்கள் மூன்றும் மூன்றிராசிகளுக் குண்டென்று சொல்லுகிறார்கள். பின்னையு முன் சொல்லப்பட்ட பன்னிரண்டிராசிகளும். ஏழு கிரகங்களுக்கு வீடுகளா யிருக்கிறது. இதிலே யறிய வேண்டியதாவது: சந்திர சூரியனலலாமல மற்று முண்டான கிரகங்களுக்கிரண்டு வீடென் றறிவாயாக: அதெப்படியென்றால், சிங்கமானது சூரியனுடைய வீடு, கற்கடகஞ் சந்திரனுடைய வீடு, கன்னியு மிதுனமும் புதனுடைய வீடு, துலாமும் ரிஷபமும் வெள்ளியினுடைய வீடு, விருச்சிகமு மீனமும் வியாழத்தினுடைய வீடு, மகரமுங் கும்பமுஞ் சனியினுடைய வீடு, ஆறு மிப்படிப்பட்ட கிரகங்களுக்கு இரண்டு வீடுண்டாயிருந்தாலு முந்தின வீட்டிலே பிரதானபலன். அதென்னவென்றால் குளிருஷ்டணை முதலான குணங்களை யுண்டாக்கிறதற்குக் கிரகங்களுக்குப் பல முண்டா யிருக்கிறதினாலே அந்தந்த விராசியங்களிலே பற்பல விரோதமான விசேஷங்கள் முன்சொல்லப்பட்ட கிரகங்களுடைய குணங்களா லுண்டாகின்றது. இராசிகளுடைய சக்கரத்திலே பன்னிரண்டிராசி யுண்டென்று சொன்னோமே. ஒவ்வொரு இராசியிலே முப்பதுபடி களுண்டாயிருப்பதினாலே இராசி சக்கரத்திலே முந்நூற்றறுபது பங்குகளாகும் முந்தின பிரிவிலே 21,600 பங்கு இரண்டாம் பிரிவிலே 12,90,000 பன்னிரண்டிலக்ஷத்துத் தொண்ணூறாயிரம் பங்கு. மூன்றாம் பிரிவிலே 7,77,60,000 ஏழுகோடியே எழுபத்தேழு லக்ஷத் தறுபதினாயிரம் பங்கு. அப்படிப்போகப்போக இடைவிடாமற் பிரிக்கலாம் இப்படிப்பட்ட விராசிகளுடைய சக்கரந்தனது வளையத்திலே முழுதுஞ் சூரியனைச் சுற்றுகிறதற்கு முன்னூற் றறுபத்தைந்து நாளும் பெரிய நாழிகையிலேயைந்து முந்தின பிரிவிலே 48 பங்கும், இரண்டாம் பிரிவிலே 20 பங்கும், ஒவ்வொரு நாளையிலே பூமியானது முழுதுமொருபடி நடவாமல் முந்தின பிரிவிலே 59 பங்கும், இரண்டாம் பிரிவிலே 8 பங்கும், மூன்றாம் பிரிவிலே 19 பங்கும், நாலாம் பிரிவிலே 37 பங்கும், நடக்கிறது. கடைசியிலே யிந்த விராசிகளுடைய சக்கர மற்றுண்டான சக்கரங்களைப்போலே செவ்வே யிராமல் சாய்ந்திருக்கிறதினாலே தினந்தினஞ் சூரியனுக்கு வெவ்வேறே யுதயமும் வெவ்வே

றே அஸ்தமிப்பு முண்டாகிறது. இந்தக் காரணத்தினாலேதானே பற்பல காலங்களுடைய வர்த்தமானமெல்லாம் வெளிப்படுத்தலாம். கடைசியிலே யிந்தப் பன்னிரண்டி ராசியிலே பூமியானது எப்போது பிரவேசம் பண்ணுகிறதென் றறியவேண்டி யிருந்தால், வருஷந்தோறுஞ் சில வேற்றுமை யிருக்கிறதினாலே யேறக்குறைய மாத்திரஞ் சொல்லலாம். அதெப்படியென்றால், பெயரிட்டதிருநாள் அல்லது ஜனவரிமீ முதற்றிகதி துவக்கி 22-ம். நாளையிலே கும்பராசியிற் பிரவேசம். 50-ம். நாளையிலே மீனராசியிற் பிரவேசம். 80-ம். நாளையிலே மேஷராசியிலே பிரவேசம். 111-ம். நாளையிலே ரிஷபராசியிலேபிரவேசம். 142-ம். நாளையிலே மிதுன விராசியிலே பிரவேசம். 173 ம். நாளையிலே கற்கடக விராசியிலே பிரவேசம். 204-ம். நாளையிலே சிங்க விராசியிலே பிரவேசம். 235-ம். நாளையிலேகன்னி யிராசியிலே பிரவேசம். 260-ம். நாளையிலே துலாராசியிற் பிரவேசம். 297-ம். நாளையிலே விருச்சிகராசியிற்பிரவேசம் 326-ம். நாளையிலே தனுசு ராசியிற் பிரவேசம். 356-ம். நாளையிலே மகர ராசியிற் பிரவேசம் பண்ணுகின்றதென் றறியக்கடவீர்களாக.

பரமகுருக்ஷாபிப்பிராயம்

முற்றிற்று.

*Nº 1.*




ALEX BARREN LITHOG. MADRAS

# No. 1

இந்தபரமகுக்ஷத்திலுள்ள.

A. C. தரிசனச் சக்கரம்.

B D. E. F. பூமியின் வட்டம்.

D. F. சமசக்கரம்.

B. G. E. மத்தியான சக்கரம் இது G என்னும் ஸ்தானத்தில் சமசக்கரத்தைப் பிரிக்கின்றமையால் அதைச் சமசக்கரத்தைப் பிரிக்குஞ் சக்கரமென்றுஞ் சொல்லலாம்.

M. N, P. Q. நிறுத்துச் சக்கரமென்றுந் திருப்பு சக்கரமென்றும் சொல்லப்படும். இவ்விரு சக்கரங்களையும் B. G. E. என்னு மத்தியான சக்கரமானது c f என்னும் ஸ்தானங்களிற் பிரிக்கிறமையா லதை நிறுத்து சக்கரத்தைப் பிரிக்கிற சக்கரமென்றுந் திருப்புச சக்கரததைப் பிரிக்கிற சக்கரமென்றுஞ் சொலலப்படும். இவ்வித சக்கரங்க ளநேகமாயிருக்கினும் சாஸ்திரிகள் 180 மாத்திரம் குறித்து வைத்திருக்கிறார்கள. இவைகளைத்தானே ரேகாந்தர விருததங்களென்றுஞ சொல்லப்படும். இவைகளைக்கொண்டு கிழக்கு மேற்கு தூரங்களை யறியலாம்.

R. S. அட்சபாகம் அவ்விதமான சக்கரங்கள் தெற்கு வடக்கி லனேகமுண்டு. அவைகளைக்கொண்டு தெற்கு வடக்கின் தூரங்களை யறியலாம்.

H. O. L. J. உஷ்ணமண்டலம்.

R. H. J. S. வடபரிமித மணடலம்.

O. r. W L. தென்பரிமித மண்டலம்.

a. R. S. b. வடசீத மண்டலம்.

Y. r. W. Z. தென்சீதமணடலம.

# No. 2

இந்த பரமசூக்ஷத்தினுடைய நடுவிலிருப்பது சூரியன்.

அதைச் சுற்றியிருக்கும் இரேகை பூமியின்பாதை.

அப்பாதையிலுள்ள பொட்டுகள் 12-ம். பூமியினடையாளம்

அதுவலபாரிசத்தாலேறி யிடபாரிசத்தா லிறங்குகின்றது.


ஆகையால் வலபாரிசத்திலுள்ள விராசிகளாறும் ஏறுகிற விராசிகளென்றும் இடபாரிசத்திலுள்ளவைக ளிறங்குகிறவைகளென்றுஞ் சொல்லப்படுகின்றது.

பூமியைச்சூழ வைத்திருக்கும் பொட்டுகள் 8-ம். சந்திரனடையாளம். அது சூரியனுக்கும் பூமிக்கும் நேர்நடுவே குறுக்கிடும்போது அமாவாசிகையாயும் சூரியனுக்கும் பூமிக்கும் நேர் மேலே செலலும்போது பவுர்ணமியாயு மிருக்கின்றது. இதின் வலபாரிசத்திலுள்ள மூன்றும் தேய்பிறைகளுக் கடையாளமாகவும் இடபாரிசத்திலுள்ளவைகள் வளர்ப்பிறைகளுக் கடையாளமாகவும் வைக்கப்பட் டிருக்கின்றது.

12 - பிரிவுகளாகக் காண்பிக்கப்படுகின்ற பூமியின்மேலே 12 - மாதங்களையும் அதனோடு அந்தந்த மாதத்தில வருகிற 12 - இராசிகளையும் அவ்விராசிகளுக்கு மேலே 12 - பிரிவாயிருக்கின்ற 27 - நக்ஷத்திரங்களையுங் குறித்துவைத்திருக்கின்றது.

பூமியானது சூரியனுக்கு வடக்கேயிருக்கும்போது தெக்ஷணாயநமென்றும் தெற்கே யிருக்கும்போது உத்தராயநமென்றும் சொலலப்படுகின்றது. மேலும் பூமியானது சூரியனுக்குக் கிழக்கிலு மேற்கிலு மிருக்கும்போது சூரியன் தலைக்குநேரா யிருக்கின்றது. அப்போது சர்வலோகங்களுக்கும் இரவும் பகலுஞ் சரியாயிருக்கின்றது.

Nº II



ALEX BARREN LITHOG MADRAS

# கையொப்பக்காரரின் பெயர்.

இராயபுரம்.

சங். தே. மரி. ஞானப்பிரகாசநாத சுவாமிகள் ... உ
சங். துரைசாமிநாத சுவாமியார் ... ... ... க

கடப்பாக்கம்.

சங். சா. அந்தோணிநாத சுவாமியார்... ... ... க

நாகப்பட்டணம்.

Revd. Father Tassis S. J. ரூ

காரைக்கால.

Revd. Father Baulen... ரூ

கீழ்ச்சேரி.

சங். சாமிநாத சுவாமியார்... க
,, இரத்தினநாத சுவாமியார். க

பலலாரி.

,,ஆரோக்கியநாதசுவாமியார் க

கடவியில்.

,, பாத்து சுவாமியார்... ... க

இராயபுரம்.

கை. தெரிசனமுதலியார்... க
கை. உப. இராசப்ப முதலியார்... ... ... க
சி. மரியபிள்ளை ... ... க
T Chinnasawmy Chettiar. க
T. S. Thumby Pillay ...
P. A. Ponnoosawmy Moodelliar ... ...
ச. சின்னப்பிள்ளை ... ...
அப்புதாசன் ... ...
ம. அண்ணாப்பிள்ளை.... ... க
A. Thumbi Pillay ... ... க
ப. தம்புசாமி முதலியார் ... க
சி. அய்யாசாமி முதலியார்... க
ஞா. விசுவாச ஆசாரி. ... க
மா. ம. பொன்னுத்தம்பிமுதலியார்... ... ... க
M. Chinnasawmy Moodelliar... ... ... உ
வை.சி.ம. பிரகாச முதலியார். க
M. A. Chinna Pillay ... க
பு. சித்தாத்திரிப்பிள்ளை ... க
சி.ஞா. வச்சிரசிரோமணிமுத. க
A.JeevaruthnumMoodellr. க
G. Pooroomanatha Moodelliar... ... ... க
R.N. Thana Moodelliar... க
சோ. ஆரோக்கியசாமி முதலியார்... ... ... க
ஆ. வேதகிரி முதலியார் ... க
M. Vijianatha Moodelliar க
M. A. Anthoniappa Moodelliar... ... ... க
சங்.சிந். மரியதுரைமுதலியா. க
தோ. சவரிமுத்துப்பத்தர்... க
M. Mariadoss Pillay... ... க
C. P. Amokiasawmy Pillay... ... ... க
பெ சா. தம்புசாமிப் பிள்ளை. உ
மலையப்பிள்ளை... ... க
A. Poonoosawmy Moodelliar... ... ... க
S. S. Anthonyappa Moodelliar.. . . ... க
ஞா. சின்னசாமிப்பிள்ளை.. க
அருளானந்தம்பிள்ளை. ... க
வே. கி நாராயணசாமிப் பிள்ளை... ... ... க
ஆரோக்கியசாமிப்பிள்ளை... க
பாடிகாட் அ. அந்தோணிமுத்துப்பிள்ளை... ... க
ஆ பொன்னுசாமிப்பிள்ளை... க

## MADRAS.

R. Malayappa Moodelliar க
A. Rajandra Moodelliar.. க
T. A. Nayagam Pillay… க
P.S.M.Appasawmy Moodelliar … … … க
P. A. Teroomalroya Moodelliar … … க
பு. அ. அதிசயம்பிள்ளை. … க
ஞா. பாப்பைய செட்டியார். க
M Velavandrasawmy Pillay.… … … க
G. Moothoosawmy Pillay. க
கு. பெரியதம்பிப்பிள்ளை… க
பூ. அ. அதிசயம் முதலியார்.. க
ம. மிக்கேல்பிள்ளை… … க
த. நாயினசாமி செட்டியார். க
ஆ. சவராயலு செட்டியார்.. க
P. Thumboo Reddiar … க
பி. செய்வநாயகமுதலியார் க
T. R Thanasawmy Chettiar .. … … க
M. Rajagopal Naidoo … க
A. Santhana Pillay… … க
S. Nummalvar Iyer… … க
A. Thorasawmy Pillay… க
T. Soosia Pillay… … க
M. N. Vencatachella Moodelliar … … க
K. Thumbia Pillay. … க
ச. ஆரோக்கியபத்தர் … க
P. Annamalay Moodellyr. க
C. Coomarasawmy Pillay. க
P. S. Thorasawmy Moodelliar … … க
A. Vygonda Pillay… … க
G. N Casavaloo Naidoo. க
C. N. Vartharajaloo Moodelliar … … க
P. Kristnasawmy Iyer .. க
P. P. Ponoosawmy Pillay. க
John Daniel Pundit…… க

P. Soobrayaloo Naidoo…
M. R. Lazarus Pillay …
டாக்டர், ம. யோசேப்பு…
ம. எதிம்சாய்பு … …
M. Aurokiasawmy pillay,
எலிம் அப்பாவு உபாத்தியார
N. D. Solomon .. …
பு. ச. வெங்கடாசமுதலியார்.
P. A. Savariacooty Pillay.
T. Somasundra Moodellyr.
D. Marrian … …
C. Singarum pillay… …
இ. மாசிலாமணி கிராமணி..
வி. இராயப்ப ஐயர்… …
P. Comarasawmy… …
P. Durmalinga Moodellyr.
C. V. Munisawmy pillay.
ம. இலாசர் பட்லர்… …
சி. ஏகப்ப செட்டியார் …
திப்டி கனிஷ்டேபில் சாண்டவராய முதலியார்… …
ப. இரத்தினவேலு செட்டியார்… … …
போ. வேலாயுத ஆசாரி…
கா. மாணிக்க ஆசாரி… …
கா. சுப்பராய ஆசாரி.. …
ஸ்ரீ. மந்துல கந்தசாமி ஆசாரி
சம். ஜெம்புலிங்க ஆசாரி …
தி. இரதின ஆசாரி …
பொ. குள்ளப்ப ஆசாரி. …
கு. சுந்தரம்பிள்ளை .
சா. சின்னத்தம்பிமுதலியார். க
ச. செல்வநாயகமுதலியார்… க
த. சிந்துராய நாயகர்… … க
A. Arokiasawmy Pillay. க
பே. ஏகாம்பரமுதலியார … க

### பெரம்பூர்.

T. Madanagopauloo Moodelliar … … க

### எழும்பூர்.

ஆ. சீ. திருச்செல்வப்பிள்ளை உ

இராயப்பேட்டை.

A.S. Poonoosawmy pillay. க
A. Ruthnasawmy pillay. க

கோமளீஸ்வரன்பேட்டை.

மு. சிவகுருநாத ஆசாரி... உ
அ. மு. இராகவுலு... ... க

திருவல்லிக்கேணி.

வே. தே. சஞ்சீவி செட்டியா.க

மயிலாப்பூர்.

ச. பெரியநாயகம்... ... க
ம. இரத்தினசாமிமுதலியார். க
உப. ஆரோக்கியசாமிபிள்ளை க

வாலாஜாபேட்டை.

D. A. Thomas pillay ... க

வேப்பேரி.

ஜோசேப்பு லாசர்... ... க
சோ. சைமன் அப்பாவு. ... க
F. Lazarus Butler.... ... க

புதுப்பேட்டை.

M. A. Annasawmy pillay. க
V. P. David ... ... க

பெரியமெட்டு.

P. S. Amirthavasagum pillay... ... ... க
சோமுசெட்டியார்... ... க

W. M. Thumboosawmy Nayagar ... ... ..

வண்ணாரப்பேட்டை.

சி. அப்பாவு .. ...
யோவான் அவல்தார். ...
அடைக்கலம்... ...

கடப்பாக்கம்.

ப. தனசிங்கு... ... ...

மீர்சாப்பேட்டை.

த. துரைசாமிமுதலியார். ... க
கோ.இரத்தினசாமிமுதலியா.க

கொறுக்கப்பேட்டை.

ஜா. மனுவேல்... ... க

நெல்லித்தோப்பு.

உப. ஞானதிக்கம் பிள்ளை... க

மாயூரம்.

சா. வேதநாயகம்பிள்ளை. ... க

OOTACAMUND.

ஸ்தனிசிலாஸ ஞானப்பிரகாசம்... ... ... க

மதுரை.

Raja Row pillay .. ... உ

காரைக்கால்.

கொத்தவால தி. ஆந்திசாமிப்பிள்ளை... ... ... க

பெங்களூர்.

A. M. Appasawmy pillay. க

கோயம்புத்தூர்.

S. Samynada Naicker, Draughtsman ... ... க
பெரியதம்பிப்பிள்ளை... ... க
ஷாப்புகீப்பர் அப்பாவுப் பி

HINGOLEE.

P. K. Balakristnasawmy Pillay... ... ... க

RAIPOOR.

Aleekdasen ... ... க

நாகோடு.

Band Serjeant Antic Johnson ... ... க
F. John Musician... ... க

ஈரோட்டு

J. Wilson pillay... ... க

ஆலப்பிழை.

அயிப்பு... ... ... க
Stephen Leene ... ... க

குண்ணூர்.

W. J. Brengor... ... க

DINDIGUL.

Brother Michael.. ... க

கூடலூர்.

B. S. Mariannen... ... க

NANDIAR.

P. A. Cruize ... ... க

WYNAAD CALPATTEE.

A. Lazarus ... ... ... க

ADEN.

ச. ஆரோக்கியம்பட்லர் ... க
P. D. Anthon ... ... க

தார்வாடி.

மி- தெய்வசகாயம்... ... க
ஜெ. மூ. மூடியப்பன் பட்லர் க

FORT St. GEORGE.

T. A Comarasawmy pillay... ... ...

ஷிமோகே.

ஜெ. மனுவேல்... ...

இ. லா. மானுவெல் Clerk ..

YERCAND.

S. M. Nadeappen... ...

RANGOON.

J. J. Petrae ... ...
C. Arokia Naique... ...
M. Lazur Butler... ...
A. John... ... ...

திருச்சிறுப்பள்ளி.

ச. எ. லாசரஸ் கிளர்க ... ...

R. Michael. ... ...
இஞ்ஞாசிமுத்துப்பிள்ளை ...

KAMPTEE.

P. Mathoorai ... ...
Drummer Juvan... ...
ஆ. ஞானப்பிரகாசம்... ...
மனுவேல் ... ...
சந்தியாகு ... ..
நி. பர்சபாணி ... ..
இ. துருகு... ... ...

கன்னனூர்.

B. S. இராசேந்திரம். .

கடவியில்.

ம. வறியது ... ... ..
வ. வரியது ... ..
ம. குஞ்ஞு ... ..
வலியான் ... ... ..
கு. அபிப்பு .. ..
மூ. சமத்தாயி ... ..
வ. க. லொன்னென். ..
வ. அவுதெப்பு ... ...

CEYLON.

P. M. Gomez ... ...

BELGAUM.

F. Calman ... ...

தரங்கன்பாடி. ௧

Sanda pillay ... ..
ப. வி. மி. சாமிக்கண்ணு நயக்கர். ... ...

கொட்டைப்பாக்கம்,

ம. சாமிநாதபிள்ளை ... ...

நல்லாதூர்.

இவ்வியநாதப்பிள்ளை... ...

BOMBAY.

F. S. Royaloo ... ...

## ELLICHPOOR.

S Sungeeve Pillay... ... க

## WURDAH.

S. Francis .. ... ... க

## BIMILIPATAM.

A. Soosanatha pillay ... க

## புதுக்குறிச்சி

பிரான்சிஸ்சில்வா.... ... க
J. L. Gomez... ... ... க
Boneventure Serapheim.. க
Philip B. Remedy... ... க
H. D'Silva... ... ... க

## மெர்க்காரா

சௌரிமுத்து... ... க

## இராணிப்பேட்டை

தே. அபிரகாம்பிள்ளை . ... க

## புதுப்பேட்டை.

செ. மரியதாசைப்பிள்ளை .. க

## சூளை.

ஆனந்தராயப்பிள்ளை... . க

## நாகபட்டணம்

சூ.ச. முத்துசாமிமுதலியார... க
த. ஆனந்தராசப்பிள்ளை ... க
தி.பி கன்னுசாமிசெட்டியார. க
அ. சா. அப்பாசாமிப்பிள்ளை.. க
ஆதிகேசவப்பிள்ளை... ... க
ா. சவராயப்பிள்ளை... ... க
வெ. பொ. பெரியசாமிப்பிள்ளை... .. ... க
பொ. சி. தேவசகாயம் செட்டியார்... ... ... க
A. T. Michael Pillay ... க

## CHANDA.

M. Nicholas, Drummer... க
T. Rajandrum 2nd Class Hosptl. Asst ... ... க

## CHINNAPAULEM.

Revd. Father C. M Willien... ... .. க

## SECUNDERABAD.

N. D. Thomas Hosptl Asst. ... ... .. க
ஆ. திருவேங்கிடசாமி முதலியார்... ... ... க
இரா. இரத்தினசாமி முதலியார்... ... ... க
ப. அண்ணுசாமி நாயனுர்... க
நா.பா.பொன்னுசுவாமிதாசர். க
அ. ஜோசெப்புபிள்ளை... ... க
இரா. ஞானதேவசகாயம்.... க

## டயெட்மயோ

மு. ஜோசேப்பு பணடிதா . க
மு. ஆ லாசர்... ... க
J. M. H. மாசிலாமணி. க
கி. மி. அப்பாசாமி .. .. க

## தூத்துக்குடி.

ரோசேரியோபெர்நாந்து . க

## ஆலப்பிழை

கடவியில்பாத்தாப்பன்... கஉ

## கள்ளிக்கோட்டை.

ஜோ. செவஸ்தியான்... ... க

## CORINGA.

Nazareth Correia ... .. க

# விளம்பரம்.

அடியிற்கண்ட புத்தகங்கள் தேவையுள்ளவர்கள் சென்னபட்டணத்துக்கடுத்த இராயபுரம் டாணா வீதியில், கூ௱-வது கதவிலக்கமுள்ள வீட்டிலிருக்கும், மகா-ள-ள-ஸ்ரீ ம. சா. இயாகப்பிள்ளைக் கென்றாவது M. S. Yaga Pillay, Shroff, Messrs. Arthur Huson & Co., Madras என்றாவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்

| | புத்தக கிரயம். | தபாற்கூலி வட்ட முதலானது |
|---|---|---|
| அ௳ டபின்ட வியாக்கியானம் | 1—8—0 | அணா-4. |
| திருவருண்மாலை. திருவருள் அந்தாதி. தேவமாதா அந்தாதி. இம்மூன்றுஞ் சேர்ந்தது | 0—4—0 | 0—1—0 |